# ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்



கவிஞர் வி.மு. உலகநாதன்

# ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்

(முதல் பாகம்) ஆகஸ்ட்-1988

கவிஞர் வி.மு. உலகநாதன்

விலை-உரூபா 17-00

வாசுகிப் பதிப்பகம்
19, தொட்டிக்கலைக் குமரப்ப முதலித்தெரு,
சூளை, சென்னை-600112.

# ஆண்டாள் பாவையும்
# அழகுத் தமிழும்

THIS BOOK IS

PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

UNDER THEIR SCHEME

"AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

கவிஞர் வி.மு. உலகநாதன்

## பதிப்பு விளக்கம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் |
| பொருள் | : | திருப்பாவை 15 பாசுரங்களுக்கு விளக்கமும் ஒப்பாய்வும் |
| ஆசிரியர் | . | கவிஞர் வி.மு, உலகநாதன் |
| பதிப்பு | . | முதற்பதிப்பு |
| வெளியீடு | : | ஆகஸ்டு 1988 |
| உரிமை | : | ஆசிரியருககே |
| தாள் | : | 11.6.K.G. ஒயிட் பிரிண்ட் |
| நூலின் அளவு | : | 18 C.M. 12.5 C.M. |
| எழுத்து | : | 10—புள்ளி |
| பக்கங்கள் | : | XVI+192=208 |
| படிகள் | : | 1200 |
| அச்சகம் | : | பாவாணர் அச்சகம், சென்னை-2 |

விலை : உருபா 17-00

பதிப்பாளர் : வாசுகிப் பதிப்பகம்
19. தொட்டிக்கலைக் குமரப்ப
முதலித்தெரு, சூளை, சென்னை-112.

முத்தர்

அத்தை கன்னம்மாவிற்கும் மாமா கங்காதரருக்கும்

# அன்புப்படையல்

மாண்புற அடியேன் வரைந்தநன் னூலாம்
ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்

சான்றோர் போற்றியே சாற்றிட இதனைத்
தேன்போல் இனிக்கச் செய்யவே இயற்றினேன்

இன்பநூல் தன்னை என்னைப் பரிவாய்
அன்புடன் வளர்த்த அத்தை மாமா

கண்ணம் மாகங் காதரர் என்னும்
பண்புடை யார்க்கே படைத்தனன்; நன்றி

உணர்வினை இதனால் உவந்துமே காட்டினேன்;
வணங்கினேன் அவர்களின் மலர்ப்பதம் போற்றியே!

அன்புள்ள

**வி.மு. உலகநாதன்**

| | | பக்கம |
|---|---|---|
| 1. | பதிப்பகமும் முகவரியும் | i |
| 2. | வேங்கடவன் படம் | ii |
| 3. | பதிப்பு விளக்கம் | iii |
| 4. | படையல் | iv |
| 5. | உள்ளுறை | v |
| 6. | அணிந்துரை | vi |
| 7. | பதிப்புரை | viii |
| 8. | நூலாசிரியர் உரை | xiii |


# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் | 1-16 |
| 2. | சங்கத்தமிழ் மாலை முப்பது | 26 |
| 3. | கார்மேனிச் செங்கண்ணன் | 36 |
| 4. | பையத் துயின்ற பரமன் | 46 |
| 5. | ஓங்கி உலகளந்த உத்தமன் | 58 |
| 6. | மழைக்கண்ணன் | 67 |
| 7. | ஆயர்குலத்துதித்த அண்ணல் | 79 |
| 8. | வெள்ளத் தரவினில் வித்து | 89 |
| 9. | கேசவனைப் பாடுக! | 99 |
| 10. | தேவாதி தேவனைச் செப்பு | 108 |
| 11. | மாயவனை வணங்கு | 116 |
| 12. | புண்ணியனைப் போற்று | 124 |
| 13. | முகில் வண்ணன் பேர் பாடு | 136 |
| 14. | மனத்துக்கு இனியனைப் பாடு | 150 |
| 15. | கிள்ளிக் களைந்தானைப் பாடு | 162 |
| 16. | பங்கயக் கண்ணனைப் பாடு | 173 |
| 17. | வல்லவனை மாயவனைப் பாடு | 186 |
| 18. | ஆடிப்பூரத்தில் ஆண்டாள் | 192 |

# அணிந்துரை

பேராசிரியர் : **தி. அ. சொக்கலிங்கம்**

'ஆழ்வார்கள் அருளிச் செயல்கள்' தமிழை வளப் படுத்தின. தமிழன் வாழ்வுக்கும் மேன்மைக்கும் பெருமை யைச் சேர்த்தன. தமிழோடு வைணவத்தின் சாற்றைப் பிழிந்து தமிழகமெங்கனும் பரப்பிய பெருமை அவர்தம் அருளிச் செயல்களுக்கு உண்டு — வாழ்ந்து காட்டிய பெருமையும் அவர்களுக்கு உண்டு.

இங்ஙனம் தமிழையும் வைணவத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டு திகழ்ந்த ஆழ்வார்களுள் கோதை நாச்சியாரும் ஒருவர்.

நாச்சியாரின் திருப்பாவை முப்பதையும் அடிப்படை யாகக் கொண்டு 'ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்' என்ற இந்நூலை, அருமை நண்பர் கவிஞர் வி.மு. உலக-நாதன் வியக்கத்தக்க வகையில் செய்துள்ளார். இந்நூல் தமிழுக்கு ஒரு புது வரவாகும்.

'புது வரவு' என்று சொன்னேன்! ஆம்! எழுத்தில் மாத்திரமல்ல புதுமை; நடையிலும் புதுமை; அமைப்பி லும் புதுமை; ஒவ்வொரு பாடலுக்கும், ஒவ்வொரு அத்தியாயம்; பாவைப்பாட்டிலுள்ள 'உயிர்த்துடிப்பான, வரிகளே அத்தியாயத்தின் தலைப்பு; இதை மிகமிக அற்புத மாக அமைத்துள்ளார் கவிஞர். அதோடு ஒவ்வொரு அத்தியாயத்திலும் அமைந்துள்ள கருத்துகளைத் தொடக் கத்திலேயே பாடல்களாக எழுதியிருப்பது புதுமைக்குரிய செய்தியாகும்; கவியமுதனார் எழுதிய பாடல்களே. இவை

பரந்து விரிந்து கிடக்கின்ற தமிழிலக்கியத்திலிருந்து ஆங்காங்கே மேற்கோள் காட்டியிருப்பது நூலாசிரியரின் புலமையினை நமக்கு உணர்த்துகின்றது.

ஆயர்குல மங்கையின் தாயை 'மாமி' என்றும் தந்தையை 'மாமான்' என்றும் அந்தணப் பெண்ணான கோதைப் பிராட்டி அழைத்த சிறப்பினை, கவிஞர் உலக நாதன் அவர்கள் நயமாகச் சுட்டுகிறார். இந்த உறவு முறைக்கு வழி காட்டிய பெருமை சிலப்பதிகாரத்துக்கு உண்டு. தெய்வச்சிலையாக நிற்கின்ற கண்ணகியிடம் அவளுடைய பார்பபனத் தோழி தேவந்தி வருகிறாள்! அவளோடு ஐயை என்ற இடைக்குலப் பெண்ணையும் அழைத்துவருகிறாள், மாதரி என்ற ஆயர்குலப்பெண்ணின் மகள்தான் இந்த ஐயை. "கண்ணகி இடத்தில் இதோ பார்! நமது 'மாதரியின் மகள் வந்திருக்கிறாள்' என்று தோழி தேவந்தி பேசுவது குறிப்பிடத்தக்கது ("மாமி மடமகளைக் கண்டாயோ தோழி!")

நூல் முழுவதும் அடிக்கரும்பிலிருந்து நுனிக்கரும்பைச் சுவைத்தது போல இனிக்கின்றது. வைணவ மரபுகளும், சம்பிரதாயங்களும், தமிழின் சிறப்பும், செழுமையும் நூல் முழுக்க மிளிர்கின்றன. யாதவ இனத்தின் சிறப்பும் கொடும்பாடில்லாத கோவலர் வாழ்வும ஆண்டாளின் அழகுத் தமிழோடு பின்னிப்பிணைந்து திகழ்கின்றன—ஒரு தனிச் சிறப்பாகும்.

கவிஞர் வி.மு. உலகநாதனார் இன்னும் பல நூல் களைப் படைத்துத் தமிழுக்கு அணி செய்தல் வேண்டும். இறைவன் திருவருள் இதற்குத் துணைச் செய்யும்.

தி. அ. சொக்கலிங்கம்

தேர்வாணையர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்-608002

# பதிப்புரை

டாக்டர் பேராசிரியர் : ந. சுப்புரெட்டியார்

கோலச் சுரிசங்கை மாயன்செவ்
வாயின் குணம்வினவும்
சீலத் தனள்தென் திருமல்லி
நாடி செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக்
கீயும் மதிப்புடைய
சோலைக் கிளிஅவள் தூயநற்
பாதம் துணைநமக்கே !

— திருக்கண்ண மங்கையாண்டான்

விட்டு சித்தன் வளர்ப்புப் பெண் ஆண்டாள். அவள் 'பார்கடலுள் பையத் துயின்ற பரமனை'ப் பற்றி' பாடிக் கொடுத்தாள் பாமாலை; அவனுக்குப் பூமாலையைச் சூடியும் கொடுத்துச் சுடர்க்கொடியாகத் திகழ்ந்தாள். முளைக்கும்போதே துளசி மணம் பெற்றுத் திகழ்வது போலவே, ஆண்டாள் பிறக்கும்போதே 'பக்தி'யுடன் பிறந்தவள். அவளுடைய பக்தியைப் பற்றிப் பெரியவாச்சான் பிள்ளை கூறுவது; "தேகத்தையே ஆன்மாவாகப் பாவிப்பவர்கட்கும் ஆன்ம சொருபம் கைவரப் பெற்ற இருடிகட்கும் இறையன்பில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒப்ப நோக்கினால், முன்னவர் பக்தி அணுவளவாகவும், பின்னவர் பக்தி மலையளவாகவும் காணப்பெறும். இங்ஙனமே இருடிகளையும் ஆழ்வார்களையும் ஒப்ப நோக்கினால், இருடி

1. நாச். திரு. தனியன்

களின் பக்தி அணுவளவாகவும் ஆழ்வார்களின் பக்தி மலையளவாகவும் காணப்பெறும். இங்ஙனமே மற்றைய ஆழ்வார்களின் பக்தியையும் பெரியாழ்வார் பக்தியையும் ஒப்பிட்டு நோக்கினால், மற்றையோர் பக்தி அணுவள வாகவும் பெரியாழ்வார் பக்தி மலையளவாகவும் தோற்றம் அளிக்கும். பெரியாழ்வார் பக்தியையும் அவரது அருமைமகள் ஆண்டாள் பக்தியையும் சீர்தூக்கினால், பெரியாழ்வார் பக்தி அணு அளவிலும் ஆண்டாள் பக்தி மலை அளவிலும் உயர்ந்து நிற்கும்!'' தவிர ஆண் ஆணைக்கண்டு நட்பு கொள்வதைக் காட்டிலும் பெண் ஆணைக்கண்டு நட்பு கொள்ளுதல் பள்ளமடையாக இருக்கும்.

இத்தகைய பெருமாட்டியைப் பற்றி **''ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்'** என்ற தலைப்பில் அறியதோர் நூலை எழுதி வழங்குகின்றார் என் கெழுதகை நண்பர் கவிஞர் வி. மு. உலகநாதன் அவர்கள். ஆனால் இதற்கு முன்னர் '**பன்னிருவர் தந்த பக்திச் சுரங்கம்**' என்ற மற்றொரு நூலையும் தமிழ் உலகுக்கு எழுதி அளித்துள்ளார். **'கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில்'** என்பது கண்ணனைப் பற்றிய கவிதைப் படைப்பு. உரைநடைப் படைப்புகளைவிட கவிதைப் படைப்பு, ஏற்றம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இலக்கணத் தாத்தா மகாவித்துவான் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்களின் எண்ணற்ற சீடர்களில் இவரும் ஒருவர். 'மாணவர்கள்' என்று சொல்லுவதைவிடச் 'சீடர்கள்' என்று சொல்வதே சிறப்பு என்பது என்

2. மயிலை மாதவதாசன்: திருப்பாவையின் வியாக்கியானங்கள்— பக். 1

கருத்து. வெறும் தமிழறிவை மட்டிலும் ஊட்டாமல் இறையன்பு; ஒழுக்கம், அடக்கம் முதலிய உயரிய பண்புகளையும் தமது வாழ்க்கையாலும் தம்முடைய ஒழுக்க நெறிமுறையாலும் ஊட்டி அவர்களை ஒழுக்கச் சீலர்களாகவும் உயர்ந்த பண்பாளர்களாகவும் உருவாக்கிய பெருமகனார் பிள்ளையவர்கள்.

ஆண்டாளைப் பற்றிய இச்சிறிய நூல் 18 பகுதிகளாக நடைபெறுகின்றது. எல்லாப் பகுதிகளும் கவியமுதனார் என்ற வைணவச்சீலர் ஒருவரின் பாடலால் தொடங்கப் பெறுவது, திலகமிட்டு முகத்தைப் பொலிவு பெறச் செய்வது போல் கட்டுரைகளைப் பொலிவு பெறச் செய்கின்றது. கட்டுரைகளும் பல நல்ல கருத்துகளைத் தெளிவாக விளக்குகின்றன. திருப்பாவையில் பதினைந்து பாசுரங்களை எடுத்துக் கொண்டு ஆய்வினை நிகழ்த்தியுள்ளதாக ஆசிரியர் தெரிவிக்கின்றார் (பக்: 16) ஆண்டாள் திருப்பாவை 30இல் குறிப்பிடும் 'சங்கத்தமிழ்' என்ற தொடருக்கு ஆசிரியர் இது சங்கஇலக்கியத்தமிழே என்று உறுதியாகக் குறிப்பிடுகின்றார். (பக்: 22, 23) 'அங்கண்மா ஞாலத்து' (திருப். 22) என்ற திருப்பாவையில் சங்கம் இருப்பார் போல், என்று வந்துள்ள தொடரில் 'சங்கம் என்பதற்குக் 'கூட்டம்' என்ற பொருளை ஒப்புக் கொண்ட ஆசிரியர் 'சங்கத் தமிழ் மாலை' என்று திருப்பாவை.30இல் வரும் தொடருக்கும் (பக். 24) 'கூட்டம்' என்றே பொருள் கொண்டிருக்க வேண்டும்; அங்ஙனம் கொள்ளவில்லை. திருப்பாவை கூட்டமாகச் சேவிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. எனவே, வேதங்களைச் 'சந்தஸாக' சேவிப்பது போல் இதனையும் சேவிக்க வேண்டும்.

திருப்பாவையிலுள்ள சில சொற்றொடர்களை எடுத்துக் கொண்டு பரிபாடலில் வரும் பல செய்திகளுடன்

ஒப்பிட்டுப் பார்ப்பதில் ஆசிரியர் ஈடுபட்டிருப்பதை இந் நூலில் காண்கின்றோம். இம்முயற்சி ஆசிரியருக்கு 'ஒப்பாய்வில்' இருக்கும் ஆர்வத்தைக் காட்டுகின்றது. ஐங்குறுநூறு (பக். 36) திருக்குறள் (பக். 43) புறநானூறு (பக். 44), குறுந்தொகை (பக். 44. 56), வில்லிபாரதம் (பக்.57) பாரதியார் (பக் 63), ஐந்திணை ஐம்பது (பக்.67), பெருந்தொகை (பக்.81), கம்பராமாயணம் (பக். 95), பெரும்பாணாற்றுப்படை (பக்.94) கலித்தொகை (பக். 97) சிலப்பதிகாரம் (பக். 112) போன்ற இடங்களில் இந்தஒப்பாய்வைக் காணலாம்.

பொதுவாக நூல் சிறப்பாக அமைந்துள்ளது; இனியதாகிய. இந்நூல் பக்தியுணர்வை ஊட்டுவதுடன் ஆய்வு உணர்வையும் தூண்டுகின்றது. ஆய்வில் ஈடுபட வேண்டுமானால் விரிந்த நூலறிவு வேண்டும். ஓயாது நூல்களைப் படிக்க வேண்டும்; திறனாயும் திறனை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். இந்நிலையில் எழுதிய ஆசிரியரின் ஆய்வு உள்ளம் வாழ்க.

'வேங்கடம் மேய விளக்கின்' 'பொருள் ஒளியால்' இந் நூல் வெளி வருகின்றது. தமிழ்க் காதலன் அல்லவா ஏழுமலையான்? கலியுக வரதன். வந்திப்பார்க்கு வரம் அளிக்கும் வள்ளல் அவன். பக்தியுள்ளம் படைத்த இந்த ஆசிரியருக்கு நீண்ட ஆயுளையும் நீங்காத நிறைந்த செல்வத்தையும் மன வளத்தையும் நல்கவும்; மேலும் மேலும் பக்திப் பனுவல்களைப் படைக்கவும் இவற்றை வெளியிடவும் நிதியுதவி வழங்கவும் வேண்டும் என அவன் திருப்பாதங்களை நினைந்து வாழ்த்துகின்றேன்.

'வாலறிவன் நற்றாள்' நாளும் தொழுது நாராயணன் புகழைப்பாட்டாய் பல பாடிப் பழவினைகள் பற்றறுத்தும், பக்திப் பனுவல்களைப் படைத்தும் பரந்தாமன்

பாதங்களையே நினைந்து பொழுது போக்கும் என் அரிய நண்பர் கவிஞர் வி.மு.உலகநாதன் அடியேனுக்கும் இந்தப் பதிப்பாசிரியர் பங்கினை நல்கி அடியேனைக் கடவுட் பணியில் ஈடுபடுத்தியதற்கும், இத்தகைய பணியை வெல்லம் போல் இனிக்கச் செய்யும், வேங்கடவாணனுக்கும் முறையே நன்றியையும் வணக்கத்தையும் புலப்படுத்திக் கொள்கிறேன்.

வாழ்க இந்த நூல்! வளர்க இந்த ஆசிரியரின் தெய்வப் பணி!!

வெற்புஎன்று வேங்கடம் பாடினேன்; வீடுஆக்கி
நிற்கின்றேன், நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்.

— பக்திசாரர்

'வேங்கடம்'
AD-13 (பிளாட் 3354)
அண்ணாநகர்
சென்னை-600 040
ஜூலை 16, 1988

ந. சுப்புரெட்டியார்

3. நான் திருவந். பக். 40

# நூலாசிரியன் உரை

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறிய நல்லோர் கருத்துப்படி, நான்முன்னறிந்த தெய்வங்களான என் தாயும் தந்தையும் அருள் நெறியில் அன்புடன் நிற்க என்னை வளர்த்தார்கள்; என் பெற்றோர்களே முதலில் எனக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களாகி வாசமலர்த்துழாய்மாலை அணிந்த வாசுதேவனின் மாண்பினைத் தேன் போல் சுவைக்கப் போதித்தார்கள்.

நான் பள்ளியில் அடியெடுத்து வைப்பதற்கு முனபே, வானோங்கி நின்று உலகை இரண்டடியினால அளந்து பெருமையுற்றுப் பிறங்கிய மாமாயனைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பிக் கூறியவர்கள் அவர்களே!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அள்ளித் தந்த அமுதமென, ஆண்டாள் அருளிய தெள்ளுத் தமிழ்த் திருப்பாவையை என் தந்தை விடியலில் எழுநது இசையுடன் பாடுவார்கள். அவர் பாடிய பாவைப் பாசுரங்களே, என் செவியில் தேனாய்ப் பாய்ந்து உள்ளமெனும் கழனியை அருள் வெள்ளமாய் நிறைத்தது.

முதற்றெய்வமாய்ப் பெற்றோர்களைக் கண்டதைப் போன்று நான் முதலில் கண்ட அமுத நூல் திருப்பாவையே! நான் சிறியவனாய் இருந்த போதே தாயாகி வந்து அருளும் மாமாயனை அறியச செய்த ஆணாடள் பாவையே! என் நெஞ்சக் கழனியை வளம் செய்தது.

இவ்வாறு என் நெஞ்சக் கழனியில் இனிதே கிளைத்த அந்தப் பாவைப் பயிரே! இன்று ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் என்ற பெயரில் கதிர் விட்டுப் பயன் தரும் நெல்மணியாய் உருவாகி வெளிவருகின்றது இந்தச செந்தமிழ்ப் பொன்மணியை அருள் உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் கண்மணியாய்ப் பாராட்டி வரவேற்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

ஆண்டாள் அன்னையார் அருளிய திருப்பாவையை வைணவர்கள் பெரிதும் விரும்பிப் போற்றுவதோடு சைவப்

பெருமக்களும் போற்றி வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம. கண்ணபிரானையே அனைத்தும் என்று ஆண்டாள் கருதிப் பாடியிருந்தாலும், பிறதெய்வ வழிபாட்டுக்குரியவர்களும் உவந்து போற்றும் வகையில் பாசுரங்களை இசைத்திருக்கின்றார்கள்.

அருமைத் திருப்பாவையில் மூன்று பிரிவுகள் இருத்தலைக் காணலாம. முதற்பிரிவில் உலகியல பண்புகள் உணர்த்தப்பட்டுள்ளன. வாழும் மக்கள் ஒழுக்கச் சீலர்களானால், சமுதாயம் அமைதி மேவி விழுமிய நிலையில் காட்சியளிக்கும். அந்தச் சமுதாயத்தில் அன்பு மரம் செழிக்கும்; அறக்கனிகள் குலுங்கும்; அருள் என்னும் இன்ப நிழல் படரும் என்றுணர்ந்து, ஆண்டாள் முதல் ஐந்து பாசுரங்களில் இத்தகையப் பணபுகளைப் பெய்து விளங்கப் பாடியுள்ளார்.

அடுத்து ஆறுமுதல் பதினைந்து பாசுரங்களில், மறந்து, உறங்கும் பெண்கள் சிறகக, கருணை முகிலான கணணபெருமானைப் பற்றி உய்ய, பணபுடன் எழுப்புவதன் மூலம், அஞ்சான இருளில் சஞ்சலப்படும் சமுதாய மக்களைத் தட்டி எழுப்பி, அந்தப் பரமபொருளின் திருவடிப் பேறறில் தலைப்பட, நலம்பெற வழிகாட்டுகின்றார். இப்பத்துப் பாசுரங்களும் சமுதாய மக்கள் நலங்கருதியே பாடப் பெற்றன, என்றுணர்தல் வேண்டும.

பதினாறு முதல் முப்பது பாசுரங்கள் வரை பாடியவற்றுள் பரம்பொருள் திறனைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். எளிவந்த பிரானாகக் களிப்புற்றுப் போற்றுவோர்க்கு, கைகொடுத்துதவும் கருணை வள்ளலைப் பெருமையாகக் காட்டுகின்றார்.

1, 10, 16, 24, 25, 26, 27, 28, 29 ஆகிய பாசுரங்களில் ஆண்டாள் பறை என்று கூறி, அவன் திருவருளாகிய அருள் பறையைப் பெற, அவனிடம் இனிதாக வேண்டுகின்றார். 30-ஆம் பாசுரத்தில் மூன்றாம் அடியில் "அங்கு அப்பறை கொண்ட ஆற்றை" எனப்பாடியதில் அவன் திருவருளாகிய அப்"பறையை"ப் பெற்று விட்டதாகக் கூறுகின்றார். "பறையை" வடமொழியில் புருஷார்த்தம் என்பர்.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றனோடு
உற்றோமே யாவோம்"

என்று கூறியபடி அவனோடு இணைக்கும் 'பறை'யே அது. ஆம் அவனைப் பறையாக உருவகித்துப் பாடி, அவனை யடைந்த கோதையார் பாடியருளிய சங்கத் தமிழ்மாலை முப்பதில், பதினைந்து பாசுரங்களை மட்டும் எடுத்துக் கொண்டு விளக்கி, ஆய்ந்து, எழுதி முதல்பாகமாக இந் நூலை வெளியிடுகின்றேன்.

ஆண்டாள் தம் பாசுரங்களைச் "சங்கத் தமிழ்மாலை முப்பது" என்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழின் பெருமை தோன்ற நூல்களை ஆய்ந்து வெளி யிட்ட இடமே சங்கமாகும். அந்தச் சங்கத்தைத்தான் ஆண்டாள் தம் பாசுரத்தில் குறித்துள்ளார். இதனை உறுதிப்படுத்த சங்கம் என்னும் சொல்லுடன் தமிழ் என்னும் சொல்லைச் சேர்த்துச் 'சங்கத் தமிழ்' என்று தம் திருப்பாவையை உணர்த்துகின்றார். முப்பது பாசுரங் களும் நம் எண்ணங்களைக் கவர, உண்மைச் செய்திகளைக் கொண்ட, வண்ண மலர்களாக, வாசம் வீசும் கதம்ப மாலையாக உருவாக்கிய அவர்,

"சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவர்"

என்று பாடி அருளாளன் திருவருளைப் பெற்று இன் புற்றதைப் போன்று, மற்றவர்களும் இன்புறத் தம் சங்கத் தமிழ்மாலை முப்பதையும் பாடிட, விரும்பி அழைக்கின் றார். ஆண்டாள் அன்னையார் கூறியவாறு அவர் தம் பாவையில் சங்கத் தமிழ் இலக்கியச் செய்திகள் உள்ள னவா? என்றாய்ந்தேன். இவர் கூறியவாறு சங்க இலக்கிய கருத்துகள் இருக்கண்டு மகிழ்ந்தேன். கண்டவற்றை இவர் தம் பாசுரங்களோடு ஒப்புமை காட்டி ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் என்னும் இந்நூலைப் படைத்தேன்.

ஆண்டாள் பாசுரங்களுக்கு அரிய உரைவரைந்த காஞ்சி அண்ணங்கராசாரிய சுவாமிகள் சங்க இலக்கியங்களான ஐங்குறுநூறு, திருக்குறள், குறுந்தொகை மற்றும் கம்ப

ராமாயணம் முதலானவற்றில் வரும் செய்திகளை ஆண்டாள் பாசுரங்களுக்கு உவமையாகக் காட்டித் திருப்பாவையைச் சிறப்பித்துள்ளார்கள்.

நானும் இவர்தம் நெறிவழி நின்று அரிய திருப்பாவைப் பனுவல்களுக்கு ஒப்பாகச் சங்கத் தமிழ் இலக்கியங்களில் வரும் செய்திகளை எடுத்துக் காட்டிப் பெருமை செய்துள்ளேன். ஒப்புமை காட்டி உணர்த்துவது எடுத்துக்கொண்ட பொருளைச் சிறப்பித்துப் பெருமை செய்வதாகும். அந்த வகையில் செந்தமிழ்ப் பனுவலாய் இலங்கும் அருட்பாவையான திருப்பாவையைப் பெருமை செய்துள்ளேன். பாவை பக்திப் பனுவலாக மட்டும் இல்லாமல் ஆவலுடன் வாழ்வியலை நடத்துவோர்க்குச் சிறந்த இலக்கியப் பனுவலாகவும் உள்ளன என்பனவற்றை எடுத்துக்காட்டவே இந்நூலை வரைந்தேன். இதன் செவ்வி உணர்பவர்கள் வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

இந்தச் செந்தமிழ் நூல் வெளிவர அருள் சொரிந்த திருவேங்கடமுடையானின் திருவடிகளையும், திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளையும் நிர்வாகிகளையும் நாவாரப்போற்றி, தலையார வணங்குகின்றேன்.

இந்நூலுக்குப் பதிப்புரை வரைந்த மதிப்புக்குரிய பேராசிரியர் டாக்டர் ந சுப்புரெட்டியார் என நெஞ்சைக் கவர்ந்த அருளாளர், அந்த நல்லவருககும், அணிந்துரை அளித்த பேராசிரியர் தி. அ. சொககலிங்கம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தேர்வாணையர் ஆவார். பணபாளரான அவர், என் எண்ணத்தில் இடம் பெற்றவர் எனவே அந்த இனியவருக்கும், நல்ல முறையில் எவரும் போற்ற அச்சிட்டுதவிய பாவாணர் அச்சக மேலாளர் திரு அரங்கராசனுக்கும், மெச்சும் வகையில் இந்நூல் இலங்கச் செய்த அச்சகப் பணியாளர்களுக்கும் நன்றியும் வணக்கமும் கூறுகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக நான் வெளியிடும் நூல்களை ஏற்றுப் போற்றி வரவேற்கும் வள்ளுவர் இலக்கிய வட்ட அன்பர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் உரியதாக்குகின்றேன்.

அன்புள்ள

**வி.மு. உலகநாதன்**

# 1. ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்

ஆண்டாள்பா வையும் அழகுத் தமிழும் ஒண்
மாண்பும் விளங்கவே மாயவனை—வேண்டினார்
பாடினார் வெற்றிப் பயன்கண்டார் நாம்உணர
நாடி இசைத்தார் நயந்து!

— கவியமுதனார்

ஆண்டாள் அன்னையார் அருளிய பாவையும் அப் பாவையின் மாட்சியினை விளக்கும் தமிழும், அத்தமிழ் எடுத்துக் கூறும் மாண்பும் விளங்கவே, மாயவனான எம் பெருமானை வேண்டினார்; பாடினார்; அதனால் வெற்றியையும் கண்டார். அப்பயனை நாம் அனுபவித் துணர நம்மையும் நாடி இசைத்தார் என்று கவியமுதனார் கூறுகின்றார்,

ஆண்டாள் திருப்பாவையைத் தமிழ் நலம் தோன்றப் பாடித் தூயவனான எம்பெருமானை வேண்டினார். திருப்பாவையின் மூலம் திருவரங்கப் பெருமானை அடை யவே பாடினார்; இப்படிப் பாடியவர் உலகம் நல முறவும் பாடினார் என்பதைத் திருப்பாவையைப் பாடிப் பார்த் தால் நன்கு புலனாகும்.

எல்லாரும் எல்லா இன்பங்களும் பெறுதல் வேணடும் என்ற பரந்த நோக்கத்தால் பாடப்பெற்றதே திருப்

பாவையாகும். இப்பாவையைக் கோதைத்தாயார் தரவு கொச்சகக் கலிப்பா என்கின்ற யாப்பிலக்கண முறைப்படிப் பாடியருளினார். வெண்டளை பிறழாமல் இயற்றிய இதில், கொண்டல் வண்ணனைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

பாடுவோர் விரும்பும் வகையில் இசைநலம் தோன்ற அருளினார். தொல்காப்பிய இலக்கண விளக்கத்தின்படி நல்ல தமிழில் வெல்லம் போல் இனிக்கப் படைத்தார். அந் நாளில் ஆயர்பாடியில் வாழ்ந்த கன்னிப் பெண்கள் மார்கழித்திங்களில் நோன்பு நோற்று மாமாயனை அடைந்து இன்புற்றதைப் போலவே, வேயர் குலத்துதித்த விட்டு சித்தரால் வளர்க்கப் பெற்ற ஆண்டாள்-அன்னையார் ஆயர்குலப் பெண்ணாகத் தம்மைப் பாவித்துக்கொண்டு நோன்பை நோற்க முனைந்தார்.

இவ்வாறு நோன்பு நோற்க எண்ணியவர் வடபுலத்தின் நெறிக்கு ஆட்படாமல், தமிழ் நெறிவேட்கையில் ஆழங்கால்பட்டு நோற்கத் தலைபட்டார். ஞால முழுமைக்கும் உரியவனான கண்ணபிரான் வடமதுரையில் தோன்றினாலும் அவனையே நாயகனாக ஏற்க விழைந்த ஆண்டாள் தமிழ் நெறிவழி நின்று ஏற்க முனைந்தார். ஆதலால், வில்லிபுத்தூரைத் திருவாய்ப் பாடியாகவும் அப்பதியில் ஒப்பின்றி விளங்கிய பெண்களை ஆயர் குலப் பெண்களாகவும் தாம் அப்பெண் மக்களுள் ஒருவராகவும், வடபெருங்கோயிலே, நந்தகோபருடைய மாளிகையாகவும், அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் கண்ண பெருமானாகவும் உருவகப்படுத்தித் தம் திருவுள்ளத்தைத் திருவாய்ப் பாடியில் செலுத்திய பாவனையின் முதிர்ச்சியாலே தோய்ந்து நின்று அருளியதே இத்திருப்பாவை என்னும் அரிய பிரபந்தமாகும்.

செந்தமிழ்ப் பண்பில் சிந்தை ஒன்றிய அவர் அபரர்க்கு அமிழ்தம் கடைந்தருளிய ஆராவமுதன் மீது ஆராக்காதல் கொண்டிருந்தார். கன்னியாக, கண்கவரும் காரிகையாகத் திகழ்ந்த கோதைப் பிராட்டியாருச்கு உரிய கொழுநனை ஏற்படுத்த இயலாமல் விட்டு சித்தர் மனம் வருந்தினார்.

ஒரு நாள் அருமை மகளைப் பார்த்து ''நீயாருக்கு இனிய துணைவியாய் இலங்கப் போகின்றாய்?'' என்று அன்பு வெளிப்படக் கேட்டார். வந்தனைக்குரிய தந்தை யார் வியக்கும் வகையில், ஆண்டாள் தம் உள்ளக் கிடக்கையை

''மானிடர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன்''

என்று வெளியிட்டார். ''எம்பெருமானனத்தவிர வேறு யாரையும் யான் ஏற்றுக்கொள்ளேன்'' என்று இதில் தம் உறுதிப்பாட்டினைத் தெரிவிக்கின்றார்.

''அருமை மகளே நடவாத ஒன்றை நவின்றாய்: இஃது எவ்வாறு ஈடேறும்?'' என்று கேட்டார் விட்டு சித்தர். ''நான் விரும்பிய பெருமானுக்கு உரியவளாக இருப்பேனே அன்றி, வேறு எவர்க்கும் வாழ்க்கைப்படமாட்டேன் எனத் திட்பமாகக் கூறினார் கோதை. தாம் உரைத்த அந்த அருளாளனை மணாளனாக ஏற்க நோன்பு நோற்க முனைந்தவர், முதலில் நீராடலை மேற்கொண்டார். இதைத் திருப்பாவை முதற் பாசுரத்தில் ''நீராடப் போதுவீர்'' என்றும் நான்காம் பாசுரத்தில் ''மார்கழி நீராட'' என்றும் இருபத்தாறாம் பாசுரத்தில் ''மார்கழி நீராடுவான்''என்றும் பாடித் தெரிவிச்கின்றார். இவர்தம் கருத்துக்குப் புறச் சான்றாக

"கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிபடு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிரும் திங்கள் மறுநிறை ஆதிரை
ஆம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
பனிப்புலர் பாடி"

என்று பரிபாடல் வரிகள் விளம்புகின்றன.

இந்த உயரிய நோன்பினைக் கன்னிப் பெண்கள் மார்கழித்திங்களில் நோற்றதாகப் பரிபாடல் தெரிவிக்கின்றது. முன்னாளில் உருக்குமிணித் தேவியார் கண்ண பிரானைத் தம் நாயகனாக ஏற்க எண்ணிப் பாவை நோன்பை நோற்றதாகப் பாகவதம் கூறுகிறது. இக் கருத்தை,

"கன்னிநல் நகரில் எய்திக்
கள்அயா உயிர்க்கும் அம்தண்
கன்னிஅம் துளவு சூடும்
கண்ணனே கணவ னாகக்
கன்னிநீ அருள்செய் கென்னாக்
கணனுதல் வேட்கும் ஓங்கல்
கன்னியை உலகம் ஈன்ற
கன்னியாங் கேத்தி னாளால்."

என்று இவ்வாறு தெரிவிக்கின்றது. இதில் கன்னியாகிய பார்வதிதேவி கண்ணுதல் கடவுளை அடைய பாவை நோன்பு நோற்றதைப்போன்று, கன்னியாக விருந்த உருக்குமிணிதேவி கண்ணபிரானை அடைய பாவை நோன்பு நோற்றதாகக் கூறப்படுகின்றது. கன்னிப் பெண்

களாக உள்ளவர்கள் பாவை நோன்பு நோற்று உரிய கணவன்மார்களை அடைந்தார்கள் என இது காட்டு கின்றது. இதனால் பாவை என்பது நோன்பு என்று தெரிகின்றது.

இன்னொரு செய்தி, பாவை என்பதைக் கூத்தாகக் கூறுகின்றது. அப்படிக் கூறும் பாவைக் கூத்தைத் திருமகள் ஆடியதாக விளம்புகின்றது. இக்கருத்தினை நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள்

''பதினோராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்கு''

என்று புகார்க் காண்டம் அரங்கேற்றுக் காதையில் குறித்துள்ளார். இதற்கு அடியார்க்கு நல்லார் உரை வகுக்கையில் பாவையைப் பற்றி,

''பாவை திருமகள் ஆடிற்று அதற்கு உறுப்பு
ஓவாமல் ஒன்றுடனே ஒன்று.''

என்று மேற்கோள் செய்யுள் ஒன்றைக் காட்டியுள்ளார். மேலும் கடலாடு காதையில் பதினோராடலை விவரிக்கை யில்

''செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்''

என்று இளங்கோவடிகளே இப்பாவையென்னும் ஆடலைத் திருமகள் ஆடினார் எனக்கூறுகின்றார். மேலும் யாப் பருங்கல விருத்தி, ஒழிபியல் ''மாலை மாற்றே'' என்னும் சூத்திர உரையில் பதினோராடலைக் குறித்து மேற்கோள் செய்யுள்கள் காட்டப்பெற்றன அவற்றில் பாவை யைப் பற்றி,

''திருவாடல் பாவை அதற்கு உறுப்புத்தேரின்
ஒருவாது இரண்டுடன் ஒன்று''

எனக்கூறப்பட்டுள்ளது. மேலே காட்டிய பாக்களிலிருந்து இறைவன் திருமார்பில் ''அகலகில்லேன் இறையும்'' என்று உறைபவராகிய அலர்மேல் மங்கை, பாவை என்னும் நாடகம் ஆடினார் என்பதும், அவர் இக்கூத்தினை ஆடிய காரணம், அவுணர் என்ற அரக்கர் வீழவும் அந்த அரக்கரால் ஏற்பட்ட துன்பம் நீங்கவும் ஆடினார் என்ற கருத்தில் இதுபேசப் பெறுகின்றது. எனவே, இதுகாறும் கூறியவற்றால் பாவை என்னும் சொல் நோன்பாகவும், கூத்தாகவும் கூறப்படுகின்றன என அறிகின்றோம். எம்பெருமாட்டியான உருக்குமிணி நோன்பு நோற்று எம்பெருமானான கண்ணபிரானை அடைந்தார் எனவும் அரக்கர் கொடுமையை அடக்கி ஒடுக்கி அழிப்பதற்காகப் பாவைக் கூத்தினை நிகழ்த்தினார் எனவும் தெரிகின்றது. இங்கே கோதை என்பார் நோன்பாக இந்தப் பாவையை நிகழ்த்தினார் எனவும் கூத்தை ஆடிய நிகழ்ச்சி ஏதும், இதில் கூறப்பெறவில்லை எனவும் அறியலாம்.

ஆனால் அவர் ஆடுதல் என்னும் சொல்லை நீராடுதற்கு மட்டும் பயன்படுத்தியுள்ளார். திருப்பாவையில் நீராட்டத்திற்கு மழை மிக முக்கியம் தேவை. மழையில்லையேல் நீரில்லை; நீரில்லையேல் நீராட்டம் இல்லை. ஆதலால் ஆண்டாள் மழையை எண்ணிப் பாடுகின்றார். அதைத் திருப்பாவை மூன்றாம் பாசுரத்தில்

''தீங்கின்றி நாடெல்லாம் திங்களும் மும்மாரிப் பெய்து''
என்றும் நான்காம் பாசுரத்தில்

''வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்'' என்றும் தெரிவிக்கின்றார். திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்திற்கு அடுத்த அதிகாரத்திலேயே மழையைப் பற்றிக்கூற வான்சிறப்பு என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தினார். ஆம்; மழை, கடவுளுக்கு

அடுத்த நிலையில் வைத்துப் பேசப்படவேண்டும் என்பதை இவர் தெளிவாகத் தெரிவித்தார்.

இவரைப் போன்றே ஆண்டாள் எம்பெருமானைப் பற்றித் தொடங்கியப்பின் அடுத்து மழைக்கு முக்கியத் துவம் தந்து பாடினார்.

மழை, நீராடி இறைவனை வழிபடுபவர்களுக்கு மட்டு மன்றி உலகியலில் உவந்து வாழ்பவருக்கும் தேவை என்பதைத் திருவள்ளுவப் பெருந்தகை வான்சிறப்பில்

''வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணாற் பாற்று''

என்று பாடித் தெரிவிக்கின்றார். இதில் மழையை அமிழ் தம் என்று குறித்தார். உலகத்தையெல்லாம் வாழ்விப்பது மழையாதலால் அமிழ்தம் என்றார். இதை ஆண்டாள் ''தீங்கின்றி நாடெல்லாம் திங்களும் மும்மாரி பெய்து'' என்று கூறியதால் மழை உலகத்தில் மாதம் மூன்று தரம் பெய்து தீங்கில்லாமல் வாழ்வைப்பது எனக்குறித்தார். மேலும் 'வாழ உலகினில் பெய்திடாய்' என்று கூறியதில் உலகை வாழவைப்பது மழையே என்றும் அதைப் பெருமையாகக் கூறினார்

ஆண்டாள். அழகுத்தமிழ் விளக்கமென்னும் திருப் பாவையின் மூலம் ஆயர்பாடியைப் பெருமை செய்கின் றார்.

''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிர் அரவம்,'' என்றும்,

''கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும்'' என்றும்

''ஏற்றக் கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்''

என்றும் பாடி விளம்புகின்றார். இவற்றுள் ஆய்ச்சியர் தம் வாசநறுங்குழல் அவிழ்ந்து வீழத் தயிர் கடைகின்றனர் என்ற விவரத்தையும், ஓசைப்படுத்த தயிரரவம் என்று கூறியவற்றால், பெண்மக்களின் பேரார்வச் செயலினையும் குறித்தார் கோதை. மேலும் ஆயர்பாடியில் ஆற்றலுடன் திகழ்ந்த ஆடவர்களின் திறத்தினையும் எடுத்துக் கூறுகின்றார். அவர்கள் பால் கறக்கும் செயலை மட்டும் ஆற்றி விட்டு அமைதி அடைபவர்கள் அல்லர். வீரத்திலும் விளங்கி நின்றார்கள். பகைவர்களைப் பட்டொழியச்செய்யும் வன்மை உடையவர்களாகத் திகழ்ந்தார்கள் என்று கூறுவதோடு, குற்றமே சற்றும் அறியாத நற்குணச் சீலர்களாக நிலைத்து நின்றார்கள் என்பவற்றை

''கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்''.

என்று தெரிவிக்கின்றார். தூய நெறியோடு வாழ்ந்த கோவலர் வாழ்க்கையை

''ஆகாத் தோம்பி ஆபயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பா டில்லை''

என்று இளங்கோவடிகளும் தெரிவிக்கின்றார். குறைவின்றி நிறைவோடு வாழ்ந்த கோவலர்தம் வாழ்வினை ஆண்டாளும் இளங்கோவடிகளும் தம் உளமுவந்து பாராட்டுதலை நாம் அறிகின்றோம்.

ஆயர்பாடி, உயர்ந்த மாட மாளிகைகளைக் கொண்டு பெருமையாக இலங்கியது. இதனால் ஆயர்கள் சிறந்த உறைவிடங்களில் திருவிளங்க மிளிர்ந்தார்கள். அந்த மாளிகையில் பகல்காலம் போன்று இரவில் ஒளிவிளக்குகள் அழகு தோன்ற மிளிர்ந்தன. மாளிகை

யின் உட்புறத்தில் அகிற்புகையும் ஆரல்புகையும் மணத்தைப் பரப்பின என்ற விவரங்களைத் திருப்பாவை,

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்"

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. இத்தகைய வாசம் பொருந்திய சூழ்நிலையில் இலவம் பஞ்சு மெத்தையில் ஆரணங்குக் கண்வளரும் காட்சியினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆண்டாள்.

கண்வளரும் பெண்ணணங்குப் பயன்படுத்திய கட்டில் சிறந்த யானை தந்தத்தால் அமைந்த கால்களைக் கொண்டதாக இருந்தது. துடியிடையாள் துயில் கொண்ட அறையில் விடிவிளக்கு வடிவழகைக் காட்டி எரிந்து கொண்டிருந்தது என்ற இன்பச் செய்தியைக்

"குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி",

என்று பாடி இயம்புகின்றார். மணிவாசகர் பாடிய திருவெம்பாவையில் இளநங்கையர் தம்முள் ஒருவரையொருவர் துயில் எழுப்புவது போல் பாடப்பெற்றுள்ளது. கொஞ்சும் தமிழெடுத்துப் பாடியருளிய கோதை, பாவையில், உளங்கொண்டு இளநங்கையர்களை எழுப்புவதோடு, கண்ணபெருமானையும் அவனின் துணைவியான ஒப்பில்லா நப்பின்னைப்பிராட்டியையும் எழுப்புகின்றார். இவ்வாறு துயில் எழுப்புங்காட்சியும் அப்போது செப்பும் மொழியும், விழைந்து செய்யும் தொழிலின் மாட்சியும் படிப்பவர்களுக்கு நாடகம் போல் நல்லின்பம் பயப்பனவாக அமைந்து இலங்கும்.

உடல் பிணி நீங்கிட மருந்தினை உண்ண விரும்பாத ஒருவருக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தை வைத்துத்

தருவதைப் போன்று, உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைப் பயனை நவரசங்களுடன் செறித்து வைத்து உதவும் நீர்மையது நாடகம். எனவே, அத்தன்மையில் இத்திருப் பாவை நாடகத்தை அருமைத் தமிழால் அழகோவியமாக அமைத்தார் கோதை என்றால் அதை மறுப்பார் எவருமிரார்.

நப்பின்னையைத் துயில் உணர்த்தும்போது "நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்" என்றும் "கொத் தலர் பூங்குழல் நப்பின்னை" என்றும் "செப்பன்ன மென் முலை செவ்வாய் சிறுமருங்குல் நப்பின்னை நங்காய்', என்றும் பாடுகின்றார்.

இவற்றில் நந்தகோபாலன் மருமகள் என்று உறவைக் குறித்தும், கொத்தலர் பூங்குழல் என்று பூவைப் போன்ற குழலை உடையவள் என்று கேசத்தைக் குறித்தும், செப்பால் செய்த குமிழைப் போன்ற மார்பும், பவளம் போன்ற சிவந்த வாயும், துடியை ஒத்த இடுப்பும் கொண்டும் அழகுடன் விளங்கும் நப்பின்னையின் சிறப்பைக் குறித்தும் நயம்படப் பாடியுள்ளார் கோதை.

இவர் பாடிய கருத்துக்கு அணி செய்யும் வகையில் "போதியவிழ் மலர்க்கூந்தல் பிஞ்சை" என்று இளங்கோ வடிகளும். "தூய கருங்குழல் நல்தோகை மயிலனைய நப்பின்னை" என்று பெரியாழ்வாரும் "பூங்குழல் பின்னை" என்று திருமங்கை ஆழ்வாரும் "வாசப் பூங்குழல் பின்னை" என்று நம்மாழ்வாரும் "நப்பின்னை இலவலர் வாய் இன்னமிர்தம் எய்தினான்" என்று சீவக சிந்தாமணியும் "ஏர்பின்னை தோள் என்று திருக்கோவை யாரும் நப்பின்னையின் நல்ல அழகைச் செப்பிப் புகழ் கின்றனர்.

ஆண்டாள் நப்பின்னையை எழுப்பியதோடு, மற்றவர்களை எழுப்பும் காட்சியின் நிலையைப் பாடித் தம் பாவை நாடகத்தில் சால்புறத் தெரிவிக்கின்றார். அவற்றை,

"எம்பெருமான் நந்த கோபாலா எழுந்திராய்" என்று நநத கோபனையும், "எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்" என்று யசோதைப் பிராட்டியையும்,

"ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்" என்று எம்பெருமானையும், செல்வா பலதேவா உம்பியும் நீயும் உறங்காமல் எழுக" என்று பலராமனையும், கணணபிரானையும் உவப்புடன் இவர்களின் இனிய திருப்பெயரைக் கூறி எழுப்புகின்றார். விழுமிய நிலையில் பழந்தமிழ் இலக்கிய நயம் தோன்றத் தம் திருப்பாவையை விரும்பிப் பாடி அருளியதாலேயே பெருமையுடன் திகழ்ந்தார் கோதை.

பக்திச் சுவை நல்கும் பாவையைச் சங்க இலக்கியச் சுவை மிளிர, இனிய தமிழ்ச் செய்திகளைப் பெய்து தருகின்றார். இந்த நாடகத்தில் இளம் நங்கைமார்கள், தமக்குள் ஏசியும் பேசியும் சர்ச்சை செய்யும் போக்கும், இந்நங்கைமார்கள் ஒரு மங்கையின் தாயிடம் உறவு முறையில் பேசும் காட்சியும், மிகுந்த உறக்கத்தை மேற்கொண்ட ஒருத்திக்கு எடுத்துக் காட்டப் பெற்ற உவமையும், கண்ண பெருமான் உறங்கும் கவினார் மேன்மையும் இலக்கியச் சுவை மேலிடக் காட்டி அருளியமை கரும்புச் சுவைபோல் இனிமை பயப்பதாகும்.

மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ

என்ற அடிகள் நங்கைமார்கள் ஒரு மங்கையின் தாயிடம் பேசியதை விளக்குகின்றன.

"பண்டொருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த
கும்பகரணனும், தோற்றும் உனக்கே பெருந்துயில்
தான் தந்தானோ, ஆற்ற அனந்தல் உடையாய்."

என்ற அடிகள் பேதை ஒருத்திப் பேருரக்கம் கொண்டதற்கு உவமை காட்டப்பட்டுள்ளன.

"எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாத நாவுடையாய்"

என்ற அடிகளும், "எல்லே இளங்கிளியே" என்னும் பாசுரத்தில் பயின்று வரும் எல்லா அடிகளும் நங்கைமார் ஒருவரோடொருவர் ஏசியும் பேசியும் இருத்தல் தன்மை ஆசியம் மேலிடத் தெரிவிக்கின்றார் கோதை.

மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்

என்று கண்ணபிரான் பண்புமிகுந்த ஒப்பில்லா நப்பின்னையின் மார்பகத்தில் கண் வளரும் காட்சியை மாட்சியுறத் தெரிவிக்கும் அடிகளும். நப்பின்னையைப் பார்த்து நயவுரைகூறி வயப்படுத்திய உன் நாயகனை விட்டுப் பிரிந்துஇருக்க மாட்டாயா? என்று கேட்டு

மைத்தடங் கண்ணினாய் நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்'

என்று இன்பம் தோன்றப் பாடிய அடிகளும் நாடக மாந்தர் உரையாடலாக அமைந்து தித்திக்கும் தேனாகப் பாடுவோர் நாவில் இன்பம் பயப்பனவாய் இலங்குகின்றன.

மருள் நீக்கும் மாமருந்தான திருப்பாவையில் அருளாளனான திருமாலைப் பற்றிய சிறந்த கதைகள்

விதந்தோதப் பெற்றுள்ளன. அவற்றுள் சுவைபட மண்ணைத் தின்ற கண்ணபிரானின் எண்ணிறந்த கதைகளே புதைப் பொருளாகப் பேசப் பெறுகின்றன. வேறு சில அவதாரங்களையும் எடுத்துக்காட்டி, நம் உள்ளம் கொள்ளுமாறு அது தெளிவிக்கின்றது.

''கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம், மாயன், வடமதுரை மைந்தன், யமுனைத் துறைவன், ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கு, பேய் முலை நஞ்சுண்டான், கள்ளச் சகடம் கலக்கழிய கால் ஓச்சியவன், கேசவன், மாவாய் பிளந்தவன், மல்லரை மாட்டியவன், தேவாதி தேவன், மாமாயன், மாதவன், புள்ளின் வாய்கீண்டவன், வல்லானை கொன்றவன், கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பன், பொன்றச்சகடம் உதைத்தவன். கன்றுகுனிலா எறிந்தவன், குன்று குடையாய் எடுத்தவன், கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமால் ஆகியவை கண்ணபெருமான் எடுத்த அவதாரத்தால் நிகழ்ந்த கதைகள் ஆகும்.

''ஓங்கி உலகளந்த உத்தமன்'', அன்று இவ்வுலகம் அளந்தவன்'', இவை எம்பெருமானின் திரிவிக்கிரம அவதாரத்தைக் குறித்தன.

''சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியவன்'', ''பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தவன்,'' சென்றங்குத் தென்னிலங்கைக் கோமானைச் செற்றவன் இவை, இராம அவதாரச் சிறப்பினை அறிவிப்பன. எம்பெருமான் செம்மை விளங்கவே நலம் செய்ய எடுத்த அவதாரங்கள் பற்றி அற்புதமாகக்கொஞ்சும்

தமிழ் கொண்டு கோதை திருப்பாவையில் பெருமை தோன்ற விளம்புகின்றார்.

கோதைப் பிராட்டியார் தோன்றிய குலம் அந்தணர் குலம். செந்தண்மை பூண்டொழுகும் குலத்தில் உதித்த வர் அவ்வேயர் குலத்தைவிட்டு, பாவனையால் ஆயர் குலத்தில் தோன்றிய ஆரணங்காகவே மாறிவிடுகின்றார். வெளித் தோற்றத்தாலன்றி உள்ளத்தால் ஆயர்குல மாதரசியாகவே ஆகிவிடுகின்றார். கண்ணன் ஆயர்குலப் பெண்களின்பால் அதிகப் பற்றுக் கொண்டு அவர்களின் நலத்தைப் பேணும் தலைவனாகவே அவன் ஆசை மேவி நிற்பதைக கண்ட கோதை அந்த வேதம் கூறும் வித்தகனைக்காதலித்து ' நாயகனாக ஏற்கவே பாவனையால்' ஆயமகளாய் ஆனார். இந்த நெறியில் சிந்தைவிழைந்து நின்றவர், ஆயர்குலத்தைச்சார்ந்தவர்களை உறவு கொண்டாடி அன்பு வெளிப்பட இன்பமுற அழைக்கின்றார்.

ஆயர் குல நங்கை ஒருத்தியின் தாயை 'மாமீர் என்றும் அவளின் தந்தையை 'மாமான்' என்றும் அழைத்து, அந்த உறவுத் தன்மையில் தோய்ந்து தம் விழைவு பதிய கூறுதல் காணலாம். மேலும் தம்மை அன்பாக வளர்த்துச் செம்பொருளை அறிந்து நடந்து கொள்வதற்காக வழிக்காட்டிக் கடமை புரிந்த தம் தந்தையைப் பந்தம் தோன்ற திருப்பாவையின் இறுதிப் பாசுரத்தில் பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் என்று திட்பமாகப் பாடிச் சிறப்பித்தார். வஞ்சகமின்றி நெஞ்சத்தின் நன்றி வெளிப்பட அவரை விளம்பிப் புகழ்ந்தார்.

**பாவையின் சிறப்பு :** பாவையைத் திரு என்னும் அடைமொழி கொடுத்துப் பெயர் சூட்டியுள்ளார். இத்திரு

மேன்மையாகிய பாவை எனப் பண்புத்தொகை தோன்றக் கூறியதாகும். மேலும் இதை மேன்மையையுடைய பாவையென்று கூறும் வகையில், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகவும் கொள்ளலாம். கீழே குறித்திருக்கும் பெயர்களின் முன்பு திரு என்னும் சொல்லைச் சேர்த்துத் திருமால் திருவடி, திருவெட்டெழுத்து, திருமழிசைப் பிரான், திருவாய் மொழி, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திருவேங்கடம் என்று திருவருள் நிலையை எடுத்துக்காட்டிப் பேசுதல் போன்று பாவையையும் 'திருப்பாவை' எனப்பெயர்சூட்டி உயர்வாகப் பேசினார்.

'பாவை' என்னும் சொல்லுக்குப் பலபொருள் கூறப் பெற்றாலும், இங்கே நோன்பைக் குறிக்கவே இச் சொல்லை ஆண்டார் என்றே சொல்வதுதான் பொருந் தும். முன்பு கண்ணபெருமானை அடைய வடமதுராபுரி யில் வதிந்த ஆயர்குலப் பெண்டிர் பாவை நோன்பை மேற்கொண்டதைப் போன்று ஆண்டாள் ஆயர் மங்கை யர் போல் பாவனையில் மாற்றமடைந்து நோன்பு நோற்று அவனை அடையத் தலைபட்டார் என்பதை ''நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ'' என்று அவர் பாடியதைக் கொண்டு அறியலாம்.

இவ்வாறு கோதை கொஞ்சும் தமிழ் கொண்டு செவ்விய நிலையில் பாடப்பெற்ற பாவைக்குத் **'திருப் பாவை'** எனப் பெயர் வைத்தது பொருந்தும் என்று ஆசாரியப் பெருமக்கள் அறிவிக்கின்றார்கள். நோன்பு என்று காரியத்தை விளக்கும் பெயர், அக்காரியத்தை உணர்த்தும் நூலைக் குறித்துப் பேசுவதால் இது காரிய வாகு பெயராய்க் கூறப்பெற்றது என்றும் 'திருப்பாவை என்ற தொடர் அடையடுத்து வந்த ஆகுபெயராகவும்

புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவும் கொள்ள இடமுண்டு என்று இலக்கண வல்லார் இயம்புகின்றனர்.

இவ்வாறு தமிழ்நெறியில், தமிழ் இலக்கியச் செய்திகளைத் தாங்கி, தமிழ் இலக்கணப் பண்புகள் விளங்க, எம் பெருமானின் எண்ணிறந்த நலன்களையெல்லாம் எடுத்துக் கூறி, மன்பதையில் வாழ்வோர் அவன் அடிப்போற்றிப் பெருமை எய்தவே திருப்பாவை அருளப் பெற்றது. தாம் கருதிய தன்மைக்கு ஏற்றம் தரும் வகையில் ஆண்டாள் பாவையை அழகுத் தமிழில் விழுமியதாகத் தந்தார்.

இவ்வாறு இவர் பாடிய திருப்பாவையில் பதினைந்து பாசுரங்களை எடுத்துக் கொண்டு ஆய்வினை நிகழ்த்தியுள்ளேன். இப்பாசுரங்களுக்குப் பொருள் கூறியதோடு உள்ளுறைப் பொருளும் சங்க இலக்கியங்களில் வரும் செய்திகளைப் பாசுரங்களில் எங்கே பெய்துள்ளார் என்ற இடங்களையும், பரம்பொருளைப் பற்றி இலக்கியங்கள் பகரும் செய்திகள் திருப்பாவையில் தோன்றி மிளிர்ந்து நிற்றலையும் குறித்துத் தெரிவித்துள்ளேன்.

திருப்பாவையின் மாட்சியைச் சிறப்பித்துக் காட்டவே யான் இந்தப் பணியில் தலைபட்டேன். உலகமெல்லாம் ஒருவனாய் நின்று அருளும் உத்தமனை உயர்த்திக் காட்ட வந்த ஆண்டாள். ஒண்டமிழ் மாண்பில் மாறாமல் கோவலனாய் வந்து குன்றெடுத்தானை, கொண்டல் வண்ணனை உயிர் ஓவியமாகத் தீட்டித் திருப்பாவையினைச் சிறப்பாக அருளினார். எனவே,இதுகாறும் கூறியவற்றால் ஆண்டாள் பாவை அழகுத் தமிழில் நமக்குப் பழமாகக் கிட்டப் பெற்ற ஒன்று எனப் போற்றல் வேண்டும். இப்பழத்தினை விழைந்து எடுத்துப் பாடிச் சுவைத்து ஆராவமுதனை நாடி அவன் சேவடியில் நித்தம் சென்னி சாய்த்து இன்பம் துய்ப்போமாக !

# 2. சங்கத் தமிழ்மாலை முப்பது

முப்பது பாசுரங்கள் முத்தாய் விளைந்திசைத்துத்
தப்பாது சங்கத் தமிழ்மாலை செய்தருளி
மாயன் திருவடியில் வைத்துவந்த ஆண்டாளை
வாயாரப் பாடி வணங்கு!

—கவியமுதனார்

திருப்பாவை முப்பது பாசுரங்களை முத்தாக விரும்பிப்பாடி கொடுத்தார்; இந்த முப்பது பாசுரங்களும் 'சங்கத் தமிழ் மாலை' என்று கூறி இப்பாசுரங்களை மாயவனின் திருவடியில் வைத்து மகிழ்ந்தவர் ஆண்டாள்; அவரை வாயாரப்பாடி இசைத்து வணங்குமாறு கவியமுதனார் மேற்குறித்த வெண்பாவால் கூறுகின்றார்.

இவர் ஆண்டாளைப்போற்றியதைப் போன்று வேறு பலரும் போற்றியுள்ளனர். கோதைப்பிராட்டியார் பாடிய பாசுரங்கள் எண்ணிக்கையில் குறைவானாலும் அப்பாசுரங்கள் பெற்றுள்ள கருத்தால் உயர்வை, நிறைவை, பெற்றுள்ளன. ஆம், அவர் பாசுரங்களை வேதமனைத்திற்கும் வித்தாகும் கோதைத் தமிழ்" என்றார் ஒருவர். வேதங்கள் அனைத்தையும் தோற்றுவிக்கும் வித்தாக அமைந்துள்ளது அவர் தமிழ் என்று சிறப்பித்தார் அவர்.

சிறந்த கோதைப் பிராட்டியார் இசைத்தருளிய தம் திருப்பாவையைச்சங்கத் தமிழ் என்று சொல்லியதைக் கேட்ட அச்சான்றோர், 'கோதைத் தமிழை வேதமனைத்திற்கும் வித்து' என்று கூறிப்போற்றினார் போலும். மேலும் ஆண்டாள் அன்னையாரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை என்றும்' சூடிக்கொடுத்த சுடர்க்கொடியென்றும், வண்புதுவை நகர் உதித்த கோதையென்றும் சித்தத்தால் மெத்த விழைந்தே சிறப்பித்தார் அவர். கோதையார் பாசுரத்தில் நெஞ்சைப் பறி கொடுத்ததால் இவ்வாறு புகழ்ந்தார்.

நம்பிக்கை நாயகனாக மிளிரும் எம்பெருமான் பெற்றியினைப் பெரியாழ்வார் இடையறாமல் ஏத்தி வந்தார். அருளாளனுக்கு உகப்புண்டாகும் வகையில் நறுமண மலர்களைக் கொண்டு அவன் திருமார்பில் இலங்கவே பூமாலையைச் சூட்டியும் வாயாரப் பாடி அவன் திருவடியில் பாமாலையைக் குவித்தும் போற்றி வந்தார்.

இந்த நறுமணமலர்களை நாள்தோறும் பெற, ஒரு தோட்டம் அமைத்து, செடி, கொடிகளை வைத்துக் கொத்தி, எருவிட்டு, நீர்பாய்ச்சி, வந்தார். இத்தகைய தொண்டில் ஈடுபட்டுவந்த அவர், ஒருநாள் தோட்டத்தில் துளசிச்செடி அருகில் கொத்திக் கொண்டிருந்தபோது அங்கே அழகு வாய்ந்த பெண்குழந்தை தம் கண்ணைக் கவரும் வகையில் மிகச்சிறந்த ஓவியமாக இலங்கக் கண்டார்; உளம் மகிழ்ந்தார்; அக்குழந்தையைத் தாயினும் சாலப் பரிந்து விரும்பி வளர்த்து வந்தார். பூமிப் பிராட்டி மடியிலிருந்து கிட்டப் பெற்றதால், பூமாதேவியின் அவதாரமென்று கருதிக் காத்து வந்தார். இந்த மண்ணுலகை வாழ்விக்க வந்த தெய்வத்திருமகளாக

எண்ணி இனிது வளர்த்து வந்தார்; தம்மாதவத்திற்குக் கிட்டிய பரிசு என்று கருதி எழிலாகப் பேணி வந்தார். கண்டெடுத்த எழில் மகளுக்குக் கோதை என்று பெயர் சூட்டி உயர்வாக வளர்த்து வந்தார்.

அருளாளனை நிதம்போற்றும் விட்டு சித்தர், கிட்டப் பெற்ற கோதைக்கு ஒல்லும் வகையால் நல்லறிவு புகட்டி வந்தார். கண்ணபெருமானின் பக்தியில் கருத்தைச் செலுத்தி வரச்செய்தார். அடியார்பால் அன்புகாட்டும் ஆராவமுதன் பக்தியில் கோதை ஆழங்கால்பட்டு, ஆற்றலுடன் நிற்க வகை செய்தார்.

உடல் பொலிவோடு உள்ளத்தெளிவும் பெற்றுத்திகழச் செய்தார். கோதை செய்யும் செயலனைத்தும் மாதவனைக் குறித்ததாக இருக்கவே வகைசெய்தார் பெரியாழ்வார். தம்மைப்போல் தம் மகள் கோதையும் எம்பெருமான் பக்தியில் நிலைத்திருத்தலைக் கண்டு உளம் பூரித்தார்.

கோதையாரின் உயர்ந்த கொள்கைகள் இப்புவிக்குச் சாதனை நல்கும் எனப் பலர் போற்றினர். அந்த அளவில் விந்தைக்குரிய தயாபரனின் பற்றில் தலைசிறந்து விளங்கினார். பட்டர்பிரான் என்று போற்றப்பெற்ற விட்டுசித்தர், தம் மகளின் திட்டமிட்ட பக்தியினைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியினைக் கொண்டார். சிந்தைக்கினிய தந்தையார் காட்டிய அந்தமில் ஆனந்த வாழ்வை அகத்தில்கொண்டு ஞானப்பாதையில் நடைபயின்றார் கோதை.

அந்த நெறியில் பந்தமுடன் நின்று கொஞ்சும் தமிழ் கொண்டு திருப்பாவையைப் பாடி, சஞ்சலம் தீர்க்கும் தயாபரனைப் பரவினார். கேட்பாரும் வேட்கைகொண்டிடப் பாட்டமுதத்தைத் தந்தார். கருணாமூர்த்தியான கண்ணபெருமானே எண்ணிறந்த நலத்தினை வழங்கும்

தெய்வமென்று அவன்மீது காதல் கொண்டு கவின்மிகுந்த கருத்துக் கவிதை மலர்களை இசைத்துத் தூவினார். அவனே புவி அனைத்திற்கும் தெய்வம் எனக் கருதி அவனைப் பாடி செந்நெறியில் மாறாமல் தெளிந்த அறிவொடு திகழ்ந்தார்.

நிலையில் திரியாமல் நின்ற அவர், அலையின் மேல் கிடக்கும் அறிதுயில் அழகனைத் தம் தலைமேல் இருகை கூப்பி ஒருமையுடன் அகம் விழைந்து போற்றினார். கவலையை மாற்றவல்ல அவனையே மனத்திற்கினிய மணாளனாக ஏற்க எண்ணினார்.

பக்திக் கட்டுப்பாட்டில் நின்று திட்பமுடன் செயற் பட்டார். அந்த உயர்நெறியில் அவர் இசைத்த பிரபந்தங் கள் இரண்டு. அந்தப் பிரபந்தங்கள் இந்தச் சமுதாயத் தின் இரண்டு கண்களைப் போலவும், உயிரும் உயிர்ப்பும் போலவும் சிறந்தனவாகும். அவற்றுள் ஒன்று அருமைப் பாடு தோன்றப் பாடப்பெற்ற திருப்பாவை. மற்றொன்று பொற்றாமரை அடியுடையானைப் போற்றிப் பாடப் பெற்ற நாய்ச்சியார் திருமொழி. திருப்பாவை முப்பது பாசுரங்களைக் கொண்டு மணிமுடியாத் திகழ்வது; நாய்ச் சியார் திருமொழி ஒருநூற்று நாற்பத்து மூன்றாய் விண் சுடர்போல் மிளிர்வது.

இவ்வாறு இந்த இரு பிரபந்தங்களைப் பாடியதால், திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே! ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே! என்று இவரைச் சிறப்பித்துப் பேசப்பெற்றது. அப்பிள்ளை என்னும் அன்பர் ஆண்டாளின் ஆற்றலை அறிந்தும் அவர்தம் பிரபந்தங்களின் பெருமையைத் தெரிந்தும் வாழி திரு நாமம்பாடிப் புகழ்ந்தார். இவர்தம் கருத்தால்

ஆண்டாள் பாடியருளிய இரண்டு பிரபந்தப் பாசுரங்களும் நூற்று எழுபத்து மூன்று என அறிகின்றோம்.

இந்தப் பாசுரங்களைப் பாடி வாசுதேவனின் நேசக் கரத்தினைப் பற்றும் வாய்ப்பினைப் பெற்றார். அவர் எண்ணியவாறு அவனையே மணாளனாகப் பெறும் வாய்ப்பினை எய்தியதை இவர் தம் வரலாறு இயம்புதல் காணலாம்.

நந்த கோபன் குமரனை நாயகனாக ஏற்க இவர் இசைத்த பாசுரங்கள் இனிமை தருவன. அப்பாசுரங்கள் கோதையார் எண்ணத்தை நிறைவேற்றி வைத்ததோடு, தமிழ்ச் சமுதாயத்தையும் நெறிப்படுத்தி வைத்துள்ளன. இந்த இகத்தில் இப்பாசுரங்கள் புகழோடு இன்றும் இருக்கக் காண்கின்றோம். இப்பாசுரங்களை அருளியதால் மக்கள் மனத்தில் கோதைப் பிராட்டியார் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார். தக்கவராக எக்காலத்தவரும் போற்றத்தகுந்த வகையில் அவர் இசைத்த பாசுரங்கள் அவருக்குப் புகழைத்தேடித் தந்துள்ளன.

இந்த அறிவியல் உலகத்திலும் அவரைத் தெரிய வைத்தல் அவர் அருளிய இனியப் பாசுரங்களே ! அவர் தம் பாசுரங்களில் மனத்தைப் பறிகொடுத்தவர் பலராவர். இன்று பெரியதெனப் பேசப்பெறுகின்ற சிறந்த வேதங்களுக்கும் உபநிடதங்களுக்கும் வித்தாக அமைந்தது கோதைத்தமிழ் என்று பெருமை செய்த அவர் திருப்பாவையின் அருமைப்பாட்டை உணர்ந்தவராவர்.

அவர் கோதை மொழியென்று கூறாமல் கோதைத் தமிழ் என்று கூறியதற்கு உரிய காரணத்தை அறிதல்

நலம் பயக்கும். சங்கத்தமிழ் இலக்கியங்களில் வரும் செய்தியை எல்லாம் திரட்டி, தம் திருப்பாவையில் பெய்து பாடியிருத்தலால், திருப்பாவையைக் கோதைத் தமிழ் என்று கூறி, இஃது நான்மறைகளுக்கெல்லாம் வித்து என்றார்.

கோதை ஓரிடத்தில் கோவிந்தனை உயர்த்திப் பேசும் போது "வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்து" என்று பேசியதைப் போன்று, மேற்குறித்தவரும் வேத மனைத் திற்கும் வித்தாகும் என்று திருப்பாவை பெற்ற உயர்வைச் சிறப்பித்தார்.

கோதைத் தமிழில் சங்கத் தமிழ் இலக்கியச் செய்திகள் இருத்தலைத் திருப்பாவை முப்பதாம் பாசுரத்தில் "சங்கத் தமிழ் மாலை முப்பது" என்று தெரிவித்தார். அவர் முப்பது என்று பாடியதால் திருப்பாவை முப்பதும் சங்கத் தமிழ் மாலையாகவே படைத்தார் என்று அறிதலே பொருத்தமாகும்.

இவர்தம் பாசுரத்தின் கருத்தைக்கொண்டு பார்த்தால் திருப்பாவை முப்பது பாசுரங்களிலும் சங்க இலக்கியங் களின் செய்திகள் தோன்றப் பாடப்பெற்றன எனத் தெரி கின்றது. எம்பெருமானின் பெருமையெல்லாம் வெளிப் படவும், அவனை நம்பியவர்கள் பெற்ற நன்மையை விளம்பியும் கொடியவர்களை அவன் வீழ்த்தியதைக் காட்டியும் பாடப்பெற்ற திருப்பாவையின் கருத்து களைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர் போற்றி ஏற்றுக் கொள்ளுதல் என்ற வகையில் கோதை சங்கத் தமிழ்ச் செய்திகளை உளங்கொண்டு தம்திருப்பாவையில்

கொண்டிருத்தல் வேண்டும். அதனால்தான் "சங்கத் தமிழ்மாலை முப்பதும்" என்று மொழிந்தார்.

எம்பெருமானைக் குறித்துப் பாடிய செய்தியும் நீராடல் என்னும் செய்தியும் சங்க இலக்கியங்களில் உள்ளன. அவற்றை உவந்து ஏற்ற கோதையார் திருப்பாவையில் வைத்துப் பாடிப் பெருமை காண்கின்றார்.

"சங்கத் தமிழ்மூன்றும் தா" என்று சங்கத் தமிழ்மீது வேட்கை கொண்ட ஔவையார் விநாயகப்பெருமானிடம் கேட்கின்றார். இவரைப் போன்று கோதையாரும் சங்கத் தமிழ்மீது காதல்கொண்டவர். அதனால் சங்கத்தமிழ் அனைத்தும் பயின்று அவற்றில் வரும் தமக்குகந்த பாடுபொருள்களையெல்லாம் திருப்பாவையில் வைத்துப் பெருமை செய்ததால்

"சங்கத் தமிழ்மாலை முப்பது"

என்று பாடித் தெரிவிக்கின்றார். கோதைப் பிராட்டியார் உறுதிப்பாடு தோன்றக் கூறிய கருத்தை மாற்றி உரையாசிரியர்கள் வேறுபொருள் கொள்கின்றார்கள்.

"சங்கம்" என்பதற்குக் கூட்டம் என்னும் பொருள் கொண்டு ஆய்ச்சியர்கள் கூடி முப்பது திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிக் கண்ணபிரானைப் பரவி நின்றார்கள் என்று உரையாசிரியர்கள் கருதுகின்றார்கள். இவர்கள் உரை ஆண்டாள் கருத்துக்கு ஏற்புடையதாகாது.

திருப்பாவையில் இருபத்திரண்டாம் பாசுரமான "அங்கண்மா ஞால"மென்பதில் மூன்றாம் அடியில் சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்று கூறப் பெறுகின்றது, இதற்கு மன்னர்களெல்லாம் கூடி

உன்னடிக்கீழ் இருத்தல்போல ஆய்ச்சியர்களாகிய நாங்களும்கூடி வேண்டுகின்றோம்] என்று உரை வகுத்துள்ளனர். இது பொருந்து மாறுள்ளது.

இதே கருத்தைச் "சங்கத் தமிழ் மாலை முப்பது" என்ற அடிக்குப் பொருத்துவது ஏற்புடையதாகாது. இதற்கு, முப்பது பாசுரங்களும் சங்கத் தமிழ்" என்றே பொருள் கொள்வதுதான் கோதையார் உள்ளத்தை நிறைவு செய்வதாக அமையும்.

ஆம், சங்க இலக்கியங்களில் வரும் செய்திகளைத் திருப்பாவையில் எடுத்தாண்டு பாடப்பெற்றது என்பதைத் தெளிவுபடுத்தவே, இவ்வாறு பாடினார் ஆண்டாள் என்று கூறுவதே சிறப்பாகும்.

"சங்கம்" என்னும் சொல்லுக்கு மன்றம் என்றும் கூட்டம் என்றும் பொருள். இந்தப் பாவையில் இருபத்திரண்டாம் பாட்டின் மூன்றாம் அடியில் வரும் "சங்கம் இருப்பார்போல்" என்ற தொடருக்குக் கூடி நின்றார் போல் என்று பொருள் கொண்டது சரியே. ஆனால் முப்பதாம் பாசுரத்தில்

"சங்கத் தமிழ் மாலை முப்பது"

என்பதற்கு, கூடி நின்றார் முப்பது தமிழ்மாலை பாடி நின்றார் என்று கூறுவது பொருந்தாது என்பது வெள்ளிடைமலை. "சங்கத் தமிழ்" மாலை என்றே திருப்பாவை முப்பதையும் குறித்ததால் திருப்பாவையைச் சங்கத் தமிழ் என்றே கொள்ள வேண்டும், திருப்பாவை முப்பதையும் சங்கத் தமிழ் என்றே அடைமொழி கொடுத்து ஆண்டாள் பேசுவது கொண்டு அறியலாம்.

மன்றம் என்னும் சொல்லே சங்கமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கம் வைத்துத் தமிழ்

ஆய்ந்தனர். அச்சங்கத்தில் சான்றோர்கள் பலர் இருந் தார்கள். அவர்களால் தெரிந்தெடுசகப்பெற்ற நூல்களே அகம், புறம் என்ற இலக்கியங்களும் தொல்காப்பியம் முதலானவையும் ஆகும். அவைகளில் மிளிரும் செய்தி களுள், திருப்பாவைசகு உகந்தவற்றையே க ண டு கோதையார் எடுத்தாணடார். இதைத் தெரிவிக்கவே 'சங்கத்தமிழ்மாலை முப்பது'' என்றார். எனவே ஒவ்வொரு பாசுரங்களிலும் வருகின்ற அடியில், சீரில் உள்ள சங்கச் செய்திகளை எடுததுககாட்டி அந்த அழகுத் தமிழில் எம்பெருமான் இலங்குவதைத் தெரிவிச்க எழுந்ததே இப்படைப்பாகும்.

எம்பெருமான் பெற்றியினையெல்லாம் குறிச்கும் திருப் பாவையில், கடைசி பாசுரத்தில் ஐந்தாம் அடியில் மட்டும ''தமிழ்'' குறித்துத் தெரிவிககின்றார். எல்லாப் பாசுரங் களையும் நல்லதமிழில் வெல்லம்போல் இனிச்கப்பாடிய ஆண்டாள், அப்பாசுரங்கங்களிலெல்லாம் தமிழ் என்ற சொல்லினைக் குறிசகாமல் இறுதிப் பாசுரத்தில் மடடும் குறித்துச்காட்டச் காரணம் என்ன ?

திருப்பாவை முப்பதும் சங்க இலக்கிய தமிழ் விரவிவரப் பாடப்பெற்றது என்பதைக் குறிசகவே கோதைப் பிராட்டியார் எந்தப் பாசுரங்களிலும் குறிசகா மல முப்பதாம பாசுரமான கடைசிப் பாசுரத்தில் கையாண்டார் எனக கொள்ள வேணடும்.

எம்பெருமான்பால் எந்த அளவில் பக்திகொண் டிருந்தாரோ அந்த அளவில் தமிழ்மீதும் பற்றுக் கொண் டிருந்தார் என்பது 'திண்ணம். கண்ணனைப். பாடி அவனின் அழகையெல்லாம் அனுபவித்து வெளியிடுவ தற்குத் தமிழே பெருந்துணையாயிருந்ததால் கோதை தம்

பாவையில் கொஞ்சும் தமிழ்கொண்டு கோவிந்தனை நடம் புரியச் செய்தார். எனவே நாமெல்லாம் கோதையார் பாவையை நிதம் பாடி அவர்தம் கொஞ்சும் தமிழில் கோபாலனைக் காண்போமாக! கண்டு நல்லின்பம் துய்ப்போமாக!

## நெறியில் நிற்போம்

உயர்வான செம்மொழியாம் தமிழ்மேல் பற்றை
உள்ளத்தால் கொண்டவராம் ஆண்டாள் அன்னை
துயரறுக்கும் சுடரடியைப் பெற்ற கண்ணன்
சுந்தரனைத் திருப்பாவைப் பாசு ரத்தால்
வயப்படுத்திக் கொண்டவரே கண்ண னையே
மாணளனாக ஏற்றவரே மக்கள் எல்லாம்
வியப்புறவே போற்றிடவே வாழ்ந்த அன்னார்
விளக்கமுற வழியுரைத்தார் நெறியில் நிற்போம்.

## நிலைத்து நிற்போம்

முப்பதுநன் மணிகளென ஒளிர்ந்தி லங்க
மொழிவிளக்காய் அருளியதேன் பாசு ரங்கள்
ஒப்பில்லா வகையினிலே படைத்த ளித்தே
உலகளந்த பெருமாயன் சீர்த்தி தன்னை
இப்பாரில் உள்ளவர்கள் போற்றும் வண்ணம்
இசைப்பிறங்கப் படைத்தளித்த ஆண்டாள் அன்னை
எப்போதும் நம்மனத்தில் உறைந்தி லங்கும்
ஏற்றத்தை போற்றியென்றும் நிலைத்து நிற்போம்.

# 3. கார்மேனிச் செங்கண்ணன்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்
கார்மேனிச் செங்கண்ணன் கண்ணபிரான்—பேர்பாடித்
தந்தார்நம் கோதையார் சங்கத் தமிழ்தன்னைச்
சிந்தைக் கினியதெனச் செப்பு !

(கவியமுதனார்)

மார்கழி மாதம் மதிநிறைந்த நல்ல நாள்களையுடையது. அந்த நன்னாளில் கருமைநிற மேகத்தைப் போன்ற உடம்பும், தாமரை மலர்களைப் போன்ற சிவந்த கண்களும் பெற்ற கண்ணபெருமானின் திருப்பெயரைப் பாடித் திருப்பாவையைத் தந்தார். அந்தத் திருப்பாவை' சங்கத் தமிழ்மாலையாகும். அதைக் கோதைப் பிராட்டியார் சிந்தைக்கினியதாக அருளினார். அருமை சான்ற இந்த அருளிச்செயலைத் தினமும் பாடிப்பரவி வந்தால் நலம்பெறலாம் என்று நமக்குக் கூறுகின்றார் கவியமுதனார். அடுத்து

"தடுத்தாளும் ஐவர் தகையாமன் மாற்குக்
கொடுத்தாள் குழல்சூடிக் கோதை—அடுத்தே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் செம்பொற்
கருப்பாவை அன்னாள் கழல்"

என்று கோதை வெண்பா கூறுகின்றது. இவ்வெண்பாவில் ஐவராகிய பாண்டவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த கண்ணபெருமானுக்கு, முதலில் தம் கூந்தலில் சூடிய பூமாலையைக் கொடுத்தார்; அடுத்துத் தாம் வாயால் பாடிய பாமாலையைக் கொடுத்தார். உலகம் நலமுறத்

திருப்பாவையை அருளியதால், கோதைப் பிராட்டியாரை உயிர்ப்பாவை என்று உயர்த்திப் பேசுகின்றது. இது மேலும் நம் உயிருக்கு நலம் அருள்வது திருப்பாவை ஆதலால் அதை அழகோவியமாகப் படைத்தருளிய அவரின் திருப்பாதங்களைப் போற்றுமாறு உணர்த்துகின்றது இவ்வெண்பா.

இத்தகைய பெருமை வாய்ந்த திருப்பாவையில் முதற் பாசுரத்தில் தம் நோன்பினைக் குறிக்கின்றார். அந்த நோன்பால் உண்டாகும் பயனையும் கூறுகின்றார். பயனைத் தாம் மட்டும் அனுபவிக்காமல் மற்றவர்களும் அனுபவிக்கச் செய்கின்றார். நோன்பால் பயனை இனிது அளிப்பவன் கண்ணபெருமான். கோதை கோரும் பயன் கோவிந்தனே! ஆதலால் அவனை அடைய அழகுறப்பாடுகின்றார். வேண்டுதல் அளிக்கும் வேணுகானனை ஆண்டாள் பாவையில் அழகுத் தமிழால் சித்திரிக்கின்றார். கொஞ்சும் தமிழ் குலவிட, கோவிந்தன் நடமிடக் கூவும் குயில் போல் பாவையைப் பாடுகின்றார்.

செல்வச் சிறப்பைக் காட்டும் திருவாய்ப் பாடியிலே அழகு நலனும் அறத் தொண்டும் கொண்டு இளம் பருவத்துடன் திகழும் ஆயர்குலப் பெண்மக்களே! உங்கள் அழகைச் சிறப்பிக்கின்ற வகையில் அணிகலன்களைப் பூண்டுள்ளவர்களே! மிகச்சிறந்த மாதமான மார்கழியின் முழுநிலவு ஒளிமழையினைப் பொழியக் காண்கின்றீர்கள். இத்தகைய இனிய நன்னாள் நமக்கு வாய்த்த ஒரு பொன்னாளாகும்.

எனவே, இந்த இனிய நாளில், கூர்மையான வேலாயுதத்தை உடையவனும், பகையை அழிப்பதில் வீறு கொண்டு நிற்பவனுமான நந்த கோபாலனுக்கு மகிழ்ச்சியைத் தரும் மகனாயும் அழகுவாய்ந்த பெரிய

கண்களையுடைய எசோதைப் பிராட்டியாருக்குச் சிங்கக் குட்டியானவனும், கார்மேகத்தைப் போன்ற மேனியைக் கொண்டவனும், செந்தாமரை போன்ற கண்களையுடைய வனும், சூரிய சந்திரர்கள் போல முகத்தைப் பெற்றவனு மான நாராயணமூர்த்தியைப் போற்றி நலம் பெற வாருங்கள் என்று தம் தோழிமார்களை விழைந்து அழைக்கின்றார் கோதை.

அப்பெருமாயன் தூயவன்: வாய்மையை விழையும் ஆயன், அவனைப் போற்றிப் பற்ற முயன்றால் நம் முடைய குற்றம் அற்றுப் போகும். எனவே, நம் குறை யைப் போக்க அவனிடம் பறையைக் கோருவோம். அவன் அருளும் பறையைக் கொட்டி முழக்கினால், நம்முள்ளத் தில் கெட்டியாகப் பற்றியிருக்கும் பாவப்பறவைகள் பட்டெனப் பறந்து போகும்.

அவனைக் கோரி உவப்புடன் நாம் செய்யும் நோன்பை இம்மண்ணுலகம் அறிந்து போற்ற வேண்டும். எனவே, இந்தக் குளத்தில் ஆழப்படிந்து நீராடி அவன் பேர் பாடி மகிழ்த் துயில்களைந்து எழுந்து வாருங்கள் என்று பாடுகின்றார் கோதை.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் !

என்பது அவர்தம் முதற் பாசுரமாகும். கண்ண பெருமான் 'நான் மாதங்களில் மார்கழி' என்று தனக்கு உகந்ததாகப் பேசப்பெற்ற சிறந்த மாதமான அந்த மார்கழியில் தான் கோதையார் நோன்பை நோற்றுக் கோவிந்தனைப்பெற முனைந்தார். எடுக்கின்ற விழா இனிது நிறைவேறப் பூரண நிலவுக் காலத்திலே செய் வார்கள். அந்த இனிய காலமே ஒருவரையொருவர் சந்திக் கவும் முகம் தெரிந்து பேசவும். எம்பெருமானைப் பரவ வும் சிறந்த காலம் "அது மதி நிறைந்த நன்னாள்" ஆதலால் அந்நாளில் நோன்பைத் தொடங்கிய செய்தி யினை ஆண்டாள் அழகுத் தமிழில் அறிவிக்கின்றார் நாளும் நீராடி நாராயணனைப் பரவுதல் நலமாகும். அந்நியதியை ஆற்றாமல் அவன்பேர் பாடாமலிருந்தால். காராளன் விழையான் என்பதால், அவனை நீராடிப் மகிழ்வோடு போற்றுதல் நியதி என்றார்.

"பெற்றேன்வாய்ச் சொல் இறையும் பேசக் கேளேன்
பேர்பாடித் தண்குடந்தை நகரும் பாடிப்
பொற்றாம ரைக்கயம்நீ ராடப் போனாள்
பொருவற்றாள் என்மகள் உம் பொன்னும் அஃதே

என்று திருமங்கையாழ்வாரும் பாடியருளினார். எனவே, இந்நியதியில் நின்று உயர்வழி காட்டும் கோதை தம் தோழிமார்களிடம்

நீராடப் போதுவீர் "போதுமினோ" என்று கூறி நீராட வருபவர்களையெல்லாம் வந்து அனுபவிக்க அழைக் கின்றார். அயோத்தியைவிட ஆய்ப்பாடி சிறந்ததாகக் கருதுகின்றார் கோதை. எவ்வாறென்றால், பரதன் இராமபிரானை நாடாள அழைத்தபோது இராமன் வர மறுத்தான். ஆனால் பலராமன் சொல்வதைக் கண்ண பிரான் தள்ளாமலும் கண்ணபிரான் சொல்வதைப்

பலராமன் தள்ளாலும் ஏற்று ஒத்து நடந்ததால் ஆயர்பாடி சிறந்து விளங்கியது என்பதை உணர்த்த ஆய்ப்பாடி'' என்று குறித்தார்.

எறும்பு முதலிய சிற்றுயிர்களின் இறப்பைக் கண்டு அஞ்சிப் பசும்புல்லில் நடக்கும் போதுகூட. காலை ஊன்றி நடந்தறியாத நந்தகோபன், கண்ணனை மகனாகப் பெற்ற பின்பு அவனிடத்தில் பரிவு அதிகமானதால், அவனைக் காக்க எப்போதும் கூரியவேலும் கையுமாயிருந்ததைக் காட்டவே,

அவனைக் "கூர்வேல் கொடுந் தொழிலன்" என்றார் ஆண்டாள். கார், மழையைப் பொழிந்து நலஞ்செய் வதைப் போன்று, கண்ணன் மேனியும், ஞானம் அருளும் தகுதியினைப் பெற்றதால் "கார்மேனி" என்றார். கமலப்பூ விரிந்து தேனைச் சொரிதல் போன்று எம் பெருமான் கண்கள் அடியார்களைக் கண்டு அருளைப் பொழிவன. கமலப்பூ அழகை விரிப்பதைப் போன்று இவன் கண்களும் எழிலை இயம்புவன. ஆதலால் செங்கண்' என்றார்.

ஒளிக்குக் கதிரவனும் குளிர்ச்சிக்குத் திங்களும் இருத் தல் போல-இந்த இரண்டு தன்மைகளையும் இவன் ஒரு முகமே காட்டி நலம் பொழிவதால், "கதிர் மதியம் போல் முகத்தான்" என்று இன்பந்தோன்றக் கூறுகின் றார்.

அனைத்திற்கும் நாயகனாய் நின்று, தன்னை நேசிக் கும் அடியார்களிடம் ஏதும் எதிர்பாராமல் வந்து கேட் பதை அருளும் அவனை நாராயணன் என்று நாவாரப் பாடுகின்றார்.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

கார்மேனியன் விரும்பும் மார்கழித் திங்களை, முல்லைப்பாட்டாசிரியர் நப்பூதனார். வெண்மழை பொழியும் திங்கள் என்று சிறப்பிக்கின்றார். இத்திங்களில் ஏற்படும் பயன்களைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

நெருங்கிய இலைகளையுடைய காயம்பூ அஞ்ஞனம் தீட்டிய அணங்கு கண்ணைத் திறப்பதைப் போன்று இதழ்களை விரிக்கின்றது. தளிரையுடைய கொத்துகளில் உள்ள கொன்றை மலர்கள் பொன்னைச் சொரிவதைப் போல உதிர்ந்து காணப் பெறுகின்றன. காரிகைகள் கண்ணை மூடித்திறப்பதைப் போன்று, குவிந்துள்ள வெண்ணிறக் காந்தள் தன் முகையைத் திறக்கின்றது. திரட்சியையுடைய செங்காந்தாள்பூ குருதி கொப்பளிப்பதைப் போல பூத்துள்ளது. இவ்வாறு காடெல்லாம் செழுமையைக் காட்ட, பெருவழியெல்லாம் பனியாகிய வெள்ளிமழைத் தூவலைப் பொழிகின்றது. இத்தகைய தன்மைகளையுடைய திங்களே மார்கழித் திங்கள்.

இந்த அழகைப்பெற்ற செழுமையான திங்களில் விளைந்து, தலைச்சாய்ந்துள்ள கதிர்களையுடைய வரகு நிலத்தில் முறுக்குடைய கொம்பினைப் பெற்ற ஆண்மானும், புள்ளிகளுடைய பெண்மானும் இன்புறும் செய்தினை

"செறியிலைக் காய அஞ்ஞனம் மலர
குறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்

கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
திரி மருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியும் திங்கள்''

என்று பாடித் தெரிவிக்கின்றார். மேற்குறித்த இத்துணைச் செய்திகளையும், பேருருவத்தை ஒருசிறு ஓவியத்தில் அடக்கிக் காட்டுவதைப் போன்று, மார்கழி மாதத்தில் தோன்றிய ஒளித்தன்மையையும் அம்மாதத்தில் ஏற்படும் வளத்தின் பயனையும் அந்நாளில் என்னென்ன சிறப்புகள் நிகழுமோ அவற்றையெல்லாம் மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள் என்று இந்த ஒரே அடியில் பாடிக் கோதைப் பிராட்டியார் சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றார். நேயம் வளர்க்கும் ஆயர் பாடியின் பெருமையைப் பெரும் பாணாற்றுப் படையும் பரக்கப் பேசுகின்றது.

ஆயர் என்பார் தரையில் அடிக்கப்பட்ட குச்சியில் பிணைத்த தாம்புகளில் ஆடு மாடுகளைக் கட்டியுள்ளனர். இவற்றைச் சுற்றிலும் வேலி அமைத்துள்ளனர். பக்கத்தில் பயிர்களுக்குவேண்டிய எருவினைக் குவித்துள்ளனர்.

இரவு நீங்கி விடியல் தோன்றுவதைப் பறவைகள்கூவி அறிவிக்கும். இந்த அறிவிப்பைக் கேட்டு ஆய்ச்சியர்கள், தயிரில் மத்தையிட்டுக் கயிற்றைக் கட்டி இழுக்கும்போது எழும் ஒலி, புலிமுழக்கத்தைப் போன்றிருக்கும். தயிரில் குடைக்காளான் போன்று மேலெழுகின்ற வெண்ணெயை எடுப்பார்கள்.

பூவால் செய்யப்பட்ட சுமட்டைத் தலையில் வைத்து, அதன்மேல் மோர்க்குடத்தை அமைத்து எடுத்துச் சென்று விற்பார்கள். விற்றுவரும் நெல் முதலியவற்றைக்கொண்டு சுற்றம், நட்பு சூழ உண்டு மகிழ்வார்கள். ஆயர்குல ஆடவர்கள் மாடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்ப்பார்கள். கையில் தடியும் கத்தியும் வைத்திருப்பார்கள். அவற்றின் தழும்பு அவர்கள் கையில் இருக்கும். செடிப்பூவையும் கொடிப்பூவையும் அவர்கள் அணிந்திருப்பார்கள். எடுத்துச் சென்ற பால்சோற்றினை உண்டு மாலையில் வீடு திரும்புவார்கள். இப்படி இனிதாக வாழ்பவர்களின் இடமான ஆயர்பாடியின் சிறப்பினை,

''நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி'' என்று 155-ஆம் அடி தொடங்கி,

ஒன்றமர் உடுக்கை கூழார் இடையன்
கன்றமர் நிறையொடு கானம் தங்கி''

என்று கூறும் 176-ஆம் அடிவரை பாடப்பெற்ற கருத்தினைப் பெரும்பாணாற்றுப்படை பகர்கின்றது. இருபத்தொரு அடிகளில், ஆயர்களின் உழைப்பு, அவர்கள் ஆடுமாடுகளைத் தம் கண்களைப் போல காத்தல், ஒழுக்கத்தைப் பேணி உயர்ந்து விளங்குதல், கடமையில் தவறாமல் நடையாடுதல் போன்ற பண்புகளில் பாங்குற வாழ்ந்தார்கள் என்று இது பேசுகின்றது.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்றுப் பேரும் புகழோடு விளங்கிய ஆயர்பாடியை, அதில் வாழும் செல்வச் சிறுமியர்களைக்கோதை தம் மாதவத்தால் கண்ட சாதனையாகிய திருப்பாவையில் முதற் பாசுரத்தின் மூன்றாம் அடியில் ''சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்'' என்று பாடித் தம் திறன் விளங்க இசைக்கின்றார்.

நுண்மான் நுழைபுலம் விளங்க முன்னோர் மொழிந்த ஒண்ணார் கருத்துகளைப் பின்னோர் பொன்னே போல் போற்றுவார் என்பதற்கேற்பப் பெரும்பாணாற்றுப் படையில் இருபத்தொரு அடியில் பயின்று வந்த செய்தி களையெல்லாம் ஒரே தொடர்மொழியில் தெரிவிக்கும் திறன் போற்றத்தக்கதாகும். ஆம், ஆண்டாள் பாவையில் அற்புதமாக இந்த இனியச் செய்திகளையெல்லாம் விளக்கக் காணலாம்.

கண்களால் அழகுபெற்ற பெண்கள் பலர் இருக்கின் றார்கள். அவர்களுள் ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கு பவர் யசோதைப் பிராட்டியார். அவருடைய கண்கள் பெரிய கண்கள், அகன்ற கண்கள், அருளைப் பொழியும் கண்கள். இத்தகையவரின் கண்களைத் தம் சித்த மெனும் பார்வையால் நோக்கி மெத்தவே பார்க்கின்றார் கோதை. அத்தையின் கண்கள் சித்திரிக்கும் சிரிப்பைக் கண்டு விரித்துப் பேச விழைகின்றார். சிறந்த தம் பாசுரத்திலே அமைத்து

''ஏரார்ந்த கண்ணி யசோதை''

என்று பாடி இயம்புகின்றார். ஆதலால் யசோதைப் பிராட்டியாரின் கண்களைச் சிறப்பிக்க முல்லைப்பாட்டில் இறுதியில் ஒரு வெண்பாவின் முதலடி ஆண்டாள் அன்னையாருக்குப் புதையலாகக் கிட்டுகின்றது. அது

'வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி'

என்று பேசுகின்றது. அந்த அழகுடைய சொற்களைத் தான்.

அப்படியே எடுத்தாண்டு தப்பாமல் பாடுகின்றார். செந்தமிழ் விளங்கப்பாடிய அத்திருப்பாவை பந்தமறுக்-கும் பரம்பொருளுக்கேற்ற அருட்பாவை; அது விரும்பிப் பாடுவோரின் மனத்தை உருக்கும் உயிர்ப்பாவை.

இப்பாவையாகிய நோன்பை நோற்க, குளிர்ந்த நீரில் ஆழப்படிந்து ஆடுதல் வேண்டும். பண்டைக்காலத்தில் தலைவனோடு தலைவி கலந்து நீராடிய செய்தியினைச் சுனையாடல், புனலாடல் என்று சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன, இதனை

''புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புனல் ஆடித்
தவநனி சிவந்தன மகிழ்ந நின்கண்ணே!

எனப் பாடப்பெற்றதை ஐங்குறுநூறு என்னும் இலக்கியத்தில் காணலாம். இந்தநெறியில்தான் கோதை நீராடலைக் குறித்திருக்க வேண்டும்போலும். தலைவனான கண்ண பெருமானோடு கலக்கவே மார்கழி நீராடலை மேற்கொண்டார்.

அருளாளனை அடைய அகத்துறை நெறியினைக் கைக்கொண்ட அடியார்கள்போல, கோதையும் சாதனை அருளும் அம்மார்க்கத்தையே மேற்கொண்டார் என்று கூறலாம். நீராடி அவன் பேர் பாடித் திருவடியை அடைய எண்ணிய ஆண்டாள் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று கூறுவதற்கொப்ப ஆயர்குலச் சிறுமியர்களையும் அழைத்துக் கொண்டு அவர்களையும் அவனைப் போற்றி ஏற்றமுற வழி காட்டுகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால் அழகுத் தமிழெடுத்து அருமைத் திருப்பாவையைப் பாடிய கோதை, குவலயம் விளங்கவும் மக்கள் இறைவன் பற்றில் ஆழங்கால்படவும் பொதுமை நோக்கோடு புனிதப்பணியில் ஈடுபட்டார் என்று போற்றி, அவர் நெறியில் தொடர்ந்து நிலைத்து வாழ்வோமாக! செயலாற்றுவோமாக!

# 4. பையத் துயின்ற பரமன்

*பையத் துயின்ற பரமன் அடிபாடி*
*வையத்தார் உய்ய வழிகாட்டி கோதையார்*
*கொஞ்சும் தமிழெடுத்துக் கூறும் பாவையினை*
*நெஞ்சுவக்கத் தந்தார் நிலைத்து !*

*(கவியமுதனார்)*

வையத்தார் வாழ வழிகாட்டி, பையத்துயின்ற பரம்பொருளின் திருவடியைப் பாடினார் கோதை; அப்படிப் பாடியவர் திருப்பாவையைக் கொஞ்சும் தமிழாலே நெஞ்சுவக்கப்பாடியருளினார்; அவர் இப்புவியில் நிலைக்கவே அப்பாவையை அருளினார் என்று கவியமுதனார் கூறுகின்றார்.

இன்று தோன்றி நாளை மறையும் பாடல்களைப் பாடாமல். இன்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பாடிய திருப்பாவை என்றும் இருக்கும் அருட்பாவையாக ஆண்டாள் அருளினார். அன்றும், இன்றும் என்றும் உள்ள எம்பெருமானைக் குறித்துப் பாடிய திருப்பாவை மன்பதையில் அவனைப் போன்று நின்று நிலவும் என்பது வெள்ளிடைமலை.

திருப்பாவையின் சங்கத்தமிழ் மாட்சியினை விரும்பிப் பலர் சிறப்பித்துள்ளனர். அந்த வகையில் உய்யக் கொண்டார் என்னும் பெயருடையார் செய்யவளாகவே கோதைப் பிராட்டியாரைச் சிறப்பித்துள்ளார்.

'அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் — இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்'.

என்று இவ்வெண்பாவால், ஆண்டாள் அருளிய திருப்பாவையின் பெருமையை உணர்ந்தும், அவர்தம் பக்தியின் திறத்தை அறிந்தும் போற்றுகின்றார். அன்னங்கள் வாழுகின்ற வயல்களையுடைய திருவில்லி புத்தூரில் அவதரித்த ஆண்டாள் ஆராய்ந்து பாடியருளிய திருப்பாவையாகிய பாசுரங்களை இன்னிசையாக, திருவரங்கப் பெருமானுக்கு ஏற்றதொரு பாமாலையாகப் படைத்தருளினார். பூமாலையைத் தாம் சூடிய பின்னர் ஆலிலைப் பள்ளியானுக்குச் சூட்டிய அவர் : இப்போது ஒப்பில்லாச் சங்கத் தமிழ் மாலையாக இத்திருப்பாவையை அவன் திருவடியில் வைத்து அழகு செய்கின்றார்.

இப்படிச் சூடியும் பாடியும் ஏற்றம்பெற்ற கோதையார் தம் இரண்டாம் பாசுரத்தை இனிதாகப் பாடுகின்றார்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச்
சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!

என இசைத்து அருளாளனின் பெற்றியை இனிது அறிவிக்கின்றார். பாவை போன்ற பெண்களே நான்

சொல்வதைக் கேட்பீர்களாக! நாம் செய்யவிருக்கும் நோன்பைப் பற்றி அறிதல் நலம் பயக்கும். இந்த நல்ல நோன்பினை மேற்கொள்ளும்போது திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு அறிதுயில் செய்யும் ஐயனை, அவனின் அழகிய திருவடிகளைப் பாடிப் பரவுவோம்.

நோன்பினை மேற்கொள்ளும் இக்காலத்தில் நெய், பால் ஆகியவற்றையும் இவற்றால் செய்யப்பட்ட பண்டங்களையும் உண்ணுதல் கூடாது. விடியற்காலையில் குளித்து விட்ட பின்னர், கண்களில் மைதீட்டுதல் கூடாது

அழகு வாய்ந்த கூந்தலில் மலர்களை வைத்துக் கொள்ளுதல் கூடாது. செய்யக் கூடாத செயல்களில் ஈடுபடக் கூடாது. கொடியதாகிய கோள்களைச் சொல்லக் கூடாது. இல்லாமல் ஏங்குபவர்களுக்கு எடுத்துச் சென்று இனிதாகத் தரவேண்டும்; நாள்தோறும் வறுமையால் இல்லாமல் வந்து கேட்பவர்களுக்குச் சிந்தை இரங்கிக் கொடுத்தல் வேண்டும் என்று கூறுகின்றார் கோதை.

ஒரு பணியில் ஈடுபடுபவர்கள் அப்பணி நிறைவேறும் காலம் வரையில் சிலவற்றை நீக்கியும் சிலவற்றைக் கொண்டும் செயல்படுவார்கள். அந்த வகையில் இந்த ஆயர் மங்கையர் தம் நோன்பு நிறைவேறும் வகையில் பாற் கடலில் பையத் துயின்ற பரமனைப் பாடுதல், நாட்காலே நீராடுதல், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட் டுதல் போன்ற பணியை ஏற்றுச் செய்தும் நெய்யுண்ணாமல் பாலுண்ணாமல், மையிட்டெழுதாமல் மலரிட்டு முடியா மல் உறுதியுடன் அவற்றையெல்லாம் விடுத்தும் செயற்பட வேண்டும் என்று இப்பாசுரத்தில் இயம்புகின்றார் கோதை. எம்பெருமானைப்பற்ற' மனம் ஒன்றி நினைத் தல் வேண்டும். ஆதலால் அவனை எண்ணச் செய்யும்

பணியை மேற்கொண்டும் அவனை நினைப்பவர்கள் அந்த ஒப்பனைப் பொருளை ஒதுக்கியும் நெறியில் நிற்கவும் இப்பாசுரத்தில் விதி செய்கின்றார். வாழ்வுக்கு வழியின்றி இருக்கும் இந்த இருள் தரும் ஞாலத்தில் வாழ்வு என்பது நெருப்புச் சட்டியில் தாமரைப் பூப்பதை ஒக்குமாதலால் இங்கேவாழப் பிறந்தவர்களின் நிலையையெண்ணி, அவர்கள் சிறப்புற வாழ

''வையத்து வாழ்வீர்காள்''

என்று விளித்துக் கண்ணபெருமானைப் பாடி பெருமையுற்றுப் பிறங்க வழிகாட்டுகின்றார். சிறுவனான துருவனும் உறுதியினால் எம்பெருமானை அடைந்தான் என்பதைப் போன்று ''நாமும் நம் பாவையினால் வெற்றி பெற வேண்டும் என்று கூறுகின்றார். துருவனும் வெற்றி பெற்றதைப் போன்று நாமும் பெற வேண்டும் என்பதை உம்மை கொடுத்து வெற்றிப் பாதைக்கு வழி காட்டுகின்றார் கோதை.

''காப்பது விரதம்'' என்று சொல்வதற்கேற்ப பாவை நோன்பில் ஈடுபட்ட ஆயர்குலப்பெண்கள் அந்நோன்பைக் காக்க, வெற்றிபெற, வேண்டாத உணவுகளையும் ஒப்பனைகளையும் தீயபேச்சுகளையும் விட்டு, தேவைப்படுகின்ற செயல்களை மேற்கொண்டார்கள் என்று இப்பாசுரத்தில் ஏழு அடிகளில் இயம்பியுள்ளார் ஆண்டாள்.

பொருள்களைத் தேடி வைக்கின்ற உரிய இடமாதலால் பூமியை ''வையம்'' என்று கூறிக் கோதை பாடத் தொடங்குகின்றார். வாழ்பவர்களை, ''வாழ்வீர்காள்'' என்று விளித்துக் கூறியதற்கு 'இப்புவியில் எப்படிப் பண்புடன் வாழவேண்டுமோ அப்படி வாழவேண்டும் எனபதை விளக்கவே இவ்வாறு கூறினார்.

'நாமும் நம் பாவைக்கு' என்றோதியது முன்பு இத்தகு பணியில் நின்று நலம் பெற்றவர்களைப் போன்று நாமும் நலம் பெறவேண்டும் என்பதைக் காட்டவே கூறினார். "நாமும்" என்பதில் உம்மையைச் சேர்த்தது இதனை எடுத்துக் காட்டவே இவ்வாறுகூறினார்.

'கிரியா' என்னும் வடசொல் விகாரத்தைத் தமிழ்ப் படுத்திக் "கிரிசை" என்றார். இது செயலைக் குறித்து சொல்லப் பெற்றதாகும். "நாட்காலே" என்றது புலரும் காலமான விடியற்காலத் தொடக்கத்தை விளம்பியதாகும். "குறளை" என்று கூறியதைச் சிலர் குறளைச் சென்றோதோம் என்று கூறுவர். இப்படிக் கூறுவோர், குறள் என்பதுடன் இரண்டன் உருபான ஐயை இணைத்துச் சகரம் இரட்டிக்கக் குறளைச் சென்றோதோம் என்பர். இவ்வாறு கூறுபவர், கோதை உரைத்த கோள் சொல்லுதலான "குறளை" பெயர்ச் சொல்லாகக் கூறியதை அறியாமல் கூறியே பிழை செய்தவராகிறார் என்பதை உணர்தல் வேண்டும்.

பொருள் உணர்ந்து பாடிய ஆண்டாளின் கருத்தை அறிந்து தெரிந்து பாடுதலே பாடியவருக்கும் தமிழுக்கும் சிறப்பளிப்பதாகும். சொல் நயத்தையும் பொருட்செறிவையும் தமிழின் மாட்சியையும் தோன்றப் பாடிய இவர் தம் அருளிச் செயலைக் குறைநேராதவாறு பாடுதல் பயன் உண்டாகும்.

எம்பெருமான் பாற்கடலில் பையத் துயின்ற செய்தியைத் தம் பாவையில் பெருமையாகக் கூறுகின்றார். இவர் கருத்தை விளக்கும் வகையில்

"முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ !
பன்ன காதிபப் பாயலோ ! பச்சைஆல் இலையோ ;
சொன்ன நால்வகைச் சுருதியோ ! சுருதிநீ எய்தற்கு
என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில் என்றான்"

என்று கண்ணன் தூதுச் சருக்கத்தில் வில்லிபுத்தூரார் பாடுகின்றார். கண்ணன் தூது சென்றபோது விதுரன் குடிசைக்குச் சென்று உணவு உண்டச் செய்தியினை இது கூறுகின்றது. கண்ணபெருமானைப் பார்த்த விதுரன் காலமெல்லாம் அறிதுயில் கொண்ட திருப்பாற்கடலோ ? ஆதிசேடனாகிய படுக்கையோ ? பிரளய காலத்தில் குழந்தையாக நீ தங்கின பச்சை ஆல் இலையோ? மேன்மையாகச் சொல்லப் பெறுகின்ற நான் மறைகளோ ?நீ எழுந்தருளுவதற்கு இச்சிறு குடிசை என்ன தவம் செய்ததோ என்று கேட்கின்றார்.

இவ்வாறெல்லாம் கோலம் கொண்டு அருள்பவனை நீராடிப் பாடினால் நலம் பெற இயலும் என்று பாவை நோன்பில் ஈடுபடும் பெண்மக்களிடம் கூறுகின்றார் கோதை.

**பாவையில் இலக்கியச் செய்திகள்**

பதிமூன்றாம் பரிபாடலில், நீலநிறத்தோடு கூடிய வெண்மை நிறமுடைய பாற்கடலின் நடுவே, மின்னுகின்ற சுடர்மணியோடு விரிந்த தலை ஆயிரத்தினை உடைய பாம்பின் படுக்கையிலே துளசி மாலையைச் சூட்டிக் கொண்டு எம்பெருமான் அறிதுயில் கொண்டுள்ளான் என்று

"தன்னுரு உறழும் பாற்கடல் நாப்பண்
மின்னவர் சுடர்மணி ஆயிரம் விரித்த
கவைநா வருந்தலைக் காண்மின் சேக்கைத்
துளவஞ் சூடிய அறிதுயி லோனும்"

எனப் பாடப் பெற்றுள்ளது. இக்கருத்தினையொட்டிக் கோதைப் பிராட்டியார்

"பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்"

என்று பாடியுள்ளார்,

பிறவித் துன்பத்தை இல்லாமல் செய்வது கரியமாலின் திருவடியே. இவன் திருவடியின் சிறப்பினை—

கடுவன் இளவெயினனார் என்னும் புலவர் 'மாயவனே! உன்னைப் பணிபவரது பிறவித்துன்பப் பிணியைப் போக்கவல்ல நீசிவந்த திருவடியை உடையவனாய் இருக்கின்றாய். உன்னுடைய மேனி அனைவரும் விரும்பும் நீலமேனியாயினும், அனைவர்க்கும் அருள்வது உன்னுடைய சிவந்த திருவடியே! என்று புகழ்ந்து

மாஅ யோயே! மாஅ யோயே
மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மா அ யோயே"

என்று பாடுகின்றார். பெருமாயனின் சேவடியின் பெற்றியினைக் கோதையார் பரமன் அடிபாடி" என்று இசைக்கின்றார். எம்பெருமானின் திருவடியை நம்பி ஏத்துவோருக்கு எல்லாம் கிட்டும் என்பதனை

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்".

என்று திருவள்ளுவர் இறைவன் திருவடி மகிமையை விரும்பித் தெரிவிக்கின்றார்.

மூன்றாம் பரிபாடலிலும் "சேவடிதொழா அரும் உளரோ" என்று உலகக் காவலனான எம்பெருமான் பெற்றுள்ள அடிகளே சிறந்த சேவடிகளாகும் என்று

தெரிவித்து, அருள் சுரக்கும் அவ்அடிகளைத் தொழாதவர் களும் இருக்கின்றார்களோ? என்று கேட்கின்றது மேற் குறித்த தொடர்.

சங்க இலக்கியமான புறநானூற்றில்

''நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணி
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில்''

என்று பாடப்பெற்றுள்ளது. இதில் கூந்தலில் நெய் தடவிக் கொள்ளாமலும் மலர்களைச் சூடிக்கொள்ளா மலும் தலைவி' தலைவன் பிரிவாற்றாமையால் ஏங்கி இருக்கின்றாள் என்று பேசப் பெறுகின்றது. குறுந் தொகையில் கச்சிப் பேட்டு நன்னாகனார் என்னும் புலவர் பாடுகின்றார். ''வறுங்குரல் கூந்தல் தை வருவேனே'' என்பதில் தலைவன், தலைவியை விட்டுப் பொருள் ஈட்டுவதற்குப் பிரிந்து சென்றான். அவன் வாராமையால் தலைவி, புனையப் பெறாமலுள்ள கொத் தாகிய கூந்தலைத் தடவினாள் அக்கூந்தலில் ஏதுமின்றி வறிதே கிடந்தது என்று தலைவன் பிரிவாற்றாமையால் பெற்ற துன்பத்தைக் கூறுகின்றாள். தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி இருந்த ஆற்றாமையை இளங்கோ-வடிகள் விவரிக்கின்றார் துன்பியலால் துவண்டுகிடந்த தலைவியின் மாற்றத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார் அவர்,

''அஞ்செஞ் சீரடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதணி மகிழாள்

கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாள்முகம் சிறுவியர்ப் பிரிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் துறப்ப
பவள வாள்நுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப
கையறு நெஞ்சத்துக் கண்ணகி''

என்று பாடிக் காட்டியுள்ளார். தலைவன் பிரிவால் தலைவி கொண்டுள்ள நிலையைப் புறநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றால் அறிந்தோம். இந்தப் பிரிவாற்றாமையால் நொந்த உள்ளத்தோடு இருக்கும் தலைவி ஒப்பனைக் குரியவற்றையெல்லாம் துறந்ததோடு உணவைக் கூட உட்கொள்ள மறந்தாள். தலைவன்மீது தான் வைத்திருந்த உண்மை அன்பினை வெளிப்படுத்தும் வகையில் ஒளி இழந்து இருக்கின்றாள் என்று தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அணுக்கமான உறவினை இத்தொடரால் இளங்கோவடிகள் இயம்பினார்.

தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவுக்கு ஒப்புக் காட்டவே முடியாது. எனவே, அருளாளர்கள் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு இந்த உறவு முறையை மேற்கொண்டார்கள். இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் வைத்துப்பாடி இருக்கின்றார்கள். இந்நெறியில் ஆண்டாள் திருப்பாவையைப் பாடியருளினார். அன்பனான எம்பெருமானை அடையவே பாவை நோன்பினை மேற்கொண்டார். தமிழர் போற்றும் நெறியில் நின்று கண்ண பெருமானை அடையும் காலம் வரையிலும் செய்யும் நோன்பு காலத்தில்

''நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்''

என்று பாடுகின்றார். அவனைப் போற்றத் தடையா யிருக்கும் உணவை வெறுக்கின்றார். இவன் பக்தியில் ஆழங்கால் பட்டு நிற்கின்றார். இத்தகையவர்க்கு, சங்க இலக்கியச் செய்திகள் தங்கு தடையின்றி உதவுகின்றன- அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு தம் திருப் பாவையைப் பெருமை செய்கின்றார்.

தம்மோடு பாவை நோன்பு நோற்க வந்த பெண் மக்களிடம் ஆண்டாள் தாம் சொல்லியவாறு பணியினைச் செய்து உய்யவேண்டுகின்றார். இதை இந்தப் பாசுரத் தின் கடைசியடியில் வைத்து

''உய்யுமா றெண்ணி உகந்து''

என்று பாடிமுடிக்கின்றார். நாம் செய்யும் பாவைநோன்பு எண்ணியதை நல்கும், உகப்பினை ஊட்டும், பெருவாழ்வு அருளும் என்று தெரிவிக்கின்றார். நாம் எண்ணியவாறு வாழ்ந்து உகப்பைப் பெறுவதற்குப் பரமன் அடி பாட வேண்டும் என்று தெரிவிக்கின்றார். இவ்வாறு கோதைப் பிராட்டியார் கூறிய வழியில் சென்று இனிய வாழ்வை எய்துவோம் திருப்பாவையில் திருநடம் புரியும் எம்பெரு மானைப் போற்றுவோம்; விருப்பத்தையூட்டும் பெருமை சான்ற பாவையின் செந்தமிழைத் தினமும் பாடுவோம் அவர்தம் திருப்பாவையின் மாட்சியினை எங்கும் பரப்பு வோம்.

## மழையைக் காண்போம்

மழையின்றி உலகத்தில் தொல்லை யுற்று
வருந்தாமல் இருப்பதற்கு வழியைக் கூறி
மழைநிறத்தைப் பெற்றவனாம் கண்ணன் தன்னை
மனம்மகிழ்ந்து நிதம்எண்ணி வாய்மணக்க
அழகாகப் பாட்டிசைத்தால் அம்மா யன்தான்
ஆதரிக்க மழையாகப் பொழிந்த ருள்வான்
விழைவதெல்லாம் தந்திடுவான என்று கூறி
விளம்பியநம் ஆண்டாளைப் பாடி வாழ்வோம்;

# 5. ஓங்கி உலகளந்த உத்தமன்

**மூன்றடிக்கு மண்கேட்டு முற்றும் இரண்டடியால்**
**வான்ஓங்கி நின்றளந்த வாமனனைத்—தேன்போன்ற**
**சங்கத் தமிழ்ப்பாவை சாற்றிய ஆண்டாளோ**
**துங்கமுடன் நின்றார் சுடர்ந்து**

**(கவியமுதனார்)**

எம்பெருமானின் திரிவிக்கிரம அவதாரத்தின் ஆற்றலையெல்லாம் திருப்பாவையின் மூன்றாம் பாசுரத்தில் கோதை சிறக்கப் பேசுகின்றார். நோன்பின் மாட்சியினை அழகுறத் தெரிவிக்கின்றார்.

அருளாளனின் திருவுள்ளம் உருகப்பாடுகின்றார். தாம் செய்யும் நோன்பால், தம் எண்ணம் வெற்றியுறுவதோடு அனைத்துலகமும் ஆக்கம் பெற்றிலங்க வேண்டுமென்று எம்பெருமானிடம் வேண்டுகின்றார்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றுநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்களும்மும் மாரிபெய்து
ஓங்கும் பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காத புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைத்தேலோர் எம்பாவாய் !

என்று பாடுகின்றார். இதில் மாவலி மன்னன் எம்பெருமானின் கரத்தில் நீரைஊற்றித், தருவதாகச் சொன்ன மூன்றடிமண் குறித்து உறுதி செய்கின்றான். அவன் விட்ட நீர் எம்பெருமான் கையில் விழுந்ததும் எம்பெருமான் விண்ணை அளாவி நின்றான் என்பதை, ''ஓங்கி'' என்னும் சொல்லால் சுட்டுகின்றார். தேவர்களின் துன்பத்தைத் துடைக்க எமபெருமான் குள்ள வடிவம் தாங்கி, ஏதுமே இல்லாதவன் போன்று, மாவலி முன்பு யாசகம் கேட்கின்றான். வாமன வடிவத்தில் உள்ளடங்கி இருந்த எம்பெருமான் எடுத்த பேருருவத்தாலே தன் சிறுமையை நீக்கிப் பெருமையை வெளிப்படுத்தினான்.

சிறுமை நீக்கி, பேருருவம் கொண்ட பெருமானை நோன்பு நோற்று நலம்பெறப் பாவையைப் போன்ற பெண்களே! நீராட எழுந்து வாருங்கள் என்று ஆண்டாள் இயம்புகின்றார். நாம் நீராடி அவனைப் பாடிப்பரவினால், நாடு நகரமும் கேடின்றிச் சிறப்புறும். மாதம் மூன்று மழை பெய்யும். செழுமையினால் செந்நெல் விளையும்; கழனிகளிலுள்ள பயிர்களின் இடையில் மீன்கள் துள்ளி ஓடும்

அழகிய நெய்தல் மலரில் வண்டுகள் தேனையுண்டு மகிழும்; வள்ளல் பெரும் பசுக்கள் விரும்பிப் பாலைப் பொழியும் ; இந்தச் செழுமையெல்லாம் எம்பெருமானை நோன்பு நோற்பதால் உண்டாகுமென்று கோதை கூறுகின்றார்.

உலகத்தில் வாழும் மக்கள், உலகம் அளந்தவனைப் பரவுவதால் நன்மை மட்டும் பெருவதன்றி, ஆயுளையும் பெருக்கிக் கொள்ளலாம். அன்றைய ஆயர்குலப் பெண் மக்கள், தூயவனை, துளபம் அணிந்தவனைத் தொழுது

வந்ததால், விழுமிய நிலையில் இருந்தார்கள். அவர்கள் அவனைத்தவிர வேறு போக்கிடம் இன்றி அவனையே போற்றி ஏற்றம் பெற்றிருந்தார்கள்,

ஆயர்கள் பெற்ற வாய்ப்பினை ஆண்டாளும் பெற எண்ணினார். ஆய்ச்சியர்போல் தம் மனத்தால் மாற்றம் அடைந்த அவர், அவனை அடைய நோன்பினை மேற்கொண்டார். நோன்பு நோற்று நலங்காண அருட்பாவையாம் திருப்பாவையைப் பாடினார்.

முதற்பாடலில் ''நாராயணன்'' என்றதால் அவன் பெயரினைக் குறிக்கும் ஒலியினை வெளிப்படுத்தினார். இரண்டாம் பாடலில் ''பையத் துயின்ற பரமன்'' என்றதால், அவன் அவதாரம் எடுத்துத் திருப்பாற்கடலில் படுத்திருக்கும் அழகை விதந்தோதினார். இந்த மூன்றாம் பாட்டில் ஓங்கி உலகளந்த உத்தமன் என்றதால் அவன் அவதாரம் எடுத்துக் கொடுமையினை அழித்து, நலம் புரிந்த செய்தியினை விவரித்துள்ளார். சிறு புல்லின் மேல் பனித்துளி வீழும்போது அப்புல் கீழ் நோக்கிச் சாயும்; சூரியனின் சுடர்பட்டு, அப்பனித்துளி நீங்கும் போது புல்தலை நிமிர்ந்து நிற்கும். அதுபோல, மாயவன், வாமனனாகி மாவலியிடம் இரந்து கேட்டபோது தலை கவிழ்ந்தும் பெற்றபோது தலைநிமிர்ந்தும் திரிவிக்கிரமனென்னும் பேருருவம் பெற்றான்.

இதை ''ஓங்கி உலகளந்தான்'' என்ற தொடரால் இயம்புகின்றார். மாவலி மன்னன் இழைத்த கொடுமையை வெளிப்படுத்தாமல் மேற்குறித்த தொடரைப் பாடி அதன் மூலம் நம்மை அறிந்து கொளளச் செய்கின்றார் கோதை. இப்படி உரைப்பதை உள்ளுறைப் பொருள் என்பார்கள்.

ஆம், ஒன்றைக்கூறி மற்றொன்றைக் கூறாமல், கூறுயதைக் கொண்டு அறியவைப்பது உள்ளுறைப் பொருள். இந்த வகையில் மாவலியின் வரலாற்றைக் குறித்துள்ளார் கோதை.

மாவலி அசுரமன்னன்; அவன் ஆதிக்கப் புத்தியால் தேவர்களின் மூன்றுலகைக் கையகப்படுத்த நினைந்தான். அரசை இழந்தோர். ஆராவமுதனிடம் முறையிட்டனர்; முறையிட்டவரின் குறை தவிர்க்க, சின்ன வடிவம் தாங்கிப் புன் செயல் புரிந்த மாவலியைச் சாவூருக்கு அனுப்பினான் துன்புற்ற தேவர்கள், இன்பம் அடைந்து, புன்முறுவல் காட்ட அன்பனாய் வந்து ஆதரவு நல்கினான். இதனால் இழிந்த உணர்வோடு இன்னல் விளைவிக்கும் எத்தர் களைப் புல்லுருவம் தாங்கியேனும் புருடோத்தமன் பொன்றொழிப்பான் என்பதை அறியலாம். இதனால் யாவரும் நேர்மையுடன் வாழ்ந்துவருவது நல்லது என்பதை உணர வேண்டும். மேலும் மனிதர்களிடம் எழும் மூன்று குணங்களை இதில் எடுத்துக் கூறப்படுகின்றன. பிறரைத் தன் வலிமையால் நலிவடையச்செய்து வாழ நினைப்பவன் கேவல குணத்தோனாவான்; இவன், தன்னலத்தவனே ஆவான்; பிறரும்வாழ வேண்டும், தானும் வாழவேண்டும் என்று நினைப்பவன் சமநோக்குடையவன் ஆவான்; தான் கெட்டும் பிறரை வாழவைக்கும் மனமுடையவன் சான்றோனாவான் வானத்தில் இருக்கும் நிலவு, தன்னில் இருக்கும் கருமையான இருட்டை மாற்றிக் கொள்ளாமல், மண்ணில் கப்பியிருக்கும் இருட்டை நீக்க ஒளியை வழங்குதல் போன்று, சான்றோன் எனப்படுபவன் தன்னிலையை எண்ணாமல் பிறர் நலனுக்காக உழைப் பவன் ஆவான். இத்தகைய நெறியாளனே இறைமைப் பண்பில் இயைந்து நிற்பான்: உயர்ந்து வாழ்வான்.

இத்தகைய சான்றாண்மை மிக்கவரையே, தன் அடி யாராக ஏற்று அருளுகின்ற எம்பெருமானை "உத்தமன்"

என்னும் சொல்லால் உயர்த்திக்காட்டுகின்றார் கோதை. இந்த இனிய "உத்தமனோ" சிறுமை குணமுடைய மாவலியிடம் கையேந்தி இரந்து நின்றான் இரந்து நின்ற எம்பெருமான் செருக்குற்ற மாவலியை இழிவுபட அழிக்கின்றான். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்று கூறுவதற்கு ஒப்ப

இந்த "உத்தமனாய்" இருக்கும் உலகளந்தானைப் போற்றுபவர்கள் உத்தமர்களாக விளங்குவார்கள் என்று உறுதிப்படத் தெரிவிக்கின்றார்.

சிலர் மண்ணில் தம்மை மறந்து பாடுபடுவார்கள். அவர்கள் தம் முயற்சியால் ஓரளவு வெற்றியும் பெறுவார்கள். வெற்றியால் உள்ளம் மகிழ்வார்கள். சிலர் தோல்வியுற்றுச் சிரமத்தால் வேதனையுறுவார்கள். அழியாமல் இருக்கும் மண்ணுக்காக ஆசைப்படுபவர்கள் பின்னர் அந்த மண்ணிலே மறைந்து அழிவார்கள் என்பது திண்ணம். இதை நிரூபிக்கும் வகையில் மண்ணாசை கொண்ட மாவலியும் மறைந்து அழிந்த செய்தியினைத் திருப்பாவையில் வெளிப்படக் கூறாமல் கூறினார் கோதை.

கொடியோனான மாவலியைப் படிமிசை மடித்த மாயனை, அந்தக் கொடியோனால் துடித்தவர்களின் துன்பியலைக் களைந்த உத்தமனை நீராடிப் போற்றினால், ஆற்றல் பெருகும், ஆக்கம் அதிகமாகும். நாடும் நகரமும் நலமுறும் என்று கூறினார்; பத்து நாள்களுக்கு ஒரு மழையாக, முப்பது நாள்களைக் கொண்ட ஒருமாதத்திற்கு மூன்று மழை பெய்யும் என்று உத்திரவாதம் அளிக்கின்றார்; இச்செய்தியைத்"திங்களும் மும்மாரிப் பெய்து" என்ற தொடரால் இயம்புதல் காணலாம்.

மாதத்தில் மூன்று மழையைக் கண்ட மண்ணுலகம் எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். வயல்கள் உயர்ந்து செழிப்புற்றிலங்கியது. இவற்றில் செந்நெல் வளர்ந்து நிற்பதைக் கண்டு "ஓங்கு" என்று ஒரு சொல்லை அடையாகக் கொடுத்து நெற்பயிர்கள். கிளைத்து' 'தழைத்து' செழித்து விளங்கி இருப்பதனைப் "பெரு" என்னும் இரண்டெழுத்துடைய சொல்லால் கூறியுணர்த்துகின்றார். ஒவ்வொரு நெல்லின் தண்டுகள் தடித்துப்போத்துக் கொண்டு தூண் போன்று நிற்றலால், மீன்கள் அவற்றின் இடையில் உலாவிவர இயலாமல் வளைந்து வளைந்து செல்லுதலை "உவடு" என்றார். இந்த மீன்கள் செருக்காலே மேல்நோக்கிப் பாய்வதை "உகள" என்னும் சொல்லாலே இயம்புகின்றார். பயிரின் இடையில் இவ்வாறு விளையாடும் மீன்களைப் பற்றித் திருமங்கை ஆழ்வாரும் "வலங்கொண்டு கயலோடி விளையாடும்" என்று பாடியுள்ளார்.

அந்த வளமுடைய வயல்களில் உள்ள குவளை மலர் களில் மீன்கள் உறாய்ந்து கொண்டு விரைதலால் அம் மலர்கள் ஊஞ்சல்போல ஆடுகின்றன. அவற்றில் உள்ள தேனை உண்ணும் வண்டுகள் அவற்றிலேயே தம் பேடைகளுடன் கண்ணுறங்கும் என்ற விவரத்தைக் கோதையார் மேற்குறித்தப் பாசுரத்தின் ஐந்தாம் அடியில் காட்டியுள்ளார்.

"வள்ளற் பெரும் பசுக்கள் வாங்கக் குடம் நிறைக்கும்" என்று அற்புத நிகழ்ச்சியினை மூன்றடிகளால் மொழிந்து அழகுறத் தெரிவிக்கின்றார். உள்ளதை மறைக்காமல் அள்ளித் தருபவர்கள் வள்ளல்கள். அவ்வள்ளல்களுக்கு ஒப்பாக ஆயர்பாடிப் பசுக்கள் இருந்தன என்று அறிவிக் கின்றார்.

பசுக்களின் மடியிலுள்ள காம்புகளைப் பற்றி இழுத்தால் 'சர்' என்னும் ஒலியுடன் பால் வெளிப்படும். இவ்வொலியினைச் "சீர்த்த" என்னும் சொல்லால் செப்புகின்றார்.

"தேங்காத புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்"

என்று பசுக்களின் உயர்வை இயம்புகின்றார். கோதைப் பிராட்டியார் சொல்லாட்சிகளைப் பயன்படுத்துவதில் வல்லவர். இத்தகையவர், பசுவின் காம்புகளிலிருந்து வெளிப்படும் பாலோடு உண்டாகும் ஒலியைத் தெரிவிக்க 'சீர்த்த' என்னும் ஒலிக் குறிப்பை ஆண்டு தம் ஆற்றலை வெளிப்படுத்துகின்றார். கடைசியாக "நீங்காத செல்வம் நிறைந்து" என்று தம் பாசுரத்தை முடிக்கின்றார்.

இப்பாசுரம் மிகச் சிறந்த வாழ்த்துப் பாசுரமாகும். நாட்டிலும், நகரத்திலும், வீட்டிலும் பயன் விளங்க மக்கள் எல்லாரும் எம்பெருமானை நோக்கிப் பாடப் பெறுவதாகும். இதனால் கோதையாரின் பரந்த உணர்வை நாம் அறியலாம்.

நாவீறு கொண்டு கோவிந்த நாம சங்கீர்த்தனம் பாடிய அவர், அவனின்றி ஓரணுவும் அசையாது என்கின்றார். ஒவ்வொருவரும் செய்யும் செயலும் அச்செயலால் உண்டாகும் பயனும் அவனாலேயே ஏற்படுகின்றன. என்கின்றார். இவ்வாறு செவ்வி விளங்க ஒவ்வொரு பாசுரங்களையும் மலர், மணத்தைப் பரப்புதல்போல் பாடிப் பரப்புகின்றார்.

**பாவையில் இலக்கியச் செய்திகள்**

சங்க இலக்கியமென இலங்கும் முல்லைப்பாட்டில் ஒப்புயர்வற்ற நப்பூதனார்.

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல"

என்று பாடுகின்றார். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே எம்பெருமானின் ஏற்றத்தை எழில் விளங்கத் தெரிவிக்கின்றார். இதில் மாவலி மன்னன் எம்பெருமான் ஏற்க நீட்டிய கையில், நீரை ஊற்றினான் ; நீரை ஊற்ற ஊற்ற செம்பொருளான எம்பெருமான் படிப்படியாக உயர்ந்து விண்ணை அளாவி நின்றான் என்று அவன் திரிவிக்கிரம அவதாரம் எடுத்தச் செய்தியினைத் தெரிவிக்கின்றார். இக்கருத்தை

"ஓங்கி உலகளந்த உத்தமன்"

என்று கோதை கூறுகின்றார். சங்க இலக்கியத்தின் சாயலாக, இல்லை சங்க இலக்கிய விளக்கமாகத் திருப்பாவையை அருளினார் என்று சொன்னால் அது தவறாகாது. இம்மைக்கும் மறுமைச்கும் வழி வகுப்பவன் எம்பெருமான் அத்தகைவனின் உவமையற்ற பெருஞ் சிறப்பினை

"நாறிணர் துழா யோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதே வீறுபெறு துறக்கம்"

எனப் பரிபாடல் கூறுதல் காணலாம், இதில் மணம் வீசும் திருத்துழாய் மாலை அணிந்த கண்ணபிரானின் அருள் இருந்தால் அன்றி வீடு பேற்றை எய்த இயலாது என்று கூறப் பெறுகின்றது. அந்தமில் பேரின்பத்து

அழிவில் வீடாதாகிய பரமபதத்தினை "வீடு பெறு துறக்கம்" என்ற தொடர் சுட்டுகின்றது. இதை அருள் பவனை "நாறிணர் துழாயோன்" என்று அவன் சிறப்பை இயம்புகின்றது. இத்தகைய இனியவனை "உத்தமன்" என்று கோதையார் சாதிக்கின்றார். பொங்கும் எழில் காட்டும் பிங்கலந்தையின் 1369 ஆம் சூத்திரத்தில்

"பனிநீர் தோய்தலும் பாவை ஆடலும்"

என்று பாடப் பெற்றுள்ளது. இதில் பாவை நோன்புக்கு* பனிநீர் என்னும் குளிர்ந்த நீரில் ஆடுதல் குறிக்கப் பெற்றுள்ளது. இந்தச் செந்தமிழ்த் தொடர்மொழியைப் பந்தமுடன் தம் பாசுரத்தில் "நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்" எனக் கோதையார் உள்ளம் குழைந்து தெரிவிக்கின்றார். மணிவாசகப் பெருமானும் அணியெனமிளிரும் திருவெம்பாவையில் நீராடல் குறித்து

"இருஞ்சுனை நீராட" என்று பாடுகின்றார்.

உடம்பைத் தூய்மை செய்து கொள்ள நீராட்டத்தை மேற்கொண்டவர், உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள உலகளந்தானைப் பாடுகின்றார் ஆண்டாள்.

இதனைத் திருவள்ளுவர்

'புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையாற் காணப் படும்'

என்று மொழிவர். புறத் தூய்மை பற்றியும் அகத்தூய்மை பற்றியும் கூறிய அவர் நீரையும் வாய்மையையும் எடுத்துக் காட்டியுள்ளார். வாய்மை என்பதில் எம்பெருமானையே உள்ளுறையாக வைத்துத் தெரிவிக்கின்றார். நீராடுதலை ஐங்குறுநூறு 76-ஆம் பாடலில் இரண்டாம் அடியில்

"தண்புனல் ஆடித் தன்னல மேம்பட்டவள்"

என்று பாடப் பெற்றுள்ளது. தண்புனல் ஆடியதால் தெய்வ மகளிரைக் காட்டிலும் இவள் மேம்பட்டவள் என்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுந்தொகையில் 108ஆம் பாடலில்

"மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்று வயிற்படற"

என்று கன்றை நினைந்து முலைவழியே கொண்டுவந்து பாலைக் கொடுக்கும் கறவையைப் பற்றி இதில் பேசப் பெருகின்றது. மேலும் இந்தச் செய்தியினை வலியுறுத்தும் வகையில் சிறைக்குடி ஆந்தையார் என்னும் திறனுடைப் புலவர் குறுந்தொகையில் 132ஆம் பாடலில்

"கடுஞ்சுரை நல்லான்"

என்னும் தொடரால் மிக்க சுரப்புடைய நல்லபசு என்று பசுவைச் சிறப்பிக்கின்றார்.

இது வாங்கக் குடம் நிறைக்கும் பசுவாதலால் "கடுஞ்சுரை" என்றார். இந்த அடைமொழியால் பசு விரைவினில் சுரந்து அளிப்பதைத் தெரிவிக்கின்றார். இதை ஒப்பு நோக்கிய கோதை.

"தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்"

என்று தம் பாசுரத்தில் பாங்குற அமைத்துப் பாடுகின்றார். சங்குபோல் வெள்ளை நிறம் கொண்ட பாலைத் தரும் பசுக்களில் கறந்த கோவலர்கள் தலைவியர்கள் கொண்டு வந்த கலத்தில் மனம் மகிழச் சொரிந்தார்கள் என்ற விவரத்தை மலைபடுகடாம் என்னும் சங்க இலக்கியத்தில் பெருங்கௌசிகனார்.

"வளையான் தீம்பால் மிளைசூழ் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலிற்"

என்றார். இதைக் கோதைப் பிராட்டியார் எடுத்தாண்டதால் தம் பாவைக்கு மேலும் பெருமையைச் சேர்த்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. கோதை பாவையின் கொஞ்சும் தமிழான அமுதமொழி கருத்துகளைப் பின்னே வந்தவர்கள் எடுத்தாண்டு சிறப்பித்துள்ளார்கள். அவர்களுள் மாபாரதம் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வார். எம்பெருமானின் திரிவிக்கிரம அவதாரத்தை.

"ஈர் ஒரு பிறப்பின் ஒரு சிறு குறளாய்
யாவரும் தேவரும் வியப்ப
கார் ஒரு வடிவு கொண்டெனச் சென்று
காவல்கூர் மாவலி அளித்த
நீர்ஒரு கரத்தில் விழுமுன் தரங்க
நீல்நிற மகரநீர் உடுத்த
பார்ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாதனார் நமக்கே!"

என்று பாடித் தெரிவிக்கின்றார். இதில் ஒரு குறள் மாமணியாகச் சென்று மூவடி மண்பெற்று மூவுலகங்களையும் அளந்த திருக்கமலபாதனாரே நமக்குத் தலைவராவார். இதைப் பதினேழாம் போர்ச் சருக்கத்தில் காப்புச் செய்யுளாகப் பாடித் தந்தார்.

மாவலியிடம் கிழ வேதியராகச் சென்ற எம்பெருமான், அவன் ஊற்றிய நீர் கையில் விழும் முன்னே விண்ணளாவி நின்ற செய்தியினை ... மாவலி அளித்த

"நீர் ஒரு கரத்தில் விழும்முன்",

என்ற அடிகளில் அறிவிக்கின்றார். இந்த விருத்தப்பாவில் அவன் எடுத்த பெரிய உருவை அடக்கிக் காட்டுகின்றார் வில்லிபுத்தூரர் ஆழ்வார்.

கோதையார் சாதித்தப் பாவையில் மாபெரும் உருவங் கொண்டு எழுந்து நின்ற எம்பெருமானை,

''ஓங்கி உலகளந்த உத்தமன்''

என்றார். அந்த உத்தமன் பெற்ற கமல பாதத்தை விளக்கும் வகையில்

''பார் ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாதனார் நமக்கே''

என்று வில்லிபுத்தூரரார் விவரிக்கின்றார். நாடும் நகரமும் சிறக்க அவன் பாதமே துணையாகும் என்று கூறிய இவர், நமக்கே நாதனாகிய அவன் பாதம் சாதனை நல்கும் என்று ஆண்டாளை அடியொற்றிப் பாடிப் பரவுகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால் கோதை பாவையில் கொஞ்சும் தமிழ்ப் பாசுரத்தின் நயத்தை அறிந்தோம்; ஊரும் உலகமும் அறிந்து நாதனாரின் பாதத்தின் பெருமையைச் சீருறவே அறிவதற்கு ஆண்டாள் அன்னையாரின் அருமைத் திருப்பாவையைப் பாடி பரப்புவோமாக! நலம் பல பெறுவோமாக!

# 6. மழைக் கண்ணன்

**மழைபோன்ற தோற்றத்தான் மண்ணுலகை இன்ப**
**மழையாலே வாழ்விக்கும் மாயன்—அழகனையே**
**சார்ந்திலங்க ஆண்டாள் சங்கத் தமிழ்ப்பாவை**
**பார்சிறக்கத் தந்தார் பரிந்து !**

கவியமுதனார்

இதன்கண், அருள்நல்கும் மாமாயன் மழைமேக நிறத்துடன் விளங்குகின்றான் ? இவன் மழையாகி வந்து இந்த மண்ணுலகை வாழ்விக்கின்றவன் ; இவன்மிக அழகுடையவன் : இவனை அடைய ஆண்டாள் சங்கத் தமிழெடுத்துத் திருப்பாவையைப் பாடினார் : அவர் பாடியருளிய அத் திருப்பாவையைப் பாரெல்லாம் சிறந்திலங்கப் பரிவுடன் தந்தார் என்று கவியமுதனார் இயம்புகின்றார்.

ஆய்ச்சியர் பால், ஆயனான ஆராவமுதன் அளவு கடந்த பரிவு காட்டி வந்தான் ; ஆய்ச்சியர்கள் வேறு பொருள்கள் மீது விருப்பத்தைக் காட்டாமல் அருளாளன் மீது அளப்பரியப் பக்தியினைச் செலுத்தி வந்தார்கள். இவர்கள் இப்படி இருந்ததனாலே, அவன் இவர்கள்பால் மிக விருப்பங்கொண்டிருந்தான் என்பது உண்மை.

அவனைக் காட்டிலும் நன்மை தரக்கூடிய பொருள்-வேறு இல்லாமையால் அவனையே பற்றாக எண்ணி வாழ்ந்தார்கள் அவர்கள் ; இந்த நிலையைக் கோதைப் பிராட்டியார் நன்குணர்ந்தமையால் உள்ளத்தாலும் செயலாலும் ஆயர்குலப் பெண்ணாகவே தாம் ஆகிவிடு

கின்றார். ஆகிய ஆண்டாள் ஆயனை அடைய நோன்பு நோற்கத் தலைபடுகின்றார். அவனை அனுபவிக்க முயல்கின்றார் அம்மாயன் கோதையாரின் இசைத் தமிழ் இன்பத்திற்கு இரங்கி வந்து அவரை ஏற்கும் அளவில் உள்ளத்தின் இசைவைக் காட்டுபவனாகிறான். கேட்பவர்கள் வேட்கை கொள்ளும் அளவிற்குத் தமிழ் என்னும் அமிழ்த மழையைப் பொழிகின்றார் கோதை.

அவர்தம் தமிழ் அமிழ்தத்தில் ஒருபாசுரம் தான் "ஆழி மழைக் கண்ணா" என்பது, இதைத் தான் கவியமுதனார் மேலே குறித்த வெண்பாவில் தெரிவித்துள்ளார். இந்தப் பாசுரத்தை உலகத்தில் வாழ்பவர்கள் உய்த்துணர்ந்து போற்றுமளவில் ஏற்றமுறப்பாடியுள்ளார்.

"ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகுந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்துப்
பாழியன் தோளுடைய பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!"

என்று இப்பாசுரத்தை தம் இதயம் குளிர இசைக்கின்றார், இல்லைப் பாடுபவர் நெஞ்சம் பரவசமடையப் பாடியருளினார்.

இந்தச் செந்தமிழ்ப் பாசுரத்தைப்பாடி எம்பெருமானிடம் முறையீடு செய்கின்றார். மழை மண்டலத்திற்குத் தலைவனாயிருக்கும் கண்ணபெருமானே! நீ

சிறந்த கொடையாளன். எதையும் மறைக்காமல் அருள்பவன். அந்த வகையில் நான் கேட்கும் ஒன்றை ஒளிக்காமல் அருள வேண்டுகின்றேன்.

இதை வழங்க நீ ஒரு செயலில் தலைபட வேண்டும். அப்படிச் செய்யப்போகும் நீ கடலில் புகுந்து நீரை மொண்டு கொண்டு, ஆரவாரம் செய்து, அந்த நீரை ஆவியாக மாற்றி வானத்திற்குக் கொண்டு சொல்வாயாக! நீ பிரளய காலத்தில் ஊழி முதல்வனாயிருந்த போது கருமை நிறம் கொண்டிருந்தாய். உன் உருவத்தைப் போன்று அந்த ஆவியைக் கருமைநிற மேகமாகச் செய் வாயாக !

வலிமை மிகுந்த தோள்களையுடையவனே! நாபியானது சோபிக்க, கமலமலரைப் பூத்திலங்கத் திகழ்பவனே ! உன வலக்கரத்திலுள்ள ஆழியாகிய அழகுச்சக்கரம் மின்னுதல் போல், மேகங்களை உறாயச் செய்து மின்னலை உண்டாக்குவாயாக ! இடக்கரத்தில் நீ ஏந்தியுள்ள வலம் புரிச்சங்கு, போர்க்கலத்தில் இடி முழக்கம் செய்ததைப் போன்று மேகங்களை ஒன்றோடொன்று மோதவிட்டு இடியை உண்டாக்குவாயாக! சார்ங்கமென்று கூறும் உன் வில்லிலிருந்து புறப்பட்டு வீறுகொண்டு பகைவரைக் குத்துதல் போன்று, அந்த மேகங்களை மழையாகப் பூமியில் குத்திவிட்டுப் பெய்யச் செய்வாயாக !

இவ்வாறு இன்ப மழையைப் பொழிவிப்பதால் புவி வளமுற்று மக்கள் நலமடைவார்கள். நாங்களும் உன்னை அடைய, நீராடி நோன்பு நோற்க வியலும். உன் திருவரு ளாலே தான் இவை ஏற்படும். நீ அருள் சுரக்கவில்லை யென்றால் எல்லாம் சுருண்டு வறண்டு போகும் என்று இப்பாசுரத்தில் உள்ளுறையாகச் சொல்லுகின்றார்.

கோதை. மேற்சொன்ன கருத்தையெல்லாம் முன்னிலைப் படுத்தி பத்மநாபனிடம் கூறுகின்றார்.

தம்முடைய நோன்பின் நோக்கம் வெற்றி பெற வேண்டும் என்று பாடிய கோதை, இந்த மன்பதையும் மக்களும் நன்மை பெறவும் பாடினார். இதை, வாழ உலகினில் பெய்திடாய் என்று குறித்துப்பாடியதிலிருந்து அறியலாம். ஆழியென்று கடலைக் குறிப்பிட்டவர் மழை என்று அக்கட லால் ஏற்படும் பயனையும் குறிப்பிட்டுள் ளார். உலகையெல்லாம் தன் செயலால் உண்டாக்கும் நன்மையால் வாழவைக்கின்ற கடலை, அமுத சுரபியாகக் கருதலாம். .'மழை'' ஆழியிலிருந்து தோன்றியதால் கோதை. ஆழிமழை என்று இயம்புகிறார் இந்த ஆழியை யும் இதிலிருந்து மழையும் தோன்றக் காரண பூதனாய் விளங்குபவன் கண்ணன். ஆதலால் அவனை ''ஆழி மழைக் கண்ணா'' என்று விளித்து அருள்பாலிக்க வேண்டினார்.. அவனை விளித்ததால் அவனின் படைப்புத் தொழிலையும் அளிக்கும் தொழிலையும் அழிக்கும் தொழிலையும் நினைவு படுத்துகின்றார்.

பூமியில் சுவாமி என்று நினைப்பவர்க்கு உதவி செய்யும் அவன், நினைக்காத பாவியர்களுக்கும் அருளும் மனமுடையவன் என்றாலும் அவர்களைச் சோதித்தே அருளும் தன்மையுடையவன் ஆதலால் அவனிடம் மறைககாமல் உதவி செய்ய ''ஒன்று நீ கைகரவேல்'' என்ற தொடரைக் கையாண்டு கோதை வேண்டுதல் காணலாம். தீயவர்களுக்காக மறைக்காமல் மழையை பெய்விப்பாயாக என்று கூறுதல் காணலாம்.

''ஆர்த்து'' என்னும் சொல்லை உரையாசிரியர்கள் கடல்கடந்த அனுமான் சீதாப்பிராட்டியின் நிலையை

அறிந்து இராமபிரானிடம் சொல்லிய போது, மற்ற வானரங்களெல்லாம் மகிழ்ச்சியால் ஆரவாரித்ததற்கு ஒப்பாகக் கூறுகின்றார்கள்.

எம்பெருமான் நன்மைகளை அருளும் போது தன்னைக் காட்டாமல் மறைந்து அருள்வது போன்று மேகங்களே நீங்கள் மறையாமல், வானத்தில் விரித்த மேலாடைபோன்று தெரியக்காட்டி மழையைப் பொழியுங்கள்'' என்பதைக் காட்ட ''ஏறி'' என்னும் சொல்லை அருமையாகப் பயன்படுத்தியுள்ளார். இதை உள்ளுறைப் பொருள் என்று கூறுவர்.

''ஊழி'' என்னும் சொல்லைப் பிரளய காலத்தை உணர்த்த எடுத்தாண்டார். இதில் பிரளய காலத்தில் ஏற்படும் மாறுபாட்டினையும் தெரிவிக்கின்றார்·

காலத்தில் களைய வேண்டியவற்றைக் களைந்தும், அழியாமல் நிற்கவேண்டியவற்றை காத்தும் நலம் செய்கின்ற அண்ணலை ஊழிமுதல்வன் என்று உயர்வாகப் புகழ்கின்றார்.

மேகங்காள் ? நீங்கள் எம்பெருமானின் கருமைநிறக் கோலம் பூண்டு நலம் பொழியுங்கள்! என்ற விவரத்தை ''ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கருத்து'' என்ற தொடரால் தெரிவிக்கின்றார்.

''காக்கைச் சிறகினிலே நந்தலாலா—உன்தன்
கருமை நிறம் தோன்றுதடா நந்தலாலா''

என்று பாரதியார் பாடியதைப் போன்று. கோதையார் கண்ணனைக் காண விரும்பியவர். அவன் மேனி நிறத்திற்கு ஒப்பான கருமைநிற மேகத்தைப் பார்த்து இவ்வாறு

அவன் செவ்வியுணர்ந்து பாட்டிசைத்தார் என்று கூறுதல் சிறப்பு.

அருளாளனைப் போன்று மேகம் கருமை நிறம் கொண்டாலும், அருளாளனாக மேகம் ஆகமுடியாது என்பதை,

''முதல்வன் உருவம் போல் மெய்கருத்து''

என்ற தொடர் மொழியால் சுட்டுகின்றார்.

''பாழியன் தோள்'' என்று அவனுடைய வலிமை மிகுந்த, அழகுவாய்ந்த தோளினைக் காட்டுகின்றார். அந்த அருளாளனின் தோள் அடியார்களை அணைத்துக் கொள்ளும் தோள்! பகைவர்களைப் பள்ளத்தில் வீழ்த்தி ஒழிக்கும் தோள்!

பண்புடையார் பட்டுண்டுலகத்தைப் பேணும் தோள்! எல்லாவற்றையும் நல்லனவாக்கும் வல்லமையுடையதோள் என்று தோளின் பெருமையைச்சுவைபடச் சொல்கின்றார், ஆழிபோல் மின்னி என்று கூறுகின்றார். பற்பநாபன் கையிலுள்ள ஆழி நன்மையையே செய்ய வல்லது. அது மின்னும்போது இன்பம் பயக்கக் கூடியதாகத் திகழும். அந்த ஆழியைப் போன்று நீயும் நன்மை புரிவாயாக என்று ஆண்டாள் கட்டளை இடுகின்றார்.

இதில் பற்பநாபன் போல் மின்னி என்று ஆண்டாள் கூறவில்லை. பற்பநாபன் போன்று ஆற்றல் காட்டி மாற்றம் செய்ய மேகத்தால் இயலாது ஆதலால், அவர் ''ஆழிபோல் மின்னி'' என்ற சொற்றொடரைத் தெளிவாகப் பயன்படுத்திக் கூறுகின்றார். ஒருவன் தந்தையின் ஆற்றலைப் பெற்றில்லையென்றாலும் தன் தந்தையின் அருளும் தன்மையைப் பெற்று அருளாளனாய் விளங்குதல் போன்று இங்கேமேகம் கண்ணபெருமானின் பேராற்

றலைப் பெறாமல் போனாலும் அவனின் கையிலுள்ள சக்கரத்தைப் போன்று மின்னி நலம்புரிவதால், ஒப்பீடு காட்டிப் புகழ்ந்தார்.

கண்ணனின் சங்கு போர்க்களத்தில் முழங்குவது. ஆம் இந்த முழக்கத்தை அப்படியே மேகம் வெளிப்படுத்தாமல் இருக்கவே 'நின்று அதிர்ந்து' என்ற தொடரை ஆண்டார்

முழக்கம் இழப்பை உண்டாக்கும். நின்று அதிருதல் பயனை விளைவிக்கும். சிக்கிமுக்கிக்கல் ஒன்றோடொன்றை அடிக்கும் போதுதான் நெருப்புண்டாகும். அதுபோன்று மேகங்காள்! நீங்கள் ஒன்றோடொன்று உறாய்ந்து நின்று அதிர்ந்து மழையைப் பொழியுங்கள்! என்று சொற்களைச் செம்மையாக அமைத்துச் செய்திகளைச் சொல்கின்றார் கோதை.

'சார்ங்கம்' என்று திருமாலின் வில்லைக் குறித்தார் இந்த வில்லிலிருந்து புறப்பட்ட அம்புக்குத் தப்பியவர் எவருமிலர். எனினும் நன்மை செய்யும் இந்த அம்பைப் போன்று மேகமே! மழையைப் பூமியில் குத்தலிடச் செய்யும் நிலையில் பொழிந்து உதவி செய்வாயாக! என்று கூறுகின்றார். இங்கே ''தாழ'' என்னும் சொல்லைப் பெய்து இரங்கி மேகத்திடம் உரைப்பதைப் போன்று எம்பெருமானிடம் இறைஞ்சுகின்றார்.

நன்மையைக் கருதி உவமையை ஆளும்போது பொருத்தமான சொற்களையே தேர்ந்தெடுத்துச் சொல்லுவதில் ஆண்டாள் வல்லவர். இலக்கணம் நுட்பம் அறிந்து இலக்கியப் பண்புகள் தெரிந்து வளமான சொற்களைப்

பெய்து திருப்பாவையை விரும்பி அருளிப் பெருமை யுற்றார்.

"நீண்டதோள் மால்கிடந்த நீள்கடல் நீராடுவான்" என்று கூறுவதில், நீண்ட தோளுடைய திருமால் நீண்ட பெரிய கடலில் படுத்துக் கிடந்து நீராடுகின்றான் என்று விளக்கப்படுகின்றது.

"திருமால்", சீர்க்கடலை உள்பொதிந்த சிந்தையேன்"

திருமாலாகிய சீர்க்கடலின் கண் உள்ளே பொதிந்துள்ள கருத்துகளை அறிந்த சிந்தையை உடையவன் என்று ஒரு சான்றோர் தம் நிலையைத் தெரிவிக்கின்றார். கடலாகி நின்று உலகம் புரக்கும் கண்ணபிரானின் சீர்த்தியினைப் புலவர் பெருமக்கள் புகழ்வதைப் போல ஆண்டாளும் நீரைப்பருகி மேலே சென்று மீண்டும் மழையாகிப் பூமியில் பொழியும் மேகத்தைச் சிறப்பிக்கும் வகையில் இறைவனின் நலமார்குணங்களையெல்லாம் கோதை பாவையில் பாடித் தெரிவிக்கின்றார்;

நன்மை புரியும் மேகம் கண்ணனைப் போல் கருமை நிறம் பெற்றதால், செய்யமுடிந்தது என்பதை 'திருமால் திருமேனி ஒக்கும்' என்று அதனைச் சிறப்பித்தார் ஒருவர். அவன் மேனி, அழகு உடையதுமட்டுமன்று ஆவலுடன் பிறரும் விரும்பும் மேனியாகும். அந்த அருளாளன் உலகம் பொருளாளன். இருநிலத்திற்கும் கருணையாளனின் திறத்தை உணர்ந்த ஒருவர்,

"உயிர் அளிப்பான் மாகங்கள் எல்லாம் திரிந்து"

என்று உள்ளம் விழைந்து கூறுகின்றார்.

**பாவையில் இலக்கியச் செய்திகள்**

தமிழ்ச் சான்றோர்களும் மேகத்தையும் அம்மேகம் நல்கும் மழையையும் அருமையாகப் பாராட்டி இருக்கின்றார்கள்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு"

என்று திருவள்ளுவர் பாடுகின்றார். 'இந்த மண்ணில் மழை பெய்யவில்லை என்றால் வாழும் உயிர்களுக்குப் பேரிடர் ஏற்படும். தெய்வங்களுக்கும் பூசை நிகழாது என்றார். மழையில்லை என்றால் மண்ணில் பசும்புல்லும் தலைகாட்டாது என்று பொய்யில் புலவர் புகல்கின்றார்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி".

என்று கூறுகின்றார். இதில்,பெரிய உலகமும் மழைஇல்லை என்றால் பசியால் வருந்தும் என்று செந்நாப் போதார் தெரிவிக்கின்றார். எனவே, உலகம் வாழ மழை வேண்டும் என்பதை "ஆண்டாள்' வாழ உலகினில் பெய்திடாய்" என்று தம் பாசுரத்தின் வாயிலாக எம்பெருமானிடம் இறைஞ்சுகின்றார். மழையின் பெருமையை இவர்கள் இருவரும் இனிது எடுத்துரைத்தார்கள்.

ஐந்திணை ஐம்பது என்னும் இலக்கியத்தைப் பாடியவர் மாறன் பொறையனார். இவர் வேதம் அறிந்த வித்தகர். கண்ணபெருமானை எண்ணிப் பாடுவதில் வல்லவர். அவர் பாடிய முதல் வெண்பாவின் முதலடியில்

"மல்லர் கடந்தான் நிறம்போல் இருண்டெழுந்த"

என்று கூறுகின்றார். இதில் மேகம் எம்பெருமான் நிறம் போல இருண்டெழுந்து வானத்தில் இருப்பதை அறிவிக்கின்றார். இந்த அருமையான சிந்தனை ஆண்டாள் மனத்தில் நின்று

"ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்து"

என்று வெளிப்பட்டு, இந்தப் பாசுரத்தின் மூன்றாம் அடி

யில் தோன்றி மிளிர்கின்றது. இந்த ஐந்திணை ஆசிரியரின் வெண்பாவில் கடைசி அடியில் இரண்டாம் சீரில் "வலனேரும்" என்ற தொடரை ஆள்கின்றார், இந்தத் தொடரைச் சிந்தித்தார் கோதை; அதை இந்தப் பாசுரத்தின் இரண்டாம் அடியில் கடைசியில் நிற்கும் சீரில் வைத்து

"ஆர்த்தேறி"

என்று விளம்புகின்றார். இப்படிக் கொஞ்சும் சங்க இலக்கியத் தமிழை, கோதை தம் பாவையிலே நடையாட விட்டு எழில்நடம் புரியவைக்கின்றார்.

ஒப்பில்லா உயர்புலவர் நப்பூதனார்; அவர்தம் படைப்பு முல்லைப்பாட்டு; இது மிகச் சிறப்புக்குரிய இலக்கியமாகும்; பத்துப்பாட்டில் ஒன்றாகக் கருதப்படுவது; கருமைநிற மேகத்திற்கு, கண்ணபிரானை இவர் உவமைப்படுத்துகின்றார். மாவலி மன்னன் திருமால் கேட்ட மூன்றடி மண்ணைத் தருவதாக உறுதிப்படுத்தி நீர் ஊற்றித் திருமால் கையில் தாரை வார்த்துக் கொடுக்கின்றான்.

தாரை வார்த்துக் கொடுக்கும்போது, எம்பெருமான் கையில் மாவலி நீரை ஊற்ற ஊற்ற அம்மாயன் சிறிது சிறிதாக மண்ணுக்கும் விண்ணுக்குமாக உயர்ந்து விடுகின்றான். இப்படி இவன் உயர்வதைப் போலக் கடல் நீரைக் குடித்த மேகம் வானத்தை நோக்கி உயர்ந்து சென்று மலைகளை இருப்பிடமாகக் கொண்டு, பின்னர் உலகை வலம் வந்து சென்று மழையாகப் பெய்கின்றது என்ற விவரத்தை,

"நீர்செல நிமிர்ந்த மாஅல் போல
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலநேர்பு
கோடு கொண்டெழுந்த கொடுஞ் செலவெழிலி
பெரும் பெயல் பொழிந்த"

என்று பாடித் தெரிவிக்கின்றார். இச்கருத்தை அல்லி நாடாண்ட மடயில் 'ஆழி மழைக்கண்ணா ஒன்று' நீ கைகரவேல் ஆழியுள் புக்கு முகுந்துகொடு ஆர்த்தேறி, என்று பாடுகின்றார். 'ஊழி முதல்வன உருவம்போல், மெய்கருத்து' என்ற தொடரில் கோதைப் பிராட்டியார் பொருளையே உவமையாச்கிப் பாடுகின்றார்' இவர் பெரும் புலமை வாய்ந்தவர் ஆதலால் இவ்வாறு பாடும் திறனைப் பெற்றார்.

இவர் பாசுரத்தில் கவிதை நயம், பொருள்வளம் சொல்நயம் ஆகியவற்றைக் கண்டு களிக்கலாம். சங்க இலக்கியங்களில் பயின்று வரும் செய்திகளெல்லாம் இவர் பக்தி இலக்கியத்தில் பார்க்கும்போது, அனைத்துத் துறையிலும் ஆழங்கால் பட்டவராக, அனைத்துச் செய்திகளையெல்லாம்அறிந்தவராக இவர் திகழ்ந்தார் என்று இயம்பலாம்.

அருளாளனின் திருவருளாலே இவர் அனைத்து விவரகளையும் அறிந்தவராக மிளிர்கின்றார். இத்தகைய வித்தகர் அருளிய பாசுரங்களை நாளும் பயின்று ஆராவமுதனின் சீர்த்தியினைப் போற்றிப் பெருமை காண் போமாக!

## கோதையைப் போற்றுவோம்

மழையின்றி வாடுகின்ற யக்கெளெல்லாம் வாழ

மழைபொழிய கண்ணபிரான் மாண்பை—விழைந்தேத்தி

இன்பமழை கண்ட இனிய நம் கோதையார்

பொன்மொழியே நன்மைதரும் போற்று.

# 7. ஆயர்குலத்துதித்த அன்னை

**அல்லிநாடு பெற்றதிரு ஆண்டாள்சங் கத்தமிழால்**
**செல்வனாம் கண்ணன்பால் சேர்ந்துயர்ந்தார் — எல்லோரும்**
**போற்றத் திருப்பாவைப்** புண்ணிய நூல் **செய்தருளி**
**ஏற்றம்பெற் றாரையே ஏத்து**

— *கவியமுதனார்*

*திருவில்லி புத்தூரில் தோன்றிய ஆண்டாள் திருப் பாவை என்னும் சங்கத்தமிழைப் பாடிக் கண்ணபெரு மானைக் காதலனாகப் பெற்றார். அவர் பாடிய நூல் புண்ணிய நூலாகும். அந்நூலைப் பாடியருளியதால் அவனியின் பாராட்டினைப் பெற்றவரை ஏத்துமாறு கவியமுதனார் நமக்கு உணர்த்துகின்றார்.*

*ஆயர் குலத்தில் தோன்றிய அணிவிளக்கான ஆராவ முதனை அடையவே அகத்தில் உறுதிகொண்டார். எடுத்த பணியை முடிப்பதில் தனியார்வம் பெற்றவராகத் திகழ்ந்தார். தம் தேவையை நிறைவேற்றிக் கொள்ள திருப்பாவையைப் பாடி நோன்பு நோற்றார். நாற்றத் துழாய் மாலையை அணிந்த நாராயணனைப் பெற ஆர்வ முடன் நின்றார் கோதை*

*தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை நேய முடன் சார்ந்திலங்க விழைந்தார். தாம் எண்ணியதைப் பெறவிழைந்ததல்லாமல் உலகமும் உய்யவேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டிருந்தார். ஆதலால் மக்களை*

நோக்கி நாடு நகரமும் நலம் பெற 'நமோ நாராயணா வென்று சொல்லுமாறு தூண்டியவர் அப்படிச் சொன்னால் இன்பமுற இயலுமென்றார்.

அந்த மாயவனை நினைக்கும், நெஞ்சமும், சொல்லும் வாயும் சுகானுபாவம் காணும். அருளாளனைக் காணும் கண்ணும், அவன் திருவடியில் தாழ்த்தும் தலையும் நலம் பெற்று இலங்கும் என்று கூறிய கோதை,

''மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்!''

என்று இந்த ஐந்தாம் பாசுரத்தை அழகாகப் பாடியருளினார். மாயச் செயல் பலவற்றை ஆற்றி நலஞ் செய்த எம்பெருமானை மாயன் என்று விளம்பினார். தூயநெறியில் ஆழங்கால்பட்டு இருப்பவர்கள் வாழும் பகுதியை ஆயர்பாடி என்றார். அதன் தலைவன்தான் மாயன். இடர்ப்பாடில்லாதவர் இருக்கும் ஊரே வடமதுரை. அப்பகுதியில் வாழ்பவர்கள் தப்பிதம் செய்யாத சால்புடையவர்கள். இவ்வாய்ப்பாடியை இனிதாள்பவன் இன்னமுதன். அவனே தான், யமுனை நதியின் துறைவன், ஆயர்குலத்தின் அணிவிளக்கம். தாயாகிய தேவகிப் பிராட்டியின் மணி வயிற்றை விளக்கம் செய்த புனிதன். தானே தாம்புக்

கயிற்றில் கட்டிக் கொண்டு கட்டுப்பாட்டிற்கு' அடங்கி யவன் என்பதைக்காட்டி நின்ற தாமோதரன்.

அந்த நல்லவனைத் தூயமலர்கள் கொண்டு தூவித் தொழுவோம்; வாயாரப் பாடுவோம்; நெஞ்சார நினைப் போம் என்றார் கோதை. அப்படி அவனை நினைத்தால் முன்பு நாம் இளமையில் செய்த பாவமும் இன்று தெரி யாமல் செய்திட்டத் தீமையும் எரியிலிட்ட பஞ்சுபோல் இல்லாமல் போகும் என்றார்.

ஆயர்குலச் சிறுமியர்களில் ஒருத்தி ஆண்டாளிடம், நாம் முன்பு பாவம் செய்தவர்களாக இருக்கும் போது, இன்று நோன்பு நோற்றால் பயன் ஏற்படுமா? என்றாள். அதற்கு, அவனை நாம் மனமார நினைத்தாலே முன்னைய பாவமும் இன்றைய இன்னலும் நெருப்பில் பட்ட பஞ்சு போல் நிலைகுலைந்து போகுமென்றார் ஆண்டாள்; எடுத்த பணியும் இனிது நிறைவேறும் என்று தெளி வித்தார்.

அவன் யார் தெரியுமா? அன்று நிராதரவாய் நெஞ்சம் கதறி நின்ற பாஞ்சாலியின் சஞ்சலத்தைத் தீர்த் தவன். முதலை வாய்ப்பட்ட யானைக்கு முனைந்து ஓடிச் சென்று அதன் துயரைத் துடைத்தவன் என்றார். நல்லவர் களைத் தோன்றச் செய்ததாலும், எண்ணிறந்த நலன்கள் செய்த கண்ணன் பிறந்ததாலும் "வடமதுரையை மன்னு" என்று அடைமொழி கொடுத்துச்சிறப்பிக்கின்றார் கோதை.

தன்னுடைய அருமைத் தாய் தந்தையரை விலங்கிட்டுச் சிறையிலிட்டான் கம்சன். சிறையில் கண்ணன் பிறந்ததும் தன்னைப் பெற்ற தாய் தந்தையரின் விலங்கு அறுந்து ஒடிந்தது என்ற வரலாற்றை அறிவிக்க கண்ணபெரு

மானை "மைந்தன்" என்னும் சொல்லால் கூறித் தெளிவுப் படுத்துகின்றார்.

மைந்தன் என்றால் மிடுக்குடையவன் என்பது பொருள். இத்தகையவனை ஒரு சான்றோர் "தந்தை காலில் பெருவிலங்கு தாள விழ, நள்ளிருட்கண் வந்த எந்தை" என்று சிறப்பிக்கின்றார். இவன் பிறந்தபோது பெற்றோர்களின் விலங்கு, தானாக அறுபட்டு வீழ்ந்தது. இந்த மாயனை ஆயர்பாடியில் விட்டுவர இரவில் வசுதேவர் சென்றபோது, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய யமுனையாறு, முழங்கால் அளவில் குறைந்து வசுதேவருக்கு வழிவிட்டதால் அதை, "தூயப் பெருநீர் யமுனை" என்று பெருமை செய்தார் பெரியாழ்வார் பெற்றெடுத்தப் பெண்பிள்ளை.

கவிஞர்கள் காவியம் பாடும் போது ஊரையும், அந்த ஊர்தலைமகனின் பேரையும், ஆற்றையும் சிறப்பித்துக் கூறுதல் வழக்கம். அந்த வகையில் கவிக்குயிலான ஆண்டாள், வடமதுரை என்று ஊரையும், தாமோதரன் என்று அவ்வூரின் தலைவனின் பேரையும் யமுனை என்று அவ்வூரின் ஆற்றையும் போற்றினார்.

வடமதுரையில் பிறந்த கண்ணபெருமானை "ஆயர் குலத்தில் தோன்றிய அணிவிளக்கு" என்று ஆயர்குலத்தினைப் பெருமை செய்தார். இவ்வாறு பெருமை செய்ய காரணம், முலைப்பால் தந்தும் அன்புடன் வளர்த்தும், உயர்வாகக் கருதியும் தம்கண்போல் ஆயர்கள் காத்ததால் இவ்வாறு கூறிச் சிறப்பித்தார். அருளாளன் கண்ண பிரான் வடமதுரையில் மறைவாகி, ஆயர்பாடியில் தோன்றியதால் தம் பாசுரத்தின் மேற்சொன்ன தொடரில் "தோன்றிய" என்னும் சொல்லைப் பெய்து தெரிவித்தல் காணலாம்.

எம்பெருமான் வயிற்றில் கட்டுண்ட கயிற்றின் தழும்பு ஒன்று இருந்ததைக் காட்டவும், அவன் கட்டுப் பட்டு உலகையெல்லாம் தன் கட்டுப்பாட்டில் வைத்து நடத்தி வருவதை எடுத்துக் காட்டவும் அவனைத் தாமோ தரன் என்று பாடிப் போற்றுகின்றார். இந்தச் செந் தமிழ்ப் பாசுரத்தில், சேமம் அருள்பவனான தாமோ-தரனைப் பெருமை செய்து சிறப்பிக்கின்றார். எல்லோரும் போற்றும் ஆற்றல் சான்றவனை, தொல்லை அறுக்கும் வல்லவனை, செல்வம் நல்கும் நல்லவனை மலர் கொண்டு தூவி நலம் பெற வழியுரைக்கின்றார் கோதை.

### பாவையில் இலக்கியச் செய்திகள்

திருமால் எடுத்த பெருருமைசான்ற அவதாரங்கள் பத்து. அவதாரங்கள் பல எடுத்த அவனை, எவரும் பிறப் பிக்க வில்லை. அவனே வந்து பிறக்கின்றான். தீமையைத் தீய்த்து ஒழிக்கவும் நன்மையை ஏற்படுத்திப் பெருக்கவும், அவன் இவண் வந்து தோன்றுகின்றான். உலகம் பிறழா மல்செயற்படவே அவன் உதயமாகின்றான், தன்னைத் தானே தோற்றுவித்துக் கொண்டு, உலகத்திற்கு உதவி செய்ய அவன் எடுத்த அவதாரங்களின் அருமையினைப் பரிபாடல் சிறபிக்கக் காணலாம்.

"முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே !"

என்று இந்த இரண்டு வரிகள் எடுத்துக் காட்டுதல் காணலாம்.

எம்பெருமான் முதலில் உயிர்களைப் பிறக்க வைக் கின்றான்; இரண்டாவதாக அவ்வுயிர்கள் வாழ்வதற்கு அருள்புரிகின்றான்; மூன்றாவதாக அவ்வுயிர்களை இறுதி யாக்கி மறைத்துவிடுகின்றான் என்ற விவரத்தைப் பரி

பாடலில் முதன்முறை இடைமுறை கடைமுறை தொழில் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு செயலாற்றும் இன்ன முதன் உலகம் நலங்கருதியே பிறப்பெடுக்கின்றான்' என்றாலும் அவனை யாரும் தோற்றுவிப்பதில்லை; அவனே தோன்றித் தன் ஆற்றலைக் காட்டுகின்றான் என்பதைக்கூற 'பிறவா பிறப்பிலை பிறப்பித்தோரிலை என்றார் இளவெயினனார். பரம்பொருள் எல்லாப் பிறப்புகளையும் எடுத்து உலக உயிர்களோடு சார்ந்துதன் பெற்றியினை அற்புதமாகக் காட்டுகின்றான் என்பதைப் இத்தொடரால் எடுத்துக் காட்டிச் சிறப்பிக்கின்றார்.

உயிர்கள் தாம் செய்த பாவ புண்ணியத்திற்கேற்பப் பிறவி எடுக்கின்றான். அவ்வாறு எடுக்கும் பிறவிகளுக்கு எம்பெருமானாகிய நீயேதான் காரணனாயிருக்கின்றாய். இந்த விதியை வகுப்புவனும் நீயேதான். நீ எடுக்கும் பிறவிக்கு உன் விருப்பமே காரணமாகும். இந்தச் செய்தியினை முகற் பரிபாடலின் முப்பத்திரண்டாம் அடி தொடங்கி மூன்றடிகளில்

> ''இருவர் தாதையும் இலங்கு பூண்மாஅல்
> தெருள நின்வரவு அறிதல்
> மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே'' !

என்றுபாடித் தெரிவிக்கின்றார்.

இவற்றில் திருமால் மேற்கொள்ளும் அவதாரத்தின் காரணத்தை மெஞ்ஞானிகளும் உணர்ந்து கொள்ளுதல் அரிதாகும் என்று கூறப்பெறுகின்றன, காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்கப் படாமல், எங்கும் இருக்கும் பரம்பொருளே ஒரு காரணம் கருதித் தன்னிச்சையாகவே, காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்கப்பட்டு, ஒரு வடிவம் கொண்டு தோன்றுகின்றான் என்பதை,

''தெருள நின்வரவு அறிதல்
மருளறு தேர்ச்சி முனிவர்க்கும் அரிதே''.

என இவ்வடிகள் இயம்புதல் காணலாம். இவ்வாறு அவன் எடுக்கும் அவதாரத்தைப் ''பிறப்பு'' என்று சிலர் அறியாமையாலேயே அறிவிக்கின்றனர், இப்படிக் கூறு வோரும் தெரிந்து, தெளிந்து கூறவே ஆண்டாள்.

''ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு'' என்று கூறி அவனையாரும் பிறப்பித்தார் இலையே என்பதை மேற்குறித்த தொடர் மொழியில் ''தோன்றும்'' என்னும் சொல்லைப் பெய்து தெளிவுப்படுத்துகின்றார். ஆம் அவன் காரணம் கருதியே அவதாரம் செய்து தீமையைத் தீய்த்தொழித்து நன்னெறியை நாட்டில் நடமிடச்செய்யத் தோன்றினான். இந்தச் செய்தியை மேலும் தெளிவாக அறிந்து கொள்ள, கண்ணபெருமானை ஆயர்குலத்தின் அணிவிளக்காகத் தோன்றினான் என்று இனிது விளக்கு கின்றார். ஆவலோடு அழகுத் தமிழ்கொண்டு திருப் பாவையில் அவனைப் பெருமையாக எடுத்துக்காட்டு கின்றார்.

ஒருவன், எல்லாப் பொருள்களுக்கும் சார்பாய் இருக்கும் பரம் பொருளை உணர்ந்து, இருவகைப் பற்றும் இல்லாமல் வல்லமையுடன் விளங்குவானே ஆயின், அவனை முன்பு சார்ந்த துன்பங்களும் ஒழியும் மீண்டும் அவனை எந்தவிதத் துன்பங்களும் சாராமல் விலகி நிற்கும்.

ஒருவனைச் சாருந்து வரும் துயரம் யாதெனின் பிறவி யாகிய துயரமே! இத்துயரம் அவன் செய்யும் வினையால் தொடர்வது. நல்வினையாலும் தீவினையாலும் துயரம் தோன்றும். அவாகொண்டு ஆசை மேவிச் செய்வதால் இந்த வினைகள் துயரங்களாக வந்து தாக்குகின்றன.

பிறப்பு அநாதியாகவே வருவது ஆதலால், உயிரால் பெற்ற வினைகளின் பயன்கள் இறந்த உடம்பால் வருவன வாகும். இவ்வாறு வரும் வினைகளின் பயன்களை எடுத்த பிறவியால் அனுபவித்தே தீரவேண்டும். இப்படி அனுப வித்தே தீரவேண்டும் என்ற விதியை மாற்றவல்லது எம்பெருமான் திருவடியேயாகும். எந்த வினையும் நம்மை அணுகாமலிருக்க அவனின் பொற்றாமரை அடியே என்பதைக் கோதைப்பிராட்டி எடுத்துக் கூறுகின்றார்.

திருவள்ளுவப் பெருந்தகையார் பிறவித் துன்பம் தோன்றி, நம்மைத்தாக்குகின்ற போக்கையும் கூறி, அது வந்து தாக்காமல் இருக்கவும் நீக்கவும் நமக்கு வழிகூறு கின்றார். இவற்றை மெய்யுணர்வு அதிகாரத்தில்

''சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்''.

என்று பிறவி நோய் வாராத வழியினைக் கூறிய அவர் மேலும்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றும்
நாமம் கெடக்கெடும் நோய்

என்று பாடுகின்றார். பிறவிக்குக் காரணமாய் இருத்தல் காமம், வெகுளி, மயக்கம் என்றார். இவற்றை நீக்கினால் பிறவித்துன்பம் இல்லை; எனவே, ஞானயோகங்களில் ஆழங்கால் பட்டவர்கள் விரும்புதல், வெறுத்தல், மயங்கு தல் என்னும் நோய்களுக்கு ஆட்படாமல் நிற்பார்கள். இப்படி உறுதிப்பாட்டால் தெளிவாகவே இருப்பவர்களே பிறவி நோயை அறுப்பவர்கள் ஆவார்கள்.

இத்தகைய தெளிந்த ஞானியர்களின் முன்னே காமம், வெகுளி, மயக்கம் மூன்று குற்றங்களும் காட்டுத்தீயின்

முன்னால் பஞ்சுப்பொதி பொசுங்கிப் போவதைப் போன்று மாயும் என்றார் பொய்யில் புலவர். இவரை அடியொற்றிக் கோதை,

"தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் தூசாகும் செப்பு"

எனப் பாடுகின்றார். எண்ணுகின்ற அந்த மூன்று நாமங்களும் நம் மனத்தை விட்டு விலகி, அந்த மனத்தில் தாமோதரன் என்கின்ற திருநாமத்தைப் பதித்து விட்டால் பிறவித் துன்பமில்லை என்றார். துயரம் தரும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று நாமங்கள் நம் நெஞ்சை விட்டு அழிய தாமோதரனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தால், அவன் திருவடிகளில் தூயமலர் கொண்டு தூவித் தொழுதால் முன்னைய பிழையும் இன்று வரும் பிழையும் நம்மை வாட்டாமல் கெட்டொழியும். ஆம், தீயினில் பஞ்சாய்த் தீய்ந்து பட்டொழியும் என்றார்.

பிழையினால் அழிந்து படும் மக்கள் அப்பிழையின் தொடர்பால் மீண்டும் பிறவி எடுத்து, எடுத்து அவல முறுகின்றனர். அவலத்தைக் கெட்டொழியச் செய்து, கவலையின்றி வாழ, பிறவாமை நிலையை எய்த இப் பாசுரத்தால் வழிகாட்டுகின்றார். மக்கள் நெஞ்சில் தன்னலம் தலையெடுத்துப் பொதுமை வேட்கை சிறிதும் இன்றி இருத்தலைக் கண்டு வேதனைப்பட்ட ஆண்டாள் அவர்கள் அப்போக்கிலிருந்து மனம் மாற்றம் எய்தவே, தினமும் எம்பெருமானை இறைஞ்சி நிறைவு கொள்ள வேண்டுகின்றார். இப்பாசுரத்தால் மனிதகுலம் மேம்பாடு எய்த வழிகாட்டுகின்றார். இதற்கு மனத்தூய்மை

வாய்மையாற் காணப்படும் என்று கூறிய நெறியில் தூய மனத்தோடு, நின்று தூயமலர் எடுத்துத் தூவித் தொழுது வாயினால் பாட வேண்டுமென்றும், தாமோதரனை மனத்தினால் சிந்திக்க வேண்டும் என்றும் கூறினார் கோதை: அவர் இசைத்த தமிழை ஆதரவாகக் கொண்டு ஆராவமுதனின் பாதார விந்தமே கதியெனப் போற்றி நிதம் துதித்து நாம் வருவோமாக! மனம் மகிழ்வோமாக!

## ஆண்டாளை அகத்தில் வைப்போம்

ஆயர்தம் குலத்துதித்த அணிவி ளக்காம்
அருளாளன் இம்மண்ணில் தோன்றி, நெஞ்சம்
தூயமுற மக்களுக்கு வழியைக் காட்டித்
தொண்டருக்குத் துணையானான் தீமோ ரான
தீயவரை அழித்தவனே! போற்று வோர்தம்
சிந்தையிலே உறைபவனே; பலர்வி யக்க
மாயங்கள் புரிந்தவனை ஆண்டாள் அன்னை
மனமாரப் பாட்டிசைத்தார் நெறியில் நிற்போம்!

# 8. வெள்ளத் தரவினில் வித்து

**வண்டி உருவத்தில் வாட்டவந்த ராக்கதனைத்**
**தண்டித்(து) உதைத்தழித்தான் தாமரையான்—கண்மூடித்**
**தூ ங்குகின்றான் வாரிதிமேல் தூயோனைக் கோதையார்**
**பாங்குடனே தாம்இசைத்தார் பாடு.**

*கவியமுதனார்*

வண்டிபோல் உருவெடுத்து வந்தான் சகடாசுரன்; கண்ணபிரானைக் கொல்ல கரவுமனத்துடன் வந்தான். கம்சனால் ஏவப்பட்ட இராக்கதனைக் காயாம்பூ வண்ணன் காலால் உதைத்தழித்தான். இவனே பாற் கடலில் பள்ளி கொண்டுள்ளான்! இத்தூயவனின் நிலை யறிந்து போற்றினார் கோதையார்; அந்தக் கோதைப் பிராட்டியாரைப் பாடுமாறு நமக்கு உணர்த்துகின்றார் இவ்வெண்பாவில் கவியமுதனார்.

கோதையார் திருப்பாவையை அருளியதால் இந்தப் பூமியில் மக்களின் ஆதரவைப் பெற்றவராவார். ஆதலால்-தான் அவரைப் பாடுமாறு நமக்குக் கூறுகின்றார். அருளாளனின் அருமைப்பாட்டை அழகாகத் திருப் பாவையில் பாடியதால், அந்தப் பெருமாயனைப் போற்றி மக்கள் நலம்பெறக் கூறியதால், கோதையும் பாவையும் குன்றென உயர்த்தப்பட்டு, சான்றோர்களால் புகழ்ந்து பேசக்காண்கின்றோம்.

கோதையார் பாவையில் கொஞ்சும் தமிழ் தஞ்சம் புகுந்து நம் நெஞ்சைப் பிணிக்கின்றது. பாவையைப்

பாடும் நெஞ்சம் பரவசமடைய அதன் கொஞ்சும் தமிழ் இனிதே குலவி இலங்கக் காணலாம்.

ஆன்றவிந்தடங்கிய சான்றோர்கள் தேன் எனப் போற்றிடும் கோதைத் தமிழைப் பெருந்தொகை எனும் நூலின் முப்பத்திரண்டாம் பாடல் பெருமையாகப் பேசுகின்றது. அதில்

இருக்கோதும் அந்தணர் சூழ்புது
வாபுரி யெங்கள் பிரான்
மருக்கோதை வாழும் வடப்பெருங்
கோயில் மணிவண்ணன்
திருக்கோ புரத்துக் கிணையம்பொன்
மேருச் சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுவ
மானமாம் பண்பிலையே !

என்று பாடப்பெற்றுள்ளது. இந்த உலகம் எம்பெருமான் கட்டளையால் கட்டுப்பட்டு நடப்பதை, எடுத்துக் காட்டும் வகையில், இந்தப் பாடலைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடப்பெற்றுள்ளது. இந்தப் பாடலில், இருக்கு வேதத்தை ஓதும் அந்தணர்கள் சூழ்ந்துள்ள, கோதைப் பிராட்டியார் வாழுகின்ற-ஆலிலைப் பள்ளியான் இலங்குகின்ற வடப்பெருங் கோயிலின் கோபுரத்துக்கு இணையாகச் சொல்ல வேண்டுமென்றால், இமயமலையைத்தான் உவமையாகச் சொல்ல வேண்டும்; வேறெதையும் எடுத்துக் காட்டவியலாது என்று பேசப்பெறுகின்றது. கோதைப் பிராட்டியார் வாழ்வதால் தான் எம்பெருமான் கோயிலின் சிகரம் ஏற்றம் பெற்றுவிட்டது என்பதை "மருக்கோதை வாழும்" என்ற தொடர்மொழியால் வெளிப்படுத்துதல் காணலாம். கோதைப் பிராட்டியாரின் திறனை இப்பாடலில் சிறப்பிக்கக்காண்கின்றோம்.

பிறந்த நிலையிலும், வளர்ந்த நிலையிலும், வாழ்ந்த நிலையிலும் அறிவில் தெளிவுடையவராகத் திகழ்ந்ததால் அறிதுயில் கொண்ட அருளாளனைக் கரம்பிடிக்க முடிந்தது. இத்தகைய நிலையில் அவனை அடையப் பாடிய திருப்பாவையின் ஆறாம் பாசுரத்தில் செயலை மறந்து துயிலும் பெண்ணிடத்தில் பறவைகள் ஒலி எழுப்பிக் கொண்டு இரைதேடச் செல்கின்றன, இந்த ஒலிநிலை உன் செவியில் படவில்லையா? என்றும் பறவைகளுக்கெல்லாம் தலைமை சான்றிலங்கும் பெரிய திருவடி வணங்குகின்ற, தேவர்களுக்கெல்லாம் தலைவனாயிருக்கும் எம்பெருமான் எழுந்தருளி இருக்கின்ற கோயிலிலே வெள்ளை நிறச்சங்கு அழைக்கும் ஒலி உன் காதில் விழவில்லையா? என்றும் உணர்த்தப்பட்டது.

பெண்வடிவத்தில் பூதகியாக வந்த அரக்கியை அணைத்து, அவள் தந்த நஞ்சுடைய பாலைக் குடித்ததோடு, அவளின் உயிரையும் குடித்த மாயன், வண்டி உருவில் வாட்டவந்த அரக்கனை ஆற்றலுடைய கால்களால் உதைத்தழித்தான். அப்பண்ணவ மூர்த்தியே திருப்பாற்கடலில் அனந்தாழ்வான் படுக்கையில் திருக்கண் வளர்கின்றான்; உலகைப் புரக்கும் அந்த அரியென்னும் கரியவனை, வேட்கை கொண்டு முனிவர்களும் விருப்புக் கொண்டு யோகிகளும் போற்றி எளிவந்த பிரானான அவனைச் சிந்தையில் வைத்து, எந்தவித அசைவும் அவனுக்கு ஏற்படாதவாறு

''அரிஓம் அரி ஓம்'' என்று பரிந்து இசைக்கின்றார்கள்; அந்த நல்லிசையும் உன் செவியில் விழவில்லையா? நீ தான் எழிலில் பாவைக்கு ஒப்பாயிருக்கின்றாய்! எனவே, பாவை நோன்பை நோற்க இப்போதே எழுந்து வருவாயாக என்று துயில் உணர்த்திய ஒருத்தியை அழைத்துச் செல்வதாக இப்பாசுரம் பாடப்பெற்றுள்ளது. இவ்வாறு நல்லதோர் இசை இன்பம் தோன்றப் பாடப்பெற்ற பாசுரம்தான்

''புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ ?
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்தே அரியென்ற பேரரவும்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் !''

என்று பாடப்பெற்றதாகும். இதில் துயில் கொள்ளும் பெண்ணை எம்பெருமானின் தொண்டில் ஈடுபடுத்த அழைக்கப் பெற்றாலும், அவளிடம் அரிய செயல்கள் குறித்தும் கூறப்பெற்றன. கண்ணபெருமானோடு கலந்து அனுபவிக்கவேண்டிய உள்ளார்ந்த காதலும், அவனோடு ஏகாந்தமாக இருப்பதற்குரிய காலநிலையும், கோவலர் குடியில் தோன்றி நிலவும் அன்புடைய, அகஉணர்ச்சியின் தன்மையும் இதில் அருமையாக அறிவிக்கப் பட்டுள்ளன.

''புள்ளரையன் கோயில்'' என்று முதலடியில் மூன்றாம் நான்காம் சீரில் பெய்து கூறப்பட்டுள்ளது. ஆயர்பாடியில் கண்ணனான மாயவனே இருக்கும் போது அங்கே கோயில் எதற்கு ? என்னும் கேள்வி எழலாம். இதற்குப் பதிலிறுக்கும் வகையில் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நெறிப்படி, அவ்வூரில் கண்ணன் அவதாரம் எடுப்பதற்கு முன்னமே திருமால் கோயில் இருந்த செய்தியினை நினைவு கூறவே இத்தொடரை ஆண்டார்கோதை. ''புள்''என்னும் சொல், கருடாழ்வானான பெரிய திருவடியை நினைக்கவும் அரையன் என்னும் சொல் எம்பெருமானை எண்ணவும் பயன்படுத்

தியதாகும்.சங்கு இயல்பாகவே வெள்ளை நிறம் உடையது ஆகும். அப்படி இருக்க, ஆண்டாள் வெள்ளை என்று அடை கொடுத்துப் பேசியது, அதன் தூய்மையையும், பயனையும்,மேன்மையையும் கருதியே இவ்வாறு பேசினார் போலும். அச்சங்கை "விளி" சங்கு என்று கூறினார். இது வினைத்தொகையாகும் ; விளித்த விளிக்கின்ற விளிக்கும் என்று இறந்த காலம் நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்தையும் காட்டி, கோயிலில் பூசை நிகழும் மூன்று வேளையிலும் ஒலியெழுப்பி மக்களை ஈர்க்கவே பயன்படுத்திய நிலையை இதனால் விளக்கினார்.

இதில் இரண்டு பேரரவத்தை ஆளுகின்றார். ஒன்று துயில் கொண்ட பெண்ணையெழுப்பவும் மற்றொன்று எழுப்பிய அவளை எம்பெருமானின் பக்தியில் ஈடுபடுத்தவும் ஆண்டார் என்று அறிதல் சால்பு. இப்பாசுர இறுதி "அடியில் உள்ளம் புகுந்து குளிர்தல்" என்ற கருத்தைக் கூறுகின்றார். இந்த மூன்று சொற்களின் மூலம் முனிவர்களும் யோகிகளும் இசைத்த இனியநிலையே உள்ளத்தில் புகுந்து குளிர்வித்த நிலையைக் கூறி இசையின் இன்ப நிலையைத் தெரிவிக்கின்றார். ஐந்தாம் அடியில்,

"வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை"

என்று பாடும் ஆண்டாள் வேதமுதல்வனை வித்து என்று தம் சித்தம் விழைந்து கூறுகின்றார்.

உழவன் விதைக்கும் ஒரு வித்துப் பலவாகக் கிளைத்து நலம் விளைவிப்பதைப் போன்று, எம்பெருமானாகிய வித்து ஒன்றே, உலகமாக, உலக உயிர்களாகக் கிளைத் துள்ளது என்றறிவித்தார். உழவன் நீரில் ஊற வைத்த பின் விதைத்தல் போன்று, எம்பெருமான் நீரிலே கிடந்து உயிர்கள் முளைக்க தன் நினைவாலேயே விதைத்து நலம் செய்கின்றான் என்பதைச் சுட்டவே இவ்வாறு குறித்தார்.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

உலகத்தில் எம்மொழியும் காணாத பொருள் இலக்கணத்தை இனிது படைத்த மொழி நம் இனிய தமிழ் மொழியே ! இஃது என்று தோன்றியதோ என்று வியந்து பேசும் அளவில் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னே தோன்றிய செந்தமிழில் அருமையாகப் படைக்க பெற்றது பெரும்பாணாற்றுப்படை. அதில் நூற்று ஐம்பத்தைந்தாம் அடியில் காலை புலர்ந்ததைக் காட்ட ''நள்ளிருள் யாமத்தில் புள்ளெழ'' என்ற தொடர் ஆளப் பெற்றுள்ளது. இதில் நள்ளிரவு கழிந்து விடியற் பொழுதினை அறிவிக்கும் வகையில் இறைதேடப் பறந்து செல்லும்போது பறவைகள் ஒலி செய்கின்றன என்று கூறப் பெறுகிறது. இதையே மேலும் நம் உளங்கவரும் வகையில் மலை படுகடாம் என்னும் இன்ப இலக்கியத்தில்

''புலரி விடியல் புள்ஓர்த்துக் கழிமின்''

என்று மொழியப்படுகின்றது. இரவு காலத்தின் நிலை மாறி, விடியற் காலத்தின் தன்மை தோன்ற, பறவைகள் சிறகை அடித்துக் குரல் எழுப்பிச் செல்கின்றன. அப்படிச் செல்லும் பறவைகளின் ஒலியைக் கேட்டு மக்கள் தம் பணியினை ஆற்றச் செல்கின்றனர். இவ்வாறு மக்கள் தம் பணி மேற்செல்ல தூண்டும் வகையில் பறவைகளின் குரல் ஒலி இருந்தது என்பதைக் ''கழிமின்'' என்னும் சொல்லால கூறப் பெறுகின்றது.

இக்காலைப் பொழுதை விவரித்து மதுரை காஞ்சி என்னும் இலக்கியம் கவினுறப் பேசுகின்றது. அதில் 673 முதல் 675 வரை உள்ள அடிகளில்

''பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னங் கரைய அணிமயில் அகவ''

என அறிவிக்கின்றது, இதில் சேவற்கோழியைப் 'பொறி மயிர் வாரணம்' என்று கூறப்படுகின்றது. காலை நேரத்தை உணர்ந்து அச்சேவல் கூவுகின்றது. இப்படிக் கூவுவதோடு யானையங் குருகு என்னும் ஆனைச் சாத்தா னாகிய சேவலும் கூவுகின்றது. இஃதன்றிச் சேவலாகிய அன்னமும் தன் துணையாகிய பேடையை அழைக்கக் கூவுகின்றது. இந்த நேரத்தில் அழகு மயிலும் அகவு கின்றது என்றும் பேசுதல் காணலாம். சேவற்கோழி, ஆனைச் சாத்தன், அன்னம், மயில் ஆகிய நான்கு பறவை களும் கூவுகின்ற நிலையைக்காலைநேர இசையாகக் கருதும் வகையில் மேற்குறித்த பாடலில் விளம்பி இருத்தலை அறியலாம். இந்த இனிய தமிழ்ச் செய்தியைத் தம் சிந்தையில் வைத்த கோதையார் செந்தமிழ்ப் பாசுரமான பாவையில் மேவி நிற்க கவின்மிகு காலைப் பொழுதை அறிவிக்க'

''புள்ளும் சிலம்பின காண்''

என்ற தொடரால் தெரிவிக்கின்றார். மேலே குறித்த மூன்று இலக்கியச் செய்திகளில் பயின்று வரும் எல்லாப் பறவை இனங்களையும் குறிக்கும் பொதுச் சொல்லான 'புள்' என்னும் இரண்டே எழுத்துடைய ஒரு சொல்லால் குறித்து விளக்கும் பான்மையை நாம் எண்ணிப் போற்றத் தகுந்ததாகும். இதனால் கோதையாரின் சொல் ஆட்சியும் அச்சொல்லைச் செட்டாகப் பயன்படுத்தும் பாங்கும் நம் நெஞ்சத்தினைக் கவர்வனவாகும்.

அடுத்து முதற் பரிபாடலில் 11-ஆம் அடியில்

''சேவலங் கொடியோய்''

என்று எம்பெருமான் சேவலங் கொடியாகிய கருடக் கொடியை உடையவன் என்று இது கூறுகின்றது. இப் பாடலின் 57-ஆம் அடியில் அருளாளனின் கொடியைப் புகழ்வாய்ந்த கருடக் கொடி என்று

"புள்ளின் கொடியவை"

என்று செப்புகின்றது. மேலும் செம்பொருளான எம் பெருமானின் செம்மை நலங்காட்டும், அக்கொடியை இரண்டாம் பரிபாடலின் 60-ஆம் அடியில்

"செவ்வாய் உணர்த்துயர் கொடியோயே"

என்று சிவந்த வாயால் கருடனை உணர்த்தும் உயர்ந்த கொடியை உடையவனே என இயம்பப்படுகின்றது கருடாழ்வான் அருளாளனுக்குப் பெரிதும் உதவுபவன் ஆதலால் அந்தப் பெரிய திருவடியையும் சீரருளும் ஆராவ முதனையும் மூன்றாம் பரிபாடலில் 15 முதல் 20ஆம் அடி வரையில் கடுவன் இளவெயினனார்,

" ஏஎர் வயங்குபூண் அமரரை வௌவிய அமிழ்தின்
பயன்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை
நிவந்தோங்கு உயர்கொடிச் சேவ லோய்நின்
சேவடி தொழாஅரும் உளரோ அவற்றுள்
கீழேழ் உலகமும் உற்ற அடியினை"

எனப்பாடுகின்றார். இவற்றில் அழகு மிகுந்த அணிகலன் களைப் பூண்டுள்ள தேவர்களை வென்று, அவர்களிடத்தில் இருந்த அமிழ்தத்தைக் கவர்ந்து தன்னை ஈன்றெடுத்த தாயின் அடிமைத் துன்பத்தை நீக்கிய கருடாழ்வான் என்கின்ற பறவையை வாகனமாகப் பெற்றுள்ளாய் என்று அப்பறவையையும் அப்பறவை ஏறும் பரமபுருடனையும் புகழ்ந்து பேசுகின்றார் புலவர்.

தாயின் நோயான அடிமைத் தளையை அறுந்து வீழச் செய்தவன் கருடன். அவன் பேராற்றலை உலகம் அறிய அவன் உருவத்தைக் கொடியாக விரும்பி ஏற்ற அருளாளா! நின்னுடைய சிவந்த திருவடிகளை இவ்வுலகில் ஏத்திப்

போற்றாதார் உளரோ? என்று இயம்பி, உன் திருவடியில் ஒன்று கீழேயுள்ள ஏழு உலகங்களிலும் பொருந்தியுள்ளது என அவன் திருவடி மகிமையை விரித்துப் பாடுகின்றார் அப்புலவர். இந்தச் செந்தமிழ்ச் செய்திகளை எல்லாம் கோதை தம் பாவையில் 'புள்ளரையன் கோயிலில்' என்ற தொடரால் மகிழ்ந்து தெரிவிக்கின்றார். கருடாழ்வானின் பெருமையையெல்லாம் புள்ளென்றும், எம்பெருமானின் சிறப்பையெல்லாம் அரையன் என்றும் இரண்டு சொற்களில் விண்டுரைக்கின்றார். பின்னாளில் இராமாநுசர் சரிதம் பாடியவர்கூட

''மாடுநிற்கும் புள்ளரையன் வாழி''

என்று கருடாழ்வானையும் எம்பெருமானையும் மாட்சியுறப் பாடுகின்றார். எம்பெருமான் சகடாசுரனை உதைத்து ஒழித்த திறனையும் பார்ப்பவரைப் பரவசமூட்டிக் கவரும் அவனின் காயாம்பூமேனியையும் திரிகடுகம் ஆசிரியர் நல்லாதனார்

...... கண்ணிய
'' மாயச் சகடம் உதைத்ததுவும்
பூவைப்பூ வண்ணன் அடி''

என்று அவன் திருவடியின் பெற்றியினை அகங்குழைந்து பாடுகின்றார். இப்பெரியார் சொல்வதைப் போன்று ஆண்டாள்

''கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி''

என்று பாடிப் பரம்பொருள் பெற்ற திருவடியின் ஆற்றலைக் கூறுகின்றார். கள்ளச்சகடமாக வந்த அரக்கன் கலங்கவும், அழியவும் காலால் உதைத்தான் என்று இன்பந் தோன்றத் தெரிவிக்கின்றார்.

அனைத்துயிர்களுக்கும் மூலமாகவும் மூவேழு உலகத்திற்குக் கருத்தாவாகவும் இருக்கின்ற அவன் கருமை

நிறத்தை உடையவனாகத் திகழ்கின்றான். அவனே உள்ளம் விழைந்து வெள்ளை நிறப்பாற்கடலின் இடையில் ஆதிசேடனாகிய பள்ளியில் காதல் மீதூர்ந்து யோக நித்திரை செய்கின்றான் என்று நல்லெழினியார் என்னும் புலவர் கோமான் பதிமூன்றாம் பரிபாடலில் 26 முதல் 29ஆம் அடி வரையில் இன்பம உண்டாகும் வகையில்

" தன்னுரு வுறழும் பாற்கடல் நாப்பண்
மின்னவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த
கவைநா வருந்தலைக் காண்மின் சேக்கைத்
துவளஞ் சூடிய அறிதுயி லோனே",

என்று பாடுதல் அறியலாம். கோதைப் பிராட்டியார் வெள்ளைப் பாற்கடலில் தன் கருமை நிறம் தோன்ற ஆயிரம் மாணிக்கக் கற்களைக் கொண்டு மிகுஒளி காட்டும் பாம்பின் படுக்கையில் துளபமாலையைச் சூடி அறிதுயில் செய்யும் அவனை வித்தென்று சித்திரித்து விளழந்து தெரி விக்கின்றார். கோதைசங்கத் தமிழ்ச் செய்தி அனைத்தை யும் உய்த்துணர்ந்ததால்.

"வெள்ளத் தரவில் துயில் அமர்ந்த வித்து"

என்று அந்தச் சத்துப் பொருளைப் போற்றுகின்றார் சிறிய சொல்லிலும் பெரியவனான கரியவனின் செயல் திறனையெல்லாம் உள்ளடக்கிக் கூறுவதில் ஆண்டாள் வல்லவர். அந்த வகையில் இந்தப் பாசுரத்தில் கொஞ்சும் தமிழில் குலவி நிற்கும் இலக்கியக் கருத்துகளையெல்லாம் திரட்டித் தம் திறன்விளங்கப் பெய்து விஞ்சி நிற்கப்படு கின்றார். அப்படிப் பாடிய ஒப்பில்லாக் கோதையாரின் பாவைத் தமிழைக் குவலயத்தில் உள்ளவர்கள் ஏற்று உவந்து இசைப்பாரானால் சஞ்சலமின்றிச் சால்புற உய்யலாம் என்பது தேற்றம்.

# கேசவனைப் பாடுக!

**ஆசையால் பாவையாம் அற்புதநன் நோன்பியற்றிக்**
**கேசவனைக் காணக் கிளர்ந்தெழுமின்—என்றுரைத்துச்**
**சால்புறவே சங்கத் தமிழிசைத்த ஆண்டாளின்**
**வால் அறிவுப் பண்பை வழுத்து!**

—*கவியமுதனார்*

*இதில் விருப்பங்கொண்டு அற்புதமாகச் செய்யும் நோன்பி னாலே கேசவனை அடைய சங்கத்தமிழ் என்று சொல் கின்ற திருப்பாவையைப் பாடிட ஆயர்பாடிப் பெண்களை ஆண்டாள் அழைக்கின்றார். அப்படிப் பாடியருளிய அவரையும், அவர் தம் திருப்பாவையையும் போற்றிப் பாடிப் பயன் எய்துமாறு மக்களுக்கு எடுத்துக் கூறுகின் றார் கவியமுதனார். மேலும் திருப்பாவையில் கேச வனைக் குறித்துவரும் ஏழாம் பாசுரத்தை எடுத்துக் கூறுகின்றார்.*

*இப்பாசுரத்தில் எம்பெருமானைக் காட்டிலும் அவன் அடியார்களுக்குப் பெருமை கூறப்பெறுகிறது. அந்த வகையில் ஆயர்குலப் பெண்ணொருத்தியைத் துயில் நீங்கி எம்பெருமானைப்பாட ஆண்டாள் குழாத்தைச் சார்ந்த பெண்கள் எழுப்புகின்றார்கள்.*

*இவர்கள், துயில் கொள்ளும் பெண்ணிடம், ",ஆனைச் சாத்தன் எனும் பறவைகள் கீசு! கீசு! என்று ஒலி செய் கின்றன; பொழுதும் புலர்ந்துவிட்டது! இன்னுமா தூங்கு கின்றாய்! மக்கள் தம் பணியை ஆற்றச் செல்கின்றனர்.*

எனவே, தூக்கத்தை விட்டு எழுந்து வா" என்றார்கள். அதற்குத் துயில் கொண்டிருந்த பெண், ஒலிசெய்யும் ஆனைச் சாத்தன் எனும் பறவைகள் தாமே எழுவில்லை! அவற்றை நீங்கள் எழுப்பி அவற்றின் ஒலியை எடுத்துக் கூறி என்னை எழுப்ப நீங்கள் செய்த சூழ்ச்சியே ஆதலால், பொழுது இன்னும் புலரவில்லை'' என்றாள்.

உடனே இவர்கள் ''அந்தப் பறவைகள் பிரிவு குறித்துக் கலந்து பேசுகின்றன. பொழுது புலர்ந்ததால் இரைத் தேட இரைச்சிலிட்டுக்கொண்டே செல்கின்றன. அவற்றை நாங்கள் எழுப்பவில்லை'' என்றார்கள். இவ்வாறு கூறியும் எழுந்து வாராமையால் அந்தப் 'பெண்ணைப் பேய்ப் பெண்ணே!' என்று விளித்தார்கள்.

அவளை இழித்துக் கூறியும் வாராமையால் மேலும். ஆய்ச்சியர்கள் அச்சுத்தாலியும் ஆமைத் தாலியும் அணிந்து கொண்டும், தம் கூந்தலில் வாசமுள்ள மலர்களைச் சூடிக் கொண்டும் தயிர்கடைகின்றார்கள். அப்படிக் கடையும், போது மலர்க்கூந்தல் அவிழ்ந்து விழ, அணிகலன்கள் ஒலிக்க, கடையும் மத்தினால் தயிரின் ஒலி வெளிப்படக் கடைகின்றார்கள் என இவற்றின் ஒலிகளை எல்லாம் எடுத்துக்கூறி எழுப்புகின்றார்கள்

அப்போதும் எழுந்து வாராமையால், இதமாக, இனிதாக அவளை அழைத்துப் பேசத்தலைபடுகின்றார்கள். ஆம் அவளைப் பெண்களுக்கெல்லாம் தலைவி என்று புகழ்ந்து கூறிய அவர்கள், நாங்கள் நாராயண மூர்த்தியான கேசவனைப் பாடப்போகின்றோம். நீயும் எங்களுடன்சேர்ந்து அனுபவிக்க வரமாட்டாயா? என்று கேட்கின்றார்கள்,

மிக்க அழகினைப் பெற்றுள்ள நீ இவ்வாறு இருப்பது சரியில்லை. எனவே நீயே வந்து கதவைத் திறப்பாயாக!'' என்று சொல்லி வற்புறுத்தி அவளையும் எழுப்பிக் கொண்டு செல்கின்றார்கள். இச்செய்தியினை ஆண்டாள்

''கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தங்கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோபேய்ப்பெண்ணே
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடைத்தியோ
தேச முடையாய்! திறவேலோர் எம்பாவாய்!''

என்று பாடித் தெரிவிக்கின்றார். முன் பாசுரத்தில் ஒருத்தியை எழுப்ப விளி சங்கின் பேரரவத்தை மட்டும், அதாவது ஒரு பொருளின் ஒலியை மட்டும் கூறினார். இதில் ஆனைச்சாத்தனின் பேச்சின் அரவத்தையும் ஆய்ப் பெண்டிர் அணிந்திருந்த அணிகலன்களின் ஒலியையும் கடையும் தயிரின் ஒலியையும், அவர்கள் அப்போது பாடுகின்ற ஒலியையும் குறித்து ஆக நான்கு பொருள்களின் ஒலிகளைக் கூறி நாயகப் பெண்பிள்ளையை எழுப்புகின்றார்கள். காலையில் எழுந்து கத்தும் பறவை ஆனைச் சாத்தன் அவற்றின் ஒலியைநன்கறிந்த ஆண்டாள்,

கீசு கீசு என்றெங்கும் ஆனைச்சாத் தங்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?

என்று துயில் கொள்ளும் பெண்ணிடம் கூறி எழுப்புகின்றார். அறிதுயில் கொண்ட அரங்கனைத் தொண்டரடிப் பொடியாழ்வார் எழுப்புவதற்கு, அதிரும் கடலை, கொட்டும் மேளத்தை, பறவைகளின் இரைச்சலை

எல்லாம் எடுத்தாளுகின்றார் ; இவரைப் போன்றே ஆண்டாளும் காலையில் நிகழும் ஒலிகளை 'அரவம்' என்னும் சொல்லினால் கூறி எழுப்புதல் காணலாம்.

எம்பெருமான், தன்னை எண்ணுபவர்க்கெல்லாம் உவந்து இன்பம் தருபவன். அந்த இன்பத்தைத் தூங்கும் பெண்ணும் அனுபவிக்க வேண்டுமென்று கருதி, உயர்ந்த நல்ல பொதுநோக்கம் கொண்ட கோதை அவளை மிகவும் உயர்வாக "நாயகப் பெண் பிள்ளை" என்று அழைக்கின்றார். இவ்வாறு கூறி அழைத்ததால், படுக்கையில் கிடந்த அவள் பரிவுடன் எழுந்தாள்; எழுந்தவளை மேலும் மிக அழகு வாய்ந்தவள் என்று பெருமையாகப் பேசியதால், விழித்த அவள், சொல்லொண்ணா மகிழ்வுடன் ஆண்டாள் குழாத்துடன் கலந்து கொண்டு கேசவனைப் பாடப் புறப்படுகின்றாள்.

இச்செய்திகளை எல்லாம் இனிது பாடும் ஆண்டாள், ஒரு நாடக நூலாகவே பாவையை நமக்குக் காண்பிக்கின்றார். இத்தெய்விகக் காட்சியினை, திருப்பாவையை அனுபவிப்பவர்கள் உய்த்துணரலாம்.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

இப்பாசுரத்தில் சங்கத் தமிழ் மாட்சியினை ஆண்டாள் அழகாகக் காட்டுகின்றார். குறுந்தொகையில் 191ஆம் பாடலில் 2 முதல் 4 அடிவரை

"நோன்சினை இருந்த விருந்தோட் புள்ளினம்
தாம் புணர்ந்த மையின் பிரிந்தோர் உள்ளாது
தீங்குரல் அகவக் கேட்டு நீங்கிய"

எனக் கூறுவதில், வலிமை வாய்ந்த மரக்கிளையில் பெரிய தொகுதியாக இருந்த ஆனைச்சாத்தன் எனும் பறவைகள்

சில, தம் துணையோடு சேர்ந்திருந்தன. அவை இன்புற்றிருந்தன. ஆனால் துணையின்றி இருந்த பறவைகள் தம்மைச் சேர்ந்திருக்க வேண்டிய பறவைகளுக்காகத் துன்புற்றிருந்தன என்று கூறியதால், தலைவன் பிரிவுக்காகத் தலைவி ஏங்கியிருத்தலை, ஆனைச்சாத்தன் தன் பிரிவாற்றாமையைக் காட்டும் ஒலியை உவமைப்படுத்திக் காட்டுகின்றார் ஆசிரியர்.

இந்த ஆனைச்சாத்தன் ஒலியைக் குறுந்தொகை 34ஆம் பாடலில் 4, 5 அடிகளில்

"முனாது யானையங் குருகின் கானல் அம்பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்பு இசை வெரூஉம்"

என்று, வெற்றிகண்ட வீரர்கள் ஆர்க்கின்ற ஒலியைக் கேட்டு, கானகத்திலே இருக்கும் ஆனையைப் போலப் பிளிறுகின்ற ஆனைச்சாத்தன் பறவைகள் அஞ்சி இரைச்சல் இடுகின்றன என இப்பாடலின் ஆசிரியர் கொல்லிக்கண்ணன் கூறுகின்றார். இப்படி அஞ்சியும் பிரிவாற்றாமையை வெளிப்படுத்தியும் கத்துகின்ற பறவையின் ஒலியைத் தாம் எழுப்பப்போந்த பெண்ணிடம்

"கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ" ?

என்று கூறி ஆண்டாள் எழுப்புகின்றார்; அஞ்சியும் பிரிவாற்றாமை கருதியும் கத்தும் ஆனைச்சாத்தன் ஒலியைப்பயன்படுத்தி, தூங்கும் நாயகியை எழுப்புவதற்கு முனைதல் காணலாம். பெரும்பாணாற்றுப் படையில் 156ஆம் அடி முதல் 158ஆம் அடிவரை, மூன்று அடிகளில்

"புலிகுரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வால்முகை அன்னகூம்பு முகிழ்
உறைஅமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து"

என்று புலியினது முழக்கத்தைப் போன்று, முழங்குகின்ற மத்தை ஆரவாரிக்கக் கயிற்றை வலித்து, குடைக்காளானின் வெள்ளிய மொட்டுகளைப் போன்று விட்ட உறையாலே இறுகத் தோய்ந்த தயிரைக் கடைந்தபோது, வெண்ணெய் வெளிப்பட்டன. நுரைகள் பானையின் மேல் புள்ளியாகத் தெரித்தன என இயம்புதல் காணலாம்.

இதே கருத்தை, 'கடையலங் குரல வாள்வரி யுழுவை' என்று புறநானூற்றில் 277ஆம் பாடலின் 5-ஆம் அடியில் காணலாம். இதிலும் மத்தினால் தயிரைக் கடையும் ஒலி புலியின் முழக்கத்திற்கு ஒப்பாகப் பேசப் பெறுகின்றது. இச்செய்தியினை நைடதம் நாட்டுப் படலம் 15-ஆம் பாடலிலும்

''தயிர் கடையு மோதை, கொல்புலி முழக்கமென்ன
வயின்றொறும் குழுமும்''

என்று பகர்தல் பார்க்கலாம். இவற்றையே 'கடைதயிர் குரல வேங்கை' என்று சீவகச் சிந்தாமணியும் செப்புதல் காணலாம்.

கம்ப நாட்டாழ்வார் பாலகாண்ட நாட்டுப்படலம் 28-ஆம் செய்யுளில்

''தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேய நுண்ணிடை, சென்று வணங்கவும்
ஆயர் மங்கை அங்கை வருந்துவார்''

எனப்பாடி, தோய்ந்துள்ள வெள்ளைத்தயிர், பாறைபோல் உறைந்திருந்தது. அதனைப் பெரிய மத்துக்கொண்டு கடையும் ஆய்ச்சியர்களின் கைகளில் இருந்த வெள்ளை நிற

வளையல்கள் ஒலி செய்தன. இவ்வாறு கடையும்போது அவர்களின் நுண்ணிடை முன்னே வளைந்து செல்வதால் தேயவும், அவர்களுடைய அழகிய கைகள் வலியால் வருத்தத்தைக் கொள்ளவும் செய்தன என்று தயிர் கடைந்த ஆய்ச்சியர்களின் நிலையை விவரிக்கின்றார் கம்பர்.

இந்தக் கருத்துகளை ஆண்டாள் தம் பாசுரத்தில், மிகச் சிறப்பாக

*காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து*
*வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்*
*ஓசை படுத்த தயிரரவும் கேட்டிலையோ ?*

என்று பாடி ஆய்ச்சியர் நிலையை அவர்கள் எழுப்பிய தயிரின் ஒலியை எடுத்துக் கூறித் தூங்கும் பெண்ணை எழுப்புகின்றார். கருத்தைப் பொருத்திக் கூறுவதில் கைதேர்ந்தவர் ஆதலால் சங்கத்துச் சான்றோர்களின் பாடல்களில் ஆழங்கால்பட்டு அந்த உயரிய செய்திகளை, எம்பெருமானைப் பற்றித் தாம் பாடிய பாசுரம் விளக்க முறவே எடுத்தாண்டுள்ளார். கம்பர் பெருமான் ஆண்டாள் அம்மையாருக்குப் பின்பு தோன்றியவர் ஆதலால், அவர் ஆண்டாள் அன்னையாருக்குப் பெருமை சேர்க்கவே அவரின் அடியொற்றி ஆய்ச்சியர்களின் நிலையை அழகோவியமாகப் பாடிப் பரவசம் எய்து கின்றார். இப்படித் தமக்கு முன்னே தோன்றியவர் அளித்த செய்திகளைப் பின்னே தோன்றியவர்கள் அன்புடன் கொள்ளுதல் மரபு என்பதற்கொப்ப ஆண்டாள் எடுத்து ஆண்டார். இவர் "வாச நறுங்குழல்" என்று இந்த ஏழாம் பாசுரத்தின் நான்காம் அடியில் முதற்சீரில் தொடங்கித் தொடர்கின்றார். ஆய்ச்சியர்கள் தம்

அழகுடைய, கருங்கூந்தலில் மிகுமணமுடைய எழில் மலர்களைச் சூடிக் கொண்டு சுந்தரமாக இலங்கியதை மேற்சொன்ன மூன்றுசொற்களில் தம் ஆன்ற புலமை தோன்றக் கூறுகின்றார்.

பரந்த மனமும் விரிந்த நோக்குமுடைய இவருக்குக் குறுந்தொகை 270ஆம் பாடல் 7-ம் 8-ம் அடியில் வரும்

''குவளைக் குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறும் என் கூந்தல்''

என்று குவளை மலர், வாசம் வீசுவதைப் போல் என் கூந்தலும் வாசமுடையது எனக் கூறப்பெறுவதும் நற்றிணை 95-ஆம் பாடல் 8-ஆம் அடியில்

''வண்டுபடு நாற்றத் திருள் புரை கூந்தல்''

என்று பேசப் பெறும் வாசமலர்க் கருத்தும்,

அடுத்துக் கலித்தொகை 43-ஆம் பாடலில், 23-ஆம் அடியில் ''மண நாறு கதுப்பினாய்'' என்று கூறுவதும்

மேலும் புறநானூறு 113-ஆம் பாட்டில் 9-ஆம் அடியில்

'நாறிருங் கூந்தல்'

என்று மொழிவதும் மேற்சொன்ன கோதையாரின் வா, நறுங்குழல் என்பதற்கு ஒத்தப் பொருளாகக் இலங்குகின்றன. ஆண்டாள் வேண்டி நாடும் கருத்துகள் இவர் முன்னே ஓடிவந்து நிற்பதைப் போன்று முன்பு எடுத்துக் காட்டிய இலக்கியங்கள் யாவும் இன்பம் ஊட்டும் வகையில் கைகொடுக்கின்றன.

ஆண்டாள் மேற்குறித்த பாசுரத்தில் ''நாராயண

மூர்த்தியான கேசவனைப்'' பாடுகின்றார். நாராயண மூர்த்தி என்று கூறியதோடு அமையாமல், கேசவனைப் பாடு என்று கூறியதற்கு, அந்தக் கேசவன் பெயரில் ஒரு வரலாறு இருப்பதனை நமக்கு நினைவுபடுத்துகின்றார். இதில்,

அன்று கம்சனால் ஏவப்பெற்ற கேசி என்னும் அரக்கன் குதிரை வடிவம் தாங்கி ஆயர்களை அஞ்சி நடுங்குமாறு செய்தான்; மேலும் வேகமாகக் கண்ண பெருமானின் மீதும் பாய்ந்து கொல்ல தன் வல்லமையைக் காட்டினான். இதையறிந்த மாமாயன் தன் வல்மை பொருந்திய கையைக் கொண்டு குதிரையைப் பிடித்து அடக்கினான்; அதன் வாயில் குத்திப் பற்களை உடைத்தான்; வாயைப்பிளந்து அதனை இருகூறாக்கினான் என்று அவன் பெருமையை எடுத்துப் பேசுகின்றார் கோதை. கேசவனான கண்ணபெருமான் நாராயணமூர்த்தியின் அவதாரம் என்று இதில் புகழ்கின்றார். கேசியைக் கொன்று கேசவனான எம்பெருமான் நம்முடைய மனக் குதிரையையும் அடக்குபவன் என்று அவனைப் பாராட்டி நாமும் போற்றிட வழிகாட்டுகின்றார்.

இந்த எம்பெருமானைப் பற்றி விந்தையுறச் செந்தமிழால் விரிக்க இவருக்கு,

''மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய் பகுத்திட்டு''

என்ற கலித்தொகை கருத்தும்

''கூந்தன் மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்''

என்று இன்பமுறத் தெளிவிக்கும் முத்தொள்ளாயிரப் பாட்டும் கைகொடுத்து இவர்புகழைநாட்டுகின்றன.

அந்தமில் பேரின்பம் அருளும் திருப்பாவையை அருளிய இவருக்கு உவப்பூட்டிப் பெருமையைச் சேர்ப்பனவாக சங்க இலக்கியங்களில் தோன்றி மங்காதிலங்கும் வண்டமிழ்ப் பாடல்களே என்று நாம் மகிழ்ந்து கூறுதல் பொருந்தும்.

இந்த ஏழாம் பாசுரத்தின் ஈற்றடியில், எழுப்புகின்ற பெண்ணை, "தேச முடையாய்" என்று விளித்து அவளின் வனப்பினை நினைவுபடுத்துகின்றார். தேசும் உடையாய் என்றுரைக்க வேண்டியிருத்தல் தன்மை இயல்பாக இசைத்து நயம்படப் பாடவே ஆண்டாள் தேசமுடையாய் எனக்காட்டும் ஆற்றல் போற்றத் தகுந்ததாகும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் சங்கத்தமிழ் ஆட்சியினைத் தம் பாசுரத்தில் மாட்சியுறக் காட்சி படுத்திக் காட்டியுள்ளார் என அறிதல் வேண்டும். மேலும் அவர் தம் சங்கத் தமிழ் உணர்வினைத் திருப்பாவையில் கண்டு தெளிதல் சால்பாகும்.

## தெய்வத் தமிழை இசைப்போம்

பறவை இனங்கள் காலையிலே
பாடிச் செல்லும் இன்னிசையை
உறங்கும் பெண்ணுக் குணர்த்தியவர்
உவப்பால் கேச வனைப்பாடிப்
பிறவிப் பயனை அடைந்திடவே
பெரிய உலகத் தார்க்கெல்லாம்
சிறக்க உரைத்த ஆண்டாள்தம்
தெய்வத் தமிழை நிதமிசைப்போம்!

# 10. தேவாதி தேவனைச் செப்பு

**மாதே வெளுத்துவரும் வானத்தைக் கண்டெழுவாய்**
**தேவாதி தேவனைச் செப்பிடுவாய் என்றுரைத்துச்**
**சங்கத் தமிழ்மாலை சாற்றியே கோதைசொன்ன**
**செங்கண்மால் பொன்னடியைச் செப்பு**

— *கவியமுதனார்*

*இதில், 'மாதே!' என்று பெண்ணை விளிக்கின்றார். வானம் வெளுத்ததை அறிவித்து அப்பெண்ணைத் தேவாதி தேவனைப் பாட அழைக்கின்றார். அவளை எழுப்ப ஆண்டாள் சங்கத்தமிழ்மாலையாகிய திருப்பாவையைப் பாடி இசைத்தார் என்றார். அவர் அருளிய மங்கலப் பண்ணினை இசைத்துத் தேவாதி தேவனை, நம்மையும் பாடுமாறு தூண்டுகின்றார் கவியமுதனார். இதில் வானம் வெளுத்து வருவதைக் காட்டி, திருப்பாவையின் எட்டாம் பாசுரத்தை அறியத் தெரிவிக்கின்றார்.*

*இப்பாசுரம், எம்பெருமானிடத்தில் அன்பைத் செலுத்தி அவனால் பெருமையுற்ற பெண்ணொருத்தியை அருமையாகப் பேசுகின்றது. கண்ணபெருமான் விரும்பத்தகுந்த பாவை போன்ற பெண்ணே கீழ்வானம் வெளுத்துவிட்டது. நீ துயில் நீங்கி எழுந்திருப்பாயாக.*

*எருமைகளெல்லாம் விரும்பிப் பனிப்புல்லை மேய அவற்றிற்காக அமைக்கப் பெற்ற சிறிய நிலத்தில் புகுந்தன. இவற்றைக் காணமற் இருத்தல் சரியா? பரம்*

பொருளைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள் போல இங்கே வந்துள்ள எங்களையெல்லாம் போகவொட்டாமல் உன் வாசலில் நிற்க வைத்துள்ள காட்சியை அறிவாயாக !

இதனை அறியாமல் துயில் கொள்வது ஏற்புடையதாகுமா? எனவே, எழுந்து வந்து எங்களுடன் எம்பெருமானின் தொண்டில் ஈடுபடுவாயாக! கண்ணபெருமானின் எண்ணிறந்த பண்புகளைப் பாடி, அவன் அருளும் சிறந்த பறையைப் பெற வேண்டாமா ? எழுந்து வருக!

அந்த அருளாளன் யார் தெரியுமா ? குதிரை வடிவம் கொண்டு அதிர்ந்திட வந்த கேசியென்னும் அரக்கனை இருகூறாக்கிப் பிளந்து எறிந்தவன் ; தொல்லை புரிந்த மல்லர்களைப் புல்லெனக் களைந்து ஒழித்தவன் ; அவன் தேவர்களுக்கெல்லாம் தேவன். அத்தகையவனை அன்பால் அணுகி அடிபணிந்தால், அவன் நம் குறைகளைக் களைந்து நிறைவினை அருள்வான்; அவன் விரும்பும் தன் அடியார்பால் இரக்கமுடையவன்; அவனைப் பாட எழுந்து வருவாயாக!'' என்று கூறும் கருத்தையெல்லாம்

''கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய் ! எழுந்திராய்! பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோர் எம்பாவாய் !

என்று ஆண்டாள் இசைக்கின்றார். காலைப் பொழு தென்பதை, உறங்குபவளுக்கு உணர்த்த, அருமையான கருத்தை ஆளுகின்றார். விடியலை விளக்க, விரும்பிச் செல்லும் எருமையினை அருமையாக எடுத்துக் காட்டு கின்றார்.

அவற்றிற்காக வளர்க்கப் பெற்ற புல் நிலத்தை நோக்கி அவை சுவைக்க விரைதலைக் காட்டுகின்றார்; அவளை எழுப்ப, ஆவலால் பாவை நோன்பு நோற்க வந்துள்ள எங்களையெல்லாம் எழுந்து வந்து பார்ப்பா யாக!' என்று பகர்கின்றார். அவனைப் பாடி அவனிடம் பறையைப் பெற்று, அதனால் அவனையே பகிர்விக்க நீ எழுந்து வருவாயாக என்றார். அவன் கேசவன்; தீய வற்றை எண்ணும் புலன்களை நாசம் செய்து நல்லறிவை யூட்டும் மாணிக்கம்போன்றவன். எனவே, அவனைப் பாட எழுவாயாக! என்றார் ஆண்டாள்.

இப்பாசுரத்தின் ஐந்தாம் ஆறாம் அடிகளில் ''கோது கலமுடைய பாவாய்'' என்ற தொடர் ஆளப்பெற்றுள்ளது. இதில் குற்றமில்லாத அணிகலனைப் போன்ற எழில் பெற் றிலங்கும் பெண்ணே' என்று கூறி விளிக்கின்றார். இதனைச் சிலர் ''கோது குலமுடைய'' என்று பாடுதல் காணலாம். இது, 'குற்றமுடைய ஆயர்குலத்தைச் சேர்ந்த பெண்ணே' என்ற கருத்தைத் தெரிவிக்கும். இதைப் பாடியவன் பாட்டைக் கெடுத்தான் என்று சொல்வதற்கு ஒப்பாகும். இப்படி அறியாமல் பாடுவதால் உண்மையான பொருளை நாம் அறியமுடியாமல் போகும். கோவலர் களின் வாழ்வை ஆண்டாள் உயர்வாக மதிப்பவர் ஆதலால், ஓரிடத்தில், இத்திருப்பாவையில்

''குறைவு ஒன்றும் இல்லாத கோவலர்''

என்று ஆயர்களின் உயர்ந்த நிலையினை அறிவிக்கின்றார்.

எனவே, "கோது கலமுடைய பாவாய் என்று பாடுவதே ஆண்டாள் உள்ளத்தை நிறைவு செய்வதாகும்.

"மல்லரை மாட்டிய" என்ற தொடரை இப்பாசுரத்தின் ஆறாம் அடியின் ஈற்றில் அமைத்துள்ளார். இத்தொடர் மொழியில் ஒரு வரலாற்றுக் கருத்தினை எடுத்து விளக்கும் முறையில் பாடியுள்ளார்.

ஒரு நாள் கம்சன் "சாணூரன், முஷ்டிகன்" என்ற மல்லர்களைக் கொண்டு கண்ணபெருமானைக் கொல்ல, சதி செய்ய எண்ணினான். எண்ணியவன் மனம் ஏக்கம் கொண்டிட, அம்மல்லர்களை, பலராமன் துணையுடன் கண்ணன் மண்ணில் சாய்த்தொழித்தான்.

இவ்வரலாற்றை இரு சொற்களால் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் வகையில் தெரிவுபடுத்துகின்றார் சொற்களைச் செட்டாகப் பயன்படுத்திக் கருத்தினைச் சுவைபட உரைப்பதில் ஆண்டாள் கைதேர்ந்தவராவார்

## பாவையில் இலக்கியச் செய்திகள்

சங்க இலக்கியங்களில் ஐங்குறு நூறு ஒரு சிறந்த இலக்கியமாகும். பல்வியமான இவ்விலக்கியத்தின் தொண்ணூற்றைந்தாம் பாடலில், கருமை நிற எருமை கட்டடியிலிருந்து கயிற்றை அறுத்துக் கொண்டு விடியற் காலையில் மேயச் சென்றது என்று

"கருங்கோட் டெருமை கயிறு பரிந்தசைஇ
நெடுங்கதிர் நெல்லினாண் மேயலாரும்"

என ஓரம் போகியார் என்னும் புலவர் புகல்கின்றார். இவர்தம் கருத்து, ஆண்டாள் அம்மையாருக்குப் பெரும் விருப்பத்தைத் தந்திருக்கவேண்டும். எனவே, அருமையான

இக்கருத்தினைத் திருப்பாவையின் எட்டாம் பாசுரத் தொடக்கத்திலேயே வைத்து,

"கீழ்வான வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பறந்தனகாண்"

என்று பாடுகின்றார். விடியற் போதில் ஆயர்கள் எருமைகளைப் பசும்புல் மேய அவிழ்த்து விடுகின்றார்கள் என்று இதில் இயம்புகின்றார். இது குறித்து

இந்த இருபெருமக்களும் கூறிய கருத்தில் சிறிய வேறுபாடு உள்ளது. ஓரம் போகியார் கூறியவற்றில் எருமைமாடு கயிற்றை அறுத்துக் கொண்டு மேயச் சென்றதாகக் கூறப்படுகிறது. ஆண்டாள் கூறியவற்றில் எருமையை அவிழ்த்து விடப்பெற்று மேயச் சென்றதாகப் பேசப்பெறுகின்றது. இந்த வேற்றுமையைத் தவிர வேறேதும் இல்லை. ஆண்டாள் இந்த ஐங்குறு நூற்றை மட்டும் அறிந்தவரன்று, மேலும் தம் கருத்திற்கு வலிமை தேடும் வகையில் நெடுநல் வாடையில் மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரர் பாடிய கருத்தையும் அறிந்து அதை ஏற்க எண்ணுகின்றார் அதை நக்கீரர்.

"ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை இனநிறை வேறுபுலம் பரப்பி"

என்றும், எருதுகளுடன் பசுக்களையும் எருமைகளையுக் ஆடுகளையும் மேட்டு நிலத்தில் ஆயர்கள் மேயவ்டுகின்றார்கள் ; வெள்ளப் பெருக்கேற்பட்டு விட்டதால் ஆயர்கள் இவற்றை மேட்டு நிலத்தில் மேயவிட்டார்கள் "இனம்" என்று ஒரு சொல்லைப் பெய்த நக்கீரர், பசுக்களுடனிருந்த எருமை, ஆடு ஆகியவற்றையும் குறித்துக் காட்டினார்.

"ஏறுடை இனநிறை வேறுபுலம் பரப்பி"

என்று இவர் கூற்றை உவந்தேற்ற ஆண்டாள்,

"எருமை சிறுவீடு மேய்வான் பரந்தன"

என்று பாடுதல், எத்தகைய பொருத்தமுடையதாக இருக்கின்றது என்று, நாம் வியக்காமலிருக்கவியலாது. எக்காலத்தவரும் போற்றுகின்ற வகையில் தம் படைப்பு, சால்புற்று மிளிரவே, சங்கத்துச் சான்றோர்களின் கருத்துகளைத் திரட்டித் தம் திருப்பாவையை அருமைப்பாடுடையதாக அணி செய்கின்றார். எல்லோரும் போற்ற, பல்லாற்றானும் முன்னிலை வகிப்பது முல்லைத் திணையாகும். முல்லைத் திணை என்பது, இல்லற ஒழுக்கத்தினைக் குறிப்பது; பிரிந்து சென்ற தலைவன் வரும்வரையில் தலைவி ஆற்றியிருப்பது; தலைவன் சொற்பிழையாமல் தலைவி தன் நிலையில் குலையாமல் ஆற்றி இருப்பது. இத்திணை, கற்பின் நிலையை அற்புதமாகப் படம் பிடித்துக்காட்டி நிற்பது.

இந்தமுல்லைத் திணை ஒழுக்கத்தை விழுமிய நிலையால் தெரிவிப்பது ஐந்திணை ஐம்பது. இந்நூலில் ஐந்து திணைகள் பேசப் பெறினும், முதன்மையாக வைத்துப் பேசப்பெறுவது முல்லைத்திணையேயாகும்.

இந்நூலாசிரியர் முதலில் கடவுள் வாழ்த்தாகத் திருமாலைப் பெருமையாகப் பாடியபின்னர் முல்லைத் திணையைப் பாடுகின்றார். ஆசிரியர் மாறன் பொறையனார் பாடிய முதற்பாட்டின் முதல் அடியில்

"மல்லற் கடந்தான்"

என்று இயம்பினார். பரப்பொருளான எம்பெருமான்

கொடிய மல்லர்களைப் படிமிசையில் இல்லாமல் அழித்தான் என்று இதில் குறிக்கின்றார். இவர் மெய்யுணர்வு தோன்றப் பாடிய இந்த அடியைக் கோதை எடுத்தாள விழைகின்றார்,

அவர், தாம் பண்ணிசைத்த திருப்பாவை என்னும் இந்தச் செந்தமிழ்ப் பனுவலில், ஆறாம் ஏழாம் அடிகளில்

''மல்லரை மாட்டிய தேவாதி தேவன்''

என்று செம்பொருளான எம்பெருமானின் திறனைப்பாடி மொழிகின்றார். தாழாது வழிவழியாக வாழ்வு அருளும் ஆழிமழைக் கண்ணனை அகம் குளிரப் பாடுகின்றார் ஆண்டாள்.

கேசி என்னும் அரக்கன் குதிரை வடிவம் தாங்கிக் கண்ணபெருமானைத் தாக்க வந்தபோது அக்குதிரையைப் பிடித்து அதன் வாயைப் பிளந்து இருகூறாக்கி எறிந்திட்டக் கண்ணபெருமானின் ஆற்றலை

''மாவாய் பிளந்தான்'' என்று கூறும் ஆண்டாள் அன்னையாரின் கருத்து, கலித்தொகையில் ஒருபாட்டில் 103-ஆம் அடியில்

''மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய் பகுத்திட்டு''

என்று வருகிறது. மேற்குறித்த ஆண்டாள் பாட்டின் தொடர் மொழியைப் படிக்கின்றவர்கள், கலித்தொகையை எடுத்துப் பார்க்கும் போது வியக்காமல் இருக்க இயலாது. இந்தச் செய்தியினை முத்தொள்ளாயிர ஆசிரியரும் மிகச் சிறப்பாக,

''கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்''

எனக் குதிரை வடிவுடன் வந்த அரக்கனை அழித்த கண்ண பெருமான், குடக் கூத்தாடி நப்பின்னை என்னும் நல்லாளை நயந்தான் என்று பேசுகின்றார். இவ்வாறு "மாவாய் பிளந்தானை" என்று போற்றும் கோதை கருத்துக்கு மெருகூட்டும் வகையில் இந்த இரு இலக்கியங் களின் கருத்துகள் பெருமை சேர்க்கின்றன.

வீடுபேற்றை அளிக்க வல்லவன் பேரருளாளக் கண்ண பெருமானே ஆதலால், அவனை உவந்து வழிபட்டு எழிலுற மூன்றாம் பரிபாடலில் 12-ம் 13-ஆம் அடிகளில்

"திருவரை அகலந் தொழுவார்க்கு
உரிதமர் துறக்கம் உரிமை நன்குடைத்தே"

என்ற செய்திகள் கூறப்பெற்றுள்ளன. இவற்றில் "சங்கு சக்கரம் ஏந்தியுள்ள உன் கரங்களையும், திருமார்பினையும் வணங்குபவர்களுக்கு, உனக்கு உரியதான அவ்வைகுந்தம் அவர்களுக்கும் உரியதாகின்றது" என்று கூறப்படுகின்றன. இவற்றை ஆண்டாள் தம் பாசுரத்தின் 7-ஆம் 8-ஆம் அடி களில்

"தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவா வென்று ஆராய்ந்து அருளுவான்"

என்று இசைக்கின்றார். அவனைச் சேவித்துத் தம் ஆவலை உரைப்பவர்க்கு அன்புடன் வந்து அருள் சுரப்பான் என்று கருணாமூர்த்தியின் கனிந்த நிலையை இனிதுரைக் கின்றார். அடியாரின் நிலைக்குக் கடிதில் வந்து அருளும் அவனின் இரக்கத்தினை ஆண்டாள் "ஆவாவென்று" அழகுபடக் கூறுகின்றார். கேட்பவர்க்குத் தட்டின்றி உதவும் அவன் தயாள குணத்தை இப்படி எடுத்துச் செப்பு கின்றார். எம்பெருமானுடைய எழிலார் குணப்பண்பு களை எல்லாம் எப்படி உரைக்க வேண்டுமோ அப்படி

இனிய தமிழ்ச் சொற்களைக் கொண்டு எடுத்துக் கூறுகின்றார். இந்தமன்பதையில் ஆண்டாள் தம் திருப்பாவை ஒப்பின்றி இலங்குவதற்கு, முன்னோர் மொழியை பொன்னேபோல் போற்றி அவர், தன் நம்பிக்கையுடன் நாராயணன் நாமத்தைத் தெம்புடன் இசைத்துப் பாடுகின்றார்.

இயல்பாகவே கோதையார் பாசுரங்களில் சங்க இலக்கியங்களெல்லாம் சார்ந்து நின்று நேர்த்தியைக் காட்டுகின்றன. ஆம் மங்காத தமிழ் அமுதமாக, சங்கத் தமிழ் மாலையாக, திருப்பாவையை நாம் விரும்பிச் சுவைப்பதற்கு அருளிய நல்ல விருந்தாகும். எனவே, இனி வரும் பாசுரங்களில் படிந்துள்ள தமிழின் இனிமையையும் தயாபரனின் சால்பினையும் ஆண்டாள் எவ்வாறு கூறியுள்ளார் என்பதை அறிந்து இன்புறுவோமாக!

**பாவையைப் பாடுவோம்**

தேவாதி தேவனெனும் கண்ணபிரான்
முன்வந்தே சிறப்பைத் தந்து
யாவர்க்கும் காப்பளிக்கும் அருளாளன்
பெருமையினை எடுத்துக் கூறி
ஆவலுடன் போற்றுதற்குத் துயில்பவளை
எழுப்பியவர் ஆண்டாள அன்னை
பாவையினை நமக்களித்தார் பைந்தமிழை
நாம் பாடி பக்தி செய்வோம்!

# 11. மாயவனை வணங்கு

**மாயவனை வைகுந்த வாசவனைப் பாட்டிசைத்துத்**
**தூயமுற யாத்தார் சுடர்மாலை—நேயமுடன்**
**இந்த உலகம் இனிதிலங்க ஆண்டாளே**
**தந்தார் தமிழ்ப்பாவை சாற்று!**

கவியமுதனார்

மாயவனை வைகுந்த வாசவனை ஆண்டாள் உள்ளம் ஒன்றிப் பக்தியினால் வாய்மணக்கப் பாடிச் சங்கத் தமிழ் மாலையான திருப்பாவையை அருளி, இந்த மண்ணுலகம் உய்ய இனிது தந்தார் என்று கவியமுதனார் மேற் குறித்த வெண்பாவால் இயம்புகின்றார். இதில் மாயவன் மாதவன் வைகுந்தவாசவன் திருப்பெயரைக் குறிப்பிட்டுப் பாடப்பெற்றதாய் இலங்கும் திருப்பாவையின் ஒன்பதாம் பாசுரத்தினை நினைக்குமாறு நம்மைத் தூண்டுகின்றார்.

இந்த ஒன்பதாம் பாசுரத்தில் பிராட்டியைப் போன்று சீருடன் திகழும் ஓர் ஆயர்குலப் பெண்ணொருத்தியை எழுப்பப்படுகின்றது.

"தூய மாணிக்கக் கற்களால் அழகுறக் கட்டிய மாளிகையில், நாற்புறமும் ஒளிவிளக்குகள் எரிய, வாசனைப் புகைகள் மணம் வீச, மென்மையான பஞ்சு மெத்தையில் உறங்கும் என் அம்மான் பெற்ற ஆரணங்கே நீ துயிலுதல் விட்டு எழுந்து, மாணிக்கங்களால் செய்யப் பெற்ற கதவினைத் திறப்பாயாக என்று கூறினார்கள்- நோன்பில் ஈடுபட வந்தவர்கள். அவள் எழுந்து

வராமையால், மாமியிடம் "கூறி, மாமீர் அவளை எழுப்புங்கள்" என்றார்கள். மாமி துயில் கொள்ளும பெண்ணுக்குத் தாயாவாள். எனவே, அவளிடம நீங்கள் உங்கள் மகளை எழுப்புங்கள் என்றார்கள். மேலும் மாமியிடத்தில் உன் மகள் ஊமையா? செவிடா? பேருரக்கத்தில் பிரியம் கொண்டவளா?

அந்தப் பெரியப் படுக்கையின் காவலுக்குக் கட்டுப் பட்டுக் கிடப்பவளா? மந்திரத்தால் மயக்கமுற்றுக் கிடக்கின்றாளா? அவளின் நிலை எமக்கு ஏதும் புலனாக வில்லை. எனவே, நாங்கள் மாயவனை, மாதவனை, வைகுந்தவாசவனை, இவ்வாறு பல பெயர்கள் பெற்ற அவனைப் பாடப் போகின்றோம்; அவனின் திறனைப் புகழ்ந்து பேசப் போகின்றோம், இவ்வின்பத்தை அனுபவிக்கப் போகும் எங்களுடன் உன் மகளும் அனுபவிக்க வேண்டாமா?" என்று கூறி அவளால் எழுப்பப்பெற்று, அவளையும் உடன்வர அழைத்துச் செல்கின்றார்கள் என்பதை

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவும் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்!"

என்று பாடித்தெரிவிக்கின்றார் ஆண்டாள்.

மயில் போன்று துயில்கொள்ளும் பெண்ணின் பெரிய இல்லம் தூய்மையுடைய மணிகளால் இழைக்கப்பட்டது.

ஆதலால், அந்த மணியைத் தூ—தூய என்று அடைமொழி கொடுத்துப் பாடுகின்றார். இதனால் பெண்ணின் செல்வ நிலையையும் தூய்மை நிலையையும் வெளிப்படுத்துகின்றார் ஆண்டாள்.

இந்தத் தூமணி மாடத்தை வேதங்களுக்கும், சுற்றி எரியும் விளக்கைச் சாந்திரங்களுக்கும் உவமை கூறுவார்கள் உரையாசிரியர்கள். மேலும், ''தூபம் கமழும்'' என்ற தொடரை இறைவனுக்கு விரும்பிச் செய்யும் பூசையாகவும் கொள்ள வேண்டுமென்று இவர்கள் உரைக்கின்றார்கள்

உறவில் மாமாவுக்கு இணையாக வேறொரு உறவு இல்லையாதலால், இங்கே, ஆண்டாள் இந்த உறவு முறை கொண்டு 'மாமான் மகள்' என்றும் 'மாமீர்' என்றும் பாடுகின்றார். எழுப்புகின்றவர்களின் இனிய சொல்லைக் கேளாமல் இருப்பதற்கு, இவள் எம்பெருமானையே உபாயமாகக் கொண்டு உறங்குகின்றாள் என்று கருதுகின்றார்கள். எப்போதும் அடியார்கள் உறங்கும்போது அருளாளனை எண்ணியே தம்மார்பின் மீது கைவைத்தே உறங்குவார்கள்; இவர்களைப் போன்றே இந்த ஆரணங்கும் உறங்குவதாக உரை வரைந்தவர்கள் இயம்புகின்றார்கள். உய்த்துணர்ந்து தெரிவிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் உரையாசிரியர்கள் ஆதலால், இக்கருத்தின் நுட்பத்தை எடுத்துரைக்கின்றார்கள்.

இப்பாசுரத்தின் ஆறாம் அடியில் மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று எம்பெருமானின் மூன்று திருநாமங்களையும் ஆளுகின்றார் கோதை. 'மாமாயன்' என்றதில் நிராதரவாக உள்ளவர்களை ஆதரிப்பவன் என்பதோடு, எளிய மக்களைத் துன்புறுத்தும் கொடியவர்களையும் அழிப்பவன் என்பதையும் உணர்த்தவே இவ்வாறு

கூறினார். 'மாதவன்' என்றதில் தேவர்களை மட்டும் காப்பவன் அல்லன் அருளாளன்; அடியார்களையும் அரவணைப்பவன் என்பதையும் அறிவிக்கவே இதைக் கூறினார். 'வைகுந்தன்' என்றதில் எல்லா உயிர்களுக்கும் தாயாக வந்து அருள் சொரிபவனே அந்த ஆராவமுதன் என்று, கற்றவரும் மற்றவரும புரிந்து கொள்ளும்வகையில் விளம்பினார் கோதை.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

தூமணியைச் சங்க இலக்கியங்கள் பலபடப் பேசினாலும் ஒன்றை மட்டும் எடுத்துக்காட்ட எண்ணுகின்றேன். சிலப்பதிகாரம் கடலாடுக் காதையில் தொண்ணூறாம் அடியில்

"தூமணி தோள்வளை தோளுக் கணிந்து"

என்று இளங்கோவடிகள் ஆளுகின்றார். மணி என்று மாணிக்கத்தைக் கூறினார். இதற்குத் "தூ" என்று அடைகொடுத்ததால் அந்த மாணிக்கம் தூய்மையுடையதாகவும். மிகுந்த ஒளியைப் பெற்றதாகவும் இருந்திருக்க வேண்டும் ஆதலால் இவ்வாறு பாடினார்.

ஆண்டாளோ 'தூமணிமாடம்" என்றார், இளங்கோவடிகளைப் போன்றே இவரும் பாடுகின்றார். இளங்கோவடிகள் இக்கருந்தை மகளிர் அணிந்திருந்த வளையல்கள் மேல் ஏற்றிக் காண்பிக்கின்றார்; ஆண்டாளோ இதை மாடத்தின் மேல் ஏற்றி விளங்கத் தெரியக் காட்டுகின்றார். இந்தத் தூமணியை,

இருவரும் வேறு வேறு பொருளில் வைத்துச் சிறப்பிக்கின்றனர் என்றாலும், தூமணியின் சிறப்பினை இருவரும் துலங்கக்காட்டக் காணலாம். பெரும்புலவர் நம்பூதனார் தம் முல்லைப்பாட்டில்

''நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல''

என்று பாடுகின்றார், மாவலி மன்னன் எம்பெருமான் கையில் தண்ணீரை ஊற்றியதும் அம்மாயன் மண்ணிற்கும் விண்ணிற்குமாக உயர்ந்தான். அவன் பெரிய கைகளில் சக்கரமும் சங்கும் ஒளியுடன் இலங்கின. இப்படி ஒப்பின்றி அவன் விளங்கியதற்கு, அவன் மார்பில் அலர் மேல் மங்கை உறைந்து விளங்கியதாகும் என்ற கருத்தை ''மாதாங்கு'' என்னும் சொல்லினைப் பெய்து காட்டுகின்றார்.

ஆண்டாள், இதை இந்தப் பாசுரத்தின் ஏழாம் அடியில் 'மாதவன்' என்கின்ற சொல்லில் அடக்கிக்காட்டி நம்பூதனார் மாதாங்கு என்றதின் கருத்தினை விளக்கும் இலக்கியமாகத் திருப்பாவையைத் தீட்டி மாட்சி பெற்றிலங்க அருளிச்செய்தார்.

எம்பெருமானான, மாதவனை மாது+அவன்=என்று பிரித்து மாது என்று உருவகப் படுத்திக் காட்டியுள்ளார்; ''பொய்கை ஆழ்வார்'' எம்பெருமானைப் பார்த்த போது, திருக் கண்டேன் என்றவர், பொன்மேனியைக் கண்டதாகப் பாடுகின்றார். எதனால்? அவன் மார்பகத்தில் பொன்நிறமான திருமகள் உறைவதால், அவன் மேனியில் அந்தத் திருவான பொன்நிறம் வெளிப் பட்டதைக்கண்டே அவர் இவ்வாறு பாடினார். இவரைப் போன்று மாது என்னும் திருமகள் அவன் மார்பில் உறைவதைக் கண்ட ஆண்டாள் மாதவன் என்று அவனைப் பெருமையாகப் பாடிக் காட்டுகின்றார்.

மேற்கூறிய ஆண்டாள் பாசுரத்தின் முதற் சீரில்

'ஏமம்' என்னும் சொல் வந்துள்ளது. இது பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். அவற்றில் ஒன்று காவலைக் குறிப்பதாகும். இக்கருத்தில் தான் 'ஏமம்' என்னும் சொல்லைப் பரிபாடலிலும் ஆளப்பட்டுள்ளது. ஏழாம் பரிபாடலின் நாற்பதாம் அடியில்

"இறுவரை புரையுமாறு இருகரை ஏமத்து"

என்று வைத்துப் பேசப்படுகின்றது. வெள்ளம் புரண்டு ஓடும்போது அந்த வெள்ளம் ஊரை அழிக்காமலிருக்க, பெரிய மலையைப் போன்று இருகரைகள் நின்று காவல் செய்கின்றன என்று மேற்குறித்த தொடர் விளக்குகிறது. மேலும் இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் பதிமூன்றாம் பரிபாடலில் நூற்றுப்பத்தொன்பதாம் அடியில்

"யாம்வீழ்வார் ஏமம் எய்துக! என்மாரும்" என்பதில், விருப்பத்திற்குரிய என் தலைவர் யான் தனிமையில் வருந்துமாறு விட்டுப் பிரிந்து போகாமல் இருப்பாராக! என்று தலைவி தனக்குக் காப்பாக இருக்க தலைவனிடம் முறையீடு செய்கின்றாள்.

இதை, ஆண்டாள் துயில் கொண்டுள்ள பெண்ணைப் பார்த்துக் கேட்டபோது,

"ஏமப் பெருந்துயில் மந்திரப் பாட்டாளோ"
என்று வியப்பு மேலிடக் கூறுகின்றார்.

இதில், கோதை, கட்டிலின்மேலே படுத்துத் தூங்குகின்றவள், இக்கட்டிலைப் பத்திரமாகக் காவல் புரிபவள் போன்று அதிலேயே உறங்குகின்றாள் என்று உள்ளுறையாக உணர்த்துதல் காணலாம்.

தேவர்களுக்கு, பாற்கடலைக் கடைந்து அமுதத்தினைத் தரவேண்டுமென்று கருதுகின்றான் எம்பெருமான்

அப்படி அவன் நினைத்தவுடனேயே, தேவர்கள் முதுமை யடையாத தன்மையும், பெரிய வலிமையும் பெற்றதோடு, இயல்பாகவே இறவாத தன்மையும் பெற்றுவிட்டார் களாம்.

அதனால் அவர்கள், சுற்றமுடன் கலக்கமில்லாத மனத்தோடு சேர்ந்து, எங்கள் தலைகள் நிலத்தில் படும்படி நின்திருவடிகளைத் தாழ்ந்து ஏத்திவாழ்த்தி வணங்குகின்றோம் என்றார்கள்.

இப்படி வணங்கி உன் திருவடியைக் கதியாக எண்ணி வேண்டுவதற்கு, எம் அறிவு இவ்வுலக வாழ்வில் சிக்காமல், மாறுபாடு அடையாமல், துன்புறாமல் வீடு பேறு காண வேண்டும்'' என்று அவர்கள் கூறிய விவரத்தை

''மரபினோய் நின்னடி..........
தலையுற வணங்கினேம் பன்மாண் யாமும்
கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்?
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பாடு அறியற்க எம்அறிவெனவே!

எனப்பாடி இரண்டாம் பரிபாடலில் கீரந்தையார் தெரி விக்கின்றார். எல்லா இன்பங்களையும் அருளும் நின்னடி யைத் தலையுற வணங்கினோம் என்று தேவர்கள் கூறுவ தாகப் பரிபாடல் ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

இந்தக் கருத்தைக் கரும்புச் சுவைபோல் எண்ணிய ஆண்டாள் ''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று

நாமம் பலவும் நவிலுவோம்''

என்று பாடுகின்றார். அவனைப் பாடுவதால் தீதிலா வாழ்வை இவ்வுலகத்தில் காண இயலும் என்றும், அவன்

நினைத்ததாலேயே தேவர்கள் முதுமையற்ற நிலையும் பொலிவுடைய பரமபதவாழ்வும்பெற்றதைப் போல் பெற இயலுமென்றும் கூறி, அவன் பெற்ற திருநாமங்களையெல்லாம் சொல்வோம் என்கின்றார்.

'நின்னடியை வணங்கினோம்' என்ற கிரந்தையார் அவனின் அருமைத்திருவடியைப் பலமுறை 'நெஞ்சினால் ஏத்தினோம் வாழ்த்தினோம்' என்று மனமுருகிப் பாடியதைப் போன்று, ஆண்டாள் வைகுந்தவாசனின் திருநாமங்கள் பலவற்றைப் பலமுறை நவில்வோம் என்று மெய்யுணர்வு கொண்டு, தெரிவித்திருத்தல் போற்றத்தகுந்ததாகும். இருவரும் எம்பெருமானைப் பாடுவதில், ஒருமை உணர்வு பெற்றவர்கள் என்று அறிதல் வேண்டும். காலத்தால் முன்பின் தோன்றியவர்களாக இருந்தாலும் கருத்தை உரைப்பதில் ஒன்றுபட்டு அறிவித்துள்ளார்கள்.

கிரந்தையார் வீடுபேற்றை அளிக்க வல்லவன் நாராயணன் என்று அவன் திருவடிக்குப் பாட்டிசைத்தார். வைகுந்தம் அருளும் வைகுந்தவாசனுக்கு ஆசையுடன் ஆண்டாள் அவன் நாமங்கள் பல சொல்லிப் பாசுரங்கள் இசைத்தார்.

இப்படி அடிக்கரும்பின் சாறாக, படியளந்தானின் பெருமையை, திருப்பாவை என்னும் பொன் கிண்ணத்தில் ஊற்றி மக்கள் தக்கவராய் விளங்கிடத் தந்தார். அப்படித் தந்த அவர் தம் ஒப்பில்லாத் திருப்பாவையை விரும்பிச் சுவைத்துப் பெருமை காண்போமாக!

திருப்பாவையை இசைப்பவர் நெஞ்சத்தில் கருணாமூர்த்தியான கண்ணபிரான் தஞ்சம் புகுவான்; சஞ்சலம் நீக்கிச் சால்பை அருள்வான்.

# 12. புண்ணியனைப் போற்று!

**புண்ணியனைப் போற்றினால் புன்மைக் குணமழியும்**
**எண்ணிய வெல்லாமும் ஏற்படும் — என்றிசைத்தே**
**ஆண்டாள் திருப்பாவை ஆக்கினார் தண்டமிழை**
**யாண்டும் இசைப்போம் இனிது!**

— கவியமுதனார்.

புண்ணியனான இராமபிரானைப் போற்றினால் புன்மைக் குணமழியும்; எண்ணிய செயலெல்லாம் நன்மை பயக்கும் என்று திருப்பாவையை ஆண்டாள் இசைத்தார். எனவே, அந்தச் செந்தமிழை எப்போதும் இசைப்பவர்களுக்குத் தப்பாது பயன் உண்டாகுமென்று கவியமுதனார் கவினுறக் கூறுகின்றார். இதில் புண்ணியனான இராமபிரானைக் கூறி, திருப்பாவையில் வரும் பத்தாம் பாசுரத்தை நினைவுபடுத்துகின்றார்.

இஃது இராமபிரானின் பெருமையைக் கூறினாலும், கண்ணபிரான்பால் ஆராக் காதலுற்ற ஆயர்குலப் பெண்ணான ஆரணங்கு ஒருத்தியை விளித்து எழுப்புவதற்குப் பாடப் பெற்றது. அந்தப் பெண்பாவையை விளித்து, "அம்மையே நோன்பு நோற்ற அந்த நுகர்ச்சியினால் அவனை அனுபவித்துக் கொண்டு தூங்குகின்றாயா?" என்று வெளியில் இருப்பவர்கள் கேட்கின்றார்கள். மேலும் அவளை எழுப்ப முயன்றவர்கள், என்ன நீ வாயிற் கதவைத் திறவாமலும், உன் வாயைத் திறந்து பேசாமலும் இருக்கின்றாயே! என்றார்கள். மீண்டும் அவளிடம், "நறுமணம் வீசும் அழகான துழாய் மாலையை அணிந்து இலங்கும் நாராயண மூர்த்தி, தன் தலையில் மணிகளால்

புனையப் பெற்ற கிரீடத்தைச் சூடிக்கொண்டுகோடி நலம் கொண்டு, மிக்க எழில் பெற்றுத் திகழ்கின்றான். அவனைப் பாடி அவன் தந்த பறையினைக் கொட்டி முழக்குவோம். அவன் அறமே வடிவு கொண்டு திகழ்பவன்; பெருவீரனாக இருந்தும் நெறி பிறழ்ந்த அரக்கனான கும்பகரணனை அன்று கூற்றுவன் வாயில் வீழச்செய்தான் அம்மாவீரன். அந்தப் பெருமானால் வீழ்ந்த கும்பகரணன் பெரும் தூக்கமுடையவன்; அவன் தன் தூக்கத்தை உனக்குத் தந்தானோ? அவனும் தோற்றுப் போகுமாறு செய்யும் அளவில் நீயோ பெருந்தூக்கம் கொண்டுள்ளாயே நன்றாமோ?'' என்கின்றனர்.

''இப்படி உறக்கத்தைப் பெற்றவளான நீ! அழகு வாய்ந்த சிறந்த அணிகலத்திற்கு ஒப்புடையவள் ஆவாய்! உன் ஒளி முகத்தைக் காட்ட, களிப்புடன் தெளிவுற்று இல்லத்தின் கதவைத் திறப்பாயாக'' என்று கூறி அவளை எழுப்பிக் கொண்டு, விழுமிய பாவை நோன்புக்கு ஆவலுடன் செல்லும் காட்சியை வெல்லத் தமிழ் கொண்டு சிறந்த அமுதமான இனிய பாசுரத்தை ஆசையுடன் பாடுகின்றார் ஆண்டாள. அப்பாசுரந்தான்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராய ணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்!

என்பதாகும். இறைவன் அருளைப் பெறுவதற்கு, பேரின்பத்தைத் துய்ப்பதற்கு, ''நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற'

என்ற அடியை அமைத்துப் பாடுகின்றார் ஆண்டாள். இதில் நோன்பின் மாண்பினைக் கூறியுள்ளார்; நோன்பு என்பது எண்ணியக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளச்செய்யும் ஒரு விரதம். இது மனத் தூய்மையை உண்டாக்கி, சிறந்த நெறியில் நிலைப்படுத்த வல்லது. பெரும்பாலும் அருளாளனை அடைய இயற்றுவதே இந்த நோன்பு. 'சுவர்க்கம்' என்றது அவனிடம் சுகத்தை அனுபவிப்பது. இறைவனை அடைதல் சுகம்; அவனைப் பிரிந்து இருப்பது துக்கம்.

'புகுகின்ற' என்னும் சொல் அவனைச் சேர்ந்து பயனை அனுபவிப்பது என்பதாகும் "அம்மன்" என்னும் சொல்லே 'அம்மனாய்!' என்று விளிக்கப் பெற்றது. இது தூங்கும் பெண்ணை எழுப்பி எம்பெருமானின் சுகானுபவத்தை அனுபவிக்க அழைத்ததாகும். எம்பெருமான் தன்னைப் போற்றாதாரை ஏற்க மறுப்பான்; நம்பிக்கையுடன் எண்ணுவோரைத் தெம்புடன வந்து ஏற்பான்.

இத்தகைய இனியவனை, நாற்றத் துழாய் முடியுடைய நாராயணனைப் போற்றுங்கள்; போற்றினால் வந்து அவன் பறை தருவான்; அதனால் அவனைச்சாற்றுங்கள் என்றும் பறையைக் கொட்டிப் பரவுங்கள் என்றும் நோன்பு நோற்கும் தம் அன்புத் தோழியர்களுக்கு அறிவிக்கின்றார் ஆண்டாள்.

இராமபிரானைப் புண்ணியன் என்றவர், அவனின் தனிச் சிறப்புக்குரிய பண்பினை இதனால் வெளிப்படுத்தினார். செய்ய வேண்டிய கடமையினை மறந்து தூங்கும் பெண்ணுக்கு, பேருரககத்தால் பெருமை இழந்த கும்பகரணனை உவமைபடுத்துகின்றார். ஆம் இராவணன் தம்பியான கும்பகரணனின் வரலாற்றை நினைவு கூறுகின்றார். இவன் பத்தாயிரம் ஆண்டுக்காலம் பிரம

தேவனை நோக்கித் தவம் செய்தான். இவனுக்கு அருள் செய்ய விரும்பிச்சென்ற பிரம்மதேவனை அணுகிய தேவர்கள், இவனுச்கு வரம் தந்தால் நமக்கே தீங்காகும் என்றார்கள்.

இவர்கள் வேண்டுகோளை ஏற்ற பிரமதேவன் கலைவாணியிடம், கும்பகரணன் நாவின் நின்று, என் விருப்பத்திற்குரிய மொழியாக வெளிவர வேண்டும் என்று கேட்க, அவளும் கும்பகரணனின் நாவில் நின்றாள். கும்பகரணன் எண்ணிய வரத்தை மறந்து நெடிது தூங்கும் வரத்தைப் பெற்றான் என்ற வரலாற்றைக்கூறி எழுப்பும் பெண்ணிடம் கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ?'' என்று ஆண்டாள் கேட்கின்றார். இவ்வாறு மிகுதியான தூக்கத்தை உடையவளை, ''ஆற்ற அனந்தல்'' என்ற தொடர் மொழியால் படம் பிடித்தார். இதனால் அவளின் மனமும் நோகாதவாறு பேசுகின்றார்.

''அருங்கலம்'' என்றும் சிறப்பித்துப் பெருமை செய்கின்றார். நவரத்தின மாலையின் நடுவே, மாணிக்கக் கல்லைப் பதித்து, ஒளிர வைத்து, எல்லா கற்களைக்காட்டிலும் மாணிக்கமே சிறந்தது என்று சொல்லத் தகுந்தவகையில் எல்லாப் பெண்மக்களைக் காட்டிலும் நீ தலைமை சான்றவள் என்று புகழும் வகையில் தூங்கும் பெண்ணை அருங்கலமே!' எனப் பெருமையாகப் பேசுகின்றார்.

அந்தப் பெண்ணை, ''தேற்றமாய் வந்துதிற'' என்ற தொடரால் அவள் வீட்டின் கதவைத் திறக்க அழைக்கின்றார். 'திகைப்பூண்டை மிதித்தவள் அல்லாடுவதைப் போன்று நீ தூக்கக் கலக்கத்தால் அல்லாடாமல் தெளிவுடன் வந்து கதவைத் திறவாய்' என்று நயப்பட இயம்பிய அவர், தேற்றம் என்னும், சொல்லை ஆண்டார்.

## பாவையில் இலக்கியச் செழிப்பு

பழைய நூலான பைந்தமிழ்ப் பரிபாடலில் நான்காம் பாட்டில் ஐம்பத்தெட்டாம் அடியில் எம்பெருமானின் ஏற்றத்தை இளவெயினனார் உளம்விழைந்து பாடுகின்றார். நாராயணமூர்த்தி நாற்றத்துழாய் மாலையை அணிந்து பொலிந்து மிளிர்கின்றான் என்று இசைக்கின்றார்.

“பெருமானே! பொருள்களை மறைக்கின்ற இருளுக்கு இருப்பிடமான அழகிய நீலமணி போன்றிலங்கும் மேனியிலே பூங்கொத்துகளுடன் கூடியே மணம் வீசும் துளசி மாலையை அணிந்து விளங்குகின்றாய்! நின்னிடத்தில் தோன்றிய அடுக்கடுக்கான இதழ்களைக் கொண்ட தாமரை மலர்களைப் போன்ற இனிய கண்களைப் பெற்றதால், சொல்லொண்ணாச்சிறப்பினைக் கொண்டு நீ திகழ்கின்றாய். உன் அடியார்களுக்கு வீடுபேற்றினை அருள்வதற்கு, பெருமை வாய்ந்த திருவடிகளை அருமையாகப் பெற்றுள்ளாய்.

உன்னிடத்தில் அமைந்துள்ள அருளும் இனியத் தன்மையால் நீயோ மிக உயர்ந்து மிளிர்கின்றாய். இந்த இயல்புகளல்லாமல் மேலும் சிறந்த உயர்வையுடைய இயல்புகளைப் பெற்றுப் பெருமையாகத் திகழ்கின்றாய். இந்த, விந்தைக்குரிய உன் இயல்புகளை ஞானிகளே அறிகின்ற மறை பொருளாகும். அவற்றினைச் சிற்றறிவு உடைய என் போன்றவர்களால் அறிந்து கொள்வது மிக அரிதாகும். நீ காட்டினால் தான், யான்காணவியலும். ஆதலால், ஆவன செய்து அருள்பாலிப்பாயாக! என்று,

“கோளிருள் இருக்கை ஆய்மணி மேனி

நக்கலார் துழாஅய் நாறிணர்க் கண்ணியை !

பொன்னின் தோன்றிய புனைமறு மார்ப!
நின்னின் தோன்றிய நிறைஇதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரி யவை
நின்னின் சிறந்த நின்தாள் இணையவை!
நின்னின் சிறந்த நிறைகட வு ளவை!
அன்னோர் அல்லா வேறும் உள; அவை
நின்னோர் அன்னோர் அந்தணர் அருமறை;

என "நாற்றத் துழாஅய் மாலை அணிந்த, திருமார்பை உடைய நாராயணமூர்த்தியைப்" பரவுகின்றார்.

இவர் மேற்குறித்த பரிபாடலில் இரண்டாம் மூன்றாம் அடியில்,

"நக்கலார் துழாஅய் நாறிணர்க் கண்ணியை!
பொன்னின் தோன்றிய புனைமறு மார்ப!

என்று இயம்பியவற்றைக் கோதைப்பிரட்டி மேலே பாடிய பாசுரத்தின் மூன்றாம் நான்காம் அடியில் அமைத்து,

"நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியன்"

என்று, பாடிக்காட்டுகின்றார். எம்பெருமான் அணிந் திலங்கும் துளசிமாலை மிக வாசனையுடையதாக இருந்த செய்தியினை இளவெயினனார் "நக்கலார் துழாஅய் நாறிணர்க் கண்ணி" என்றார். இதை ஆண்டாள் "நாற்றத் துழாய்முடி" என்று தெரிவிக்கின்றார்.

"நீ பரமபதம் அருளும் கருணாமூர்த்தி, அந்தப் பரம பதத்தை உன் திருவடிகளே தருவன என்பதை

**"நின்னின் சிறந்த நின்தாள் இணையவை**
**நின்னின் சிறந்த நிறைகடவுள் அவை"**

என்று பரிபாடல் ஆசிரியர் பகர்கின்றார். ஆண்டாள் இந்தப் பரமபதத்திற்குப் பறையை உருவகப்படுத்திக் காட்டுகின்றார். இப்படிக் காட்டுபவர்

'போற்றப் பறைதரும் புண்ணியன்' என்றார். அவன் திருவடியே வீட்டுலகம் அருள்வது என்பதைப் "பரமனடி" என்ற அவர் "செம்பொற்கழலடி" என்று சிறப்பித்தும் "பொற்றாமரை அடியென்று" பெருமை செய்தும் பின்னர் அவனின் திருவடியைப் பெற "ஆற்றாது வந்துன் அடிபணியுமா போலப் போற்றியாம் வந்தோம்" என்று குறிப்பிட்டு அவனின் அருமைத் திருவடிகளின் மாட்சியினைப் போற்றினார்.

கண்ணபிரான் விரும்பும் மாலை கவின்மிகுந்த துளபமாலையேயாகும். இது பூவன்று; மரம், செடி, கொடிகளில் பூப்பதுமன்று, ஒருசெடியில் தோன்றும் இலை; இனிய மணமுள்ளது. பச்சை நிறமுடையது. "பச்சைமாமலைபோல் மேனி"யுடைய எம்பெருமான் மார்பில் இனிது விளங்குவது. காயமென்னும் உடம்புக்கு நோய் வந்தால் மருந்தாகத் தாய்போல் நின்று களையவல்லது. உடம்பு நோயினை ஒழிக்கும் துளசியைப் போல, நம் உள்ள நோயைப் போக்குபவன், வள்ளலாகிய கண்ணபிரான் ஆவான். நமக்கு மருந்தான துளசியைத் தான் அவன் விரும்பி அணிந்து எளிய கோலத்தில் சேவை சாதிக்கின்றான். எம்பெருமானே விரும்பித் துளசிமாலையை அணிந்து கொண்டான் என்று பதிமூன்றாம் பரிபாடலில் அறுபதாம் அடியில்

**"எரிநகை இடையிடுபு இழைத்த நறுந்தார்ப்**
**புரிமலர்த் துழாஅய் மேவல் மார்பினாய்"**

என்று நல்லெழிநியார் நவில்கின்றார். இதில் 'நறுந்தார்ப் புரிமலர், துழாஅய்' என்று இவர் கூறுவதைப் போன்று, ஆண்டாள் 'நாற்றத் துழாய்' என்று பேசுகின்றார். வீடுப் பேற்றை அளிப்பவன் துழாஅய் மாலை அணிந்து இலங்கும் நெடுமாலே என்று கூறுகின்றார் இளம் பெருவழுதியார். மற்ற தெய்வங்களால் அந்த நற்பதமான வீடுப் பேற்றை அளிக்க முடியாது என்று பதினைந்தாம் பரிபாடலில் பகர்கின்றார். இந்தக் கருத்தை

''நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்''?

துழாஅய் மாலையை அணிந்தவனால்தான் பிறவாத நிலையை அளிக்க வியலும். பிற தெய்வங்களால் அளிக்க வியலாது என்பதை, 'நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ' என்று பாடுகின்றார். பரமபதம் எளிதாகக் கிட்டவேண்டுமென்றால் திட்டமிட்டு அவன் பதமலரைப் பரவுங்கள் என்றார்,

ஆண்டாள் இந்த அரிய கருத்தின் வழிநின்று, துழாஅய் மாலை அணிந்த ''நாராயணன் நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியன்'' என்று ''பரமபதம் அவனன்றித் தருவோர் வேறு எவருமிலர். ஆகவே, அவனைப் போற்றுங்கள்'' என்று புகல்கின்றார்.

இப்படி ஒவ்வொரு பாசுரங்களையும் செவ்வி நிலை தோன்ற, படிப்போர் நெஞ்சத்தில் பிடிப்பாக நிற்க, ஆண்டாள், மாண்புற நோன்பு நோற்கப் பாடியருளிய திருப்பாவையைத் தித்திக்கும் தேன்பாகாகப் படைத்தார். அதைப் படித்துச் சுவைத்து ஆராவமுதனின் பதமலரைப் பற்றுவோமாக.

# முகில்வண்ணன் பேர் பாடு !

**முகில்வண்ணன் பேர்பாடி முற்றும் உணர்ந்தே**
**அகிலமெலாம் சீர்பெறவே ஆண்டாள்—மகிழ்ந்தினிதே**
**பண்ணார் திருப்பாவைப் பாசுரங்கள் செய்தவர்தம்**
**தண்டமிழைப் போற்றுதலே சால்பு**

— *கவியமுதனார்*

ஆண்டாள் தம் தோழியை விழித்தெழுந்து எம்பெருமான் பக்தியில் சிந்தை செலுத்த வேண்டுகிறார். இந்தத் தோழியை எழுப்புவதன் வாயிலாக அஞ்ஞானமென்னும் இருளில் முடங்கிக் கிடக்கும் மக்களை மெய்ஞானம் என்னும் வெளிப்பாட்டிற்குக் கொண்டுவர எண்ணினார். அறியாமையால் உறங்கும் உலகத்தை இறைவன் திருவருளால் விழிப்படைய பாடிப் பாவை நோன்பை மேற்கொண்டார்.

தாம் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் உலகத்தார் எல்லாரும் அனுபவிக்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடே இந்நோன்பை மேற்கொண்டார். இவ்வாறு மேற்கொண்டது, ஆண்டாள் அன்னையாரின் பொதுமை நோக்கமாகும்.

உயிரனைய தம் தோழி கடமையை உணராமல் உறங்குவதைக் கண்டு, விழித்து எழுந்து, கண்ணபிரானின் பக்தியில் ஈடுபடத் தூண்டுகின்றார். கண்ணபெருமான் இந்த உலகத்திற்கு நலஞ்செய்ய வந்த ஒரே தெய்வமகன்! அவனைத் தம் பக்தியால் வயப்படுத்தி ஆண்ட ஒரே தெய்வமகள் ஆண்டாள்!

நோற்றால் அவனைப் பெறலாமே என்று கூறுவதற்கேற்ப, ஆண்டாள் பாவை நோன்பை நோற்று ஆராவமு,

தனை அடைந்தார். அடைந்தவர் பாடிய பதினோராம் பாசுரத்தில் கருத்தைச் செலுத்துவோம்.

ஆயர்பாடியிலுள்ள கறவைகளாகிய பசுக்கள், இளமை நலம் குன்றாமல் விளங்கின; அவை பெருந்திரளாக உள்ளன. அவற்றைக் கறந்து வழங்கும் கோவலர்கள் பலம் பொருந்தியவர்கள். தமக்கு எதிரிகளாக இருக்கும் பகைவர்களை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று அழிக்கும் வன்மை பெற்றவர்கள்.

இவர்கள் யாருக்கும் எந்தவித தீங்கும் நினையாத மனம் படைத்தவர்கள். இத்தகையவர்களின் குடியில் பிறந்த ஒரு பெண்ணணங்கைத் துயில் உணர்த்தப்படுகின்றது. தூங்குபவளைப்

பொற்கொடி போன்றவளே! என்று வந்தவர்கள் சொல்லி எழுப்புகின்றார்கள். புற்றிலிருந்து வெளிவரும் நாகப்பாம்பு எடுக்கின்ற படத்தைப் போன்ற உறுப்பினைப் பெற்றுள்ளவளே! நீ இன்னும் துயில் கொள்வது சரியில்லை; நீ மிக வனப்புடையவள்; ஆம்; வனத்தில் நின்றாடும் மயிலைப் போன்ற சாயலை உடையவள்; சுற்றமுடைய உற்ற தோழிமார்களும் எற்றைக்கும் உனை மறவாத பற்றுடைய தோழிமார்களும் அணி அணியாகத் திரண்டு, உன் திருமாளிகையின் முற்றத்தில் வந்து சூழ்ந்து நிற்கின்றார்கள்.

முகில்வண்ணனைப் பாட அவர்கள் உன்னை அழைத்துச் செல்ல விழைந்து வந்துள்ளார்கள். ஆகவே நீ எழுந்து எம்மோடு சேர்ந்து வரவேண்டுமென்றார்கள். நாங்கள் கூப்பிடுவது உனக்குக் கேட்கவில்லையா? கேட்டும் வேண்டுமென்றே படுத்துக் கொண்டு இருக்கின்றாய் போலும். நீ இப்படி இருப்பதால் நாங்கள்

செய்ய வேண்டிய பணி தடைப்பட்டுள்ளது. பெறவேண்டிய பயனை நீ பெறாமல் போக நேருகிறது அன்றோ? எனவே, எழுந்து வரும்படி வற்புறுத்திய தோழிமார்களுடன் துயில் கொண்டவள் விழிப்புற்று எழுந்து வந்து கலந்து விடுகின்றாள். அனைவரும் சேர்ந்து கொண்டு நோன்பு நோற்கும் பாவைக் களத்திற்குப் பாடிச் செல்கின்றனர். இதை ஆண்டாள் அன்னையார்,

''கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றரவ் அல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோர் எம்பாவாய்!',

என்று பாடுகின்றார். இப்பாசுரத்தின் தொடக்கத்தில் ''கற்றுக் கறவை''என்றதால், இளமையுடைய பசுக்களைக் குறிப்பிட்டார். இது பண்புத் தொகையாகும். கண்ண பெருமான் வாழும் ஆயர்பாடியிலுள்ள பசுக்களெல்லாம் அவன் திருவருளாலே இளமை நலம் பெற்று விளங்கின; ஆம் பசுக்களெல்லாம் கன்றுகள் போலத் திகழ்ந்தன; என்பதை ஆண்டாள் ''கணங்கள்'' என்றதால் ஆயர்பாடியில் இருந்த பசுக்களை எல்லாம் தனித்தனியே எண்ணிக் காட்ட இயலாமையால் இவ்வாறு குறித்தார் போலும். இக் கணங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாயிருந்ததால் அவற்றைப் பல என்று இரண்டெழுத்துடைய ஒரு சொல்லால் சுட்டினார்.

'செற்றார் திறலழிய' என்று குறித்ததில் ஆயர்பாடியில் வாழ்ந்த ஆயர்களின் பேராற்றலைக் காட்டுகின்றார். கோவலர்களுக்கு யாருமே பகைவர்களாக இல்லை; அப்படியிருக்க ஏன் ஆண்டாள் இத்தொடரை ஆண்டார்?

கண்ணபெருமானின் மேலான தன்மைகளை ஏற்க மனமில்லாதவர்கள் பொறாமை உணர்வால் அவனைப் பகைவனாகக் கருதினார்கள். அப்படி அவனைப்பகைவனாகக் கருதியவர்களையே கோவலர்கள் பகைவர்களாகக் கருதினார்கள். கண்ண பெருமானை யார் பகையாக எண்ணுகின்றார்களோ அந்தவன்னெஞ்சம் உடையவர்களை உடனே வீழ்த்த முனைபவர்கள் கோவலர்கள் ஆதலால், ஆண்டாள் மேற்குறித்த தொடரைக் கையாண்டு அவர்களின் வீரத்தை எடுத்துக் காட்டுகின்றார்,

எம் பெருமானை நேசிக்காத எதிரிகள் எம்பெருமானின் அடியார்களுக்கும், எதிரியேயாவார். இவ்வாறே தன்னடியார்களைப் பகைக்கின்ற எதிரிகள், தனக்கும் பகைவரேயாவார் என்று எம்பெருமான் கருதுவான். எம்பெருமானை எதிரியாகக் கண்ட கம்சனை எம்பெருமானின் அடியாரான பெரியாழ்வார்.

''தீய புந்திக் கஞ்சன் உன்மேற் சினமுடையன்''

என்று சாடிப்பாடுவதைக் காணலாம்; தன் அடியார்களை நலியச் செய்யும் கஞ்சனை, எம்பெருமான் வீழ்த்தியதை,

''சாது சனத்தை நலியுங் கஞ்சனை''

என்று நம்மாழ்வார் பாடுவதால் அறியலாம்.

இவ்வாறு அடியாரும் எம்பெருமானும் பிரிக்கமுடியாத அளவில் பற்றுக் கொண்டிருந்த செய்தியினை ஆண்டாள் கருத்தால் அறியலாம். இராமபிரான், கொடுமையே புரிந்து வந்த அசுர இராவணனை இலங்கைக்கே சென்று

அழித்ததைப்போன்று, இக்கோவலர்களும் பகைவர்களை அவர்கள் இருக்குமிடத்திற்கே சென்று அழித்தொழிப்பவர்கள் என்று கூறுகின்றார்.

"குற்றமொன்றில்லாதவர்கள்" "கோவலர்கள்" என்று ஆயர்களைப் புகழ்ந்தார். ஆயர்கள் தாமே சென்று பகையினைத் தேடிக் கொள்ள மாட்டார்கள். எவரேனும் பகையாக வந்து எதிர்த்தால் அப்போதே அப்பகைவர்களை அழித்துவிடுவார்கள். அன்புடையார் இடத்தில் அவர்கள் என்றும் இன்புற்றிருப்பார்கள். அன்பர்களாயிருப்பவர்களுக்குத் துன்பம் நேர்ந்தால் முனைந்து சென்று அவர்களின் துன்பத்தைத் துடைப்பார்கள்.

இத்தகைய சிறந்த குடியில் விளங்கிய ஒருவனின் வனப்புடைய ஆய்மகளை ஆண்டாள் கோவலர் தம்பொற்கொடியே! என்று விளித்து அழைக்கின்றார். சீதாபிராட்டியார் சனக மகாராசனின் குலத்திற்குப் புகழைத் தேடித் தந்ததைப் போன்று, இவள் கோவலர் தம் குடிக்கே பெருஞ்சிறப்பை ஈட்டித் தருபவள் என்பதால் ஆண்டாள் பொற்கொடி என்று புகழ்ந்தார்.

கொம்புடன் சேர்ந்து படர்ந்தாலன்றிக் கொடி பயனை விளைவிக்காது. இவளும் ஒரு நாயகனான கொம்பைப் பற்றினாலன்றிப் பயனைக் காணாள்; உயிரும் தரியாள் என்பதை "பொற்கொடி" என்னும் தொடரால் மிக அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றார் ஆண்டாள்.

**புற்று அரவு அல்குல்** இத்தொடரை அழகுடைய பெண்ணின் இடைஉறுப்பை எடுத்துக்காட்டவே குறித்தார். ஆடுகின்ற பாம்பின் படத்திற்கு அவள் உறுப்பு

ஒப்பாக உள்ளது என்கின்றார். ஒரு பெண்ணை விருப்ப முடன் வருணிப்பவன் ஆடவனாகவே இருப்பான்; அவன் அவளைப் பாதாதி கேசம் வரையும் புகழ்ந்து பேசுவான். இப்படிப் பேசுபவன் காதல்மீதூர்ந்து இருப்பவனே ஆவான்!

ஆனால், இங்கே ஒரு பெண்ணின் வனப்பை வருணிப் பவர்கள் பெண்களே! துயிலும் பெண்ணை முயன்று எழுப்பும் மற்ற பெண்களே மேற்குறித்த வாசகத்தைக் கூறி வருணிக்கின்றார்கள். இப்படி வருணிக்கின்றவர்கள் தம் நெஞ்சில் ஆண் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். ஆண் தன்மையினைப் பெறவில்லையென்றால் வருணிக்க இயலாது என்பது தேற்றம். எனவே, இத்தொடரால் ஆண் தன்மையின் அருமையையும், பெண் தன்மையின் பெருமையையும் ஆண்டாள் அறிவிக்கின்றார்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறலாம்.

'கண்ணிற் காண்பரேல் ஆடவர்
பெண்மையை அவாவும் தோளினாய்'

என்று கம்பர் கூறுவதில் பெண் ஆண் தன்மை எய்திப் பெண்ணை வருணிப்பதைக் காணலாம்.

"வாராக வாமனனே அரங்க வட்டநேமிவல
வா ராகவா உன்வடிவு கண்டால் மன்மதனும் மட
வாராக ஆதாரஞ்செய்வான்"

என்று திருவரங்கத் தந்தாதி எடுத்துக்கூறுவதால், ஆணும் பெண் தன்மை எய்தி ஆடவனை வருணிப்பதைக் காண லாம்.

**"புனமயிலே"** என்ற தொடரை, உறங்கும் பெண்ணுக்கு உவமைகூறக் கையாண்டார். வனத்தில் நின்று ஆடல்

செய்யும்மயில் தன் தோகையை விரித்து அழகைப்புலப் படுத்துவது போன்று, இவள் தன் கருமையுடைய கூந்தலை விரித்துத் தன் எழிலை வெளிப்படுத்துபவள் என்பதற்கு இவளைப் புனமயிலுக்கு உவமைபடுத்தினார் ஆண்டாள்.

மண்ணின் மேல் படர்ந்து செல்லும் கொடியை இப் பெண்ணின்மேல் ஏற்றிப் பொற்கொடியே! என்று போற் றியவர், இங்கே புனத்தை மயில் சிறப்பித்தல் போன்று பெண்களான எங்கள் வனத்தின்கண் நீ எழுந்து வந்து சிறப்புச் செய்வாயாக! என்று அப்பெண்ணைப் பெருமை செய்கின்றார்.

''**சுற்றத்துத் தோழிமார்**'' என்றதில், இருபொருள் இருத் தலைக் காணலாம், சுற்றத்தாரும் தோழிமாரும் என்று உம்மை தோன்ற ஒரு பொருளும், சுற்றத்தார் ஆகிய தோழிமார் என்று ஆகிய உருபைப் பெய்து மற்றொரு பொருளும் வரப் பாடியுள்ளதை அறியலாம். இங்கே உறங்குகின்றவளைச் சுற்றத்துத் தோழிமார்கள் மட்டும் வந்து எழுப்புகின்றார்கள் என்பதை அறிவிக்கவே, மேற் குறித்த தொடரினை ஆண்டார்.

மயில் முகிலைக் கண்டவுடன் தோகை விரித்தாடுவதைப் போன்று, நீ கண்ணனின் பெயரைக் கேட்டமாத் திரத்திலேயே படுக்கையை விட்டு விரும்பி எழுந்து வந்து பாடாமல் இருத்தல் ஏனோ? என்று கூறியவர்கள், அவளை வற்புறுத்தி அழைத்துச் செல்கின்றார்கள். செம்பொரு ளான எம்பெருமானைப் போற்றி நலம்பெறவே அவளை அழைத்துச் செல்கின்றனர்.

இப்பாசுரத்தில், ஆயர்பாடியாகிய சமுதாயநிலை யையும், அச்சமுதாயத்தில் உள்ளவர்களின் திறனையும் காட்டுகின்றார். ஆயர்கள் தூயவாழ்வினை மேற்கொண்

டவர்கள்; கண்ணபிரான் பக்திக்குப் பாத்திரமாய் இருந்தவர்கள். இத்தகைய பண்புடையார் மனையகத்தே இனிது மகிழ்ந்திருந்த கண்ணபெருமான், ஆயரை மனமார நேசித்தான். அவர்களோடு ஒன்றி வாழ்ந்தான். இதை உணர்ந்த ஆண்டாள் ஆயர்களின் மாட்சியினைத் தெரிவித்தார்.

**பாவையில் இலக்கியச் செய்திகள்**

வேற்றுப் புலங்களில் எருதுகளுடன் சென்று மேயும் பசுக்கள் தரும் சங்கைப்போன்ற வெண்மை நிறப்பாலைக் கோவலர்கள் கறந்து சென்று, அழகுடன் கையில் வளையல்களை அணிந்துள்ள தம் துணைவிமார்கள் எடுத்துவந்த பாத்திரத்தில் சொரிந்து அவர்களை மகிழும்படி செய்தார்கள்; என்ற செய்தியை "மலைபடு கடாம்" என்னும் சங்க இலக்கியத்தில் இரணிய முட்டத்துப்பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

"வேறு புலம்படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோர் உவப்ப தருவனர் சொரிதலிற்
பலம் பெறு நசையொடு".

என்று பாடுகின்றார். இந்தச் செய்தியை உளங்கொண்ட ஆண்டாள்

"கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்"

என்று தம் பாசுரத்தில் எடுத்தாண்டார். இவரைப்போன்றே 'மலைபடுகடாம் ஆசிரியர் பிற உயிரைக்கொன்று உயிர் வாழும் புலி வதியும் காட்டில், தம் பசுக்களை மேயவிட்டு,

காத்து வந்த கோவலர்கள்" மிக வலிமை பெற்றவர்கள். ஆம் அவர்கள் பகையான புலிக்கு எதிரியாக விளங்கித் தம் நிறைகளைக் காத்துவந்த வன்மை பெற்றவர்கள் என்று கோவலர்களின் ஆற்றலைப் புகழ்ந்தார்.

தண்டியலங்காரத்தில் பொருள் பற்றிவரும் ஐந்தாம் பாட்டில் புகழ் உவமையாக

"இறையோன் சடைமுடிமேல் எந்நாளும் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற—தறைபுனல்சூழ்
பூவலயம் தாங்கும் அரவின் படம் போலும்
பாவைநின் அல்குல் பரப்பு"

பாவை பெற்ற உறுப்பின் தன்மைக்கு, சிவபெருமான் மீதுள்ள நாகப்பாம்பின் படத்தை உவமையாகக் கூறப் பட்டது. குறிஞ்சிப்பாட்டில்

"பைவிரி அல்குல் கொய்தழை தைஇ"

என்று வருவதில் கொய்த தழையை ஒரு பெண் தன் உறுப்பை மறைக்கும் ஆடையாகக் கட்டியிருந்தாள் எனத் தெரிவிக்கின்றது. இது தழையை ஆடையாகக்கட்டி யிருந்த அக்காலத்தை நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. தண்டியலங்காரப் பாட்டினையும் குறிஞ்சிப்பாட்டினை யும் நன்கறிந்திருந்த ஆண்டாள்

"புற்றரவு அல்குல் புனமயிலே"

என்று இப்பாசுரத்தின் நான்காம் அடியில் குறித்தார். இப்படி எடுத்து ஆண்டதால்,தம் திருப்பாவையைச் சிறந்த இலக்கியமாகவே படைத்தார். "செற்றார்" என்பதற்குப் பகைவர் என்றும் "செரு" என்பதற்குப் போர் என்றும் பொருள் கூறப்படுகின்றன.

இங்கே..................................செற்றார்

"வெல்கொடி யரண முக்கிய கல்லா யானை
வேந்து பகைவெல்றகே"

என்று ஐங்குறு நூற்றில் 492-ஆம் பாட்டில் யானைப் பகையை அரசன் வெற்றிகண்டதைக் கூறப்படுகின்றது.

"பொருவேம் என்றவர் மதம் தபக் கடந்து
செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்"

என்று முதற்பரிபாடல் விதந்தோதுகின்றது. இதில் நின்னுடைய ஆற்றலை உணராது நின்னோடு போர் புரிந்து வெல்வோம் என்று செருக்குற்று வந்தவருடைய வலிமை அழியும்படியாக, அவர்களோடு எதிர்த்துப்போர் புரிந்து வென்று அதனால் மேம்பட்டு விளங்குகின்ற குற்றமற்ற அண்ணலே என்று எம்பெருமானின் பேராற்றலைக் குறிக்கப்பட்டது.

"செற்றவர் அரசு பெயர்க்குவை"

என்று மதுரைக்காஞ்சி 132-ஆம் அடியில் பகையை அழித்து நலத்தைப் பெருக்கிய அரசரின் ஆற்றலை எடுத்துக்காட்டிப் போற்றப் பெறுகின்றது. பகை அழிந்தாலன்றி நாட்டில் நன்மை காணஇயலாது என்பதற்கு மேற்குறித்த தொடர் மொழி எடுத்துக்காட்டாகும்.

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்"

என்று 569-ஆம் திருக்குறள் கூறுகின்றது. இதில் முன்னமே தக்கவாறு அரண்செய்து கொள்ளாத அரசன், போர்வந்த காலத்தில் தற்காப்பு இல்லாமல் அஞ்சி விரைவில் அழிவான் என்று இயம்பப்படுகின்றது. ஆம் பகை வருவதற்கு முன்பே அரண் செய்யாமல் விட்டால், அரசுவீழும் என்பது திண்ணம். குறுந்தொகையில் 336-ஆம் பாடலில்

''செறுவர்க்கு உவகை ஆகத் தெறு வர
ஈங்ஙனம் வருபவோ''

என்று வருகின்றது. இதில் எம்மைப் பகைக்கின்றவர்க்கு மகிழ்ச்சி உண்டாகுமாறு செய்பவர்களும் இருக்கின்றார்களோ? எவரும் இங்கே இருக்கமாட்டார்கள்! என்று நெய்தல் திணையின் தலைமகன் தன் வீரம் செறிந்த நிலையினைத் தெரிவிக்கின்றான். இவ்வாறு பகைவர்களின் கொடுமையை வீழ்த்திய, சென்று செருச் செய்த வீரர்களின் நிலையை மேற்குறித்தவற்றால் காட்டப்பட்டது. இந்த நிலையை உய்த்துணர்ந்த நம்முடைய கோதை.

'செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்'

என்று கோவலர் தம் குன்றனைய வீரத்தைத் தெரிவிக்கின்றார். அக்கோவலர்கள் குற்றமொன்றில்லாதவர்கள் என்றார். ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் எம்பெருமானோடு பற்றாக இருக்கும் கோவலர்கள் குற்றமற்ற நிலையில் தானே இருப்பார்கள்.

கோவலர் வாழ்வியலைக் குணத்தின் மேன்மையினைக் குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில்

''ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடில்லை''

என்று கூறுகின்றார்.

இதில் பசுவைக் காத்து அதன் பயனை உலகுக்களிக்கும் கோவலர் வாழ்க்கை கொடுமையேயில்லாதது; ஆம் குற்றமற்றது என்றார். இவர் கருத்தை ஏற்றுக் குற்றம் ஒன்றில்லாத கோவலர் என்று கோதை தம் கொஞ்சும் தமிழான

பாவையில் பதித்தார். இவ்வாறு சங்க இலக்கியங்களில் பயின்று வரும் உன்னதக் கருத்துகளையெல்லாம் திரட்டித் திருப்பாவைக்கு ஈடேதும் இல்லாத வகையில் படைத்தார். எந்தவொரு பாவையும் செந்தமிழ்த் திருப்பாவையைப் போன்றில்லை என்று பக்தர்கள் உலகமும் படைப்பாளர் உலகமும் போற்றும் வகையில் அருளிச்செய்தார்.

தம் திருப்பாவையின் மூலம் அருளாளனை அடைய வியலும் என்பதற்குத் தாமே ஓர் எடுத்துக் காட்டாக இருப்பதைக் கூறி, விரும்பிப்பாடிப் பயன் எய்த ஞாலத்தாருக்கு நல்வழி காட்டினார். தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் தமக்கிருந்த ஈடுபாட்டை எல்லாம் திருப்பாவையில் நடையாடச் செய்தார். திருப்பாவையில் அருளாளனைக் காட்டியவர் அவனை அடையவழியும் காட்டியுள்ளார். இலக்கியப் பண்பும் நயமும் தோன்றப்பாடிய அவர் தம் பாசுரத்தை நாம் அனுபவித்து, எம்பெருமானின் இன்பம் பெற்று உய்வோமாக!

### இன்பம் காண்போம் !

இப்புவியில் உள்ளவர்கள் துன்பமின்றி
இலங்குதற்குக் கோதையன்னை திருப்பாவையை
ஒப்பின்றித் தாமிசைத்தார் அவன்சிறப்பை
உளமுவந்து தெரிவித்தார் பாவைப் பாட்டைத்
தப்பாமல் இசைப்பவர்கள் கண்ணனாலே
சால்புற்று மிளிர்ந்திடுவார் அருள்உணர்வில்
எப்போதும் இலங்கிடுவார் என்றவர்தம்
எழிலனைய பாதையிலே இன்பம் காண்போம்!

# 14. மனத்துக்கு இனியவனைப் பாடு!

**அன்பன் இராமனையே ஆர்வமுடன் பாடுதற்குக்**
**கன்னியரைக் கண்விழிக்கச் செய்தவரே — இன்பமுடன்**
**தண்டமிழால் பாவையினைத் தாமிசைத்த ஆண்டாளை**
**எண்ணிநிதம் பாடியே ஏத்து !**

— கவியமுதனார்

ஆண்டாள் அன்னையார் இப்பன்னிரண்டாம் பாசுரத்தில் தசரத மைந்தனான சாந்தமூர்த்தியாம் இராம பிரானைப் பெருமையாகப் பாடுகின்றார். அன்பால் பிறரைக்கவர்ந்து ஆதரவுகாட்டி உதவும் மக்களைப் பெற்ற ஆயர்பாடியின் வளத்தினை எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

களங்கமின்றி உளம் நிறைவோடு கனிவுடன் தெளிந்த அறிவுடையாரைக் கொண்டிலங்கும் ஆயர்பாடியில் இளமை நலம் குன்றாமல் இருக்கும் எருமைகளெல்லாம் பால்கறப்பவர்கள் இல்லாத காரணத்தால், கத்திக் கொண்டும், தம் கன்றுகளின்மீது இரக்கம் கொண்டும் இருந்தன. அவை கன்றுகள் ஊட்டுவதாக எண்ணி, முலை வழியாகப் பாலைச் சொரிந்ததால் அப்பால் வீணே தரையில் பெருகியோடுகின்றது. இப்பெருக்கால், வீடும் சுற்றுப்புறமும் ஈரமாகியும் நனைந்து சேறாகியும் விடுகின்றன. இத்தகைய பால் வளத்தை நல்கும் எருமைச் செல்வத்தைப் பெற்று ஆயர்பாடியில் ஒருவன் சிறந்து வாழ்கின்றான். இந்தச் செல்வத்தைப் பெற்ற அந்த நல்லவனின் தங்கை கடமையை மறந்து உறங்குகின்றாள். நோன்புநோற்றுப் பயன் காண எண்ணிய பெண் மக்கள் பலர், உறங்கும்

பெண்ணிடம் நோன்பைப் பற்றிக் கூறி எழுப்புகின்றார்கள். எழுப்பும் போது அவளை நற்செல்வன் தங்காய் என்று விளித்து எழுப்புகின்றார்கள்.

மேலும் அவர்கள் எங்கள் தலைகளை நனைத்துவிடும் அளவில், பனி பெய்கின்றது. அப்பனியில் உனது திருமாளிகையின் வாசலில் வந்துநின்று துன்பப்படுகின்றோம். சீதாப்பிராட்டியைப் பிரித்த, கொடியவனான இராவணனைக் கொன்றவனும் முனிவர்களுக்கு இனியவனுமான இராமபிரானை நாங்கள் பாடப் போகின்றோம். நீயும் எம்மோடு சேர்ந்து பாடவேண்டும் என்ற அவாவினால் இங்கு வந்துள்ளோம். நீ எழுந்து வருவாயாக! என்று எழுப்புகின்றார்கள்.

இவ்வாறு அன்புடன் எழுப்பும் எங்களுக்கு நீ மகிழ்வை உண்டாக்கும் வகையில் பேசாமலிருத்தல் ஏனோ? நாங்கள் பெறப் போகும் நன்மையை நீயும் அனுபவிக்கவே எழுப்புகின்றோம். நீயோ! இதை உணர்ந்து எழுந்து வாராமலிருக்கின்றாய்! வாய் திறந்து பேசாமலிருக்கின்றாய்! இவ்வாறு உன் கடமையை மறந்து உறங்குவது சரியில்லை. இப்போது பயனை அனுபவிக்க வேண்டிய நீ! உறக்கத்தால் இழக்க வேண்டியுள்ளது.

நாங்கள் உன் வீட்டின் வாசலில் வந்து நின்று உன்னை எழுப்புவதைப் போவோரும் வருவோரும் பார்த்துக் கொண்டே செல்கின்றார்கள். இஃது உனக்குத் தெரியவில்லைபோலும். எனவே, மனத்துக்கு இனியவனான இராமபிரானைப் பாடிப் போற்றுவதற்காக நாங்களெல்லோரும் செல்கின்றோம்; நீயும் உடன்வந்து எங்களுடன் சேர்ந்து அனுபவிக்க வேண்டுமென்று இவளை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு நோற்கும் களத்திற்குச் செல்கின்றார்கள். இங்கே உறங்கும் பெண்ணை நினைவுபடுத்தி

இவளைப் போன்று, செய்ய வேண்டிய காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றாமல், கடமையை மறந்து சோம்பலில் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பிச் செயலில் ஈடுபடுத்தவே ஆண்டாள் திருப்பாவையைப் பாடினார் என்று சொன்னால் இதை யாவரும் உடன்பட்டு ஏற்றுக் கொள்வார்கள். நற்செயலைச் செய்யவருமாறு உறங்கும் பெண்ணிடம் உணர்த்தும் வகையில் பாடப்பெற்ற அந்த இனியபாசுரம்தான்,

*"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி*
*நினைத்து முலைவழியே நின்றுபால் சோர*
*நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்*
*பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றி*
*சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
*மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்*
*இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்*
*அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்!"*

என்பதாகும். இப்பாசுரத்தில் ஒரு இனிய செய்தியினை ஆண்டாள் வெளிப்படையாகச் சொல்லாமல் உள்ளுறையாகச் சொல்கின்றார். இலக்குமணன் அயோத்தி என்கின்ற நாட்டில் இருந்தபோதும், ஆரண்யம் என்கின்ற காட்டில் இருந்த போதும், இராமபிரானையே இடையறாமல் பின் தொடர்ந்ததைப் போன்று, ஆயர்பாடியில் உள்ள கோவலர்கள் வேறெவரையும் எண்ணிப் பார்க்காமல் கண்ணபிரானையே பின்தொடர்ந்தார்கள். ஆம் எல்லாம் கண்ணனே என்று அனவிரதமும் அவனை இடையறாமல் பின்பற்றினார்கள். இந்நிலையில் எப்போதும் தப்பாமல பின்பற்றிய ஓர் ஆய்மகனின் தங்கையைத்தான் இதில்

உணர்த்துகின்றார் ஆண்டாள். உறங்கும் இந்தப் பெண்ணை எழுப்புவதற்கு நெடுநேரமாக அனைவரும் அவளின் வாயலில் நின்றபடி எழுந்து வருமாறு உணர்த்துகின்றார்கள்.

மறந்து உறங்கும் அந்தப் பெண்ணிடம் கொடிய இராவணனைப் படிமிசையில் துடித்து வீழ மடியச் செய்தவன் இராமபிரான்; அந்தக் கொடிய இராவணன் பிறனில் விழைந்த கயவன்; இத்தகைய இழிந்த செய்கையை உடையவன்மேல் சினங்கொண்ட செம்மல் இராமபிரான், அவ்வரக்கனையும் அவன் அரசையும் "செற்றான்" என்று ஆண்டாள் அன்னையார் அறிவித்தார். மேலும் இராமபிரானை மனத்துக்கு இனியவன் என்று கூறி அவனைப் பாட எழுந்து வருமாறும் அழைக்கின்றார் கோதை.

மனத்திற்கு இனியவனைப் பாடுதற்கு நீ எழுந்து வாராமல் இருப்பது சரியா? அவனை நாங்கள் பாடுகின்றோம் பாடிக் கொண்டே இருக்கின்றோம். இந்த ஒலியைக் கேட்டு வாராமலும், வாய் திறவாமலும் இருத்தல் எதனால்? பேருரக்கம் உன் சீர்த்தியினைச் சிதைத்து விடும். உறங்கியே காலத்தை வீணடித்தவர்கள் பின்னர் பட்ட துயரை நீ அறியாய்போலும்! என்று வீண் உறக்கத்தில் கிடக்கும் ஆரணங்கை எழுப்பி எம்பெருமானின் பக்தியில் ஈடுபடுத்தி, அந்தப் பரம்பொருளால் பெற வேண்டிய பயனை எய்தி நிற்க, இந்தப் பாசுரத்தில் வழி வகுத்துக் காட்டுகின்றார். இதில் முதல் இரண்டரை அடி வரையில் உறங்குகின்ற ஆய்மகளின் தமயனின் செல்வச் சிறப்பினைப் பற்றிச் சிறப்பாகப் பேசப்பெற்றுள்ளது.

இவளின் தமயன் கண்ண பெருமான் மீது அளப்பரிய பக்தி கொண்டிருந்ததால், தன் கறவைகளான எருமைகளைக்கறக்காமல் மறந்துவிடுகின்றான். கறக்கப்படாமல்

விட்ட எருமைகளின் முலைக் காம்புகள் கடுத்தன வால், தம் கன்றுகள் வந்து ஊட்டுவதாகக் கருதி அவை பாலைச் சொரியத் தலைப்பட்டன. இந்நிலையால் வீடு முழுவதும் பால் பெருக்கெடுத்தோடிச் சேறாகியது. இந்த எருமைகள்மூலம் கிட்டப் பெற்ற பால் மடையால் அவன் பெருமை வாய்ந்த செல்வனாகத் திகழ்ந்ததை அருமையாக எடுத்துக் காட்டுகின்றார் கோதை.

இங்கே ''கனைத்தல்'' என்னும் சொல்லை அழைததல் என்னும் பொருளில் கையாளுகின்றார் கோதை. ஆம் வள்ளண்மையுடையவர்கள் இல்லாதவர்களை அழைததுத் தருதல் போன்று, இந்த எருமைகள் கனைப்பதால் அழைத்துப் பாலைத் தருவன என்றார் ஆணடாள்.

**''நின்று பால் சோர''** என்ற தொடரில் வானத்தினின்று மழை பொழிதல் போன்றும, இந்த எருமைகளின் மடியிலி ருந்து பால் சோர வெளிப்படுகின்றது. வானம் மழையைப் பொழிய வேண்டுமென்றால், கடலின் நீரை முகந்து கொண்டு வந்த பின்னர்தான் பொழிய இயலும். ஆனால் இந்தக் கறவை ஆகிய எறுமைகள் நினைத்த மாத்திரத் திலேயே அருவி போன்று பொழியும் எனறு ஆயர்பாடி யின் எருமைகளின் பெருமையைக் கூறுகின்றார்.

**''நற்செல்வன்''** என்று கூறியதில் எல்லா செல்வங்களும் அழியும தன்மையன, ஆனால், அழியாத செல்வம் எம் பெருமானே! என்பதை உணர்ந்த ஓர் ஆய்மகன் கண்ண பிரானாகிய செல்வத்தைப்போற்றிச் சிறந்ததால், அவனை மேற்குறித்த தொடரால் சிறப்பிக்கின்றார் கோதை.

பிறனில் விழைந்தவன், தான் அழிந்ததோடு தனக் காகத் துணை நின்றவர்களும் அழிந்தார்கள் என்பதற்கு இராவணன் ஓர் எடுத்துக் காட்டு. கற்புக்கடம் பூண்ட சீதாப்பிராட்டியை நயந்த இராவணனும் அவனுக்குத்

துணை நின்ற கும்பகருணன், மாரிசன், இந்திரசித்தன் முதலானோரும் இராமபிரானால் மாண்டார்கள் என்ற விவரத்தைத்

"தென்னிலங்கைக் கோமானைச் செற்றான்"

என்ற தொடர் மொழியால் குறித்துள்ளதையறியலாம்.

**"மனத்துக்கினியானைப் பாடு"**

என்றது இராவணன் தன் படைப்பலங்கள் அனைத்தும் இழந்து தனியாய் நின்ற போது, அவனைப் பார்த்து இரககப்பட்ட இராமபிரான் "இன்று போய் நாளை வா" என்று கருணையுடன் அனுப்பிய இரக்கச் செயலை, பகைவனுக்கும் இரங்கி விடுகின்ற நிலையை மேற்குறித்த தொடர் மொழியால் தெளிவு படுத்துகின்றார் கோதை. கொடியவனானாலும் தனியனாகி, நிராயுத பாணியாக நின்ற இராவணனைக் கண்டு இரங்கி, அவன் திருந்துவதற்கு வாய்ப்பினை அருளி, அனுப்பிய நிலையை வேறு எந்தக் காவியத்திலும் காணவியலாது; எந்தக் காப்பியத் தலைவனும் இவ்வாறு கூறியதாகச் செய்தியில்லை. அந்த அளவில் இந்தப்புவியின் கண் சிறந்த இராமபிரானை ஆண்டாள் அன்னையார் "மனத்துக்கினியான்" என்று கூறி மனத்தில் வைத்துப் பூசிக்கப்படுவதற்கு உரியவன் ஆதலால் அவனைப் பாடச் செல்லுகின்றோம் என்று கூறி, உறங்கும் பெண்ணை விழித்தெழ உணர்த்துகின்றார். இதை

"இனித்தான் எழுந்திராய்" என்று விளித்து அவளை இனியேனும் எழுந்து வருவாயாக என்று விளம்புகின்றார். "மனத்துக்கினியவனான" அவனைப் பாடுவதே நம் மனத்திற்கும் வாழ்விற்கும் நிம்மதியும் இன்பமும் ஏற்படும் என்றார். இந்த நிம்மதியையும் இன்பத்தையும் பெறாமல் "பேருரக்கம்" கொண்டுள்ளாயே இஃது உனக்குச் சுகத்தை

அருளுமா? இறைவனாகிய எம்பெருமானே நிறைவான சுகத்தை அருள்பவன் எனக் கோதை "ஈதென்ன பேருரக்கம்" என்று மறந்து உறங்கும் மடமயிலிடம் இனிது உரைக்கின்றார். உறக்கத்தினை இருவகையாக இயம்புவர் சான்றோர்.

ஒன்று உலகியல் தொடர்புடையது; இதை வடமொழியாளர் லௌகீகம் என்பர். மற்றொன்று அருளியல் தொடர்புடையது; இதை வைதீகம் என்பர். இந்த மண்ணக மாந்தர் உறங்குவதே உலகியல் தொடர்புடையதாகும்; அனைத்துலகங்களையும் காக்கும் எம்பெருமான் போல் யோக நித்திரை செய்யும் ஞானியர் உறக்கமே அருளியல் தொடர்புடையதாகும், இந்த இருவர்தம் உறக்கங்களையும் மேற்கொள்ளாமல் நீ என்ன உறக்கம் கொண்டுள்ளாய்? என்று உறங்கும் பெண்ணிடம் கேட்பதாக ஈதென்ன பேருரக்கம்" என்று பாடி வினவுகின்றார்.

"**அனைத்தில்லத்தாரும் அறிந்து**" என்ற தொடருக்கு இருவகையான பொருள் உண்டாகக் கோதை பாடியிருக்கின்றார். உறங்குகின்றவள், தன்னை நாடி ஆயர்பாடியில் உள்ள இளநங்கையர்கள் வந்து எழுப்பிய பின்னரே எழலாம் என்று ஒரு கருத்தாயும், தன்னுடைய செல்வச் செருக்கால் அனைவரும் தன்னைத் தேடி வரவேண்டும், அப்படி வருபவர்கள் வற்புறுத்தி எழுப்பும்போது தன் பெருமையையும் மதிப்பையையும் வெளிப்படக்காட்டும் வகையில் எழலாம் என்று எண்ணி இருந்தது மற்றொரு கருத்தாயும் வெளிப்படும்வகையில் மேற்குறித்த தொடரில் ஆண்டாள் ஆண்டுள்ளதைக் காணலாம். இங்கே இரண்டாவதாகக் குறித்த கருத்துப்படியே உறங்கியிருந்தவள் செருக்குற்றிருந்தாள் என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

இந்தப் பாசுரத்தில் பரம்பொருளின் பக்தியில் சிந்தையைச் செலுத்தி, அந்தப் பற்றில் ஆழங்கால் பட்டிருந்த அன்பர்களின் நிலையினை இன்புறத் தெரிவிக்கின்றார். உறங்குபவளை எழுப்ப வந்தவர்கள் கொண்டிருந்த உறுதியான இறைமைப்பற்றையும், இவர்களுடன் உறங்கியவள் மறுக்காமல் எழுந்து வந்து அவர்களுடன் சேர்ந்து பரம்பொருளை அனுபவிக்கின்ற இனிய பக்தியையும் பாங்குறத் தெரிவித்தல் காணலாம்.

**பாவையில் இலக்கியச் செய்திகள்**

நாவீறு கொண்டு பாவையைப் பாடியருளிய கோதை ஆவலுடன் மற்றவர்களும் தம் பக்தியுடன் பாடிக் கோவிந்தனின் சேவடியைப் பற்றி உய்ய சிறப்புடன் படைத்தார். இந்தத் திருப்பாவையைப் பாடுவோர் நெஞ்சம் பரவசமெய்த செந்தமிழ் இலக்கியச் செய்திகளை யெல்லாம் திரட்டி இதன்கண் பெய்து எழிலுறத் தந்துள்ளார்.

முல்லைப்பாட்டில் ஒரு கன்று தாயின் முலையை உண்ண வகையின்றி அல்லல் படுகின்றது. தூணில் கட்டப்பட்ட அக்கன்று தாயுக்காக ஏங்கி அத்தூணைச் சுற்றிச் சுற்றி வருகின்றது.

அக்கன்றின் துன்பியலைக் கண்ட ஆய்மகள் நீ துயரப்படாதே! துரிதமாகத் தேடிக்கொண்டு உன் தாய் ஓடி வருவாள்; உன் பசி தீர அமுதப்பாலை உனக்குத் தருவாள்; என்று கன்றினிடம் இன்மொழி கூறுகின்றாள். இச்செய்தியை

"கொடுங்கோல் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்"?

என்று கூறப்படுகின்றது இதில் கோலைக் கையில்

கொண்டே கோவலர்கள் பின்னின்று ஓட்டிவர உன்தாய் முன்னதாக உன்னை நாடி இப்போதே வந்து விடுவாள் வருந்தாதே என்றாள் எனப்பேசப்படுகின்றது. கம்ப நாட்டாழ்வார் நாட்டுப் படலம் 27 ஆம் பாடலில்,

"சேலுண்ட வொண்கண் ணாரிற்
 றிரிகின்ற செங்கால் அன்ன
மாலுண்ட நளினப் பள்ளி
 வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதிக்
 கன்றுள்ளிக் கனைப்ப சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
 தேரைதா லாட்டுப் பண்ணை."

என்று பாடுகின்றார். இதில் மீன்களைப் போன்ற கண்களை உடைய பெண்டிர் வயல்களில் வேலை செய்து விட்டு அழகாக நடந்து வருவதைப் போல, நடந்து வரும் அன்னப்பறவை, தன் குஞ்சுகளைத் தாமரை மலராகிய படுக்கையில் விட்டு விட்டுச் செல்கின்றது. அந்த அன்னத்தின் குஞ்சுகளுக்கு, அங்கு வந்த எருமைகள் தன் கன்றுகளை நினைந்து கனைத்ததால் முலைக் காம்புகளிலிருந்து வெளிப்படும் பால், உணவாகின்றது. இவற்றின் பாலை உண்ட அக்குஞ்சுகளை, தவளைகள் தாலாட்டுப் பாடி உறங்கவைக்கின்றன என்று கற்பனை நயம் தோன்றப் பாடித் தம் திறனைக் காட்டுகின்றார் கம்பர். இதில் முக்கியச் செய்தி யாதெனில், எருமைகளின் முலைக் காம்புகள் கடுப்புற்றுத் தம் கன்றுகளை நினைந்து கனைத்துப் பாலைச் சொரிந்த நிலையை அறிதல் வேண்டும்; இக் கருத்தையே மேலும் அவர் இன்னொரு பாடலில்,

"ஈரநீர் படிந்து இந்நிலத் தேசில
கார்களென்ன வருங்கரு மேதிகள்
ஊரினின்ற கன்றுள்ளி மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே!"

எனப்பாடுகின்றார். எருமைகள் குளிர்ந்த குளத்து நீரில் மூழ்கி எழுகின்றன. இக்காட்சி வானத்தில் சில மேகத் துண்டுகள் சஞ்சரிப்பன போல உள்ளன. வயல் வெளிகளில் மேயும் இந்த எருமைகள் தம் கன்றுகளை நினைப்பதால்மடியில் சுரப்பெடுத்துப் பெருகத் தொடங்கிய பாலைச்சொரிதலால், செந்நெல் பயிர்கள் செழிப்புற்று வளர்கின்றன என்கின்றார். இவர் முதலில் பாடியதில் எருமைகள் கன்றை நினைந்து சொரிந்த பால் அன்னத்தின் குஞ்சுகளுக்கு உணவாயிற்று என்றும் அடுத்துப் பாடியதில் எருமைகள் சொரிந்த பாலால் நெற்பயிர்கள் செழிப்புற்று வளர்ந்தன என்றும் தெரிவிக்கின்றார். இது குறித்து நம் ஆண்டாள் அன்னையாரோ !

"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும்"

என்று பாவையில் பாடித் தெரிவிக்கின்றார். எருமைகள் மடியில் தேக்கிவைத்திருக்கும் பாலைக் கறப்பவர்கள் இல்லாததால் தம்கன்றுகளை எண்ணியவுடன் சொரிந்து விடுகின்றன என்கின்றார். இக்கருத்தால் கன்றுகளின் மேல் அளப்பரிய பரிவு கொண்டிருந்த எருமைகள் அந் நினைவால் பாலைப் பொழிந்து விடுகின்றன எனத் தெரியலாம்.

முல்லைப்பாட்டின் கருத்தை விளக்கும் இலக்கியமாகக் கோதைப்பிராட்டியாரின் பாசுர அடிகள் அமைந்தும்

கோதையார் தம் பாசுர அடிகளை விளக்கும் இலக்கிய மாகக கம்பநாட்டாழ்வார் பாடல்கள் அமைந்தும் நமக்கு இன்பம் ஊட்டுவனவாக உள்ளன,

குறுந்தொகையில் 334 ஆம்பாடலில்

"நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைப் பனிக்கடும் திங்கள்"

என்ற அடிகள் பயின்று வந்துள்ளன. இவற்றில் மார்கழித் திங்களில் தோன்றும் பனியினை எடுத்துக் காட்டப்படு கின்றது. "நோற்றார்" என்னும் சொல் நோன்பு நோற் பதைக்குறிக்கும் சொல்லாகும். இது திருப்பாவையில் வரும் நோற்றுச் சுவர்க்கம் என்னும் சொற்றொடரை ஒத்துள்ளது. மேலும் பன்னிரண்டாம் பாசுரத்தின் நான்காம் அடியில்

"பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி"

என்ற தொடர் மொழி, மேற்குறித்த குறுந்தொகையில் காட்டப்பட்ட.........'தண்ணெனத்

"தூற்றும் துவலைப் பனிக்கடும் திங்கள்"

என்ற அடிகளின் கருத்தினை ஒத்திருத்தலையறியலாம். மார்கழித் திங்களில் மழைத் தூறலைப் போலப் பனி பெய்கின்றது என்ற செய்தியினைக் குறுந்தொகையும் திருப்பாவையும் கருத்தில் மாறாமல் தெரிவிப்பதைக் காணலாம்.

கோதையார் இராமபிரானின் பெருமையையும் பொறுமையையும் அறிந்தவர். எச்செயலிலும் தவறாகச் செல்பவன் அல்லன் ராமன். மறநெறி வளர்க்கின்ற தீயரைக் கூட அறநெறியில் நிற்க திருத்திப் பணி கொள்ளும் திறனுடையவன் என்பதை உறங்கும் பெண் ணணங்கிடம், அன்பாக எழுப்பும் போது

"சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடுதற்கு" எழுந்து வா!

என்று அழைக்கின்றார், இராமபிரானை "மனத்துக் கினியான்" என்று ஏன் உரைத்தார் என்பதற்கு விளக்கம் தரும் வகையில் கம்பநாட்டாழ்வார்

"ஆளையா உனக்கு அமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

என்று பாடுகின்றார். இதில், அரக்கர் குலத்தை ஆளும் இராவணனே! உனக்குத் துணையாக வந்து போர் செய்தவர்களெல்லாம், வெற்றியைத் தேடித்தருவோம் என்று வீரம் காட்டிப் பேசியவர்களெல்லாம் பூளைப்பூண்டு காற்றில் மோதப்பட்டுப் பறந்து சென்றதைப்போல் பறந்து மறைந்து போனார்கள் என்பதைப் பார்த்தாயல்லவா? இப்போது எந்தவிதத் துணையுமில்லாமல் ஆயுதமுமில்லாமல் என்முன் வெறும் ஆளாக நிற்கின்றாய்; எனவே, இன்று நீ போய் நாளை போருக்குவா என்று கூறி நாளை படைப்பலத்தோடு வருமாறு இரக்க நெஞ்சத்தோடு தன்னை எதிர்த்த அரக்கனையும் அனுப்பிவைக்கின்றான். அந்தக் கருணை வள்ளல் யார் தெரியுமா? அவன் தான் கமுகு மரத்தில் உள்ள குலைகளின் மீது துள்ளிப் பாயுகின்ற வாளை மீன்களைக்கொண்ட நதி களையுடைய நீர்வள மிகுந்தகோசலை நாட்டின் வள்ளல் ஆவான் என்று, கூறிய கம்பர், கோதை மொழிந்த "மனத்துக்கினியான்" என்ற தொடர் மொழிக்கு விளக்கம் கொடுத்துப் பாடுகின்றார் என்று சொன்னால் அது மிகையாகாது. மேலும் கோதை மொழிக்கு ஏற்றம் ஏற்படும் வகையில் கம்பர் பெருமான்

"ஆரா வமுதனாய் அலைகடலில் கண் வளரும்
நாரா யணன் என்றிருப்பேன் இராமனை நான்"

என்று இராமபிரானைக் கிடைத்தற்கரிய அமுதத்தை அருளியவனாக, இல்லை அவனே அந்த இனிய அமுதமாக, அலைகடலின் மேல் கிடக்கும் நாராயண மூர்த்தியை போற்றி, இராவணனின் மனைவி மண்டோதரியே தன் வாயால் புகழுமாறு கம்பர் கவிதையைச் சுவைபடயாத் தளித்தார்.

தன் நாயகனைக் கொன்றழித்தவன் இராமன் என்று தெரிந்தும், அவனைப் பேரருளாளப் பெருந்தெய்வமாகப் பேசிய மண்டோதரி அவனின் அறத்தின் மாட்சியை உண்மையாகவே அறிந்திருந்ததாலே இவ்வாறு போற்றினாள் என்பதை உணர்தல் சிறப்பு.

இத்தகைய சீர்த்தியால் பேர்கொண்டு விளங்கிய இராமனைக் கோதையார் "மனத்துக்கினியான்" என்று கூறியதில் அவனைப்பற்றி நன்கு தெளிந்து தேர்ச்சியுற்ற காரணத்தாலே இவ்வாறு இயம்பினார். நிலையான நலத்தினைப் பொழியும் அந்தக் கலையின் நாயகனான நல்லோனைத் தம் சிந்தையால் உணர்ந்து உச்சிமேல் வைத்துப் போற்றும் வகையில் இச்சிறிய தொடர் மொழியால் கூறுகின்றார்.

இச்சகத்தில் எங்கும் வியாபகம் செய்யும் அந்தப் பச்சை வண்ணனை நாவார மெச்சிப் புகழ்கின்றார். இவ்வாறு பெருமை தரும் வகையில் அருமையான செய்திகளை எல்லாம் வைத்துப் பாடியதால், இந்தப் பெரிய பூமியில் இன்றளவும் நிலைத்து, பலரும் புகழும் அளவில் திருப்பாவை உள்ளதை அறிதல் வேண்டும். இந்தத் திருப்

பாவைப் பாசுரத்தில் தெய்வத்தின் காட்சியையும் செந்தமிழ் மாட்சியையும் சங்க இலக்கிய நலத்தின் ஆட்சியையும் கண்டுமகிழலாம்.

ஆண்டாள் எம்பெருமானோடு மக்கள் ஈடுபடவும் அவனால் பேரின்ப வீடுபேற்றை அடையவும் இத்திருப் பாவையைப் பாடியருளினார் எனினும், நல்ல சுவை ததும்ப, இனிய கவிதை நயம் தோன்ற, அழகுத்தமிழ் நடமிடப் படைத்தார். இத்தகைய நெறியில் படைத்த சத்தியத் திருப்பாவையை நாம் மனம் விழைந்து போற்றி நித்தம் பயின்று இப்புவியில் நிலைத்து வாழ்வோமாக!

**பதமலரைப் பாடுவோம்!**

இசைத்தே நாம் பாடுகின்ற வகையில் நல்ல
  இனியதமிழ்ச் சொல்லெடுத்துத் திருப்பாவையை
இசைபடவே படைத்தவரே உலக மெல்லாம்
  எழில்பெற்று நெறியோடு விளங்குதற்கோ
இசைமிகவே குழல்ஊதி கவர்ந்த கண்ணன்
  இணையடியின் மாட்சியினை எடுத்துக்காட்டிப்
பசையாம்நற் பற்றோடு தந்த ஆண்டாள்
  பதமலரை மறவாமல் பாடி வாழ்வோம்!

# 15. கிள்ளிக் களைந்தானைப் பாடு!

**கண்ணனையும் ராமனையும் கண்டுணர்ந்து பாடாமல்**
**கண்ணுறக்கம் கொண்டிருந்த காரிகையைப்-பண்ணிசைத்துப்**
**பாடி எழுப்பிப் பயனுரைத்த கோதையைக்**
**கோடித்துப் பாடிடவே கூடு!**

கவியமுதனார்

திருப்பாவையில் பதிமூன்றாம் பாசுரத்தில் கண்ண பிரானையும் இராமபிரானையும் ஒரு சேர வைத்து அனுபவிக்கின்றார் கோதைப் பிராட்டியார். பறவை இனமாகிய கொக்கின் வடிவம் தாங்கிய பகாசூரன் கண்ண பிரானைக் கொல்ல யமுனை நதிக்கரைக்கு வருகின்றான். இவன் கீழ்மகனான கம்சனால் ஏவப்பட்டவன். இந்தப் பகாசூரன் என்னும் கொக்கின் வாயைப் பிடித்துக் கண்ணன், பனங்கிழங்கைப் பிளப்பதைப் போல் அவனை இரண்டாகப் பிளந்து அழிக்கின்றான்.

பிறன் மனை நயந்த குறைமகனான இராவணனை, அவன் இடமான இலங்கைக்கே சென்று இராமபிரான் வீழ்த்தி ஒழிக்கின்றான். அறத்தைக் காப்பதற்காக, மறம் விளைத்த குறையுடைய அசுரர்களைப் பொசுக்கி, அமைதி காத்திட்ட இந்த இரு தெய்வங்களையும் புகழ்ந்து பாடாமல் தூங்கும் பெண்ணைக் கண்ணைத் திறந்து எழுந்து வர துயில் உணர்த்துகின்றார்; மேலும் வைகறை காலமென் பதை நினைவு கூறுகின்றார் கோதை. ஆம் வானத்தில் காலைப்பொழுதை அறிவிக்க வெள்ளியென்னும் விண்மீன் தண்ணார் பேரொளி செய்வதை விளம்புகின்றார். வீரனைக் கண்டு கோழையொருவன் அஞ்சி நடுங்கி ஓடி

மறைதல் போன்று பேரொளியுடன் தோன்றும் வெள்ளியைக் கண்டு குறைந்த ஒளியுடன் கண்சிமிட்டிய வியாழன் ஓடி மறைந்து விட்டான் என்று கூறிக் காலைப் பொழுதைக் காட்டி உறங்கும் பெண்ணை உணர்த்து கின்றார் கோதைப் பிராட்டியார்.

மனித அறிவைக் காட்டினும் குறைந்த அறிவினை யுடைய இயற்கைகள் நேரம் அறிந்து தம் கடமையினை ஆற்றுகின்றன. பகுத்தறிவுடைய நீ! கடமையை உணராமல் படுக்கையில் கிடத்தல் நன்றோ? நீ! அழகில் மிகுந்தவள். ஆம், மலர்ந்த பூவைப் போல இருவிழிகளை அழகாகப் பெற்றுள்ளாய். உன்னைப் போன்ற அழகு மற்றவர்களி டம் இல்லை என்ற செருக்கால், இவ்வாறு உறங்கு கின்றாயா? இவ்வாறு நீ உறங்குவதால் உன் கடமையை மறந்து விட்டாயே!

உண்மையாகவே உறங்கும் பெண்ணாக நீயில்லை. கள்ளத்தனமாக, கவடு கொண்டு உறங்குகின்றாய். இது நன்மை பயப்பதன்று, என்பதை உணர்வாயாக!

பதுமை போன்றவளே! பரம்பொருளைப் பாட எங்களோடு எழுந்து வா என்றுஎழுப்புகின்றனர் கோதைக் குழாத்தினர். அன்பொழுகப் பேசி எழுப்பிய இவர்களின் வேண்டுதலுக்கு, உடன்பட்டு உறங்கிக் கிடந்தவள் தெளிந்து எழுந்து வந்தாள் வந்தவர்களுடன் மகிழ்ச்சி யோடு குளிர்ந்த நீர்க் குளத்தை நாடிப் படிந்து ஆடச் செல் கின்றார்கள். உடம்பு குளிரப் படிந்து ஆடிவிட்டு நோன்பு நோற்கும் இடத்திற்கு இணைந்து செல்கின்றார்கள் என் பதைக் கோதைத் தாயார்

"புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானை கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக் கிடைத்தியோ? பாவாய்நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்!

எனப் பாடித் தெரிவிக்கின்றார். இங்கே கள்ளத்தனமாகத் துயில்கொள்ளும் பெண் தன் அழகின் செருக்கால் படுக்கையில் கிடக்கின்றாள். வசதி படைத்தவன், மற்றவர்கள் எல்லோரும் தன்னிருப்பிடத்திற்கே தேடி வரவேண்டுமென்று எதிர்பார்த்தல் போன்று, இங்கே அழகால் ஆணவத்தோடு துயில் கொள்ளும் இந்தப் பெண் தன்னில்லத்தை நாடி மற்றவர்கள் வந்து எழுப்ப வேண்டுமென்றே படுக்கையிலே கிடக்கின்றாள். இவளை உவப்புக்கொண்டிடச் செய்து, எழுந்து வர அழைத்துச் செல்கின்றனர் கோதைக் குழாத்தினர்.

கண்ணபெருமானைக் கீழ்வானம் வெள்ளென்று தொடங்கும் எட்டாம் பாசுரத்தில் ஏற்றமுறப் போற்றுகின்றார். இராமபிரானைக் கனைத்திளங் கற்றெருமை என்று தொடங்கும் பதினோராம் பாசுரத்தில் பரவசமுடன் போற்றுகின்றார். இப்பதிமூன்றாம் பாசுரத்தில் கண்ணனையும் இராமனையும் இணைத்து வைத்து, மனமுவந்து இனிதாகப் போற்றுகின்றார் கோதை. எம்பெருமான் எடுத்த பத்து அவதாரங்களையும் அவ்வவதாரங்களால் செய்த செயலையும் பயனையும் கோதை பாடியருளிய தம் பாசுரங்களில் எல்லாம் இனிது எடுத்துக் காட்டியிருத்தலைப் படிப்பவர் அனைவரும் அறியலாம்.

புள்ளின்வாய் கீண்டானை என்னும் இச்சொற்றொடரால் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்த மாயப் பிரானை மாய்க்கத் திட்டம் தீட்டுகின்றான் கம்சன். அக்கொடிய கஞ்சன் பகாசூரனென்னும் பாவியை அனுப்பிப் பரந்தாமனை அழித்து வருமாறு பணிக்கின்றான். யமுனை ஆற்றங்கரையில் அமைதியுடன் இருக்கும் ஆராவமுதனிடம் பகாசூரன் பாசாங்கு செய்யும் கொக்கு வடிவம் தாங்கிக் கூர் அலகால் குத்த வந்தான். வஞ்சம் புரிய வந்த அந்த வெள்ளைக்கொக்கைப் பற்றி முன்னமே அறிந்திருந்த அருளாளன் தன் கீர்த்தியைக்காட்ட கொக்கின் கூர்மையான மூக்கைப் பிடித்துத் தன் நேர்த்தியான கையால் பனை நார்மட்டையை பிளந்து கிழித்து எறிதல் போல் பற்றி வீழ்த்தினான். கொக்கு வடிவம் தாங்கிவந்த பகாசூரன் தரையில் பதைத்து வீழ்ந்து செத்தொழிந்தான் என்ற வரலாற்றை உள்ளடக்கிக் காட்டுகின்றார்.

"பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான்"

என்று கூறியவற்றால், பெரிய வீரனென்று போற்றப் பெற்ற இராவணனைப் பொல்லா அரக்கனென்று கோதைப் பிராட்டியார் கூறுவதற்கு, இவன் பிறன் மனை நயந்த கீழ்மகனாதலால், இவ்வாறு கூறினார் என்றே கொள்ள வேண்டும்; பொல்லா அரக்கன் என்று கூறியவற்றால், நல்ல அரக்கனும் இருந்தான் என்பதைத்தெரிவிக்காமலேயே வீடணனை நாம் உணர்ந்து கொள்ளச் செய்கின்றார். ஒன்றைக் கூறி மற்றொன்றினை உய்த்துணர வைப்பது உள்ளுறைப் பொருளாகும். இவ்வாறு உள்ளுறையாகவே வைத்து வீடணனை அறிந்து கொள்ள நமக்கு உணர்த்துகின்றார் கோதை.

அந்தப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான்

என்று வியப்பு ஏற்பட இராமபிரானின் ஆற்றலை அறியக் காட்டுகின்றார். பயிரிட்ட செடி கொடிகளின் இலைகளில் அழிவு செய்யும் நச்சுப் பூச்சிகள் இருந்தால், அந்த இலைகளை மட்டும் உழவன் கிள்ளிக் களைந்து அழித்தல் போன்று, கீழ்மகனான இராவணன் என்ற அரக்கனைக் கிள்ளிக் களைந்தான் இராமன் என்று இயம்புகின்றார். "கிள்ளி" என்னும் சொல்லைப் பெய்து இராமபிரான் இராவணனைச் சிரமமின்றிச் சிதைத்தச் செய்தியினைச் சித்திரிக்கின்றார் ஆண்டாள். இன்று எழுதுகின்ற சிலர் ஒன்றுக்கு மற்றொன்றைப் பொருந்தாத வகையில் எழுதிக் காட்டுதல் போன்று இல்லாமல், ஏற்ற சொற்களைப் பொருத்திக்காட்டி, கவிதை நயத்தின் மாட்சியையும் அழகுத் தமிழின் ஆட்சியையும் காட்சிப்படுத்திக் காட்டுகின்றார் ஆண்டாள்.

"பிள்ளைகளெல்லாம்" என்று கூறியதில் இளஞ்சிறார்கள் எல்லாரும் வைகறைப்பொழுதில் விழித்து எழுந்து தம் கடமையில் தலைப்பட வேண்டுமென்ற நெறியைப் போதிக்கின்றார். இந்தக் கருத்தைத் துயில் கொள்ளும் பெண்ணிடத்தில் கூறிக் காலைப் பொழுதை நினைக்கச் செய்கின்றார். துயில் கொள்பவள், வந்து எழுப்புகின்றவர்களைக் காட்டிலும் சிறியவள். ஆதலால் சிறியவளாக இருக்கும் நீதானே எங்களை வந்து எழுப்ப வேண்டும் அப்படியிருக்க, நீயோ துயில் கொண்டிருப்பது ஏற்றதாகுமா? என்று கூறி, மேற்குறித்த தொடர்மூலம் செய்ய வேண்டியவர்களின் வயதை நினைவு கூறி, சிறியவர்களின் கடமையை உணர்த்துகின்றார் கோதை.

பாவைக்களம் என்றதால் நெற்களம், போர்க்களம் போல இது நோன்பு நோற்க இளம்பெண்கள் ஏற்படுத்

திய களமாகும். இங்கேதான் ஆயச்சிறுமியர்கள் காலைப் பொழுதான வெள்ளி முளைக்கின்ற வியாழன் உறங்குகின்ற காலத்தில் வந்து எம்பெருமானை நினைந்து நோன்பு நோற்கச்செல்கின்றார்கள்.

இந்தப் பாவைக் களத்திலே நோன்பு நோற்க, துயிலும் இளநங்கையிடம் வெள்ளி முளைத்து விட்டது என்னும் செய்தியினை எடுத்துக் காட்டி எழுப்பும் போது, படுக்கையில் கிடப்பவள் சொல்கின்றாள். நீங்கள்

"பேராளன் பேரோதும் பெரியாரை ஒரு போதும்
பிரிகி லேனே"

என்று கூறுவதைப் போன்று எம்பெருமானையே சதா சர்வ காலமும் பிரியாமலிருக்க எண்ணுகின்றவர்கள் நீங்கள் ஆதலால், வானத்தில் உதிக்காத வெள்ளியை முளைத்து விட்டது என்று பொய் சொல்கின்றீர்கள் என்று கூறுகின்றாள். நீங்கள் எம்பெருமானின்மீது கொண்டிருந்த பரிவாலே என்னைத் தூக்கத்தில் இருந்து பிரிக்க முயலுகின்றீர்கள் என்றாள்.

இதைக் கேட்டவர்கள் "புள்ளும் சிலம்பினகாண்" என்று பறவைகள் ஆரவாரம் செய்வதை எடுத்துக் காட்டுகின்றார்கள் இப்பாசுரத்தில் வரும் "புள்ளும் சிலம்பின காண்" என்ற தொடரை ஆறாம் பாசுரத்திலும் ஆளுகின்றார் ஆண்டாள். இப்படி ஒரே பொருளை உணர்த்தினாலும், ஆறாம் பாசுரத்தில் வரும் தொடருக்கு, கூட்டிற்குள் இருந்து கொண்டே பறவைகள் ஆரவாரித்தன என்றும் இந்தப் பாசுரத்தில் வரும் தொடருக்குப் பறவைகள் இறைத் தேட வெளியில் போனபோது ஆரவாரித்தன என்றும் உரையாசிரியர் பொருள் கூறியுள்ளனர். இத் தொடரைக் கூறியது கூறல் என்ற, கருத்தில் கொள்ளாமல்

சூழ்நிலை கருதி, மீண்டும் தேவைகேற்ப இங்கே ஆளப் பெற்றதாக எண்ணுதல் வேண்டும்.

"போதாரிக் கண்ணினாய் என்றதில் நான்கு விதமான பொருளைக் காணலாம். 1. மான் போன்ற கண்ணைப் பெற்றவள்; 2. குவளை மலர் போன்ற கண்ணைப் பெற்றவள்; 3. வண்டைப் போன்ற கண்ணைப் பெற்றவள்: 4. மலரையும் தோல்வி காணச் செய்யும் கண்ணைப் பெற்றவள் என்று துயில் கொண்டுள்ள பெண்ணின் கண்ணழகைப் புகழ்கின்றார். இத்தொடர்மொழியினை ஆண்டதால், ஆண்டாள் அன்னையார் உவமையை ஆளும் திறத்தில்வல்லவர் என்று அறிஞர் உலகம் போற்றாமலிருக்க இயலாது.

ஆவல் கொண்டு பாடிய பாவையை அழகுத்தமிழ் ஓவியமாக, சுவையூட்டும் பாவியமாக, அருளியதில், உள்ளம் உவக்கச் செய்யும் அருளாளனான தேவாதி தேவனை மக்கள் நுகர்ந்து இன்புறுமாறு செய்கின்றார் கோதை.

"குள்ளக் குளிரக் குடைந்து நீராடு" என்பதில் உடம்பு குளிரும்படி குளத்து நீருக்குள் குடைந்து நீந்தி ஆடுமாறு குறிக்கின்றார். உள்ளத்தையும் குளிரவைக்கின்ற வகையில் எம்பெருமானை நினைந்து நீர் ஆடுமாறும் குறிக்கின்றார். ஆம் குளத்துநீரில் குடைந்து நீராடினால், உடம்பு குளிரும்; உள்ளம் கண்ணபெருமானை நினைந்து போற்றுவதால் குளிரும் என்பதைச் சொல்லாமலேயே அறிவித்தார்.

"குள்ளக் குளிர" என்பதை, பக்கம் பருத்து, செக்கச் சிவந்து, என்பதைப்போல ஆளப்பட்டதாகும். மிகுதி நிலையினை எடுத்துக்காட்டவே இதனை ஆண்டாள் கையாண்டார். இஃதொரு குறிப்பிடைச் சொல்லாகும்.

இவ்வாறு நீராடி அவன் பேர் பாட எழுந்து வா என்று துயில்பவளைவிழிப்புக் கொள்ளச் செய்கின்றார்.

"நன்னாள்" என்று கூறியதில் நாளுக்கு நல்ல என்று அடை கொடுத்துக் கூறுகின்றார். இராமபிரான் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் பட்டம் சூட்டி நாட்டை ஆளும் செய்தியைக் கேட்டோர் இன்று நல்ல நாள் என்று புகழ்ந்து அந்த நாளையும் அந்த நாளில் பட்டத்தை ஏற்ற இராமனையும் உள்ளங் குளிரக் கூறியதைப் போன்று.

இன்று நோன்பு நோற்றுக் கண்ணபிரானை அடைய நன்னாள் என்பதை நினைவுபடுத்திக் காலத்தின அருமைப் பாட்டை வெளிப்படுத்துகின்றார் ஆண்டாள். பருவத்தே பயிர் செய் என்பதைப் போல, இன்றே நோன்பு நோற்க உகந்த நாள் என்று இன்று செய்ய வேண்டிய காலத்தின் நிலையை உணர்த்துகின்றார். இக்கலத்தோடு செயலையும் கூறுகின்றார்.

"கள்ளம் தவிர்" என்பதால் செருக்கை விடு! என்று கூறிக் கண்ணபெருமானின் பேரெழிலை நினைவுபடுத்தி, அழகாலே அகந்தை கொண்டிருந்த ஆரணங்கைத் திருத்தித் தன் வயப்படுத்துகின்றார் கோதைப் பிராட்டியார்.

### பாவையில் இலக்கியச் செய்திகள்

மேற்குறித்த பாசுரத்தில் சங்கத் தமிழை எங்ஙனம் பெய்துள்ளார் என்பதை அறிவோம். பெரும்பாணாற்றுப் படை என்னும் சங்க நூல் ஆயர்பாடியின் அழகையும் அதன் செல்வத்தையும் புகழ்ந்து கூறுகின்றது.

அதில் 155ஆம் அடியில்

"நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி"

என்று வருவதில் இரவுப் பொழுது கழிந்து விடியற்காலம் வந்ததைப் பறவைகள் அறிந்து ஆரவாரஞ் செய்து

கொண்டு செல்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இதையே மலைபடுகடாம் என்னும் இலக்கியம்

"புலரி விடியல்புள்ளோர்த்துக் கழிமின்"

என்று இரவு நீங்கி விடியல் தோன்றியதால் பறவைகள் ஆரவாரம் செய்வதை அறிந்த மக்கள், தம் கடமையை ஆற்றப் போகின்றார்கள் என இது கூறுகின்றது. குறுந்தொகையில் 310-ஆம் பாடலில்

"புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின"

என்று பறவைகள் ஆரவாரம் செய்த காலைப் பொழுதில் ஆம்பல் மலர் கூம்பின என இயம்பப்படுகிறது. மதுரைக் காஞ்சியில்

"பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காம
அன்னங் கரைய அணிமயில் அகவ"

என்று வருவதில் காலைப் பொழுதில் கோழி கூவுவதையும் ஆனைச்சாத்தன், அன்னம், மயில் ஆகியவை தம் பேடையை அழைப்பனவற்றையும் தெரிவிக்கக் காணலாம். இந்த இலக்கியங்களில் சிந்தை செலுத்திய ஆண்டாள், தம் பாசுரத்தில் சுருங்கக்கூறி விளங்க வைக்கும் பான்மையில் தூங்குகின்றவளிடம் காலைப் பொழுதை உணர்த்தி எழுப்ப

"புள்ளும் சிலம்பின காண்"

என்னும் தொடர் மொழியை வைத்துப் பாடியெழுப்புகின்றார்,

பரிபாடலில் அரியென்னும் ஆராவமுதனைப் பரிவு கொண்டு பரக்கப் பேசக் காணலாம். எம்பெருமான்

தூணிலிருந்து வெளிப்பட்டு, இரணியனுடைய மாமிசப் பிளவுகளும் பலவாகச் சிதறி வீழ' அவ்விரணியனின் மார்பை நகத்தாலேயே பிளந்தான் என்று இளவெயின னார் நான்காம் பரிபாடலில் இருபதாம் அடியில்

"வெடிபடா ஒடி தூண் அடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை"

என்று பாடி எம்பெருமான் நரசிங்க அவதாரம் எடுத்தச் செய்தியினை வரைகின்றார். கொடுமைவாய்ந்த பொல்லா அரக்கனான இரணியனை நகத்தால் வகிர்ந்து மார்பைப் பிளந்து எம்பெருமான் வீழ்த்தினான் என்று கூறுவதில் அவனின் நகத்தின் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

"பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை"

என்று ஆண்டாள் பாடுவதில் கிள்ளிக் களைந்தான் என்ற தொடரால் எம்பெருமானின் நகத்தின் திறத்தை இயம்பு தல் காணலாம். ஆண்டாள் பாடிய இத்தொடருக்கு இராவணனை இராமபிரான் கிள்ளிக் களைந்தான் என்று உரையாசிரியர் பொருள் கூறுகின்றனர். இஃது ஏற்புடைய தாக அமையவில்லை. நகத்தைப் பயன்படுத்தியவன் நரசிங்கமூர்த்தியேயாகும். கிள்ளி என்னும் செயலுக்கு நகமே உரியதான கருவியாதலால், ஆண்டாள் அன்னை யார் நரசிங்க அவதாரச் சிறப்பினையே நினைவு கூர்ந்தார் என்பதைப் பொருந்துவதாகக் கொள்ளலாம். மேலும்,

"அவுணன் ஆகம் வள்ளுகிர் போழ்ந்த
புனிதன் ஆளரி"

என்று வருவதைக் கொண்டு நகத்தை ஆயுதமாகப் பயன் படுத்தியவன் நரசிங்க மூர்த்தியே என்பது தேற்றம். பரிபாடலின் இத்தொடரை உணர்ந்த பாவலர் கோதை தம் பாசுரத்தில் பெய்து அந்த நரசிங்க மூர்த்தியைப் பாடு

என்று நமக்கு உணர்த்துகின்றார். விண்ணில் முளைக்கும் வெள்ளியைக் காட்டி விடியலை உணர்த்துவதை இன்றும் கிராமபுரத்தில் பேசுவதைக் காணலாம். அதைப் புறப் பொருள் வெண்பாமலை

"வெள்ளி முளைத்த விடியல் வயலாமை"

என்று தெரிவிக்கின்றது. பொருநர் ஆற்றுப்படை பாடிய முடத்தாமக் கண்ணியார்

"விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்"

என்பதால் விரிந்த ஒளிக்கதிர்களைக் கொண்டு தோன்றும் வெள்ளியால் நள்ளிரவு நீங்கி விடியற்காலம் ஏற்படுகின்றது என்றார். பெருங்கதை ஆசிரியர்

"விளக்கு வெள்ளி முளைத்து முன்தோன்ற"

என்று வெள்ளி முளைத்ததை விளக்காக உருவகப்படுத்துகின்றார். புறநானூறு 385-ஆம் பாட்டில்

"வெள்ளி தோன்ற புள்ளுக் குரல் இயம்பப்
புலரி விடியல் பகடுபல வாழ்த்தி"

என்று கூறுவதில் வெள்ளி முளைத்ததும் பறவைகள் ஆரவாரிக்கின்றன; பொழுது புலருகின்றது என்ற செய்திகள் பேசப்படுகின்றன.

இவற்றையெல்லாம் தெரிந்த ஆண்டாள்

"பிள்ளை களெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழ முறங்கிற்று"

என்று தம் பாசுரத்தில் பாடிக் காட்டுகின்றார்.

காலைப் பொழுதை உணர்த்த சங்க இலக்கியங்களெல்லாம் விண்ணில் முளைத்த வெள்ளியையும் பறவைகளின்

ஆரவாரத்தையும் எடுத்துக் காட்டின. ஆனால் ஆண்டாள் மேற்குறித்தவற்றை எடுத்துக் காட்டியதோடு, வியாழன் என்னும் விண்மீன் உறங்கிப் போனதை வெள்ளியெழுந்து வியாழம் உறங்கிற்று என்று ஒரு புதிய செய்தினைப் புகுத்தியுள்ளார். கதிரவன் தோன்ற இரவு மறைதல் போன்று வெள்ளியெழ வியாழம் உறங்கிற்று என்று கூறி, திருப்பாவையாகிய இந்நூல் தோன்றிய காலத்தை நாம் அறிந்து கொள்ளச் செய்கின்றார்.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், வெள்ளியெழ வியாழம் உறங்கிற்று என்னும் கருத்தைக் கொண்டே ஆழ்வார்களின் காலநிலையைத் தாம் ஆய்ந்தறிந்ததாகக் கூறுகின்றார்.

எனவே, காலைப் பொழுதை உணர்த்தி மக்களைத் தம் கடமையில் உலகியல் பணியில் தலைப்படவே சங்க இலக்கியங்கள் செய்திகளை இயம்பின. ஆனால் ஆண்டாள் அன்னையாரோ காலைப் பொழுதைக் கூறி துயில் உணர்த்தி விழித்தெழும் பெண்ணை அருளியல் என்னும் ஆன்மீகத்தில் ஈடுபடுத்துகின்றார் என்பதை அறிந்து இன்புறத்தக்கது.

ஆண்டாள் தம் பாசுரங்களை அணிசெய்யும் வகையில் சங்க இலக்கியங்களின் கருத்துகளைச் சேர்த்து வழங்கிச் சிறப்பிக்கின்றார். நல்லின்பம் நல்குகின்ற அக்கருத்துகளை எங்கெங்கெல்லாம் பொருத்திக் கூறவேண்டுமோ அங்கெல்லாம் பொருத்திச்சங்கத் தமிழ் மாலையாகத் தம் திருப்பாவையை அருளிச்செய்தார். இவ்வாறு சங்கத் தமிழை எடுத்து ஆண்டதால் இறவாத அறநூலாக, சிறப்புடைய பக்தி இலக்கியமாகத்திருப்பாவை மிளிர்கின்றது என்று சொன்னால் அது பொருத்தமுடையதாகும். இவ்வாறு அவர் அருளிய இந்தச் செந்தமிழ் அறநூலை. சிந்தைக்கினிய சிறந்த பக்தி இலக்கியத்தை நாம் எல்லோரும் மகிழ்ந்து பாடி உலகளந்த பெருமாயனின் திருவருள் பெற்று உய்வோமாக!

# 16. பங்கயக் கண்ணனைப் பாடு!

**பாடாமல் எம்பெருமான் பக்தியில் நெஞ்சத்தை
ஈடுபடுத் தாமல் இனிதுறங்கும் பெண்ணை
எழுப்பி அவன் தொண்டில் இணைத்த நம் கோதையின்
பழுத்த அருட் பண்ணைப் பாடு!**

*கவியமுதனார்*

ஆண்டாள் அன்னையார் இப்பதினான்காம பாசுரத்தில் மதிநிறைந்த நன்னாளான மார்கழியில் சீர்மல்கும் ஆய்ப்பாடியில் வதியும் கன்னிப் பெண்களின் கடமையினைத் தெரிவிக்கின்றார். காலைநேரம் வந் துள்ளது. இக்காலத்தில் உங்கள் புழைக்கடையின் தோட்டத்தில் செங்கழுநீர் மலர்கள் வாய் நெகிழ்ந்து விரிகின்றன. ஆம்பல் மலர்கள் கூம்பி வாயை மூடிக் கொள்கின்றன. வெண்மை நிறப் பற்களையுடைய தவசிகள் காவிப்பொடியை நீரில் கலந்து, அந்நீரில் தோய்த்த உடைகளை அணிந்து கொண்டு தம் திருக் கோயில்களைத் திறப்பதற்குச் செல்கின்றார்கள்.

இந்தக் காலை நேரத்தில் சில மலர்கள் மலர்தலும் சில மலர்கள் கூம்புதலும் ஆகிய பணிகளைச் செய் கின்றன. ஆனால் நீ மட்டும் உன் கடமையைச் செய் யாமல், உறங்குகின்றாயே என்று அவளை எழுப்ப வந்த வர்கள் கூறுகின்றார்கள். மேலும் அவர்கள் எங்களை நீயே முந்தி வந்து எழுப்புவதாக நேற்றிரவு சொல்லி விட்டுச் சென்றாயே! அப்படிச் சொல்லிய நீ வந்து எங்களை எழுப்பாமல் போனது ஏன்? இஃதுனக்கு

வெட்கமாக இல்லையா? என்று கேட்கின்றார்கள். மேலும் அவர்கள்,

நீ! இனிய பேச்சை வெளிப்படுத்தும் திறன் படைத்தவள்; இத்தகைய திறனைப் பெற்ற நீ! சங்கையும் சக்கரத்தையும் தன் பெரிய திருக்கரத்தில் பெற்றுள்ள தாமரை போன்ற கண்களையுடைய கண்ணபிரானைப் உன் வாயால் பாடுவதற்கு எழுந்து வருவது நல்லது. என்று உறங்கும் பெண்ணை அவர்கள் உணர்த்துகின்றார்கள். இதை நாடகத்தில் வரும் பாத்திரங்கள் உரையாடுவதைப் போல, இப்பாசுரத்தில் படைத்துக்காட்டுகின்றார் கோதை. அந்தச் செந்தமிழ்ப் பாசுரம்தான்.

''உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்!

என்பதாகும். ஆய்ச்சியர்கள் கூட்டத்திற்கே தலைவியாயிருப்பவள் நாளை விடியலில் உங்களை நான் முன்வந்து எழுப்புவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றவள், வந்து எழுப்பாமல், படுக்கையிலே கிடந்து உறங்குகின்றாள்! இவளை, அவள் வீட்டிற்கே சென்றுமற்ற தோழிமார்கள் எழுப்புவதாக இப்பாசுரம் பாடப்பெற்றது.

தோழிமார்கள், காலை நேரத்தை எடுத்துக்காட்ட, செங்கழுநீர் மலர்கள் பூத்து இருத்தலையும், அல்லி மலர்கள் கூம்பிப் போதலையும் தவசிகள் தங்கள்

திருக்கோயில்களைத் திறப்பதற்காகச் செல்லுதலையும் கூறி, உறங்கும் பெண்ணை விழித்தெழச் செய்கின்றார்கள்.

இவர்கள் இப்படிக் கூறிய பின்னரும் உறங்குவாள் ஆரணங்கு எழுந்து வரவில்லை. அப்படி வாராமல் உறங்குபவளிடம் எங்களை முன்னதாக வந்து எழுப்புவதாகச் சொன்ன நீ! அதை மறந்து தூங்குகின்றாயே இஃதுனக்கு ஏற்றதாகுமா? இவ்வாறு இருப்பது! உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைத் தவிர வேறு யாரும் இந்தச் செயலைச் செய்ய மாட்டார்கள் என்று தோழிமார்கள் அவளைக் குறைத்துப் பேசுகின்றார்கள்.

மேலும் அவர்கள் "நாவுடையாய்" என்று கூறி, துயில்பவளின் நாவண்மையைப் புகழ்கின்றார்கள். உன்னுடைய பேச்சுத் திறனைக் கண்டே உன் மனையை நாடி நாங்கள் வந்துள்ளோம். நீ செய்த இத்தவற்றையும் மறந்து நாங்கள் இங்கே வருவதற்கு உன் நாவண்மை ஒரு காரணமாகும் என்பதை நீ உணருவாயாக! என்றார்கள்.

இராமபிரான் சீதாபிராட்டியைப் பிரிந்து பெருந்துன்பம் அடைந்தான். இத்துன்பத்துடனே தம்பி இலட்சுமணனுடன் கிட்கிந்தைக்குச் செல்கின்றான் அங்குச் சொல்லின் செல்வனாகிய அனுமனைச் சந்திக்கின்றான் இராமன், சந்தித்தபோது, அனுமன் இனிய வார்த்தைகளைக் கொண்டு பேசுகின்றான். இவன் பேச்சைக் கேட்ட இராமபிரான், தன்மனைவி பிரிவின் துயரத்தைக் கூட மறந்து விடுகின்றான். அந்த அளவில் அனுமனின் பேச்சுத் திறன் இனிமையாகவிருந்தது.

அந்த இனிமை பொருந்திய சொல்லாற்றலைக் கேட்ட இராமன் இலட்சுமணனிடம்

"இல்லாத வுலகத் தெங்கும்
ஈங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளைய வீர
விரிஞ்சனோ விடைவ லானோ?
'மாணியாம் படிவ மன்று
மற்றிவன் வடிவ மைந்த
வாணிஇவ் வுலகுக் கெல்லாம்
என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச்
சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்மையென்று
தம்பிக்குக் கழறிக் கண்ணன்"

எனக்கூறுவதாகக் கம்பராமாயணச் செய்யுள்களால் அறியலாம். நாவன்மையுடைய அனுமனின் பேச்சுத் திறனைப் பற்றித் தம்பி இலட்சுமணனிடம் கூறிய இராம பிரான், அவன் பேச்சாற்றலால் தன் துன்பத்தை மறந்தி ருந்தான் என்பதை இவற்றால் அறிகிறோம்.

இராமபிரான் அனுமனின் பேச்சைக் கேட்டுச் சொல்லின் செல்வன் என்று புகழ்ந்ததைப் போன்று இத் தோழிமார்கள் தூங்கும் பெண்ணின் பேச்சாற்றலின் திறத்தைக் கேட்டு "நாவுடையாய்" என்று புகழ்கின் றார்கள்.

இப்படிப் புகழ்ந்ததைக் கேட்டு, படுக்கையில் இருந்த வள் உடனே எழுந்து வந்து நீங்கள் என்னை எழுப்புவதற் காகப் பட்டத்துன்பம் அதிகம்; நீங்கள் என்னை என்ன

செய்யச் சொல்கின்றீர்கள் என்று கேட்டாள்? இதற்குத் தோழிமார்கள் வலக்கையில் சக்கரமும் இடக்கையில் சங்கும் உடைய கண்ணபெருமானை — அவனுடைய கீர்த்தியைப் பாடுதற்கு அழைக்கின்றோம் என்றார்கள். அழைத்தவர்களுடன் சேர்ந்து எம்பெருமானைப்பாடி அனுபவிக்கப்போகும் பெண்ணை நமக்கு இப்பாசுரத்தால் படம் பிடித்துக் காட்டுகின்றார் கோதை.

இதில் எம்பெருமானின சங்கையும் சக்கரத்தையும் ஆண்டாள் அருமையாகக் குறித்துக் காட்டினார். கண்ணபிரான் தோன்றிய காலத்திலேயே தன் கரங்களில் சங்கையும் சக்கரத்தையும் ஏந்திக் கொண்டே பிறந்தான்.

இதையறிந்த தேவகியன்னையார் அஞ்சி, ஐயனே! இந்த ஆயுதங்களை நீ! மறைத்துக் கொள்வது நல்லது. ஏனென்றால் இங்கே முளைத்து வெளிப்படும் புலகூட அசுர குணத்தோடு முளைக்கின்றது; ஆதலால் நீ உன் ஆயுதத்தை மறைக்காமல் வைத்திருந்தால் இன்னல் ஏற்படும் என்று கூறியவுடனே தாயின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மறைத்துக் கொண்டான் சேயாகிய கண்ணன்.

பின்னர் யசோதைப் பிராட்டியாரின் வீட்டில் வளரும் போது எம்பெருமானாகிய கண்ணபெருமான் அச்சங்கையும் சக்கரத்யையும் வெளிப்படையாகக் காட்டி நின்றதாக

நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங்கள் வந்து காணீரே

என்று யசோதைப் பிராட்டியார் ஆயர்பாடிப் பெண்களை அழைத்துக் காட்டிய செய்தியை, மேற்குறித்த அடிகள் கூறுவதைக் கொண்டு அறியலாம். இவை, பெரியாழ்வார்

பாடியப் பாசுர அடிகளாகும். இக்கருத்தை ஆண்டாள் "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனைப்பாடு" என்று இப்பாசுரத்தில் எழிலுறக் காட்டுதல் காணலாம். இத்தகைய ஆற்றல் சான்ற அவனுக்குப் பாட்டிசைக்குமாறு நம்மை நோக்கிக்கூறுகின்றார். இப்பாட்டில் "**நங்காய்**" என்றது ஒருமையாக விளியேற்றுள்ளதற்கேற்ப உன்றன் புழைக்கடை என்றே வரவேண்டும்.

ஆனால் உங்கள் புழைக்கடை என்றதை, மரபு வழுவமைதி என்று கூறுவர். சான்றோர் "சங்கிடுவான் போதந்தார்" என்றது இறந்த காலத்தைக் குறிக்கும். இதைச் சிலர் போகின்றார் என்று நிகழ்காலம் தோன்ற பாடுவர். இங்கே பாட+ஏல்—பாடேல் என்று தொகுத்தல் விகாரமாகப் பாடப்பெற்றது என்றுணர்தல் நலம்!

தக்க நெறியான பக்தி நெறியைப் போற்றி உலகத்தார் ஏற்றம் பெறவே, திருப்பாவையென்னும் பக்திப் பாசுரங்களை மனவிழைவால் அருளினார். அறியாமையுலகத்தில் புரியாமல் மூழ்கிக் கிடப்போரை நெறிப்படுத்த வேண்டும் என்னும் குறிக்கோளினால் இந்தச் செந்தமிழ்ப் பாசுரங்களைத் தந்தருளினார்.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

சங்கத்தமிழ் இலக்கியங்கள் யாவும் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவையாகும். இவ்விலக்கியங்கள் தமிழ்நாட்டில் பண்டு நிகழ்ந்த செய்திகளையும் மக்களின் இறைமைப் பண்புகளையும் இயற்கை நிலைகளையும் விளம்புகின்ற வரலாறுகளாக மிளர்கின்றன. இவற்றில் உள்ள அருமைச் செய்திகளை எடுத்துக் காட்டிப்

புகழ்வர் சான்றோர். அந்த வகையில் நம்பூதனார் பாடி வழங்கிய "முல்லைப்பாட்டில் எம்பெருமானைப் பற்றிய ஒரு செய்தி அழகுச்சித்திரமாக வரையப்பட்டுள்ளதை இங்கே எடுத்துக்காட்ட விழைகின்றேன். கற்பின் ஒழுக்கத்தை எடுத்துக்கூறும் இனிய அந்த முல்லைப் பாட்டில்

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கைமால்"

என்ற அடிகளில் பரம்பொருளின் சிறப்பியல்புகள் கூறப் பெற்றுள்ளன. சுடரும் சக்கரத்துடன் வலம்புரி என்னும் சங்கைத் தாங்கும் பெரியகைகளை உடையவனாகக் கண்ண பெருமானை இவ்வடிகள் காட்சிப்படுத்திக் காட்டுகின்றன. சக்கரத்தின் ஆற்றலையும் சங்கின் ஆற்றலையும் காட்டி இவற்றை எம்பெருமான் அழகு அணிகலன்களாகப் பெற்றிருக்கின்றான் என்று ஆழ்வார்கள் கூறி அவனைச் சிறப்பிப்பது போல நப்பூதனாரும் மேலே குறித்த அடிகளால்பெருமைசெய்கின்றார்.

இவற்றை ஆண்டாள் திருப்பாவையில் இந்தப் பதினான்காம் பாசுரத்தில் "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணன்" என்று கூறி எம்பெருமானின் பெரியகைகளைப் பெருமையாக எடுத்துக் காட்டுகின்றார்.

நம்பூதனார் "மாதாங்கு தடக்கைமால்"
என்று கூறியதை ஆண்டாள் "ஏந்தும் தடக்கையன்" என்று எம்பெருமானைச் சிறப்பிக்கின்றார்.

வைணவ நெறியில் அழுங்காற்பட்டுள்ள சந்நியாசிகள் தங்கள் கையில் திரிதண்டம் என்னும் முக்கோலைப் பெற்றுள்ளதை இன்றும் காண்கிறோம். இம்முக்கோல் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற கருத்தை உணர்த்தும். இத்தகைய முக்கோலை உடையவர்கள் எல்லாம் இந்த

மூன்று தத்துவங்களையும் போற்றி வாழ்பவர்கள். இவ்வழக்கம் நந்தமிழ் நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றது. எவ்வளவு காலத்திற்கு முன் இவ் வழக்கம் தமிழ்நாட்டில் தோன்றியது என்று அறுதியிட்டுக் கூற இயலாத அளவில் நெடுங்காலமாகவே உள்ளது என்பதை

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய"

என்று மிகத்தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் கூறக் காணலாம். கலித்தொகையில்

"முக்கோல் கொள் அந்தணர் முதுமொழி
நினைவார் போல்"

என்று முக்கோலை உடையவர்கள் அந்தணர்கள் எனவும் அவர்கள் முன்னோர் உரைத்த அறங்களை நினைப்பவர்கள் எனவும் இவ்வடிகள் கூறுகின்றன. முல்லைப்பாட்டில் ஆடையைக் காவிநிற நீரில் தோய்த்து அந்த உடையை முக்கோலை உடைய அந்தணர்கள் கட்டியிருந்ததைக்

"கற்றோய்த்துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப"

எனக் கூறப்படுகின்றது. இதனைத் திருமழிசை ஆழ்வார் தம் திருச்சந்த விருத்தத்தில்

"சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர்
ஒன்றினர்"
அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கமே"

என்று பாடுவதில் பற்று விட்டுச்சுற்றித்திரியும் அந்தணர் தம் கையில் முக்கோலுடைய தண்டம் வைத்திருந்தனர் என்கின்றார். வில்லிபுத்தூர் ஆழ்வார் ஆதிபருவத்தில் அர்ச்சுனன் நிலையை

''முக்கோலும் கமண்டலமும் செங்கற்றூசும்
முந்நூலம் சிகையுமாய் முதிர்ந்து தோன்றும்
அக்கோலம் அனைவரும்கை தொழுது நோக்கி"

என்று பாடி முக்கோலும் கமண்டலமும் செங்கல் நிறக் காவியுடையை அணிந்தும் சடைமுடியைக் கொண்டும் முதிர்ந்த சந்நியாசிகள் இருந்த விவரத்தைத் தெரிவிக் கின்றார். பண்டை நூற்கடலைக் கடந்து எல்லை தேர்ந்த, விட்டு சித்தன் திருமகளாய் வந்தவதரித்த ஆண் டாள் மேற்குறித்தவர்கள் கூறியவற்றை,

'செங்கற்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்''
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்''

என்று பாடித் தெரிவிக்கின்றார். இதில் வெண்பல் தவத் தவர் என்று கூறுவதால் அக்காலத் தவசிகள் தம்பற்களில் எந்த விதகறையும் ஏற்படாதவாறு காத்து வந்தார்கள் என்பதை அறிகின்றோம். பற்கள் தூய்மையாக வெண் மையாக இருக்கவேண்டும் என்ற அவசியத்தையும் அறிகின் றோம். வேண்டாத எந்த விதமான பொருளையும் தம் பறகளால் மென்று தின்னாமல் காப்பாய் வைத்து இருக்க வேண்டும் என்ற வகையில் நமக்குக் கோதை கூறுகின்றார் 'என்று கொள்ளுதல் சிறப்பு.

கோயில் என்னும் சொல் தமிழ்ச்சொல்லாகும் தலைவனது இருப்பிடத்தையும் எம்பெருமான் இலங்கு கின்ற இனிய இடத்தையும் குறிக்கும். நகர் என்றாலும் கோயிலைத்தான் குறிக்கும் என்பதை

''முக்கட் செல்வர் நகர்வலம் வரற்கே''

என்று புறநானூற்றில் வரும் சொற்றொடர் சுட்டுவதைக் காணலாம். இதில் பரம் பொருளை விழாக்காலத்தில் தூக்கிச் செல்பவர்கள் முதலில் கோயிலைச் சுற்றியும்

பின்னர் ஊரைச் சுற்றியும் வரும் நிலையைக் காட்டப் பெற்றுள்ளது. ஆண்டாள் அன்னையார் தவசிகள் வாழ்ந்த இடத்தைக் கோவில் என்று

"செங்கற் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில்"

என இப்பாசுரத்தில் இயம்பியுள்ளதை அறியலாம். ஞானியர் வதிந்த இடடத்தைக்கோயில் என்றவர் எம் பெருமான் வதியும் இடத்தையும்

'பூவைப்பூ வண்ணா உன்கோயில் நின்று'

என்றும் தெரிவித்தல் காணலாம். ஆண்டாள்அறியவேண் டிய நூற்கருத்துளையெல்லா அறிந்தவர். முன்னோர் மொழிந்தவற்றை இன்பத்தேன் போல் போற்றும் பான் மையர் என்பதை யாரும் மறுத்தல் இயலாது. நூல் வழக் கில் உள்ள அற்புத செய்திகளை மீண்டும் வெளியிட்டுத் தெரிவிப்பவர்கள் உயர்ந்த சான்றோர்கள். இத்தகைய உயர்ந்தவர்கள் வழங்கிய சொற்களே நடைமுறையில் நிகழ்ச்சிகளாக, பயன் அளிப்பனவாக இன்றும் உள்ளன. என்பவற்றைத் தொல்காப்பியர்

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாகலானே"

என்று கூறுகின்றார். இக்கருத்தை நினைவிற் கொண்ட ஆண்டாள், உயர்ந்தோரான பண்டையச் சான்றோர்கள் வழங்கிய சங்க இலக்கிய நூல் கடலில் மூழ்கி எடுத்து வந்த முத்தான சொற்றொடர்களைத் திருப்பாவையில் பெய்து உயிர் ஓவியமாகப் படைத்தருளினார். எழுத்தெனப் படுவது முப்பது முதலே" என்று தொல்காப்பியர் கூறுவர். முப்பது எழுத்துகளைப் பெற்ற தமிழ்மொழி, இப்பாரில் ஒப்பரிய நிலையில் உயர்ந்திருத்தலைப் போன்று திருப்

பாவையை முப்பது பாசுரங்களாக, பக்தி, இலக்கியமாக இலங்க ஈடு எடுப்புமின்றிப் படைத்தார் கோதை.

வேத மனைத்திற்கும் வித்தாகிய திருப்பாவையில் உலகத்தையே தோற்றுவித்துள்ள சிறந்த வித்தான எம் பெருமானை அருமையாகப் படம்பிடித்தார். பாரெல்லாம் ஒளிர்ந்திலங்கும் 'பரம்பொருளைச் சீரேங்கத் தம் பாவையில் படைத்துக் காட்டிய கோதை வகுத்த பாதையில் நாமெல்லாம் சென்று சாதனை காண்போம்!

### வணங்கி வாழ்வோம்!

பங்கயமாம் தாமரைபோல் முகப்பொலிவால்
கவர்ந்திழுத்த பரம்பொ ருள்தான்
செங்கண்மால் திருவடிக்குப் பாமாலை
இசைத்திட்ட திருப்பா வையில்
சங்கத்துச் செய்திகளைப் பெய்தினிதே
சிறப்பாகத் தந்த வர்தாம்
மங்கையருள் திலகமெனும் ஆண்டாள்தம்
மலர்ப்பதத்தை வணங்கி வாழ்வோம்!

# 17. வல்லவனை மாயவனைப் பாடு!

**இன்பக் கிளிபோல் இருப்பவளே தூங்குவதால்**
**நன்மைகா ணாமல் நலமிழப்பாய்!—என்றுரைத்து**
**வல்லவனைப் பாடிடவே வாவென்ற ஆண்டாளின்**
**செல்வத் தமிழிசைப்போம் சேர்ந்து;**

*கவியமுதனார்*

ஆண்டாள் அன்னையார் அருளிச்செய்த பதினைந்தாம் பாசுரமான இதில்பெருமை வாய்ந்த பாவை போன்ற பெண்ணணங்கை எழுப்பி எம்பெருமான் இன்ப நிலையை அனுபவிக்க அன்பாகக் கூப்பிடுகின்றார். ஆண்டாள் தூங்கும் பெண்ணை மட்டும் எழுப்பவில்லை! சூழலும் உலகத்தையே எழுப்பி, அவன் திருவருள் பேற்றில் மகிழவே அவர் உள்ளம் கொள்கின்றார்.

துயில் கொள்ளும் அந்த மயில் போன்ற மடந்தையை இளம் கிளியே! யென்று உளம் விழைந்து எழுப்புகின்றார். மற்றவர்கள் திரண்டு வந்து அவளை எழுப்புவதாகக் காட்சிப்படுத்தி இன்ப நாடகமாகக் காட்டுகின்றார் ஆண்டாள்.

தூங்குபவளின் வீட்டைத் தேடி வந்தவர்கள் இளங் கிளியே! காலைப்பொழுது வந்துவிட்டது எழுந்துவா? என்றார்கள். இதைக் கேட்டு உறங்குபவள் என்னைச் சிலுசிலுவென்று ஏன் வெறுப்புடன் அழைக்கின்றீர்கள்? என்றாள். எழுப்ப வந்தவர்கள் அவளை நோக்கி நீ பேசுவதில் வல்லமை பெற்றவளாக உள்ளாய்; அதோடு கடுமையான சொல்லால் சாடுபவளாக இருப்பதை

நாங்கள் முன்பு நெடுநாளாகவே அறிந்து வருகின்றோம் என்றார்கள்.

நீங்கள் தான் பேச்சில் வல்லமை பெற்றவர்கள் என்று படுக்கையிலிருப்பவள் உரைத்தாள். பின்னர் அவளே நீங்கள் சொல்வதைப் போன்று நான் பேச்சுத்திறன் பெற்றவள் என்றால், அப்படியே இருக்கட்டும், அதனால் என்ன? இப்போது என்னை என்ன செய்ய சொல்கின்றீர்கள்? என்றாள்.

இதற்கு வந்தவர்கள் படுக்கையை விட்டு எழுந்து வா! படுத்துக் கிடப்பதால் என்ன பயன் உனக்கு ஏற்படும்? எம்பெருமானைப் பாட வருக! என்று கூறி அழைத்தார்கள்.

எல்லாரும் வந்துவிட்டார்களா? என்று படுக்கையில் இருந்தவள் கேட்டாள்.

வந்து விட்டார்களா? இல்லையா? என்பதை நீயே! வந்து எண்ணிப்பார்ப்பாயாக! என்று எழுப்ப வந்தவர்கள் கூறினார்கள்.

என்னை எங்கே அழைக்கின்றீர்கள்? ஏன்? அழைக்கின்றீர்கள் என்று வீட்டிற்குள் இருந்தபடியே கேட்டாள் அவள்.

குவலாய பீடமெனும் யானையைக் கொன்றொழித்தவனும், பகைவனாகிய கம்சனுடைய கூட்டத்தைக் குலைத்து ஒழித்தவனும், நல்லோர் போற்றும் நாதனுமான கண்ணபெருமானைப் பாடப் போகின்றோம் நீயும் எம்முடன் வந்து அனுபவிக்க படுக்கையை விட்டு உடனே வா! என்று வந்தவர்கள் அனைவரும் பந்தமுடன் அழைத்தார்கள். இவ்வாறு,

அன்பாய் அழைத்தவர்களின் இன்சொல்லைக் கேட்டு வேட்கையுடன் படுக்கையை விட்டு அவர்களுடன் அவள் உவப்புடன் சேர்ந்து செல்கின்றாள். இக்கருத்தை

''எல்லே இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்!
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக!
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந்
தெண்ணிக் கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்!''

என்று பாடித் தெரிவிக்கின்றார் ஆண்டாள். முன்பு பாடப்பெற்ற பத்துப் பாசுரங்களிலும் வரும் கேள்வி பதில்களை எல்லாம் இப்பாசுரத்தில் ஆண்டாள் வெளிப் படையாகக் காட்டக் காணலாம். 'புள்ளும் சிலம்பின காண்' என்னும் பாட்டுத் தொடங்கிக் கீழ்ப்பாட்டளவு முள்ள ஒன்பது பாட்டுகளிலும், பள்ளி உணர்த்துகின்றவர் களின் பாசுரங்களாகவே உள்ளனவேயன்றி உறங்குகின் றவள் எதிர்மறையாகக் கூறுகின்ற பாசுரங்களாக எவையு மிலலை என்பதை அறிதல் வேண்டும்.

இப்பாசுரத்தில், முதலடி, மூன்றாம் அடி, ஐந்தாம் அடி, ஏழு, எட்டாம் அடிகளில், உணர்த்துகின்றவர் களின் நிலையிலும், இரண்டாம் அடி, நான்காம் அடி, ஆறாம் அடி ஆகியவற்றில் உறங்குகின்றவளின் நிலை யிலும் பாடப் பெற்றுள்ளன.

பக்தர்களால் குற்றம் சுமத்தப் பெற்றவர்கள், அப்பக்தர்களின் திருவடிகளில் வீழ்ந்து என் குற்றத்தைப் பொறுத்தருள்க என்று கேட்பவர்களைப் பொறுத்தருளுதலே வைணவ நெறியாகும். எனவே, நானே தான் ஆயிடுக! என்று கூறியதில், வந்தவர்கள் கூறிய குற்றத்தை, படுக்கையில் கிடந்தவள் ஏற்றுக் கொண்டு, இதைப் பொறுத்தருள்க! என்று அவர்களைக் கேட்பதாக உள்ளது. செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வதும், ஒப்புக் கொண்டவரைப் பொறுத்துக் கொள்வதும் வைணவ சித்தாந்தமாகும். இந்த உயர்ந்த சித்தாந்தத்தையுடைய வைணவத்தை எடுத்துக்காட்டவே ஆண்டாள் ''நானே தான் ஆயிடுக'' என்ற சொற்றொடரை அற்புதமாக ஆண்டுள்ளார்.

உங்கள் புழைக் கடை என்னும் பதினான்காம் பாசுரத்தில் உறங்குகின்றவளை எழுப்பச் சென்றவர்கள் பங்கயக் கண்ணனைப் பாடுவதற்கு எழுந்து வருவாயாக! என்று கூறினார்கள். இவர்கள்கருத்தான இன்ப அடியை அடுத்த வீட்டிலுள்ள அஃதாவது பதினைந்தாம் பாசுரத்தில் துயில் உணர்த்தப்படும் பெண்கேட்டுத் தன் மெல்லிய குரலில் இசைப்பதை வந்தவர்கள் செவிமடுத்து, மகிழ்வடைந்தார்கள். ஆதலால் அவளை ''இளங்கிளியே'' என்று உணர்த்தியது, நம் செவிக்கு இன்பமூட்டுவதாகும்

ஆண்டாள் அன்னையார் உறங்குகின்றவளைக் கிளி போன்றவளே! என்று உவமித்துச் சொல்லாமல் ''கிளியே'' என்று உருவகித்துச் சொல்லினார். இவ்வாறு கூறியது, ''தாவி வையம் கொண்ட தடந்தாமரை கட்கே' என்று அவனடியார் ஒருவர் பாடியதைப் போன்றதாகும் எனலாம். கிளியே என்ற இதனை முற்றும்மை என்பர், எல்லே'' என்பது வியப்புக் குறிப்பிடைச்சொல்.

"இளங்கிளியே" என்றுரைத்த இன்சொல்லின் நயத்தால், கிழக்கிளி வேறு இருப்பதையும் அறியலாம். ஒரு கருத்தைக் கூறி அதனால் எதிர்மறைக் கருத்தையும் இனிது அறிந்துகொள்ள உணர்த்துபவர்கள் கவிஞர்கள். இவ்வாறு நயந்தோன்றப்பாடிப் பிறரை வயப்படுத்தும் ஆற்றலைப் பெற்றவர் ஆண்டாள். அவர் கவிதையில் சொற்கள் அற்புதமாக வந்து நின்று களிநடம்புரிவதைப் படிப்பவர் அறிந்து இன்புறலாம்.

"சில்லென்றழையேன்மின்" என்ற தொடர் மொழி, வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருப்பவள், வெளியிலே நின்று தன்னை எழுப்ப வந்தவர்களிடம் கூறிய மொழியாகும். இது வெறுப்பை உண்டாக்குவது. இன்றும் சிலர் சிலுசிலு என்று நச்சரித்துப் பேசுதலைக் காணலாம்.

இவ்வாறு தன்னை நச்சரிப்பதாகக் கருதியே உறங்குகின்றவள் பயன்படுத்திய மொழியே மேற்குறித்த தொடர்மொழி. இம்மொழியைக் கேட்டவர்கள், படுக்கையில் கிடப்பவளின் நிலையறிந்தும் சினம் கொள்ளாத வகையில் **"நங்கைமீர்"** என்ற இனிய மொழியைப் பயன்படுத்தி எழுப்புகின்றார்கள். இதனால் பொறுமையின் மூலமே தம் பணியை நிறைவேற்ற இயலும் என்று, உறுதிப்பாடு கொண்டு வந்தவர்களின் சிந்தையினை அறியலாம்.

**வல்லை** என்று உறங்குகின்றவளையும் **வல்லீர்காள்** என்று எழுப்புகின்றவர்களையும் கோதை கூறியிருத்தலால் இவர்கள் அனைவருமே ஆற்றல் மிக்கவர்கள் என்றறியலாம். இவற்றால் எடுத்த காரியத்தை முடிப்பதில் இவர்கள் வல்லமை பெற்றவர்கள். ஆம் இவர்கள் போற்றும்

நோன்பால் ஆற்றல் சான்ற ஆராவமுதனை அடைந்து விடமுடியும் என்ற நிலையில் நிற்பதைக் காட்டவே ஆண்டாள் இச்சொற்களை எடுத்தாண்டார்.

**நானேதான் ஆயிடுக!** என்றதால் படுக்கையில் கிடந்தவள் தன் குறையை உணர்கின்றாள். அதை நிறைவான வாழ்வை எய்த வந்தவர்களிடம் முறையீடு செய்கின்றாள். இவளின் குறையினைப் பொறுத்து, நெறிபடுத்தவந்தவர்கள் அவளை **நங்கைமீர்** என்று அன்புடன் இன்பமுறவே அழைக்கின்றார்கள். இந்த இரண்டு மொழிகளையும் நம்முடைய முன்னோர்கள் அருமைப்பாடுடைய வைணவச் சித்தாந்தத்தின் கருணைமொழிகள் எனப் பெருமையாகப் பேசுகின்றார்கள்.

## 'உனக்கென்ன வேறுடையை'

உறங்குகின்றவளைப் பார்த்து வந்தவர்கள் தூங்குகின்ற வேலையைத்தவிர உனக்கு வேறு வேலையில்லையா? என்று உணர்த்தி, ''வல்லானை மாயனைப் பாட'' எழுந்து வருவாயாக! என்று அழைக்கின்றார்கள். ''வேறுடையை'' என்னும் சொல்லை ''வேறுடைமை'' என்று சிலர் பாடுதல் காணலாம். இது எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் பாடியவன் பாட்டைக் கெடுத்தான் என்ற கருத்துக்கு ஒப்பானதாகும். ''வேறுடைமை'' என்றால் வேறு வகையான சொத்தைக் குறிக்கும் ''வேறுடையை'' என்றால் வேறு வேலை என்ற செயலைக் குறிக்கும். இங்கே உறங்குகின்றவளிடம் எம்பெருமானைக் குறித்து நோன்பு நோற்பதை விடுத்து, உனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது? என்ற கருத்தில் ஆண்டாள் வேறுடையை என்னும் தொடரைத்தெளிவாக ஆண்டார் என்றே போற்றுதல் வேண்டும். எனவே, ஆண்டாள் அன்னையார் ஆளும்

ருசாற்களை நாம் நன்கறிந்து பாடுதல் எழுதுதல் ஏற்ற முடையதாகும். இதற்கு

"மேகங்களே! உரையீர் திருமால் திருமேனி ஒக்கும்
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்"

என்று நம்மாழ்வார் பாடியருளிய திருவிருத்தத்தைச் சான்றாகக்காட்டலாம். எம்பெருமானுடைய திருமேனி கருமைநிறம்; மேகத்தின் நிறமும் கருமை நிறமே! இந் நிறத்தைக்கண்ண பெருமானும் மேகமும் இயல்பாகவே பெற்றிருக்கக் காண்கின்றோம். இவ்வாறிருக்க மேகத் தைப்பார்த்து அவன் நிறத்தை நீ எவ்வாறு பெற்றாய்? அப்படிப் பெற்றது அவன் யோகத்தால் ஆகும் என்று நம் மாழ்வார் கூறுவது,

மேகத்தையே கண்ணனாகக் கருதியதாலேயாகும். இவ்வாறு பார்க்கும் பொருளையெல்லாம் இவர் கண்ண னாகக் காணுதல் போன்று, ஆண்டாள் "உனக்கென்ன வேறுடையை" என்று கூறியதில் கண்ணபெருமானைப் பாடுதலல்லாமல் உனக்கென்ன வேறு வேலையிருக்கிறது? என்று உறங்குகின்றவளை உணர்த்தி எழுப்புகின்றார்.

'வல்லானை கொன்றான்' என்பதில் ஒரு வரலாற்றைப் படைத்துக் காட்டுகின்றார். ஒரு தொடரைப் பெய்து வியப்புக்குரிய ஒரு கதையை அருமையாகக் கூறுகின்றார். கம்சன் வில் விழாப் போட்டி நடத்துகின்றான். அப் போட்டியில் கலந்துகொள்ள கண்ணனையும் பலராமனை யும் அழைக்கின்றான்.

கம்சனின் அரண்மனையை நோக்கிக் கண்ணனும் பலராமனும் வரும்போது அவ்வாசலில் குவலாய பீடம் என்னும் யானையை நிறுத்தி இவர்களைக் கொல்ல ஏவுகின்றான். கொல்லவந்த யானையை இந்த யாதவ வீரர்கள் பிடித்துச் சேற்றிலிருந்து பிடுங்கிய கொம்பைப்

போல அதன் தந்தங்களைப் பிடுங்கி அவற்றைக்
கொண்டே அந்த யானையை அழித்து ஒழித்தார்கள்

என்ற விவரத்தைத்தான் மேற்குறித்த தொடரில் குறிக்கின்றார் ஆண்டாள்.

மாற்றாரை மாற்றழிக்க என்ற தொடர், பகைவர்களை மீண்டும் உயிர் கொண்டு வாழாதவாறு செய்பவன் கண்ணன் என்பதைக் காட்டுவதற்காக ஆளப்பெற்றதாகும்.

கண்ணபெருமான் இராமபிரானைப்போன்று இன்று போய் நாளை வா என்று சொல்லுகின்றவனல்லன். வெட்டு ஒன்று என்றால் துண்டு இரண்டு என்று சொல்வதைப் போன்று பகைவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே துண்டாடி ஒழிப்பவன் அவன். உழவன் தான் இட்ட பயிரில் களையைக் கண்டுவிட்டால் உடனே களைந்து பயிரைச் செழிப்புறச் செய்தல் போன்று, கண்ணபிரான் பகையைப் பார்த்ததும் ஆர்த்தெழுந்து சாய்த்து ஒழித்துச் சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவதில் விழுமிய நிலையில் விளங்கியவன்.

குவலாய பீடத்து யானையைக் கொன்றொழித்து மாற்றாரை மாற்றழித்து! உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்த கொடிய கம்சனைப் பிடித்து! இம்சித்து வீழ்த்தியவன்வேத முதல்வனான கண்ணன் அசுரர்களைப் பொசுக்கியவன், வாய்மையில் சிறந்த ஆய்ச்சியர்களிடம் வாஞ்சையால் நின்றவன். அம்மாமாயன்.

இடைகுலப் பெண்டிர் பிடித்துக் கட்டவும் அடித்து வருத்தவும் அவன் அவர்களுக்கு இணங்கி இடம் கொடுத்தான் என்பதை "மாயன்"; என்னும் சொல்லால் சுட்டி

னார் கோதை. கண்ணன் அன்பர்க்கு அன்பனாய், பகை வர்க்குப் பகைவனாய் இருந்து அறநெறி காக்கத் திறமை யைக் காட்டியவன். எளி வந்த பிரானாக இருக்கும் அவன் களிப்புடன் போற்றி வேண்டுவோர் நெஞ்சத்தில் ஒளி மழை பெய்து தெளிவுடன் நிற்பவனே அம்மாயன் என்றார் ஆண்டாள். தேடரியப் பரம்பொருளைத் தாம் பாடிய பாசுரத்தில் நேசமுடன் நின்றாடச் செய் தவர் ஆண்டாள்.

'கட்டுரை' என்றது, கடுமை உரை என்பதாகும். உறங்கிய பெண்ணை எழுப்பியபோது, அப்பெண் கூறிய சினமொழியாகும் இது. இப்போது கூட, தூக்கத்தில் இருக்கும் சிலரை எழுப்பும்போது, அவர்கள் சினந்து பேசுதலைக் காணலாம். இவ்வாறு தூங்கிய நிலையில் இருந்த பெண் சினந்து பேசிய வார்த்தைகளே, 'சில்லென்றழையேன் மின்' என்றதும்; கட்டுரை' என்ற தும். இவை கோபத்தைக் குறித்ததாகும் என விவரிக் கின்றார் கோதைப் பிராட்டியார்.

## பாவையில் இலக்கியச் செய்திகள்

தொல்காப்பியர் திருமாலைப்பற்றி அருமையாகப் பாடுகின்றார். மன்னர்க்குத் திருமாலை உவமை படுத்துகின்றார். அவ்வாறு கூறுதல் பூவைநிலையென் னும் புறத்துறையாகும்" என்கின்றார்.

"மாயோன் மேஎய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ் பூவை நிலையும்"

என்று மாயவனின் மாட்சிமை பொருந்திய சிறப்பினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இதில் சிறப்பு என்றது வீடு பெறும் நிலையாகும். அஃதாவது பரமபதத்தைப் பற்றிக் கூறியதாகும். இதை 'மன் பெருஞ்சிறப்பு" என்றது.

அழிவில்லாத வீடு, அஃதாவது பேரின்பத்தை உடைய வீடு என்று குறிக்கின்றார். அதனை உடைய மாயோன் அவ்வீடு பேற்றை அளிக்கவல்லவன் என இத்தொடரால் அந்தமில் பேரின்பத்தையுடைய வீடு பேற்றை அளிக்கவல்லவனும் அழிவேயில்லாத சிறந்த புகழையுடையவனும் ஆகிய மாயோன் எனப் போற்றிக் கூறியவற்றால் மாயோன் என்னும் சொல்லின் மாட்சியினை அறிகின்றோம். மாயோன் என்னும் சொல் செவ்வி நிலையைக் காட்டி, பவ்வியமாயிலங்கும் பரம்பொருளை நிரல்பட வைத்துக் காட்டி விளக்குவதாகும்.

மாயோன் என்பதற்கு வியப்புக்குரிய தான குணம், செயல், திறன் உடைய எம்பெருமான் என்று விளக்கம் கூறுவர் சான்றோர். இங்கே பூவைநிலை என்றது, காட்டி டத்தே மலர்ந்து அழகைக் காட்டி நிற்கும் காயம்பூவை மாயவன் திருமேனி நிறத்தோடு உவமிக்கப் பெற்றதாகும்.

"கறவை காவலன் நிறனொடு பொரீஇப்
புறவலர் பூவைப் பூப் புகழ்ந்தன்று"

என்று புறப் பொருள் வெண்பா மாலை மேலே குறித்த செய்தியினை அறுதியிட்டுக் கூறுதல் காணலாம். இதில் பசுக்களைக் காத்த மாயவன் திருமேனியின் நிறத்தோடு காட்டில் மலர்ந்த காயாம்பூவை உவமை கூறி நிறைவு செய்யப்படுகிறது. இல்லை அம்மாயவனையே பெருமை செய்யப்படுகிறது.

மேலும் மாலவனான மாயவனையும் அவன் அண்ணன் பலதேவனையும் பரிபாடல் பெருமையாகத் தெரிவித்துச் சிறப்பித்தல் காணலாம். திருமாலிருஞ் சோலைமலையில் கடலும் கானலும் போலவும், சொல்லும் பொருளும் போலவும் ஒன்றாக இருக்கும் இந்த இருதெய்வங்களையும் வழுதியார் எனும் மாண்புடைய புலவர் அழகு ஓவியம் போலத் தீட்டிக் காட்டுவதில்

"மாயவனும் தம்முனும் போல மறிகடலும்
கானலும் சேர்வெண் மணலும் காணாயே"!

என்று பாடிக் காட்டுகின்றார். கடலும் கானலும் போலவும் சொல்லும் பொருளும் போலவும் கண்ண பெருமானும் பலதேவனும் காட்சி தருகின்றனர். இந்த யாதவகுலத்தெய்வங்களின் நிறத்தைக் கடல் நிறத்தோடும் கானல் நிறத்தோடும் பொருத்திக் காட்டியது பெருமை சான்றதாகும். சொல்லும் பொருளும் சேர்ந்து ஒன்றைக் குறித்துத் தெளிவுபடுத்துதல் போன்று, இவர்கள் இருவரும் ஒருமை கொண்டு அருமை செயலை ஆற்றி நிறைவை அளிப்பவர்கள் என்று இயைத்துக் கூறியிருத்தல்இனிமைப் பயப்பதாகும்.

இன்று புரட்சி என்னும் சொல்லைப் பலர் கையாளக் காண்கின்றோம். புரட்சி என்பது மாறுதலைக் குறிக்கும். யார் யாரையோ ! இச்சொல்லால் இயம்பக் காண்கின்றோம். எவ்வித மாறுதலையும் செய்யாத எத்தர்களை இப்பெயரால் அழைப்பது தப்பாகும். கரவுடையாரைக் களைந்தும் பொறையுடையாரைப் போற்றியும் புதுமை விளைத்தவன் கண்ணன். சமுதாயத்தில் அமைதியைக் குலைத்த அசுரர்களைப் பொசுக்கியவன் கண்ணன்.

துன்பங்களையே விளைவித்த கம்சனையும்கொடுமைப் புதரையே விளைவித்த துரியோதனாதியரையும் நெரித்து ஒழித்தவன் கண்ணன் அறம் விளைவித்த பாண்டவர்களையும் முறைமை பேணிய முனிவர்களையும் இனிது காத்தவன் கண்ணன் கொடுமையையழித்து நேர்மையை ஓங்கச் செய்த கண்ணனனே புரட்சியாளன் ஆகும். இப்புரட்சியாளனை மாயவன் என்னும் சொல்லால் பண்டிருந்த சான்றோர்கள் பகர்ந்தார்கள். இக்கருத்தைச் சங்க இலக்கியமான திரிகடுகம் என்னும் அறநூல்

"கண்ணகன் ஞாலம் அளந்ததுவும் காமருசீர்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததுவும் — நண்ணிய
மாயச் சகடம் முதைத்ததுவும் இம்மூன்றும்
பூவைப் பூ வண்ணன் அடி"

என்று மாயபிரானின் திருவடியின் திறத்தை அறிவிக்கின்றது. அப்பெருமான் தன் ஒப்பற்ற திருவடியால் மாவலி மன்னனின் மதத்தை அழித்ததையும், குருந்த மரத்தைச் சாய்த்ததையும். வண்டி உருவம் தாங்கி அழிக்க வழிந்த சகடாசூரனை ஒழித்ததையும் மேற்குறித்த வெண்பா விளம்புகின்றது.

இவ்வாறு இனிது விளம்பும் அம்மாயனைச் செம்மை சான்ற செந்தமிழ்ப் பாவையில் "வல்லானை மாயனைப் பாடு" என்று அருமையாக ஆண்டாள் பகர்கின்றார். தொல்காப்பியம் முதலாக, திரிகடுகம் ஈறாகக் கூறப்பெற்ற மாயனின் புரட்சித் தன்மையை வல்லானை என்று அடை கொடுத்து அம்மாயனை இம்மையிலுள்ளோர் ஏத்தி நலம் பெறுமாறு கூறுகின்றார். மேலும் இன்னொரு அருமை யான செய்தியின அவர் காட்டுகின்றார்.

அச்செய்தி நானேதான் ஆயிடுக ! என்பது
திருவள்ளுவர்

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்று கூறுவதில் ஒருவன் தன் தவற்றை உணர்ந்தாலே போதும், மண்ணகத்தில் உள்ள உயிர்களுக்குத் தீமை நேராது என்றார். இக்கருத்தை அணி செய்யும் வகையில் தன் தவற்றை உணர்ந்து, மற்றவர்களிடம் மன்னிப்புக் கோரும் பெண்ணை எடுத்துக் காட்டும் வகையில் மேற்குறித்த தொடரைப் பெய்து நெறியை வளர்க்கின்றார் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை:

திருவள்ளுவர் அனைத்தும் உணர்ந்த அறநெறியாளர் அவர் இறைவனைத் திருக்குறளில் பல்வேறு இடங்களில் வைத்துப் பெருமையாகப் பேசுகின்றார். இப்படி ஒப்பற்ற அப்பரம் பொருளை ஊழ் என்னும் அதிகாரத்தில் ஏழாவது திருக்குறளில்

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்றார். இதில் கோடிக் கோடியாகப் பெரும்பொருளைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் கூட, பரம்பொருள் வகுத்த வகை அல்லாமல், அப்பொருளை அனுபவிக்க இயலாது என்றார். ஆம் அவன் வகுத்த விதியின்படிதான் உயிர்க் குலம் வாழ இயலும் என்று இதில் அறுதியிட்டுக் கூறு கின்றார். இக்கருத்தினை ஊன்றிருப்பவர்கள் "வல்லான் வகுத்ததே வாய்கால் என்று இயம்புகின்றார்கள், ஆம் அவன்தான் உயிர்க்குலங்கள் வாழ வழி வகுக்கின்றான். அவன் வகுத்த வழியில்தான் உயிர்கள் நடையாட இயலும். ஆதலால் அவனை வல்லான் என்று சுட்டியுள்ளார்கள். சான்றோர்கள். இக்கருத்தை மிக்க சிறப்புடனே எடுத்துக் காட்ட வந்த ஆண்டாள் அன்னையார், வல்லானை மாயனை என்று பாடி அவனை நல்லவழி வகுத்துக்காட்ட வந்த வல்லான் என்று இன்பந்தோன்ற விளம்பியதோடு அப்புரட்சித் தலைவனை மாயன் என்று புகழ்கின்றார். அவனைப் பாடிப் பெருமை செய்யுமாறும் மன்பதையில் உள்ளவர்களுக்கு அவனைப் படமாகத் தீட்டித் தம் பாசுரத்தின் மூலம் ஆசைமேவி காட்டுகின்றார். சிறந்த அறமுடைய சங்கச் செய்திகளை அற்புதமாகப் பெய்து நற்றமிழ்த் திருப்பாவையாக நமக்கருளினார். சத்தனைய இந்த முத்தான சங்கத் தமிழ்மாலையை நாளும் பொழு தும் நயந்து பாடி உயர்வைக் காண்போமாக! ஆண்ட வனை ஆண்டாளை யாண்டும் வேண்டித் துதித்து உய்வோமாக!

# ஆடிப்பூரத்தில் ஆண்டாள்!

**ஆடிப்பூ ரத்தில் அவதரித்த ஆண்டாள்தாம்**
**நாடியே கண்ணபிரான் நற்றிறத்தைப்—பாடினார்**
**இன்புற்றார் இப்புவியோ ஏற்றமுறப் பாவையினால்**
**நன்மைசெய்தார் நல்வழியை நாடு**

கவியமுதனார்

நாட்டிற்கும் மக்களுக்கும் நல்வழியினைக் காட்டவந்த பெருமக்கள் யாவரும்,ஒரு நல்ல நாளில் தோன்றியுள்ளார்கள். இவ்வாறு நன்மை செய்ய வந்தவர்கள் செய்த பணியால் புகழ் வானில் திகழ்வதைப் போன்று, அவர்கள் பிறந்த நாளும் புனித நாளாகப் புகழ்ந்து கூறப்படுகின்றது.

நல்லவர்கள் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றவர்கள் எம்பெருமான் திருவருளைப் பெற்றவர்களாகப் பாராட்டப்படுகின்றார்கள். அறநெறி தழைத்தோங்க அருள்நெறியைப்பரப்பி, முறை திரும்பாது நின்ற அவர்களை அன்புடையார்கள் என்று மக்கள் போற்றுகின்றார்கள். அந்த அன்புடையார்கள் வந்தனைக்குரியவர்களாக இருத்தலால், மக்கள் அவர்களைப் போற்றும் போது அவர்கள் பிறந்த நாளையும் நினைவுகூறிப் போற்றி வருதலைக் காண்கின்றோம்.

திருவள்ளுவர் போன்ற பெருமக்களைப் போற்ற எண்ணுகின்ற மக்கள், அவர்கள் பிறந்த நாளை நினைவில் கொண்டு அவர்களைப் போற்றுதல் போன்று, அந்த நாளும் இயல்பாகப் போற்றுதலைப் பெறக் காண்கின்றோம். மலருடன் சேர்ந்த நாரும் மணப்பதைப் போன்று அருளாளர்கள் பிறந்த நாளும் அருமைக்குரியதாக அமைகின்றது.

எம்பெருமானை நம்பிக்கையுடன் போற்றி, தம் நாயகனாக வரித்துக் கொண்ட ஆண்டாள், இப்புவியில் செப்ப வொண்ணாப் புகழில் மிளிர்கின்றார். அவர் ஆடித் திங்களில் பூர நட்சத்திரத்தில் அன்னைத் தமிழ் மண்ணில் அழகுடன் பிறந்தார்.

ஆடிப் [பூர நட்சத்திரத்தில் வானவீதியில் முழுமதி பொலிவு காட்டி நின்ற காலத்தில், ஞானத்தமிழ் மண்ணில் கான இசை பொழியும் கவின் மிகுந்த திருவில்லி புத்தூரில் சிறந்த பெண்ணிலவாய்த் தோன்றி ஒளிபரப்பினார் கோதை. சாதனையை விளைவிக்க வந்துதித்த நம் கோதை செந்தமிழ்ப் பாவலர்கள் போற்றப் பெருமையுற்றார். பாவலர்கள் வியந்து போற்றும் பாவலராக பத்தர்கள் பாடிப் போற்றும் சத்தியாக விளங்கியதால், அவர் பிறந்த ஆடிப்பூர அருமை நாள் பெருமை பெறுகின்றது.

வைகாசி விசாகத்தில் விண்ணில் பூரண நிலவு உலா வந்து மண்ணில் ஒளிபொழிந்த நாளில் தோன்றிய "நம்மாழ்வார்" செம்பொருளால் கீர்த்தி பெற்றதைப் போன்று அவர் தோன்றிய வைகாசித் திங்களும் விசாக நட்சத்திரத்தில் வரும் நாளும் சீர்த்திக்குரியதாகின்றன. இந்த வகையில் ஆடித்திங்களில் விண்ணில் முழுமதி விழுமிய ஒளியை ஏந்தி மண்ணில் பொழிந்த பூர நட்சத்திர நாளில் ஆண்டாள் தோன்றி மாண்பைப் பரப்பிப் புகழுற்றதால், அவரை நினைவு கூறுகின்ற ஆடித் திங்களும் பூர நட்சத்திர நாளும் புகழை அடைந்துள்ளன.

ஆண்டாள் தோன்றிய ஆடிப் பூரத்தில் பலர் தோன்றியிருக்கக் கூடும்; என்றாலும், ஆண்டாள் பெறற புகழை அவர்கள் பெறாததால் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவர்கள் தெரியாமல் போனார்கள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆண்டாள் அன்னையார் தோன்றிய ஆடிப்பூரத்தை அப்பிள்ளை என்னும் அருளாளர் வாழ்த்துகின்றார்.

"திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே"

என்று இம்மண்ணில் செம்மையை விளைவித்த ஆண்டாளை வாழ்த்தும் அவர் ஆடிப்பூரத்திருநட்சத்திரத்தையும் நினைவு கூறி வாழ்த்துதல் காணலாம். இவ்வாறு வாழ்த்தும்போது ஆண்டாள் அன்னையாரின் பெற்றியினை விவரிக்கின்றார். அவரை வேதமனைத்திற்கும் வித்தாகும் திருப்பாவையைப் படைத்தவர் என்றும் பெரியாழ்வாருக்கு அருளாளனால் கிட்டப் பெற்றவர் என்றும் தொண்டு செய்த இராமநுசருக்கும் பின்னின்று உணர்த்தியவர் என்றும் ஏற்றம் அருளும் நூற்றுநாற்பத்து மூன்று நாச்சியார் திருமொழியை அருளியவர் என்றும், உயர்வை நல்கும் திருவரங்கனுக்கு,த்தாம் சூடிய மாலையை உவப்புடன் அளித்தவர் என்றும் அழகுடைய திருமல்லி வளத்தை நாடியவர் என்றும் குணம் நிறைந்த மனமுடைய சான்றோர்களைப் பெற்ற திருவில்லிபுத்தூர் நகர்ப்பகுதியில் தோன்றியவர் என்றும் கூறி அவர் தம் திருப்பாத மலர்களை வாழ்த்தி வணங்குகின்றார் அவர். இவ்வாறு வணங்கியவர் ஆண்டாள் ஆடிப்பூரத்தில் தோன்றி, அற்புதம் விளைவித்தவர் என்று அவரையும் அந்த நாளையும் நமக்கு நினைவு கூறிப் போற்றுமாறு உணர்த்துகின்றார் அப்பிள்ளை அவர்கள்.

ஆண்டாள் பிறந்த திருவாடிப் பூரம் என்னும் நாள் எமக்காகத் தோன்றிய நாள் என்றார் மணவாள மாமுனிகள். யாம் ஆண்டாள் அன்னையை நினைந்து போற்றவே ஆடிப்பூரம் என்கின்ற திருநட்சத்திரமான அந்த நாள் அருமையாக இன்று வந்தது. இந்தச் சிந்தைக்கினிய நாளில் அவர் இப்புவியில் தோன்றியதால் புகழ்பெற்ற வைகுந்தம் தாழ்ந்தது. மண்ணுலகம் உயர்ந்தது. இந்த

மண்ணுலகமே வைகுந்தத்தைவிடச் சிறந்ததால் விண்ணுலகம் எனக்குத் தேவையில்லை என்று பெரியாழ்வார் திருமகளையும் ஆடிப்பூரத்தையும் அகம் குழைந்து போற்றுகின்றார் மணவாள மாமுனிகள். இச்செய்தியை

"இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
அன்றோ இங்(கு) ஆண்டாள் அவதரித்தாள்— குன்றாத
வாழ்வான வைகுந்தம் வான்போகம் தன்னையிகழ்ந்(து)
ஆழ்வார் திருமகளா ராய்"

என்று இவ்வெண்பாவில் தெரிவிக்கின்றார். ஆடிப்பூரத்தில் ஆண்டாள் தண்டமிழ் மண்ணில் தோன்றியதால் உயர்வான வைகுந்தம் தாழ்ந்தது; இந்த மண்ணுலகம் மாண்புற உயர்ந்தது என்றார். மேலும் அவர் தாம் பாடிய உபதேச ரத்தின மாலையில் ஆடிப்பூரத்திற்குரிய பெருமை வேறு எந்நாளுக்கும் இல்லையென்கின்றார் அந்த நாளில் செந்தமிழ்த் திருப்பாவையை அருளிய ஆண்டாள் தோன்றியதால், ஆண்டாள் பெற்ற பெருமையை ஆடிப்பூரமும் பெற்றது என்றார்.

துளசி தோன்றிய போதே மனம் வீசிக் கொண்டே தோன்றியதைப் போன்றே, கோதைப் பிராட்டியாரும் பிறக்கும் போதே அருள் ஒளி வீசத் தோன்றியவர். அவர் பெற்ற பெருமை அவள் தோன்றிய நாளும் பெற்றது. ஈடும் எடுப்பும் இல்லாத ஆண்டாளுக்கு உவமை கூற முடியுமென்றால் ஆடிப்பூரத்திற்கும் உவமை கூறஇயலும் ஆண்டாளும் அவர் பிறந்த ஆடிப்பூரமும் உவமை காட்ட இயலாமல் உயர்ந்தனர் என்று தம் மனத்திற்குக் கூறித் தாரணிக்கு வெளிப்படுத்தித் தெளிவுபடுத்துகின்றார்

மணவாள மாமுனிகள் இக்கருத்தை

"பெரியாழ்வார் பெண்பிள்ளை ஆண்டாள் பிறந்த
திருவாடிப் பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்(கு)
உண்டோ மனமே உணர்ந்துபார் ஆண்டாளுக்(கு)
உண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு"

என்று பாடுகின்றார். பரம்பொருளைக் காட்டிலும் பெருமை அவன் அடியாருக்குக் கூறுவதைப் போன்று, இவ் வெண்பாவில் ஆண்டாளைக் காட்டிலும் அவர் பிறந்த ஆடிப் பூரத்திற்குப் பெருமை கூறுகின்றார் அவர். ஆடிப்பூரத்தை நினைக்கின்ற போது ஆண்டாள் நாம் போற்றுதற்குரியராகின்றார் அல்லவா? அதனாலேயே கூறினார் போலும் கண்ணபெருமான் மாதங்களில் மார்கழியைப் பெருமையாகக் கூறியதைப் போன்று ஆண்டாள் தோன்றிய ஆடிப்பூரத்தைப் பெருமையாகக் கூறினார். எம்பெருமான் திருவருளால் எழிலுடன் விளங்கிய ஆண்டாள், கண்ணபெருமானே இந்த உலகம் அனைத்திற்கும் காப்பாளன் என்று நாப்புகழப் பாடி, அந்தப் பரம் பொருளை விரும்பி நாயகனாக நயந்தார். வையம் உய்ய வழிகாட்டும் மைவண்ணனை நாமும் பெறவே போற்றிட உணர்த்திய ஆண்டாள், மாண்புடைய தெய்வம் ஆனார். அந்தத் தெய்வத்தைப் பிரபந்தசாரம் பாடிய ஆசிரியர் பாசம் தோன்றப் பரவுகின்றார். கோதை பிறந்த ஆடிப் பூரத்தைக் கோடித்துப் புகழ்கின்றார். அந்த ஆடிப்பூரம் மேலும் மேலும் விளங்க வேண்டும் என்று உளம் விழைந்து புகழ்கின்றார் அவர்.

வேயர்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப் பூரம்
மேன்மேலும் மிகவிளங்க விட்டு சித்தன்
தூயதிரு மகளாய்வந் தரங்க னார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே
நேயமுடன் திருப்பாவை பட்டா றைந்து
நீயுரைத்த தையொருதிங் கட்பா மாலை
ஆயபுகழ் நூற்றுநாற் பத்து மூன்றும்
அன்புடனே அடியேனுக் கருள்செய் நீயே !

என்று ஆண்டாளிடமே கூறி, அவரைத் தமக்கு இவற்றை அருள் செய்யுமாறு புகழ்ந்தவர் இவ்விருத்தப்பாவில் தெரிவிக்கின்றார். அப்பிள்ளை என்பவரைப் பின்பற்றிப் பிரபந்தசார ஆசிரியரான இவரும் உவப்பு மேலிட

ஆண்டாள் அன்னையாரையும் அவர் பிறந்த ஆடிப் பூரத்தையும் புகழ்கின்றார்.

உலகம் நலம் பெற அறநெறி கூறிய பெருமக்கள் இல்லை யென்றாலும் அவர்கள் பிறந்த நாள் நம் நினைவுக்கு வந்து சிறப்பாக அவர்கள் செய்த சேவை களைப் பற்றிப் போற்றச் செய்யும். எல்லோரையுமே போற்றாமல் நல்லோரை மட்டும் உலகம் போற்றி வரு கின்றது. காரணம் உலகத்திற்கு நலம் ஏற்படும் வகையில் உண்மைத் தொண்டினை அவர்கள் ஆற்றியதால் தன்னல மற்ற புகழில் நிலைத்துப் போற்றுதற்குரியவராக ஆனார் கள். அவர்கள் இல்லாமல் போனாலும் அவர்கள் தொண்டு இறவாமல் நின்று புகழைக் காணுகின்றது. இக்கருத் தினைத் திருவள்ளுவர்

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்''

என்றார் இதில் தக்கார் என்று கூறியதில் புகழுக்குரியச் செயலைச் செய்தவரைக்குறித்தார். தகவிலர் என்று கூறிய தில் இகழ்ச்சிக்குரிய செயலைச் செய்தவரைக் குறித்தார். இச்செயலே இவர்கள் இறந்த பின்னர் எச்சமாக நின்று வெளிப்படுத்தும் என்றார். இவர் தம் குறளால் புகழ் செயலைப் புரிந்தவர்களே நம் நினைவில் நிற்பவர்கள் என அறிகின்றோம். கோதை புகழ் செயலைப் புரிந்தவர். மக்கள் உய்ய திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பிரபந்தங்களை அருளி இன்றும் பெருமையாக நிற்கின் றார். என்றும் பெருமையாக விளங்குவார். மயக்கத்தை நீக்கும் செயற்கரிய படைப்புகளை அருளிய அவர் இன்று புகழேணியில் இலங்குகின்றார். அவர் விளங்குதல் போன்று அவர் பிறந்த நாளும் இறவாப்புகழுடன் விளங்குதல் காணலாம். எனவே அந்த

அன்புசால் ஆண்டாளை ஆடியைப் பூரத்தை
என்றும் நாம் சாற்றியே ஏத்திடுவோம்—இன்பமுறச்
சங்கத் தமிழ்மாலை சந்தத் திருப்பாவைத்
தங்கத்தைப் போற்றிடுவோம் சார்ந்து!

என்று கூறும் கவியமுதனார் வெண்பாவின்படி அன்னை ஆண்டாளை ஆடிப்பூரத்தைப் போற்றி உய்வோமாக!